# இலங்கைக்கான பால்நிலைசார் காலநிலை பாதுகாப்பு மதிப்பீடு

வைகாசி 2025

Joint UNDP-DPPA Programme on Building National Capacities for Conflict Prevention

# நன்றியறிதல்கள்

இந்த அறிக்கையானது ஜனனி விவேகானந்தா, எம்மா விட்டேக்கர் மற்றும் மேரி போட்ஸ் (adelphi research) ஆகியோரால் எழுதப்பட்டது. இலங்கையில் உள்ள எங்களது உள்ளூர் ஆய்வுக் குழுவினர்களான லசந்த விதானகே, இர்ஃபான் ஜுனைதீன், காயத்திரி குமரன் மற்றும் சசித மதுரவல ஆகியோருக்கும், அவர்களது பங்காளர்களுக்கும் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்த ஆய்வை நடாத்துவதற்கு இவர்களின் முயற்சிகள் மிகவும் உதவியாக இருந்தன. இவர்களின் அனுபவமும், உட்பார்வைகளும் ஆய்வைச் செழுமைப்படுத்தியதுடன், பல்வேறு சமுதாய உறுப்பினர்களுடன் எங்களைத் தொடர்புகொள்ள உதவியதால், இந்த ஆய்வு உள்ளூர் சூழல்களையும் யதார்த்தங்களையும் அடிப்படையாகக் கொண்டமையை உறுதிப்படுத்தியது. ஒரு நுட்பமான மற்றும் அர்த்தமுள்ள புரிதலை அடைவதற்கு இந்த ஒத்துழைப்பு இன்றியமையாததுடன், இவர்களின் அர்ப்பணிப்புக்கும் பங்களிப்புகளுக்கும் நாங்கள் ஆழமாக நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இந்தப் அறிக்கையின் உருவாக்கம், UNDP – DPPA இனுடைய சிறு அளவிலான, மோதல் தடுப்புக்கான தூண்டுதல் முயற்சிகளுக்கு ஆரம்ப நிதியுதவி அளித்தலுக்கான நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பின் சமாதானமான, அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை நோக்கிய பிராந்திய கட்டமைப்பு: ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரல் மற்றும் உள்ளடங்கலான ஆளுகையை மேம்படுத்துதல் (2023–2027) ஆகியவற்றுக்கு இடையேயான கூட்டு முயற்சியாக மேற்கொள்ளப்பட்டதுடன் இதற்கு அவுஸ்திரேலிய அரசாங்கத்தின் வெளிநாட்டு அலுவல்கள் மற்றும் வர்த்தகத் திணைக்களத்தின் தாராளமான ஆதரவும் கிடைத்தது.

This report is produced with the generous support of:

**வடிவமைப்பு மற்றும் விளக்கப்படங்கள்:**

ஒடைல் ஸ்டபோன்
அலெக்சாண்ட்ரா ஸ்டெயின்க்ராஸ் (adelphi research)

**அட்டைப் படம்:**

ஒடைல் ஸ்டபோன்

**புகைப்படங்கள்:**

adelphi research

**வெளியீட்டாளர்:**

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP)
ஐக்கிய நாடுகள் கட்டடத்தொகுதி, 202-204,
பௌத்தலோக மாவத்தை,
கொழும்பு 7. இலங்கை.

தொலைபேசி: +94-112-580691
ஃபேக்ஸ்: +94-112-581116; 2501396
மின்னஞ்சல்: registry.lk@undp.org

© United Nations Development Programme, 2025

**பொறுப்புத் துறப்பு**

இந்த அறிக்கையானது, UNDP - DPPA கூட்டு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பு ஆகியவற்றின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட ஒரு கூட்டு முயற்சியின் ஒரு பகுதியாகும், மேலும் இது adelphi research நிறுவனத்தால் நடாத்தப்பட்டது. இந்த அறிக்கையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள அனைத்துக் கருத்துக்களும், பார்வைகளும் மதிப்பீட்டிலிருந்து பெறப்பட்ட அவதானிப்புகள், பகுப்பாய்வுகள் மற்றும் நுண்ணறிவுகளின் அடிப்படையிலானது என்பதுடன் இது செயற்திட்டம் நடாத்தப்பட்ட சூழலை பிரதிபலிக்கிறது. இந்த வெளியீட்டில் முன்வைக்கப்பட்டுள்ள கண்டறிவுகள், பகுப்பாய்வுகள் மற்றும் பரிந்துரைகள், முந்தைய வெளியீடுகளைப் போலவே, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம் (UNDP), ஐக்கிய நாடுகள் பால்நிலை சமத்துவம் மற்றும் பெண்கள் வலுவூட்டலுக்கான அமைப்பு (UN Women) அல்லது அந்தந்த நிர்வாக சபைகளின் ஒரு பகுதியாக உள்ள எந்தவொரு ஐ.நா. உறுப்பு நாடுகளின் உத்தியோகபூர்வ நிலைப்பாட்டையும் பிரதிநிதித்துவப்படுத்தாது. நன்றியுரையில் குறிப்பிடப்பட்டவர்கள் அல்லது அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டவர்கள் இக்கருத்துக்களை அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை. இந்த வெளியீட்டில் உள்ள தகவலைச் சரிபார்க்க அனைத்து நியாயமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இருப்பினும், வெளியிடப்பட்ட தகவல்கள் எந்தவிதமான உத்தரவாதமும் இன்றி வழங்கப்படுவதுடன், அது வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கலாம். தகவல்களின் விளக்கம் மற்றும் பயன்பாட்டிற்கான பொறுப்பு வாசகரைச் சார்ந்தது. அதன் பயன்பாட்டினால் ஏற்படும் எந்தவொரு சேதத்திற்கும் ஐ.நா. அபிவிருத்தி திட்டம் அல்லது ஐ.நா. பெண்கள் அமைப்பு பொறுப்பேற்காது.

# இலங்கைக்கான
# பால்நிலைசார்
# காலநிலை
# பாதுகாப்பு
# மதிப்பீடு

Joint UNDP-DPPA
Programme on
Building National
Capacities for
Conflict Prevention

# முன்னுரை

இலங்கையில் காலநிலை மாற்றம் என்பது வெறுமனே ஒரு கருத்துரீதியான அச்சுறுத்தல் அல்ல, அது அன்றாடவாழ்வின் யதார்த்தம் என்பதுடன் இது மக்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, ஏற்றத்தாழ்வுகளை ஆழமாக்கி, பல தசாப்தகால மோதல்களுக்குப் பின்னர் இன்னமும் மீண்டு வரும் சமுதாயங்களின் மீண்டெழுதிறனை பரிசோதிக்கின்றது. ஆயினும்கூட, இலங்கையானது காலநிலை பாதுகாப்பிற்காக வலுவான மனித அபிவிருத்தியுடன் குறைந்த காபன் உமிழ்வுகளுடன் கூடிய ஒரு புத்தாக்கமான, பால்நிலை உணர்திறனான பார்வையுடன் இணைக்கின்ற ஒரு வித்தியாசமான பாதையில் பயணிக்கத் தனித்துவமாகத் தயாராக உள்ளது. இந்த அறிக்கையானது தணிப்பு மற்றும் இசைவாக்கல் முயற்சிகள் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துகின்றதும், ஒவ்வொரு தனிநபருக்கும் வலுவூட்டலை வழங்குகின்றதும், பல தலைமுறைகளாகக் கட்டியெழுப்பப்பட்ட பலவீனமான சமாதானத்தைத் தக்கவைப்பதையும் உறுதி செய்வதற்கான ஒரு திட்ட வரைபை துல்லியமாக வழங்குகிறது.

இந்த மதிப்பீடானது இலங்கையில் காலநிலை மீண்டெழுதிறன் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகிய இரட்டை நோக்கங்களுடன் ஓர் பல்தரப்பு சமூக இடையீடு, மற்றும் பால்நிலை கண்ணோட்டத்தை ஒருங்கிணைப்பதால் ஒருவகையில் தனித்துவமானது. இந்த பகுப்பாய்வானது பால்நிலை வகிபாகங்கள், விழுமியங்கள் மற்றும் அடையாளங்கள் என்பன இனம், வயது, இயலாமை, மதம் மற்றும் இருப்பிடம் ஆகியவற்றுடன் எவ்வாறு மேற்பொருந்துகின்றன (அல்லது குறுக்கிடுகின்றன) என்பதை ஆராய்வதன் மூலமாக காலநிலை அபாயங்களும் சமூக பாதிப்புகளும் எவ்வாறு ஒன்றிணைந்துள்ளன என்பதை வெளிப்படுத்துகிறது. இந்த உட்பார்வைகள் சமூக பிளவுகளை ஆழப்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை நிவர்த்தி செய்யும் கொள்கைகளுக்கு வழிவகுக்கின்றன.

இலங்கை போன்ற நெருக்கடிக்குப் பிந்தைய சூழலில், காலநிலை நடவடிக்கைகளை சமூக நல்லிணக்கத்துடன் ஒன்றிணைப்பது வெறுமனே ஒரு விருப்பமான விடயம் மட்டுமல்ல, அது இன்றியமையாததுமாகும். பல வேளைகளில், நல்ல நோக்கத்துடனான இசைவாக்கல் திட்டங்கள் பழைய பிளவுகளைக் கடினமாக்கியுள்ளன. இந்த ஆய்வானது காலநிலை இசைவாக்கமானது உள்ளூர் பதட்டங்களுக்கு உணர்திறனின்றி வடிவமைக்கப்பட்டால் எவ்வாறு பிரிவினைகளை ஆழப்படுத்த முடியும் என்பதை விளக்குகிறது. அதே நேரத்தில், இது மோதலுக்கு உணர்திறன் கொண்ட இசைவாக்கத்திற்கான உறுதியான உத்திகளை வழங்குவதுடன் இது மீண்டெழுதிறன் கொண்ட உட்கட்டமைப்பில் முதலீடுகள், சமமான வள ஒதுக்கீடு மற்றும் முகாமைத்துவம் மற்றும் பங்கேற்புத் திட்டமிடல் ஆகியவை நிறுவனங்களின் மீதான நம்பிக்கையை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்பதையும், சுற்றுச்சூழல் சவால்களைப் பகிரப்பட்ட மீட்சியின் வாய்ப்புகளாக எவ்வாறு மாற்ற முடியும் என்பதையும் எடுத்துக்காட்டுகிறது.

பதுளை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு தனித்துவமான மாவட்டங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், இந்த அறிக்கை தரவுகளுக்குப் பின்னால் உள்ள வாழ்க்கையின் யதார்த்தங்களுக்குள் செல்கின்றது. இந்த பகுதிகளில், குறிப்பாக பால்நிலை மற்றும் வர்க்கம் போன்ற காரணிகளுடன் மேற்பொருந்தும். இன மற்றும் மத சிறுபான்மையினர் எவ்வாறு கூட்டுப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர் என்பதை நாம் நேரடியாகக் காண்கிறோம். தமிழ் விவசாயிகள் முல்லைத்தீவில் மட்டுப்படுத்தும் ஒழுங்குவிதிகளை எதிர்கொள்வது, பதுளையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள் குறைந்த வாழ்வாதாரங்கள், மண்ணரிப்புக்கு உள்ளாகும் நிலங்கள் மற்றும் ஊதியம் இல்லாத பராமரிப்பு பணி என்பனவற்றை கையாள்வது, மற்றும் அம்பாந்தோட்டையில் உள்ள கரையோர சமுதாயங்களின் மீன்பிடி வாழ்வாதாரங்கள் ஒவ்வொரு பவளப்பாறைகள் அழிவுடனும் மறைந்து போவது போன்றவற்றை காண்கிறோம். இந்த ஆய்வானது பால்நிலை பரிமாணத்தை வெளிப்படுத்துகிறது, உதாரணமாக காலநிலையால் தூண்டப்பட்ட புலம் பெயர்தலில் - வெளிநாடுகளில் வீட்டுப் பணியாளர்களாகச் செல்லும் பெண்கள் சுரண்டலை எதிர்கொள்ளுதல் மற்றும் நகர்ப்புற அமைப்புகளில் வேலை தேடும் ஆண்கள் நிச்சயமற்ற சூழலில் பயணிப்பது போன்றவற்றின் போக்குகளை வெளிப்படுத்துகிறது.

இந்த உள்ளூர்மயமாக்கப்பட்ட உட்பார்வைகள், ஒவ்வொரு சமுதாயத்தின் தனித்துவமான காலநிலை அழுத்தங்கள், சமூக-அரசியல் பரிமாணங்கள் மற்றும் கலாசார சூழல்களின் மேற்பொருந்துகைக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட துணை-தேசிய உத்திகளின் உடனடித் தேவைப்பாட்டை சுட்டிக் காட்டுகின்றன. இந்த கதைகள் ஒரேமாதிரியான உத்திகள் ஒருபோதும் அனைவருக்கும் பொருந்தாது என்பதை நமக்கு நினைவூட்டுகின்றன.

இந்த ஆய்வு முக்கியமான முதன்நிலை உட்பார்வைகளை வழங்கும் அதேவேளை, இது இலங்கையின் பல்வேறு நிலப்பரப்புகளுக்கான ஒரு ஆரம்ப ஆய்வாகும். இந்த கண்டறிவுகளின் அடிப்படையில் ஒன்பது மாகாணங்களிலும் இலக்கு வைக்கப்பட்ட முன்னெடுப்புக்களுக்கு தகவலறிவிப்பதுடன் பால்நிலைக்கு பதிலளிக்கும், மோதலுக்கு உணர்திறனான காலநிலை உத்திகளின் ஒருங்கிணைப்பை மேலும் செம்மைப்படுத்தும் ஒன்றாக இருக்கக் கூடிய ஒரு விரிவான தேசிய மதிப்பீடு முக்கியமான அடுத்த படிநிலையாகும்.

இந்த ஆராய்ச்சியானது காலநிலை நடவடிக்கை மற்றும் மோதலுக்கு பிந்தைய மீட்சி ஆகியவை எவ்வாறு ஒன்றையொன்று வலுப்படுத்த முடியும் என்பதை நிரூபிக்கிறது. இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ள பால்நிலைக்கு பதிலளிக்கும் உணர்திறன் கட்டமைப்பை ஏற்றுக்கொள்வதன் மூலமாக இலங்கை காலநிலை இசைவாக்கமானது அபாயங்களைக் குறைப்பது மட்டுமல்லாமல், சமத்துவத்தை ஊக்குவித்து சமுதாயங்களை வலுவூட்டி சமாதானத்தை நிலைநிறுத்துகிறது என்பதை வெளிப்படுத்துவதில் முன்னோடியாக இருக்க முடியும்.

ஐ.நா சக அலுவலர்களுடன் இணைந்து பணியாற்றிய adelphi ஆய்வு நிறுவனத்தில் உள்ள ஆய்வுக் குழுவிற்கு எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். தமது உட்பார்வைகளை வழங்கிய சுற்றுச்சூழல் அமைச்சு காலநிலை மாற்றச் செயலகம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு ஆகியவற்றுக்கும், மேலும் இந்த முன்னோடிப் பணியை வடிவமைக்க வெளிப்படையான பிரதிபலிப்புகளை வழங்கிய சிவில் சமூக அமைப்புகள், சமுதாயத் தலைவர்கள் மற்றும் ஆய்வில் பங்கேற்றவர்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இங்கு முன்வைக்கப்பட்ட ஆதாரங்களும் பரிந்துரைகளும் துணிச்சலான நடவடிக்கைகளை ஊக்குவிப்பதுடன் புத்தாக்கமான தீர்வுகளுக்கு வித்திடும் என்பதுடன் கொள்கை வகுப்பாளர்கள், பயிற்சியாளர்கள் மற்றும் அபிவிருத்திப் பங்காளிகளிடையே உண்மையான பங்காண்மைகளை வளர்க்கும் என நாம் உளமார நம்புகிறோம். நாம் ஒவ்வொரு இலங்கையரும் பால்நிலை அல்லது பின்னணியைப் பொருட்படுத்தாமல் ஒன்றிணைந்து செயற்பட்டால் இந்த காலநிலை சவால்களை வாய்ப்புக்களாக மாற்ற முடியும். அத்துடன் எமது பூமியும் எமது அமைதியும் சமமாக பாதுகாக்கப்படும் அனைவரும் செழித்து வாழக்கூடிய ஒரு உலகத்தை உருவாக்க முடியும்

**மார்க்–ஆண்ட்ரே ஃபிராஞ்ச்**
ஐ.நா வதிவிட ஒருங்கிணைப்பாளர்
இலங்கை

**அசுசா குபோட்டா**
வதிவிடப் பிரதிநிதி
ஐ.நா அபிவிருத்தி திட்டம்
இலங்கை

**ரமாயா சல்காடோ**
அலுவலகத் தலைவர்
ஐ.நா பெண்கள் அமைப்பு
இலங்கை

# பொருளடக்கம்


1. அறிமுகம் 8

1.1 ஆராய்ச்சி வினாக்கள் 11

2. செயன்முறை 12

2.2 தரவு சேகரிப்பு முறைமைகள் 14

3. காலநிலை பாதுகாப்பு வழிமுறைகள் 20

3.1 காலநிலை தாக்கங்கள் வாழ்வாதாரங்களை சீர்குலைத்து இடம்பெயர்வுகளையும் நலிவுகளையும் தூண்டுகின்றன. 22

3.2 ஓரங்கட்டப்படலும் சேவைகளுக்கான சமமற்ற அணுகலும் 28

3.3 மனித-வனவிலங்கு மோதல் மனித பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் மற்றும் உயிர்ப்பல்வகைமையை அச்சுறுத்துகிறது 33

3.4 காலநிலை மாற்றம் மற்றும் மோசமான கல்வி சேவைகள் இலங்கையில் இளைஞர்களை எதிர்மறையாகப் பாதிக்கின்றன 39

3.5 காலநிலை மாற்றம் ஏற்கெனவே பாதிக்கப்படக்கூடிய சுகாதார அமைப்பில் உள்ள தவறுகளை ஆழமாக்குகிறது 43

4. இலங்கையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம் 47

4.1 வளிமண்டல வெப்பநிலை 48

4.2 மாறிவரும் மழைவீழ்ச்சி 48

4.3 மண் வளங்குன்றல் 50

4.4 தீவிர காலநிலை நிகழ்வுகள் 50

4.5 மேற்பொருந்துகின்ற பால்நிலை கண்ணோட்டத்தில் காலநிலை மாற்றத்தின் துறைசார் தாக்கங்கள் 51

5. இலங்கை சூழல் மற்றும் போக்குகள் 55

5.1 குடித்தொகை விவரங்கள் 56

5.2 மோதலின் வரலாறு 56

5.3 பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் அமைதியின்மை 58

5.4 மாற்றமடையும் ஊடக தளம் 58

5.5 பால்நிலை, இயலாமை மற்றும் மேற்பொருந்துகை 58

6. சம்பவ ஆய்வுகள் 60

6.1 பதுளை 62

6.2 மட்டக்களப்பு 69

6.3 அம்பாந்தோட்டை 79

6.4 முல்லைத்தீவு 85

7. ஏற்கனவேயுள்ள பதிலளிப்புகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் 92

7.1 தற்போதைய கொள்கை கட்டமைப்பு 93

7.2 கொள்கை இடைவெளிகள் மற்றும் காலநிலை பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள் 94

7.3 கற்றுக்கொண்ட பாடங்கள்: சமூக நல்லிணக்கம் மற்றும் உள்ளூர் ஆளுகையை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துதல் 95

8. முடிவுகளும் பரிந்துரைகளும் 96

8.1 பொதுவான பரிந்துரைகள் 97

8.2 மாவட்ட ரீதியான பரிந்துரைகள் 101

9. உசாத்துணைகள் 108

இணைப்பு 1 112

இணைப்பு 2 113

# சுருக்கெழுத்துக்களின் பட்டியல்

| | |
|---|---|
| **CCKP** | காலநிலை மாற்ற அறிவு தளம் |
| **CDR** | காபனீரொக்சைட் அகற்றுதல் |
| **CKDu** | நாட்பட்ட சிறுநீரக நோய் |
| **COVID-19** | கொரோனா வைரஸ் நோய் |
| **CSOs** | சிவில் சமூக அமைப்புகள் |
| **FBR** | குடும்ப பின்னணி அறிக்கை |
| **FGDs** | குவிநோக்க குழு கலந்துரையாடல்கள் |
| **GBV** | பால்நிலை அடிப்படையிலான வன்முறை |
| **GDP** | மொத்த உள்நாட்டு உற்பத்தி |
| **IMF** | சர்வதேச நாணய நிதியம் |
| **KIIs** | முக்கிய தகவலாளரின் நேர்காணல்கள் |
| **LGBTQ+** | பெண் தன்பாலின ஈர்ப்பாளர், ஆண் தன்பாலின ஈர்ப்பாளர், இருபாலின தன்பாலின ஈர்ப்பாளர், திருநர், விந்தையாளர் |
| **LTTE** | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| **MPI** | பல்பரிமாண வறுமை குறிகாட்டி |
| **MVIs** | பல்பரிமாண பாதிப்பு குறிகாட்டி |
| **NDCs** | தேசிய அளவில் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்புகள் |
| **NAP** | தேசிய இசைவாக்கல் திட்டம் |
| **NEP** | தேசிய சுற்றுச்சூழல் கொள்கை |
| **NGOs** | அரச சார்பற்ற நிறுவனங்கள் |
| **UN** | ஐக்கிய நாடுகள் அமைப்பு |
| **UNDP** | ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் |



இலங்கையில் தேயிலைத் தோட்டம் (C) அவுஸ்டின் கர்டிஸ் / அன்ச்ப்லாஷ்

# 1 அறிமுகம்

இலங்கையில் காலநிலை மாற்றமானது சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலிவுத்தன்மைகளை தீவிரப்படுத்தி, வாழ்வாதார-ங்களுக்கு அச்சுறுத்தல் விடுத்து, சமத்துவமின்மைகளை விரிவுபடுத்தி, நாட்டின் நிலையற்ற போருக்குப் பிந்தைய சமாதானத்திற்கு ஆபத்தை விளைவிக்கின்றது. இருப்பினும், சுற்றுச்சூழல் பாதிப்பு மற்றும் சமூக மீண்டெழுதிறன் ஆகியவற்றின் பின்னிப்பிணைந்த சவால்களை எதிர் கொள்வதில் நாடானது உதாரணமாக திகழும் தனித்துவமான நிலையில் உள்ளது. ஒப்பீட்டளவில் உயர்ந்த மனித அபிவிருத்தி குறிகாட்டிகளையும், பாரிஸ் ஒப்பந்தத்தின் இலக்குகளை அடைவதற்குத் தேவையான அளவை விட மிகக் குறைந்தளவான காபன் உமிழ்வுகளையும் கொண்டுள்ளதால், காலநிலை தணிப்பு மற்றும் இசைவாக்கலில் நாடானது குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்துள்ளது. இருப்பினும், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் மனித பாதுகாப்பு அபாயங்கள் ஆழ்ந்த பால்நிலை ரீதியான வேறுபாடுகளைக் கொண்டுள்ளதுடன், இந்த சவால்களை ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், பெண்பிள்ளைகள் மற்றும் பால்நிலை பல்வகைமை கொண்டவர்கள் மிகவும் வேறுபட்ட வழிகளில் அனுபவிக்கின்றனர்.

## இந்த ஆய்வு ஏன் முக்கியமானது.

### பால்நிலை, காலநிலை மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்தல்.

இந்த பகுப்பாய்வின் சில கண்டறிவுகள் நம்பிக்கை அடிப்படையில் வரக்கூடும் என்றாலும், இது இலங்கை மற்றும் ஆசிய-பசிபிக் பிராந்தியத்திற்கான முதலாவது பால்நிலைக்கு பதிலளிக்கக்கூடிய காலநிலை பாதுகாப்பு மதிப்பீடாகும். இது பால்நிலை, காலநிலை மீண்டெழுதிறன் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் ஓர் புதிய மேற்பொருந்துகின்ற அணுகுமுறையை வழங்குகிறது. இது பால்நிலை வகிபாகங்கள், விழுமியங்கள் மற்றும் சமத்துவமின்மைகள் எவ்வாறு காலநிலை மற்றும் பாதுகாப்பு சவால்களுடன் மேற்பொருந்துகின்றன என்பதை விமர்சன ரீதியாக ஆராய்வதுடன் இது ஏற்கனவேயுள்ள ஆய்வுகளில் ஒரு குறிப்பிடத்தக்க இடைவெளியாகும். இந்த அறிக்கையானது ஓர் மேற்பொருந்துகின்ற பால்நிலைகண்ணோட்டத்தை ஒருங்கிணைப்பதன் மூலமாக பால்நிலை, இனம், வயது, இயலாமை மற்றும் மதம் போன்ற குறிகாட்டிகள் நலிவடையக்கூடிய தன்மையையும் மீண்டெழுதிறனையும் எவ்வாறு வடிவமைக்கின்றன என்பதை ஆராய்வதன் மூலமாக, இலங்கையின் காலநிலை செயற்பாடு தற்போதைய பால்நிலை சமத்துவமின்மையை கவனக்குறைவாக அதிகரிக்காமல், மாறாக சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கும் நிலைநிறுத்துவதற்கும் வாய்ப்புகளை அதிகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த அணுகுமுறையானது காலநிலை இசைவாக்கம் மற்றும் தணிப்பு முயற்சிகள் உள்ளடங்கலானதாகவும், சமத்துவமானதாகவும், உருமாற்றக்கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்வதற்கும், அனைத்து குடித்தொகை குழுக்களின் தனித்துவமான பாதிப்புகளையும் பலங்களையும் நிவர்த்தி செய்வதற்கும், நீடித்த சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கும் மிகவும் முக்கியமானதாகும். இந்த நுட்பமான பார்வையானது காலநிலை பாதுகாப்பு ஆய்வுகளில் அரிதாகவே பயன்படுத்தப்படுவதுடன், இந்த ஆய்வானது அத்தகைய அணுகுமுறையின் முக்கியத்துவத்தை விளக்க முடியும் என்று நம்பப்படுகிறது.

### காலநிலை செயற்பாட்டை சமாதானத்தை கட்டியெழுப்பலுடன் ஒன்றிணைத்தல்

- மோதலுக்குப் பிந்தைய பரிமாணமும் காலநிலை மாற்றமும்: இந்த ஆய்வானது மோதலுக்குப் பிந்தைய மீட்சியை காலநிலை மீண்டெழுதிறனுடன் தனித்துவமாக இணைப்பதுடன், இலங்கையின் பலவீனமான போருக்குப் பிந்தைய சூழலில் காலநிலை இசைவாக்கல் எவ்வாறு சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக செயற்பட முடியும் என்பதை வலியுறுத்துகிறது. நல்லிணக்கம் மற்றும் காலநிலை செயற்பாடு ஆகிய இரண்டின் மீதான இந்த இரட்டை அவதானமானது ஒரு புதிய கண்ணோட்டமாகும்.
- மோதலுக்கு உணர்திறனான காலநிலை இசைவாக்கல்: இது மோசமாக வடிவமைக்கப்பட்ட காலநிலை பதிலளிப்புகள் எவ்வாறு சமத்துவமின்மையை ஆழமாக்குவதுடன் சமாதானத்தை கட்டியெழுப்புவதை குறைமதிப்பிற்கு உட்படுத்தும் என்பதை சுட்டிக் காட்டுவதுடன், காலநிலை இசைவாக்கலை தேசிய ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஒரு பொறிமுறையாக மாற்றக்கூடிய மோதலுக்கு உணர்திறனான உத்திகளை வழங்குகிறது.

### உள்ளூர்மயமாக்கப்பட்ட மற்றும் சூழலுக்கு குறிப்பான உட்பார்வைகள்

- துணை-தேசிய கண்ணோட்டம்: இந்த அறிக்கையானது பதுளை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு ஆகிய நான்கு வேறுபட்ட மாவட்டங்களில் கவனம் செலுத்துவதன் மூலம், காலநிலை அழுத்தங்கள் சமூக-பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார காரணிகளுடன் எவ்வாறு இணைகின்றன என்பது குறித்த உள்ளூர்மயமாக்கப்பட்ட உட்பார்வைகளை வழங்குகிறது. இந்த துணை-தேசிய கண்ணோட்டமானது தேசிய அளவிலான மதிப்பீடுகளில் பெரும்பாலும் தவறவிடப்பட்ட சிறப்பாக வடிவமைக்கப்பட்ட கொள்கை பரிந்துரைகளை அனுமதிக்கிறது.
- இன மற்றும் மத ரீதியான ஓரங்கட்டல்: இந்த ஆய்வானது காலநிலை பாதிப்புக்குள்ளான பகுதிகளில் உள்ள இன மற்றும் மத சிறுபான்மையினர் ஆளுகை இடைவெளிகள் மற்றும் முறைப்படுத்தப்பட்ட புறக்கணிப்பு காரணமாக எவ்வாறு கூட்டு சவால்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டுகிறது. உதாரணமாக, முல்லைத்தீவில் உள்ள தமிழ் விவசாயிகள் விவசாய ஆதரவில் சமத்துவமின்மை மற்றும் யானை வேலி கட்டுவதற்கான மட்டுப்பாடுகள் தொடர்பில் அறிக்கையிடுவதுடன், இவை பரந்த காலநிலை-பாதுகாப்பு ஆய்வுகளில் அரிதாகவே கலந்துரையாடப்படுகின்றன.

### பால்நிலை அடிப்படையிலான வாழ்வாதாரங்கள் மற்றும் புலம்பெயர்வு மீதான அவதானம்

- பால்நிலை அடிப்படையிலான வாழ்வாதார இடையூறுகள்: காலநிலையால் தூண்டப்பட்ட வாழ்வாதார இடையூறுகள் எவ்வாறு பெண்களை, குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் ஊதியமற்ற பராமரிப்புப் பணிகளுடன் பொருளாதாரப் பொறுப்புகளை சமநிலைப்படுத்தும் கிராமப்புறப் பெண்களை அளவுக்கு மீறிப் பாதிக்கின்றன என்பதை இந்த அறிக்கை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

- குறிப்பாக, இலங்கையில் பெண்களின் தொழில் பங்கேற்பானது, ஊதியமற்ற பராமரிப்புப் பணிகள் தொடர்பான எதிர்பார்ப்பு, போதிய போக்குவரத்து மற்றும் குழந்தை பராமரிப்பு வசதிகள் இல்லாமை, கட்டுப்பாடான சட்டங்கள் மற்றும் பாலியல் துன்புறுத்தல் உள்ளிட்ட முறைப்படுத்தப்பட்ட தடைகளால் பாதிக்கப்படுகிறது. வேலை செய்யும் பெண்கள் கல்வி, சுகாதாரம், துணி சார் உற்பத்தி, விவசாயம் மற்றும் அலுவலக நிர்வாகத் துறைகளில் பெருமளவில் குவிந்துள்ளனர். நாட்டில் பால்நிலை அடிப்படையிலான வன்முறை பரவலாக உள்ள அதே நேரத்தில் பாகுபாடு காட்டும் வழக்காற்று சட்டங்கள் திருமணம், விவாகரத்து மற்றும் சொத்து தொடர்பான பெண்களின் உரிமைகளை மேலும் மட்டுப்படுத்துகின்றன. குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்கள், போரினால் பாதிக்கப்பட்ட விதவைகள், சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த பெண்கள், இயலாமை உடையவர்கள் மற்றும் LGBTQ+ நபர்களுக்கு மேற்பொருந்துகின்ற பாதிப்புகள் மிகவும் கடுமையான சவால்களை முன்வைக்கின்றன.
- காலநிலையால் தூண்டப்பட்ட புலம்பெயர்வு: காலநிலை மாற்றத்தால் தூண்டப்படும் புலம்பெயர்வு ஒரு சமாளிக்கும் உத்தியாக ஆராயப்படுகிறது, இது ஆண்களும் பெண்களும் புலம்பெயர்வை எவ்வாறு வித்தியாசமாக அனுபவிக்கிறார்கள் என்பதை வெளிப்படுத்துகிறது. உதாரணமாக, வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த பெண்கள் பெரும்பாலும் வளைகுடா நாடுகளுக்கு வீட்டுப் பணியாளர்களாக குடியேறுவதுடன், பெரும்பாலும் சுரண்டலை எதிர்கொள்கின்ற அதே நேரத்தில் ஆண்கள் குறைந்த ஊதிய வேலைகளுக்காக நகர்ப்புற மையங்களுக்கு குடியேறுகின்றனர்.

**ஆளுகையும் சமூக நல்லிணக்கமும்**

- ஓரங்கட்டல் பற்றிய புரிதல்கள்: இந்த அறிக்கையானது சமமற்ற சேவை வழங்கல் மற்றும் ஆளுகை தோல்விகள் என்பன காலநிலை பாதிப்புகளை எவ்வாறு அதிகரிக்கின்றன என்பதையும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை எவ்வாறு குறைக்கின்றன என்பதையும் எடுத்துக்காட்டுகிறது. ஆளுகைக்கும் காலநிலை தாங்குதிறனுக்கும் இடையிலான இந்த தொடர்பு ஏற்கனவேயுள்ள ஆராய்ச்சியில் போதுமானளவு ஆராயப்படவில்லை. இது பாரபட்சம் குறித்த புரிதல்களை நிவர்த்தி செய்வதற்கும், வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்வதற்கும் காலநிலை இசைவாக்கலின் ஓர் முக்கியமான ஆனால் குறைவாக கலந்துரையாடப்படுகின்ற அம்சமான உள்ளடங்கலான ஆளுகை மற்றும் பங்கேற்பு அணுகுமுறைகளின் அவசியத்தை வலியுறுத்துகிறது.

**செயன்முறையில் புத்தாக்கங்கள்**

- கதைசொல்லல் மற்றும் களமட்டக் கோட்பாடு: இந்த ஆய்வானது "காலநிலை மாற்றம்" அல்லது "பால்நிலை" என்ற குறுகிய வரையறைகளைத் தவிர்த்து, பல்வேறு குழுக்களின் வாழ்க்கை அனுபவங்களைப் படம்பிடிக்க, கதைசொல்லல் அணுகுமுறையையும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களையும் பயன்படுத்துகிறது. கடுமையான அளவறிரீதியான காலநிலை அபாய பகுப்பாய்வுடன் இணைந்து, இந்த செயன்முறை மீண்டெழுதிறன் வழிமுறைகள் தொடர்பான ஓர் செழுமையான, மேலும் உள்ளடங்கலான புரிதலை வழங்குகிறது.
- மேற்பொருந்தும் தரவு பகுப்பாய்வு: பால்நிலை, வயது, இனம் மற்றும் பிற அடையாளக் குறிகாட்டிகளால் தரவுகளைப் தரம்பிரிப்பதன் மூலம், இந்த அறிக்கை வேறுபட்ட பாதிப்புகள் குறித்த நுணுக்கமான உட்பார்வைகளை வழங்குவதுடன், இது பல ஒன்றிணைந்த நிலை ஆய்வுகளுடன் ஒப்பிடும்போது ஒரு செயன்முறை ரீதியிலான பலமாகும்.

## காலநிலை மாற்றம் மற்றும் மோதலுக்குப் பிந்தைய மீட்சி

இலங்கையில், காலநிலை மாற்றத்தினதும் மோதலுக்குப் பிந்தைய மீட்சியினதும் மேற்பொருந்துகையானது முக்கியமான சவால்களையும், அதே நேரத்தில் உருமாற்றியமைக்கும் வாய்ப்புகளையும் வழங்குகிறது. ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி, உயரும் வெப்பநிலை மற்றும் தீவிர வானிலை போன்ற காலநிலையால் தூண்டப்பட்ட இடையூறுகள், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் போன்ற மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில வரலாற்று ரீதியான மனக்குறைகளை அதிகரிப்பதுடன் சமத்துவமின்மையை ஆழப்படுத்துகின்றன. பெண் தலைமைத்துவ குடும்பங்கள், இளைஞர்கள் மற்றும் கிராமிய சமுதாயங்கள் உட்பட ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் எதிர்கொள்கின்றன. இந்த பரிமாணங்கள் பலவீனமான சமூக நல்லிணக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்தி, குறிப்பாக காலநிலை இசைவாக்கல் முயற்சிகள் சமமற்றதாகக் கருதப்படும்போது நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை சிதைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளன. இருப்பினும், மோதலுக்கு உணர்திறனான மற்றும் உள்ளடங்கலான உத்திகளுடன் அணுகப்பட்டால், காலநிலை இசை- வாக்கலானது சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு சக்திவாய்ந்த கருவியாகச் செயற்பட முடியும் என்பதுடன், இது சமமான அபிவிருத்தி மற்றும் பகிரப்பட்ட மீண்டெழுதிறன் மூலமாக நல்லிணக்கத்தை வளர்த்து, தேசிய ஒற்றுமையின் வலுவான உணர்வை உருவாக்கும்.

## ஓர் பூர்வாங்க பகுப்பாய்வு

இந்த மதிப்பீடு ஒரு பூர்வாங்க பகுப்பாய்வு என்பதுடன், இது பதுளை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகிய நான்கு மாவட்டங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த மாவட்டங்கள் அவற்றின் பல்வகைப்பட்ட சமூக-பொருளாதார, புவியியல் மற்றும் காலநிலை பாதிப்புகள், அத்துடன் அவற்றின் மோதலுக்குப் பிந்தைய பரிமாணங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டன. இந்த கண்டறிவுகள் பெறுமதியான உட்பார்வைகளை வழங்கினாலும், அவை விரிவானவையல்ல. இலங்கை முழுவதும் காலநிலை பாதுகாப்பு அபாயங்கள் குறித்த முழுமையான மற்றும் நுணுக்கமான புரிதலை வளர்ப்பதற்கான ஒரு முக்கியமான அடுத்த கட்டமாக அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான தேசிய பகுப்பாய்வு எதிர்பார்க்கப்படுகிறது. இத்தகைய விரிவான மதிப்பீடு தேசிய மட்டத்தில் மிகவும் இலக்கு சார்ந்த மற்றும் வினைத்திறனான காலநிலை நடவடிக்கைக்கான அடித்தளமாக அமையும்.

## மீண்டெழுதலுக்கான வழிமுறை

இலங்கையின் அனுபவம், காலநிலை நடவடிக்கை எவ்வாறு மோதலுக்குப் பிந்தைய தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க செயன்முறைகளுடன் மேற்பொருந்துகிறது என்பதை விளக்குகிறது. காலநிலை பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் அதே வேளையில் சமூக நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு நாடு மேற்கொண்டு வரும் தொடர்ச்சியான முயற்சிகள், மோதல்களால் பாதிக்கப்பட்ட பிற பகுதிகளுக்கு பெறுமதியான பாடங்களை வழங்குகின்றன. பால்நிலைக்கு பதிலளிக்கக்கூடிய அணுகுமுறையை ஏற்றுக்கொள்வதன் மூலமாக, இலங்கை காலநிலை நடவடிக்கை எவ்வாறு சமத்துவத்தை மேம்படுத்துவதற்கும், பாதிப்புகளைக் குறைப்பதற்கும், சமாதானத்தை வளர்ப்பதற்கும் ஒரு கருவியாக இருக்கும் என்பதை நிரூபிப்பதுடன் ஒரு முன்மாதிரியாக வழிநடாத்த வாய்ப்பினை கொண்டுள்ளது.

இலங்கையில் காலநிலை பாதுகாப்பு மற்றும் வள மோதல் பகுப்பாய்வுகளில் பால்நிலை கண்ணோட்டம் பெரும்பாலும் இருப்பதில்லை. இந்த இடைவெளியானது, பல்வேறு குடித்தொகை குழுக்கள் எதிர்கொள்ளும் தனித்துவமான பாதிப்புகளை நிவர்த்தி செய்யும் உள்ளடங்கலான கொள்கைகளின் விருத்தியைத் தடுத்துள்ளது. உதாரணமாக, முல்லைத்தீவில் உள்ள பெண்கள் வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் ஆதரவு அமைப்புகளுக்கான அணுகல் இல்லாமல் போராடுவதுடன், இது காலநிலை அதிர்ச்சிகளுக்கான அவர்களின் பாதிப்பை அதிகரிக்கிறது. இதற்கிடையில், பதுளையில் உள்ள இளைஞர்கள் பாரம்பரிய வாழ்வாதாரங்களில் அதிகரித்து வரும் அதிருப்தியை எதிர்கொள்கின்றனர், ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் மண் சீரழிவின் தன்மையால் அவை இலாபமற்றதாகவும் நிலையற்றதாகவும் இருப்பதாகக் கருதுகின்றனர்.
இந்த அறிக்கை அந்த பயணத்தில் ஒரு முக்கியமான முதல் படிநிலையைக் குறிக்கிறது. இந்த மதிப்பீடானது பகுப்பாய்வில் பால்நிலை மற்றும் மேற்பொருந்தும் தன்மையை ஒருங்கிணைப்பதன் மூலமாக காலநிலை மாற்றம், சமூக-பொருளாதார காரணிகள் மற்றும் மனித பாதுகாப்பு ஆகியவற்றுக்கு இடையேயான சிக்கலான இடைவிளைவை வெளிப்படுத்துகிறது. வெவ்வேறு குழுக்களின் குறிப்பான தேவைகள் மற்றும் இயலளவுகளுக்கு ஏற்ப காலநிலை நடவடிக்கையை வடிவமைப்பதன் முக்கியத்துவத்தை இது சுட்டிக் காட்டுவதுடன், யாரும் பின்தங்கவில்லை என்பதை உறுதி செய்கிறது.

இது அபாயங்களைக் குறைப்பது மட்டுமல்லாமல், சமூகத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் மீண்டெழுதிறனை உருவாக்க வலுவூட்டும் உள்ளடங்கலான காலநிலை கொள்கைகளின் அவசியத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த மதிப்பீடானது மேற்பொருந்தும் பால்நிலை பரிமாணத்தில் கவனம் செலுத்தி, தேசிய ஒற்றுமை, சமத்துவம் மற்றும் பல்பரிமாண அபாய தணிப்பு முயற்சிகளுடன் காலநிலை நடவடிக்கையை ஒருங்கிணைப்பதற்கான ஒரு வரைபடத்தை வழங்குகிறது.

## 1.1 ஆராய்ச்சி வினாக்கள்

- **காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்கள்:** காலநிலை மாற்றத்தின் மீண்டெழுதிறன் மீதான முக்கிய தாக்கங்கள் என்ன, இதில் சுகாதாரம், உணவு, விவசாயம், இடம்பெயர்வு, உட்கட்டமைப்பு மற்றும் பொருளாதாரம் மீதான விளைவுகள் உள்ளடங்குமா? இந்த தாக்கங்களை பால்நிலை, இயலாமை மற்றும் சமூக உள்ளடக்க விழுமியங்கள் எவ்வாறு பாதிப்பதுடன் அவற்றுடன் எவ்வாறு இடைத்தொடர்புறுகின்றன?

- **சமாதானம் மற்றும் பாதுகாப்பு சூழல்:** ஊழல், ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள், ஆட்சிமுறை சிக்கல்கள் மற்றும் சமூக ஒருமைப்பாடு போன்ற முக்கிய பாதுகாப்பு அபாயங்கள் யாவை? பால்நிலை, வயது, இயலாமை, இனம் மற்றும் மதம் போன்ற காரணிகள் பாதுகாப்பின்மை மற்றும் மோதல்களுக்கான பங்களிப்புகளையும் அனுபவங்களையும் எவ்வாறு வடிவமைக்கின்றன?

- **சூழ்நிலை நலிவுத்தன்மைகள்:** நலிவுத்தன்மை மற்றும் காலநிலை மற்றும் பாதுகாப்பு அபாயங்களிற்கெதிரான மீண்டெழுதிறனை அதிகரிக்கச் செய்யும் சூழ்நிலை காரணிகள் யாவை? அடையாளக் குறிகாட்டிகள் (உதா: பால்நிலை, வயது, இயலாமை, இனம்) தனிநபர் மற்றும் சமூக மட்டங்களில் அபாயங்களை வடிவமைப்பதற்காக எவ்வாறு மேற்பொருந்துகின்றன?

- **காலநிலை தொடர்பான பாதுகாப்பு வழிமுறைகள்:** காலநிலை அழுத்தங்களும் பாதுகாப்பு அபாயங்களும் மனித பாதுகா- ப்பை எவ்வாறு பாதிக்கின்றன? இந்த பரிமாணங்களுக்கு வெவ்வேறு குழுக்கள் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன மற்றும் எவ்வாறு பதிலளிக்கின்றன?

- **காலநிலை தொடர்பான பாதுகாப்பு அபாயங்களுக்கான பதிலளிப்புகள்:** இந்த சவால்களை எதிர்கொள்ளும் கொள்கைகள் மற்றும் கட்டமைப்புகள் யாவை? அவை எவ்வாறு நிதியளிக்கப்படுகின்றன, அமுல்படுத்தப்படுகின்றன, மற்றும் எவ்வாறு மேம்படுத்தப்படலாம்?



மீன்பிடி படகுகள், தங்காலை, அம்பாந்தோட்டை மாவட்டம்

# 2 செயன்முறை

இந்த மதிப்பீடானது, இலங்கைக்கு ஏற்றவாறு இசைவாக்கிக்கொள்ளப்பட்ட “Weathering Risk Methodology” செயன்முறையைப் பயன்படுத்தி, காலநிலை மாற்றமானது பால்நிலை, சமாதானம் மற்றும் பாதுகாப்புடன் எவ்வாறு இடைவினையாற்றுகின்றது என்பதை ஆராய்கிறது. இது அளவறிசார் மற்றும் பண்பறிசார் அணுகுமுறைகளை ஒன்றிணைத்து, காலநிலை அபாயங்கள் எவ்வாறு சமாதானம் மற்றும் நல்லிணக்கத்தைப் பாதிக்கின்ற சமூக, பொருளாதார மற்றும் அரசியல் காரணிகளில் செல்வாக்குச்செலுத்துகின்றன என்பதற்கான முக்கிய வழிமுறைகளை அடையாளம் காட்டுகின்றது.




படம் 1: Weathering Risk Methodology

இந்த பகுப்பாய்வானது, காலநிலை அபாயத்தின் கீழ் புதிதாக உருவாக்கப்பட்ட காலநிலை தாக்கத் தரவை, பல்வேறு குழுக்களிடையேயான மீண்டெழுதன்மை குறித்த துணைநிலை (desk research) மற்றும் கள அடிப்படையிலான சமூக அரசியல் ஆராய்ச்சியுடன் ஒருங்கிணைக்கிறது.

இலங்கை ஆராய்ச்சியாளர்களால் நடாத்தப்பட்ட கள ஆய்வானது, அரசாங்க அலுவலர்கள், ஐ.நா. நிறுவனங்கள், சிவில் சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் போன்ற பங்குதாரர்களுடன் தமிழ் அல்லது சிங்கள மொழிகளிலான நேர்காணல்கள் மற்றும் கலந்தாய்வுகளை உள்ளடக்கியது.

பிரதானமாக, கள ஆய்வில் “காலநிலை மாற்றம்“ என்ற வார்த்தை பயன்படுத்தப்படாமல், அதற்குப் பதிலாக பதிலளிப்பவர்களிடம் பல்வேறு அபாயங்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்து கேட்கப்பட்டதுடன், இது பல்வேறு கண்ணோட்டங்களைப் பெறவும், சாத்தியமான உட்பார்வைகளை மட்டுப்படுத்துவதைத் தவிர்க்கவும் உதவியது. இதேபோல், “பால்நிலை” மற்றும் “சமாதானம்” போன்ற சொற்கள் வேண்டுமென்றே குறைக்கப்பட்டதுடன் அதற்குப் பதிலாக பல்வேறு சமுதாயக் குழுக்களின் அனுபவங்கள் குறித்து பரந்த விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், நல்லிணக்கம் மற்றும் ஒத்துழைப்பு மீது கவனம் செலுத்தி, மிகக் குறுகிய வரையறைகள் அல்லது விளக்கங்களைத் தவிர்ப்பதற்காக தூண்டுதல்கள் வழங்கப்பட்டன. இந்த ஆராய்ச்சியானது கதைசொல்லல் அணுகுமுறை மற்றும் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களைப் பயன்படுத்தி, காலநிலை பாதுகாப்பு அபாயங்கள் மற்றும் மீண்டெழுதலுக்கான வழிமுறைகள் அனைத்தையும் கண்டறிவதற்காக பரந்த அளவிலான அபாயங்கள் மற்றும் வாய்ப்புகளை ஆராய்ந்தது.

தரவுகள் குறியிடப்பட்டு, பால்நிலை உணர்திறன் மற்றும் மேற்பொருந்துகின்ற எண்ணங்கள் உள்ளடக்கிய “களமட்ட கோட்பாடு” (Grounded theory) அணுகுமுறையைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டன. தரம்பிரிக்கப்பட்ட தரவு சேகரிப்பானது பால்நிலை, வயது, இயலாமை, இனம், மதம் மற்றும் பிற குறிகாட்டிகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்ய இடமளித்ததுடன், இது வெவ்வேறு சமுதாய குழுக்களிடையே அபாயம் மற்றும் மீண்டெழுதிறன் குறித்த நுணுக்கமான உட்பார்வைகளை வழங்கியது.

## 2.1 தரவு சேகரிப்பு முறைமைகள்

### துணைநிலை தகவல் பகுப்பாய்வு (Desk Review)

அடெல்ஃபி (adelphi) நிறுவனம், இலங்கையில் பால்நிலை, காலநிலை, சமாதானம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் மேற்பொருந்துகை குறித்த தற்போதுள்ள தகவல்களைத் தொகுக்க, கல்விசார் பணிகள் மற்றும் பாரம்பரியத்திற்கு அப்பாற்பட்ட துணைநிலை தகவல்களின் பகுப்பாய்வு (Grey literature) பற்றிய விரிவான துணைநிலை தகவல்களின் பகுப்பாய்வை மேற்கொண்டது. கள ஆய்வு மேற்கொள்வதற்கு முன்னராக தரவுகளைச் சேகரிப்பதற்காக துணைநிலை தகவல்கள், அறிக்கைகள், கொள்கை ஆவணங்கள் மற்றும் பிற தொடர்புடைய விடயங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன், இது வினைத்திறன் மற்றும் விளைதிறனை மேம்படுத்த உதவியது.

இலங்கை மற்றும் தெற்காசிய தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் உருவாக்கப்பட்ட அறிவார்ந்த படைப்புகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. ஆராய்ச்சியாளர்கள் தரவுகளைச் சேகரித்து ஒழுங்கமைத்து, பின்னர் குறியிடப்பட்ட பகுப்பாய்வைப்பயன்படுத்தி (coded analysis) தற்போதுள்ள அறிவார்ந்த படைப்புகளிலுள்ள வடிவங்கள், போக்குகள் மற்றும் இடைவெளிகளைக் கண்டறிந்தனர். இந்த பகுப்பாய்வின் கண்டறிவுகள் மேலதிக துணைநிலை தகவல்களின் ஆய்விற்கு வழிகாட்டியதுடன் கள ஆய்வு மூலம் மேலும் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் மற்றும் உட்பார்வைகளை வடிவமைக்க உதவின.

இந்த மதிப்பீடானது, துணைநிலை தகவல்களின் பகுப்பாய்வில் இருந்து தேசிய அளவிலான தரவுகளை உள்ளடக்கியிருந்தாலும், முக்கியமாக இலங்கையின் ஒன்பது மாகாணத்தில் நான்கு மாகாணங்களில் உள்ள நான்கு மாவட்டங்களில் நடாத்தப்பட்ட கள ஆய்வை அடிப்படையாகக் கொண்டதாகும். எனவே, இது நாடு முழுவதும் எதிர்கொள்ளும் பல்வேறு காலநிலை பாதுகாப்பு சவால்களை முழுமையாக பிரதிநிதித்துவப்படுத்தவில்லை. அனைத்து மாகாணங்களையும் பரந்த அளவில் உள்ளடக்கிய ஒரு விரிவான தேசிய மதிப்பீடானது, காலநிலை மாற்றம் மற்றும் பாதுகாப்பு பரிமாணம் ஆகியவற்றுக்கு இடையேயான சிக்கலான இடைவினையைப் பற்றிய முழுமையான புரிதலை ஏற்படுத்தவும், நடவடிக்கைக்கான மிகவும் இலக்கு சார்ந்த வழிகாட்டலை உருவாக்கவும் உதவும்.

State-of-the-art climate மாதிரி மற்றும் கணிப்புகள் காலநிலை மாற்று அறிவுத் தளம் (CCKP), உலக காலநிலை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தின் CMIP6 மற்றும் இணைக்கப்பட்ட மாதிரி ஒப்பீட்டு செயற்திட்ட கட்டம் 6 (Coupled Model Intercomparison Project Phase 6) ஆகியவற்றின் தரவுகளின் அடிப்படையில் அடெல்ஃபி நிறுவனத்துடன் இணைந்து காலநிலைபீடியா (Climatepedia) நிறுவனத்தால் வழங்கப்பட்டன.

### உப தேசிய முக்கிய இடங்களை அடையாளம் காணுதல் (Subnational Hotspot Identification)

உள்ளூர் மயமாக்கப்பட்ட காலநிலை நலிவுக்குரிய பிரதான இடங்கள் பற்றிய பகுப்பாய்வு, சமச்சீரற்ற அபாயங்களை ஏற்படுத்தும் கட்டமைப்பு மற்றும் சமூக காரணிகள் குறித்து வெளிச்சம் போட்டுக் காட்டவும், வேறுபட்ட நலிவுகளை ஏற்படுத்தும் காரணிகளின் ஆழமான மேற்பொருந்தும் பகுப்பாய்வை செயற்படுத்தவும் உள்ளடக்கப்பட்டது.

இலங்கையில், வறுமைக்குள்ளான இன மற்றும் மத சிறுபான்மையினரின் புவியியல் பரம்பல் பெரும்பாலும் அவர்களை காலநிலை தாக்கங்களுக்கு மிகவும் ஆளாகக்கூடிய பகுதிகளான கடலோரப் பகுதிகள் மற்றும் வறட்சி வாய்ப்புள்ள பிராந்தியங்களில் வைக்கிறது.

**ஆராய்ச்சிக் குழு கள-நிலை தரவு சேகரிப்பிற்கான உப தேசிய முக்கிய இடங்களை அடையாளம் காண்பதற்கு பின்வரும் முறைப்படுத்தப்பட்ட பன்முக நியதி அணுகுமுறையைப் பயன்படுத்தியது:**

i. காலநிலை நலிவுத்தன்மை (அளவு மற்றும் தன்மை).
ii. தற்போதுள்ள முரண்பாட்டின் வரலாறு
iii. இன மற்றும் மத பல்வகைமை.
iv. விவசாய சூழலியல் வாழ்வாதார பிராந்தியங்கள்.
v. தற்போதுள்ள அல்லது வரலாற்றுரீதியான ஐ.நா./ சர்வதேச/ அரச சார்பற்ற நிறுவன செயற்திட்டங்கள்.
vi. தரவில் உள்ள இடைவெளிகள்.
vii. ஆராய்ச்சிக் குழுக்களுக்கான அணுகல்.

ஐ.நா. நிகழ்ச்சித் திட்டக் குழுவுடன் இணைந்து, பங்குதாரர்களின் கலந்தாலோசனையின் மூலமாக, போதுமான உள்ளடக்கம் மற்றும் பல்வகைமையை உறுதி செய்யும் வகையில், மேலே குறிப்பிட்ட நியதிகளின் அடிப்படையில் பின்வரும் மாவட்டங்கள் கள ஆய்வுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டன:

**அட்டவணை 1: மாவட்ட நிலையிலான முக்கிய இடங்களை அடையாளம் காணுதல்**

| மாகாணம் | மாவட்டம் | விளக்கம் |
|---|---|---|
| வட மாகாணம் | முல்லைத்தீவு | உள்நாட்டுப் போர் மற்றும் 2004 சுனாமியால் முல்லைத்தீவு அதிக இடப்பெயர்வுகளையும் அழிவையும் சந்தித்தது. இங்குள்ள மக்கள் முதன்மையாக இலங்கைத் தமிழர்கள், சிங்கள மற்றும் இந்தியத் தமிழ் சிறுபான்மையினருடன் வாழ்கின்றனர். கலப்பு பயிர்ச்செய்கை மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்கள் அதிகரித்து வரும் வெப்பநிலையாலும், ஒழுங்கற்ற மழைவீழ்ச்சியாலும் பாதிக்கப்படுகின்றன. |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | உள்நாட்டுப் போர் மற்றும் 2004 சுனாமியால் மட்டக்களப்பு அதிக இடப்பெயர்வுகளையும் அழிவையும் சந்தித்தது. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் இலங்கைத் தமிழர்கள் மற்றும் இலங்கை முஸ்லிம்களாவர். இங்கு பிரதான பயிர்ச்செய்கை மற்றும் மீன்பிடி வாழ்வாதாரங்கள் வெப்பம், வெள்ளம் மற்றும் வறட்சியால் அதிக பாதிப்பு- க்குள்ளாகின்றன. |
| தென் மாகாணம் | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை கடல் மட்ட உயர்வு மற்றும் நிலையற்ற மழையால் பாதிக்கப்படுகிறது. இது அதன் கடலோர சுற்றுலா, மீன்பிடி மற்றும் விவசாய வாழ்வாதாரங்களைப் பாதிக்கிறது. இங்குள்ள மக்கள் முதன்மையாக சிங்களவர்கள், இலங்கைத் தமிழ் சிறுபான்மை- யினருடன் வாழ்கின்றனர். |
| ஊவா மாகாணம் | பதுளை | பதுளை நிலச்சரிவுகளால் அதிக பாதிப்புக்குள்ளாகிறது, அத்துடன் ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் வெப்பத்தையும் சந்திக்கிறது. இங்கு சிங்கள, இந்தியத் தமிழ் மற்றும் இலங்கை முஸ்லிம் சமூகங்கள் கொண்ட பல்வேறு இன மக்கள் வாழ்கின்றனர். இங்குள்ள தேயிலைத் தோட்டங்களும் தனித்துவமான காலநிலை மற்றும் ஆளுகை சவால்களை எதிர்கொள்கின்றன. |

படம் 2: களமட்ட ஆய்வுக்கான இடங்கள்





படம் 2: களமட்ட ஆய்வுக்கான இடங்கள்


## களை தரவு சேகரிப்பு

அடையாளம் காணப்பட்ட முக்கிய இடங்களில் கள ஆய்வை நடாத்துவதற்காக, உள்ளூர் ஆராய்ச்சியாளர்கள் அடெல்ஃபி நிறுவனத்தால் ஒன்றிணைக்கப்பட்டனர். இந்த ஆய்வானது உள்ளூர் நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி, கலாச்சார ரீதியாக இசைந்து, சம்பந்தப்பட்ட சமுதாயங்களுடன் ஒத்திசைவதை உறுதி செய்தது. கலாச்சார உணர்திறனை உறுதிப்படுத்தவும், தரவு சேகரிப்பை மேம்படுத்தவும், ஆராய்ச்சியாளர்கள் பொருத்தமான இன மற்றும் மத அமைப்புகளின்படி வெவ்வேறு புவியியல் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மேலும், இக்குழுவானது பெண், ஆண், இந்து, பௌத்த மற்றும் முஸ்லிம் குழு உறுப்பினர்களை உள்ளடக்கியதாக அமைந்தது.


## இனம் மற்றும் பிரதான மதம்





## முரண்பாடு




## காலநிலை வலயங்கள்





## மனித வனவிலங்கு மோதல்




**மாவட்டங்கள்**

| | | | | |
|---|---|---|---|---|
| 1. யாழ்ப்பாணம் | 6. புத்தளம் | 11. பொலநறுவை | 16. பதுளை | 21. களுத்துறை |
| 2. கிளிநொச்சி | 7. அனுராதபுரம் | 12. மட்டக்களப்பு | 17. அம்பாறை | 22. இரத்தினபுரி |
| 3. முல்லைத்தீவு | 8. திருகோணமலை | 13. கம்பகா | 18. கொழும்பு | 23. காலி |
| 4. மன்னார் | 9. குருநாகல் | 14. கேகாலை | 19. நுவரெலியா | 24. மாத்தறை |
| 5. வவுனியா | 10. மாத்தளை | 15. கண்டி | 20. மொனராகலை | 25. அம்பாந்தோட்டை |

படம் 3: இலங்கையின் வரைபடங்கள்: காலநிலை, முரண்பாடு, சனத்தொகை மற்றும் காணிப் பயன்பாடு




இந்த வரைபடம் இலங்கையின் தொடர் வரைபடங்களை வழங்குகிறது, அவை பின்வருவனவற்றை விளக்குகின்றன: (1). இனம் மற்றும் பிரதான மதம்: (கணக்காய்வு மற்றும் புள்ளிவிவரவியல் திணைக்களம் 2012), (2). வரலாற்று ரீதியான மோதல் வலயங்கள்: இது இனம் மற்றும் மதத் தரவுகளை ஐ.நா. முரண்பாட்டு தரவுத்தொகுப்பிலிருந்து அடையாளம் காணப்பட்ட பகுதிகளுடன் இணைக்கிறது. வண்ண நிரம்பல் பெரும்பான்மை இனக்குழுவின் சதவீத அமைப்பைக் குறிக்கிறது (சர்மா 2024). (3). காலநிலை வலயங்கள்: (கெல்டின் 2025). (4). மனித-வனவிலங்கு மோதல் வரைபடம்: கள ஆய்வின் போது அவதானிக்கப்பட்ட முரண்பாட்டு பரிமாணம் மற்றும் நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதுடன் இது விரிவானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கம் கொண்டதல்ல. (5). பயிர் மற்றும் காணி பயன்பாட்டு முறைகள்: (காணி பயன்பாட்டுக் கொள்கைத் திட்டமிடல் திணைக்களம் 2018)

தரவு சேகரிப்பிற்கு முன்னராக, மார்ச் 2025 இல் கொழும்பில் நடாத்தப்பட்ட தொலைநிலை ஆலோசனைகள் மற்றும் ஒரு விழிப்புணர்வு பயிலரங்கு மூலமாக, அடெல்ஃபி (adelphi) நிறுவனம், ஆராய்ச்சிக் குழுவின் அனைத்து உறுப்பினர்களும் முரண்பாடு, பால்நிலை மற்றும் இயலாமை உணர்திறன் கொண்டமற்றும் பன்முகத்தன்மை கொண்ட ஆய்வு அணுகுமுறைகளில் பயிற்சி பெற்று, திறமையானவர்களாக இருப்பதை உறுதி செய்தது.

**ஆராய்ச்சிக் குழு, நான்கு மாவட்டங்களில் உள்ள 53 நகரங்களில் இருந்து 167 பேரிடம் கலந்தாலோசனை மேற்கொண்டது. இந்த மாவட்டங்களுக்குள், வாழ்வாதாரங்கள், பால்நிலை, மதம், இனம் மற்றும் வயதுக் குழு போன்ற பல்வேறு கண்ணோட்டங்களை பிரதிபலிக்கும் வகையில் சமுதாய பதிலளிப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

பதிலளித்தவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் பெண்களாவர். மேலும், 26% இளைஞர்கள் (30 வயதுக்குட்பட்டவர்கள்) மற்றும் 12% முதியவர்கள் (65 வயதுக்கு மேற்பட்டவர்கள்) ஆய்வில் பங்கேற்றனர். இந்த ஆராய்ச்சி சில குவிநோக்க குழுக் கலந்துரையாடல்களையும் (FGDs) உள்ளடக்கியிருந்தாலும், உள்ளூர் அரசாங்க அலுவலர்கள், சிவில் சமூக அமைப்புகள் (CSOs), ஐ.நா. மற்றும் சமூக உறுப்பினர்களுடன் நடாத்தப்பட்ட பிரதான தகவல் அளிப்பவர்களின் நேர்காணல்களுக்கு (KIIs) முன்னுரிமை அளிக்கப்பட்டதுடன், இது சமூகப் பொருளாதார நிலைகள் உட்பட அனைத்து சமூகப் புள்ளிவிவரங்களின் பொருத்தமான பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தியது. ஓரங்கட்டப்பட்ட மக்களின் குரல்கள் கேட்கப்படுவதற்கும், பங்கேற்பாளர்களை மையமாகக் கொண்ட கதைசொல்லல் அணுகுமுறையை வசதிப்படுத்துவதற்கும் KIIfs அதிக வாய்ப்பை வழங்குவதால், FGD களை விட இவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பதிலளித்தவர்களின் பாதுகாப்பு மற்றும் தனியுரிமையைப் பாதுகாக்க, அறிக்கையில் உள்ள அனைத்துப் பெயர்களும் எங்களது முரண்பாட்டுக்கு உணர்திறனாக ஆராய்ச்சி முறைமைக்கு இணங்க மாற்றப்பட்டுள்ளன.

**அட்டவணை 2: மாவட்டம் மற்றும் பால்நிலையின் அடிப்படையில் நேர்காணல் பங்கேற்பாளர்கள்**

| | | பதிலளித்தவர்கள் | | | |
|---|---|---|---|---|---|
| மாகாணம் | மாவட்டம் | ஆண் | பெண் | பிற பாலினம் | மொத்தம் |
| வட மாகாணம் | முல்லைத்தீவு | 22 | 24 | 1 | 47 |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு | 19 | 29 | 0 | 48 |
| தென் மாகாணம் | அம்பாந்தோட்டை | 14 | 17 | 0 | 31 |
| ஊவா மாகாணம் | பதுளை | 22 | 19 | 0 | 41 |

## சரிபார்க்கை

ஆரம்ப கண்டறிவுகளின் துல்லியம் மற்றும் முழுமைத்தன்மையை உறுதி செய்வதற்காக, ஏப்ரல் மற்றும் மே 2025 இல் இலங்கையில் இணையவழியிலும் நேரிலும் தொடர்ச்சியான தரவு சரிபார்ப்புப் பயிலரங்குகள் நடாத்தப்பட்டன. பங்குதாரர் கலந்தாலோசனைகள், கண்டறிவுகளை மேலும் கள உண்மைத்தன்மைக்கு உட்படுத்தவும், காலநிலை மற்றும் பாதுகாப்பு அபாயங்களுக்கு எதிரான மீண்டெழுதிறனை உருவாக்குவதற்கு உதவும் திட்டமிடல் மற்றும் கொள்கை செல்வாக்கு புள்ளிகளின் பொருத்தப்பாட்டினை சரிபார்க்கவும் ஒரு வாய்ப்பை வழங்கின.




அம்பாந்தோட்டை மாவட்டம், தங்காலை துறைமுகத்தில் மீனவர்கள்

# 3 காலநிலை பாதுகாப்பு வழிமுறைகள்

இலங்கையில் உள்ள நான்கு மாவட்டங்களான பதுளை, மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு ஆகியவற்றில் காலநிலை அழுத்தங்களும் பாதுகாப்பு அபாயங்களும் எவ்வாறு மனித பாதுகாப்பைப் குறைமதிப்புக்குள்ளாக்குகின்றன என்பதை பின்வரும் ஐந்து வழிமுறைகள் காட்டுகின்றன. இந்த மாவட்டங்கள் ஒழுங்கற்ற மழைவீழ்ச்சிக் கோலங்கள், தீவிர வானிலை நிகழ்வுகள், மனித-வனவிலங்கு மோதல்கள் மற்றும் விவசாய இடையூறுகள் உள்ளிட்ட காலநிலை அழுத்தங்களின் தீவிரப்படுத்தலில் இதே போன்ற சவால்களை எதிர்கொள்கின்றன. இந்த சவால்கள் வெவ்வேறு வழிகளில் வெளிப்படுகின்றன: பதுளை மாவட்டத்தில் நிலச்சரிவுகள் மற்றும் மண் வளங்குன்றுதல் குறிப்பாக தீவிரமாக உள்ளதுடன், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளப்பெருக்கு மழையை நம்பும் விவசாயத்தை பெரிதும் பாதிக்கிற அதே நேரத்தில் அதிகார பலம் வாய்ந்த தரப்பினர்களால் மேற்கொள்ளப்படும் மணல் அகழ்வு சுற்றுச்சூழல் சீரழிவையும், மாவட்ட மக்களிடையே அதிருப்தியையும் ஏற்படுத்துகிறது. அம்பாந்தோட்டையின் மீன்பிடி மற்றும் கடலோர சுற்றுலாத் தொழில் கடல் மட்ட உயர்வு மற்றும் பவளப் பாறை வெளுப்பாதல் ஆகியவற்றால் குறிப்பாக பாதிக்கப்படுகிறது. முல்லைத்தீவு மாவட்டத்தில், ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி, சட்டவிரோத மரம் வெட்டுதல் மற்றும் வனவிலங்கு சேதம் அனைத்தும் விவசாய வாழ்வாதாரங்களை எதிர்மறையாக பாதிக்கின்றன. இலங்கையில் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டம் அத்தியாயம் 4 இல் வழங்கப்பட்டுள்ளது.

காலநிலை தொடர்பான சவால்கள் ஒரே மாதிரியாக இருந்தபோதிலும், வளங்களுக்கான அணுகல், ஆளுகை மற்றும் சமூக நல்லிணக்கம் ஆகியவற்றால் அவற்றின் தீவிரம் மற்றும் சமூகங்களின் பதிலளிக்கும் திறன் ஆகியன பெரிதும் வேறுபடுகிறது. மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் உள்நாட்டுப் போருக்குப் பிந்தைய தொடர்ச்சியான இராணுவமயமாக்கல், முறைப்படுத்தப்பட்ட புறக்கணிப்பு, இனரீதியான ஓரங்கட்டப்படல் மற்றும் பலவீனமான சேவை வழங்கல் ஆகியவற்றால் அவற்றின் இசைவாக்க இயலளவு மட்டுப்படுத்தப்படுகிறது. அதேவேளையில், அம்பாந்தோட்டை மேம்பட்ட உட்கட்டமைப்பு விருத்தியால் பயனடைந்துள்ளதுடன், பதுளையில் உள்ள விவசாயிகள் புதுமையான விவசாய இசைவாக்க உத்திகளை நிரூபித்துள்ளனர். இருப்பினும், சேவைகளுக்கான சமமற்ற அணுகல் பல சமூகங்களின் இசைவாக்க திறனை கட்டுப்படுத்துகிறது.

வழிமுறைகள் முன்வைக்கப்படும் வரிசையானது எதற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது என்பதைக் குறிக்கவில்லை. பல்வேறு அபாயங்கள் சமூக உறுப்பினர்களை வெவ்வேறு வழிகளில் பாதிக்கின்றன, இதனால் அவை வெவ்வேறு பங்குதாரர்களுக்கு தனித்துவமாக முக்கியமானவை ஆகின்றன. ஒவ்வொரு மாவட்டமும் அதன் சொந்த மீண்டெழும் கதையைக் கொண்டுள்ளதுடன், இது பால்நிலை வகிபாகங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மற்றும் சமமற்ற வாய்ப்புகளால் பாதிக்கப்படுகிறது. சில பகுதிகளில், இந்த காரணிகள் பாதிப்புகளை ஆழமாக்குவதுடன், மற்றவற்றில் அவை புதிய சவால்களை உருவாக்குகின்றன. இந்த சிக்கல்களைத் தீர்க்க ஒவ்வொரு மாவட்டத்தின் தனித்துவமான சமூக மற்றும் பொருளாதார சூழலுக்கு ஏற்றவாறு தீர்வுகள் அவசியமாகும். மாவட்ட சுயவிவரங்களின் முழு விளக்கம் அத்தியாயம் 6 இல் வழங்கப்பட்டுள்ளது.




படம்: 4 இலங்கையில் காலநிலை பாதுகாப்பு வழிமுறைகள



## 3.1 காலநிலை தாக்கங்கள் வாழ்வாதாரங்களை சீர்குலைத்து புலம்பெயர்வுகளையும் நலிவுத்தன்மைகளையும் தூண்டுகின்றன.

**வழிமுறைச் சுருக்கம்:** இலங்கையானது சீரற்ற மழைவீழ்ச்சி மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை ஆகியன பாரம்பரிய வாழ்வாதாரங்களை சீர்குலைத்து, புலம்பெயர்வுகளைத் தூண்டி, சமத்துவமின்மையை மிகைப்படுத்துவதால் அதிகரித்து வருகின்ற காலநிலை பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்கிறது. விவசாயம், மீன்பிடி மற்றும் கால்நடை வளர்ப்பு என்பன சாத்தியமற்றதாகி வருவதுடன் கிராமிய வருமானங்கள் குறைவடைகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில், மிக மட்டுப்பாடாகவுள்ள உற்பத்தி திறனுடைய காணிகளை இராணுவம் ஆக்கிரமித்திருப்பதும், விவசாய மற்றும் மீன்பிடி வருமானத்தை ஈட்டுவதற்காக இந்த காணிகளை இராணுவம் பயன்படுத்துவதும் சமூகங்களின் வாழ்வாதார வாய்ப்புகளுக்கு மேலும் ஒரு அழுத்தத்தை கொடுக்கின்றது. புலம்பெயர்வு என்பது ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலருக்குமான ஒரு சமாளிக்கும் உத்தியாக காணப்படுவதுடன் இது பால்நிலை, இனம் மற்றும் மதத்தைப் பொறுத்து வேறுபடுகிறது. வெளிநாட்டுப் பணம் குறுகிய கால நிதி நிவாரணம் அளித்தாலும், அவை நீண்ட கால மீண்டெழுதிறனுக்கு அரிதாகவே பங்களிப்பதுடன், இதனால் சமுதாயங்கள் எதிர்கால காலநிலை அதிர்ச்சிகளுக்கு ஆளாகின்றன. சட்டவிரோதமான புலம்பெயர்வு, பால்நிலையை பொறுத்து வேறுபடும் பாதுகாப்பு அபாயங்களைக் கொண்டுவருவதுடன், விரக்தியடைந்த புலம்பெயர்ந்தோர் மற்றும் திரும்பி வருபவர்களிடையே போதைப்பொருள் பாவனை, குற்றம் மற்றும் குடும்ப வன்முறை போன்ற சவால்களைத் தூண்டுகிறது. உழைக்கும் வயதுடையவர்கள் வெளியேறுவது கிராமிய பொருளாதாரங்களை சிதைத்து, பெண்கள், குழந்தைகள் மற்றும் கைவிடப்பட்ட முதியோர் மீது பாராபட்சமான வகையில் சுமைகளை சுமத்துகிறது. காலநிலை இசைவாக்கத்தை புலம்பெயர்வு கொள்கைகளில் ஒருங்கிணைப்பதன் மூலமும், பாதிக்கப்பட்ட குழுக்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட ஆதரவை வழங்குவதன் மூலமும், இலங்கை இந்த சவால்களை அதிக மீண்டெழுதிறன் மற்றும் உள்ளடங்கலுக்கான வழிமுறைகளாக மாற்றுவதற்கு ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளது.

இலங்கையில் சீரற்ற மழையால் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்குவது, நீண்ட வறட்சி காரணமாக காய்ந்து போதல் மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலையுடன் கூடிய கடுமையான காற்று செலவீனங்களை அதிகரித்து உற்பத்தித்திறனைக் குறைப்பதால், வாழ்வாதாரங்கள் அதிகரித்தளவில் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. கடலோரப் பகுதிகள் கடல் மட்ட உயர்வால் தங்களது கடற்கரைகளை இழக்கின்ற அதே நேரத்தில் உள்நாட்டு சமுதாயங்கள் வெள்ளம், நிலச்சரிவுகள் மற்றும் நீர் பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன. விவசாயிகள் கடுமையான வெப்பம் காரணமாக நெல் அறுவடையைக் குறைக்க அல்லது வயல்களை முழுவதுமாக கைவிட வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். குறிப்பாகப் பெண்கள், விவசாய வேலைகளுடன் வீட்டுப் பொறுப்புகளையும் சமநிலைப்படுத்துவதால் கூடுதலான சவால்களை எதிர்கொள்வதுடன், பெரும்பாலும் வெயிலில் நீண்ட நேரம் செலவிடுகின்றனர். குளிரூட்டும் வசதிகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல், கலாச்சார ஆடை விழுமியங்கள் மற்றும் கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்மார்களின் தேவைகள் இந்த கடுமையான நிலைமைகளுக்கான அவர்களின் பாதிப்பை அதிகரிக்கின்றன.

போக்குவரத்து சவால்கள் மக்களின் இசைவாக்க திறனை மேலும் கட்டுப்படுத்துகின்றன. தீவிர வானிலையின் போது பொதுப் போக்குவரத்தில் ஏற்படும் இடையூறுகள் மற்றும் பெண்களுக்கு பாதுகாப்பான போக்குவரத்து தெரிவுகளின் பற்றாக்குறை ஆகியன பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் நடமாட்டத்திற்கு குறிப்பிடத்தக்க தடைகளை உருவாக்குகின்றன. பல சிறு தொழில்முனைவோர், குறிப்பாகப் பெண்கள், தங்களது பொருட்களை விற்க அல்லது மூலப்பொருட்களைப் பெற கொழும்பு போன்ற நகர்ப்புற மையங்களுக்குப் பயணம் செய்வதை நம்பியுள்ளனர். நம்பகமான போக்குவரத்து இல்லாமல், காலநிலை தொடர்பான அதிர்ச்சிகள் மற்றும் பணவீக்கத்தால் ஏற்படும் பொருளாதார அழுத்தங்கள் மேலும் அதிகரிப்பதன் மூலம் அவர்களின் வாழ்வாதாரங்கள் அதிகரித்தளவில் பாதிக்கப்படுகின்றன. இந்த ஒருங்கிணைந்த சவால்கள் வறுமையை அதிகரித்து, பலரை சிறந்த வாய்ப்புகளைத் தேடிச் செல்லத் தூண்டுகின்றன.

> "மழைக்காலத்தில் வெயில் அடிக்கிறது, வறண்ட காலத்தில் வெள்ளம் வருகிறது. வானிலையை நாம் இனி நம்ப முடியாது."
>
> -விவசாயி, ஆண், 35, மயிலம்பாவெளி, மட்டக்களப்பு

முல்லைத்தீவில், தொடர்ச்சியான வறட்சி மற்றும் திடீர் வெள்ளம், விவசாயிகள், குறிப்பாகப் பெண் தலைமைத்துவக் குடும்பங்களை, நெல் மற்றும் நிலக்கடலை போன்ற பாரம்பரிய பயிர்களை கைவிடுவதற்கு கட்டாயப்படுத்தியுள்ளது. ஏராளமான கடற்கரை இருந்தபோதிலும், சில சமுதாயங்களே கடல் மீன்பிடியில் ஈடுபடுவதுடன், கிட்டத்தட்ட அனைத்து தமிழர்களும் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர்.

42 வயதுடைய ஒரு பெண் விவசாயி கூறுகையில்: "கடல் வேலை சிங்களவர்கள் மற்றும் கொழும்பு தொழிலாளர்களால் எடுக்கப்படுகிறது. நாங்கள் இப்போது இன்னும் விவசாய வேலைகளைச் செய்கிறோம்."



மீன்பிடி படகுகள், தெற்கு மாகாணம், இலங்கை (c) ஜோசுவா கோலா /அன்ஸ்பிளாஷ்



மழையை நம்பிய விவசாயம் மற்றும் நீர்ப்பாசனம் அல்லது நிதி ஆதாரங்களின் பற்றாக்குறையால், பலர் குறைந்த ஊதியம் பெறும் முறைசாரா தொழிலுக்கு மாறியுள்ளனர். மட்டுப்படுத்தப்பட்ட வாகன வசதி, மோசமான பொது போக்குவரத்து போன்ற போக்குவரத்து சவால்கள் மற்றும் மழை மற்றும் கடுமையான வெப்பத்தின்போதான கடினமான சூழ்நிலைகள் பல பெண்களை "வீட்டுப் பணிகள்" மற்றும் வீட்டுத் தோட்டங்களை நம்பியிருக்கத் தள்ளியுள்ளது. இந்த மாற்றம் நீண்ட கால மீண்டெழுதன்மையை குறைத்து, வறுமையை ஆழமாக்குகிறது. இந்த சிக்கல்கள், பிராந்தியத்தின் நீண்டகால மோதல், உட்கட்டமைப்பு, கல்வி மற்றும் தொழில்துறையில் குறைந்த முதலீடு ஆகியவற்றால் மேலும் அதிகரிக்கப்படுகின்றன. இது காணி, சந்தைகள் மற்றும் விவசாயம் அல்லாத அல்லது பெறுமதி சேர்க்கப்பட்ட வாழ்வாதாரங்களை அணுகுவதை கட்டுப்படுத்துகிறது.

மட்டக்களப்பில், சீரற்ற மழைப்பொழிவு மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை, மீன்பிடி மற்றும் விவசாயத்தை கடுமையாக பாதித்துள்ளது. சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் உப்புநீர் உட்புகுதல் காரணமாக, களப்பு மீன்வளம் குறைந்து வருவதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அதே நேரத்தில், ஓரங்கட்டப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த சிறு விவசாயிகள், மாறும் பயிரிடல் சுழற்சிகள் மற்றும் குறைந்த விளைச்சலால் சிரமப்படுகிறார்கள். பெண்கள், வீட்டு செலவீனங்களை சமாளிப்பதுடன், பராமரிப்பு பொறுப்புகளையும் சுமந்து, பெரும் சுமையை அனுபவிக்கிறார்கள்.

ஒரு தாய் விபரிக்கும் போது, "இளைஞர்கள் இனி விவசாயம் செய்ய விரும்பவில்லை. அவர்கள் அரச வேலைகளை விரும்புகிறார்கள், ஆனால் அவர்களுக்கு எந்த வேலை-வாய்ப்புகளும் இல்லை." என்றார்.

அம்பாந்தோட்டையில், பவளப்பாறை சேதம் மற்றும் மாறும் கடல் நீரோட்டங்கள், பாரம்பரிய மீன்பிடியை சாத்தியமற்றதாக ஆக்கியுள்ளன. பாரம்பரிய வலை மீன்பிடி விளைச்சல்கள் கடுமையாக குறைந்துள்ளதுடன், பெரிய இழுவைப் படகுகளும் குறைந்தளவான மீன்களைப் பிடிக்க நீண்ட நேரம் கடலில் இருக்க வேண்டும். மீன்பிடி பெரும்பாலும் ஆண்களால் செய்யப்படுகின்றபோதும், பெண்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் பங்கேற்கிறார்கள். அவர்கள் பெரும்பாலும் மீன்பிடிக்கு பிந்தைய நடவடிக்கைகளான உலர்த்துதல் மற்றும் பதப்படுத்துதல் ஆகியவற்றில் ஈடுபடுகிறார்கள். அதிக உபகரண செலவுகள் மற்றும் குறைந்து வரும் மீன்வளம் ஆகியன பல சிற்றளவிலான மீனவர்களுக்கு மாற்று முறைமைகளை நிலைத்திருக்க முடியாததாக ஆக்குகிறது. தங்காலையில் உள்ள சமுதாயங்கள், மீனவர்கள் தங்களது மீன்பிடியை அதிகரிக்க LED ஒளி மீன்பிடி நுட்பங்களைப் பயன்படுத்துவது அதிகரித்து வருவதாகத் தெரிவித்தன. இந்த நடைமுறை உள்ளூர் மீன்வளத்தின் நீண்ட கால நிலைபேண்தகு தன்மை குறித்து கரிசனங்களை எழுப்புகிறது.

பதுளையில், எதிர்வுகூற முடியாத மழைப்பொழிவு மற்றும் மண் வளங்குன்றல், விவசாய விளைச்சலைக் குறைத்துள்ளது. இது விவசாயிகளை பூக்கள் போன்ற மாற்று பயிர்களை நோக்கி தள்ளுகிறது அல்லது விவசாயத்தை முற்றிலுமாக கைவிட வைக்கிறது. வறட்சியைத் தாங்கும் பயிர்கள் மற்றும் மூடுபயிர் நுட்பங்களை பின்பற்றுவதற்கான முயற்சிகள், உள்ளீடுகள் மற்றும் அறிவுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் காரணமாக தடைபடுகின்றன. யானைகள் மற்றும் குரங்குகளால் ஏற்படும் பயிர் அழிவு உள்ளிட்ட வனவிலங்கு மோதல்கள், கிராமிய வருமானத்தை மேலும் பாதிக்கின்றன.

## பொருளாதார அழுத்தங்களும் கிராமப்புற புலம்பெயர்தலின் அதிகரிப்பும்

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை சார்ந்த மாற்றங்கள் பாரம்பரிய வாழ்வாதாரங்களை மேலும் நிலைநிறுத்த முடியாததாக மாற்றியுள்ளன. இதனால் பல இலங்கையர்கள் புலம்பெயர வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். மட்டக்களப்பில், தொடர்ச்சியான வறட்சி மற்றும் திடீர் வெள்ளம் மக்களை நகர்ப்புற மையங்களுக்கும் அல்லது வெளிநாட்டிற்கும் செல்லத் தூண்டுகிறது. அதே நேரத்தில், அம்பாந்தோட்டையில் உள்ள இளைஞர்கள், பெரும்பாலும் ஆண்கள், விவசாயத்தை விட்டுவிட்டு நகரங்களில் தினக்கூலி வேலைகளுக்கும் அல்லது வெளிநாட்டு வேலைகளுக்கும் செல்கின்றனர். குவைத்தில் உள்ள புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடம் நடாத்தப்பட்ட ஒரு கணக்கெடுப்பில், 63 % பேர் காலநிலை தொடர்பான தாக்கங்களால் புலம்பெயரும் முடிவை எடுத்ததாகக் கண்டறியப்பட்டது (SLYCAN 2022). புலம்பெயர்தல் பெரும்பாலும் தற்காலிக நிவாரணத்தை அளிப்பதுடன், இது குடும்பங்கள் பொருளாதார அழுத்தங்களைச் சமாளிக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும் உதவுகிறது.

> ”எனது பிள்ளைகள் எங்களது கஷ்டங்களால் பாதிக்கப்படுவதை நான் விரும்பவில்லை: என் பிள்ளைகள் படித்து, வாழ்க்கைக்குப் பாதுகாப்பு தரும் அரச வேலைகளைப் பெற வேண்டும் என நான் விரும்புகிறேன். ஆனால் பிள்ளைகள் வெளிநாடு செல்ல விரும்புகிறார்கள்.”
>
> -ஜோதி, தாய், 39, கதிரவெளி, மட்டக்களப்பு

2024 இல், 313,642 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலைக்காக புலம்பெயர்ந்தனர், அவர்களில் 72 % பேர் திறன்வாய்ந்த தொழிலாளர்களாகவும், 28 % பேர் குறைந்த திறன்வாய்ந்தவர்களாகவும் வகைப்படுத்தப்பட்டனர் (இலங்கை மத்திய வங்கி 2025). புலம்பெயர்வு முறைமைகள் பால்நிலை, இனம் மற்றும் மதம் ஆகியவற்றைப் பொறுத்து மாறுபடும். தென் மற்றும் ஊவா மாகாணங்களைச் சேர்ந்த சிங்கள ஆண்களும் பெண்களும் பெரும்பாலும் கொரியா குடியரசு போன்ற நாடுகளுக்கு சட்டரீதியான பாதுகாப்புகளையும் காப்புகளையும் கொண்ட அரசாங்க நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் புலம்பெயர்கின்றனர். இதற்கு நேர்மாறாக, வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ஏழைச் சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பாளர்கள் பேசுகையில், பெண்கள் பெரும்பாலும் வீட்டுப் பணியாளர்களாக நியமிக்கப்படுகின்ற வளைகுடா நாடுகளுக்கான தொழிலாளர் புலம்பெயர்வு பற்றிப் குறிப்பிட்டனர். குறிப்பிடத்தக்க வகையில், வடக்கு அல்லது கிழக்கில் உள்ள யாரும் கொரியா குடியரசு உட்பட அரசு ஆதரவு பெற்ற புலம்பெயர்வு நிகழ்ச்சித் திட்டங்களைப் பற்றி குறிப்பிடவில்லை.


வடக்கு மற்றும் கிழக்கிலிருந்து வரும் தமிழ் மற்றும் முஸ்லிம் ஆண்கள் பொதுவாக குறைந்த ஊதிய வேலைகளுக்காக கொழும்பு போன்ற நகரங்களுக்கு புலம்பெயர்கின்ற அதே நேரத்தில், இந்தப் பகுதிகளைச் சேர்ந்த பெண்கள், குறிப்பாக ஏழை கிராமப்புறங்களைச் சேர்ந்தவர்கள், வீட்டுப் பணியாளர்களாக வளைகுடா நாடுகளுக்குப் புலம்பெயர்வதற்கான வாய்ப்புகள் அதிகமாகும்.

உத்தியோகபூர்வ புலம்பெயர்வு முறைமைகள் இருந்தபோதிலும், அதிக செலவீனங்கள், மொழித் தேர்வுகள் போன்ற கட்டமைப்புத் தடைகள் மற்றும் சட்ட தெரிவுகளைப் பற்றிய குறைந்த விழிப்புணர்வு காரணமாக சட்டவிரோத புலம்பெயர்வு அதிகரித்து வருகிறது. சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோர் சுரண்டல், மனித கடத்தல், சிறைவாசம் மற்றும் இலங்கை திரும்பியவுடன் சாத்தியமான கண்காணிப்பு உள்ளிட்ட அதிக அபாயங்களை எதிர்கொள்கின்றனர். இந்த போக்கு பெண்கள், குறைந்த வருமானம் உள்ளவர்கள் மற்றும் இளைஞர்களை அளவுக்கதிகமான முறையில் பாதிக்கின்றது. சட்டவிரோதமாக புலம்பெயர்ந்து நாடு கடத்தப்பட்டவர்களுக்கு அரசாங்கம் எந்த ஆதரவையும் வழங்குவதில்லை மாறாக, அவர்கள் சிறைவாசம் அல்லது கண்காணிப்பை எதிர்கொள்வதுடன், இது அவர்களின் நலிவுத்தன்மையை மேலும் அதிகரிக்கிறது.

புலம்பெயர்வானது, குடும்பங்களுக்கு ஒரு முக்கியமான நிதி உயிர்நாடியாக இருக்கும் வெளிநாட்டு பணம் அனுப்புகையை (remittances) கணிசமாக அதிகரித்துள்ளது. 2023 இல், வெளிநாட்டு பணம் அனுப்புகை மொத்தம் 6.02 பில்லியன் USD ஆக இருந்ததுடன் (உலக வங்கி 2025b), வளைகுடா நாடுகள் முக்கிய ஆதாரங்களாக இருந்தன. இந்த நிதி முதன்மையாக உணவு, சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய தேவைகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இது ஒரு அனர்த்த தணிப்பு கருவியாக செயற்படுகிறது. முறையான நிவாரண முயற்சிகளைப் போலல்லாமல், வெளிநாட்டு பணம் அனுப்புகை விரைவாகவும் திறமையாகவும் மாற்றப்படுகிறது, 2004 சுனாமிக்குப் பிறகு காணப்பட்டதைப் போல விரைவான மீட்புக்கு உதவுகிறது (Ober 2019).

இருப்பினும், வெளிநாட்டு பணம் அனுப்புகை நீண்ட கால காலநிலை இசைவாக்கம் அல்லது மீண்டெழுதன்மையை கட்டியெழுப்பும் நடவடிக்கைகளில் அரிதாகவே முதலீடு செய்யப்படுகிறது. வெலிமடையில் (பதுளை மாவட்டம்) கலந்தாலோசிக்கப்பட்ட குடும்பங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் தொலைக்காட்சிகள் போன்ற வெளிநாட்டு பணம் அனுப்புகையில் வாங்கிய பொருட்களை எடுத்துக்காட்டினர். ஆனால், நீர்ப்பாசன அமைப்புகள் அல்லது புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற திட்டங்களுக்கு நிதி அரிதாகவே பயன்படுத்தப்படுகிறது. இது எதிர்கால காலநிலை தாக்கங்களுக்கு சமுதாயங்களை பாதிக்கப்படக்கூடியதாக மாற்றுகிறது (Bhandari 2020).

புலம்பெயர்வானது அனர்த்த மீண்டெழுதன்மையை வலுப்படுத்தும் அறிவு, திறன்கள் மற்றும் வலைப்பின்னல்களின் பரிமாற்றம் போன்ற சமூக அனுப்புகையையும் உருவாக்கலாம். இருப்பினும், இந்த நன்மைகளுக்கான சான்றுகள் குறைவாகவும், சூழலைப் பொறுத்து பெரிதும் மாறுபடும்.



கொழும்பில் உள்ள தெரு (c) பிரையன் கியது / அன்ஸ்பிளாஷ்

## சமத்துவமின்மை ஆழப்படுத்தப்படுகிறது

தொழிலாளர் புலம்பெயர்வு, ஏற்கனவே உள்ள சமத்துவமின்மையை பெரும்பாலும் ஆழப்படுத்துவதுடன் இது மிகவும் பாதிக்கப்படக்கூடிய மக்கள் மீது பாராபட்சமாக தாக்கம் செலுத்துகின்றது. புலம்பெயர்ந்தவர்கள், பெரும்பாலும், தாங்கள் செல்லும் நாடுகளில் சமமற்ற அதிகார முறைமைகள், ஊதியங்கள் மற்றும் பணி நிலைகள் குறித்த சரியான தகவல்களுக்கான அணுகல் இல்லாமை, மற்றும் தவறாகப் பயன்படுத்தும் தொழில் வழங்குனர்களை எதிர்கொள்ளல் போன்ற காரணங்களால் சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். புலம் பெயர்தல் தொடர்பான சவால்கள், புலம்பெயர்ந்தவர்களின் உடல்நலம் மற்றும் நல்வாழ்வுக்குத் தீங்கு விளைவிப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களது குடும்பங்களை ஓரங்கட்டுவதோடு, நலிவு மற்றும் புறக்கணிக்கப்படலின் தொடர் சுழற்சிகளையும் நீடிக்கின்றன (SLYCAN 2022 FDG 2025).

மேலும், வெளிநாட்டு பண அனுப்புகைகள் குறுகிய கால நிவாரணத்தை அளித்தாலும், பெரும்பாலும் சமத்துவமின்மையை மிகைப்படுத்துகிறது. தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில், வசதி படைத்த குடும்பங்கள், புலம்பெயர்தலுக்கான ஆரம்ப செலவீனங்களைச் செலுத்தவும், அதன் நன்மைகளை அனுபவிக்கவும் சிறப்பான நிலையில் உள்ளனர். ஆனால், காலநிலை இடர்பாடுகளுக்கு மிகவும் ஆளாகக்கூடிய ஏழைக் குடும்பங்கள், இசைவாக்கிகொள்ள சில வழிவகைகளையே கொண்டுள்ளனர். வடக்கு மற்றும் கிழக்கில், புலம்பெயர்தல் முறைமைகள் பால்நிலை ரீதியாக வேறுபடுகின்றன. அங்கு ஏழைப் பெண்கள், பெரும்பாலும் வளைகுடா நாடுகளுக்கு திறமையற்ற வீட்டுப் பணியாளர்களாக, அவர்களது செலவீனங்களை ஈடுசெய்யும் தொழில் நிறுவனங்கள் மூலமாக புலம்பெயர்கின்றனர். இருப்பினும், இளம் குழந்தைகளுடன் உள்ள பெண்களின் புலம்பெயர்தலை கட்டுப்படுத்தும் குடும்பப் பின்னணி அறிக்கை (FBR) போன்ற கொள்கைகள், நாடு முழுவதும் உள்ள ஏழைப் பெண்களை சமமற்ற முறையில் பாதித்துள்ளதோடு, அவர்களது வாய்ப்புகளையும் குறைத்துள்ளன. FBR இப்போது தளர்த்தப்பட்டாலும், அது முழுமையாக நீக்கப்படவில்லை. இதனால், பல பெண்கள் இன்னும் இந்த வழியில் செல்ல முடியாத நிலையில் உள்ளனர். ஏழை ஆண்களும், ஆண் சிறுவர்களும் குறைந்த ஊதிய நாளாந்த கூலி வேலைகளைத் தேடி வவுனியா அல்லது கொழும்பு போன்ற நகர்ப்புற மையங்களுக்கு செல்கின்றனர்.

இந்த நகர்ப்புற மையங்கள், காலநிலை மற்றும் மோதல்களின் கூட்டுச் சவால்களை எதிர்கொள்வதுடன், மோசமான ஆளுகை, போதிய வீட்டு வசதியின்மை, வினைத்திறனற்ற கழிவு சேகரிப்பு மற்றும் அதிகரித்து வரும் குற்றங்கள் ஆகியவை பாதிப்படைதலை அதிகரிக்கின்றன. காலநிலை விடயத்தில், 'நகர்ப்புற வெப்ப தீவு விளைவு' (urban heat island effect) உடன் இணைந்து உயரும் வெப்பநிலை மிகவும் கடுமையானதாக உள்ளது. கொழும்பில் நகரமயமாக்கல், நில மேற்பரப்பு வெப்பநிலையை 1.6° C உயர்த்தியுள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது (உலக வங்கி குழு 2021b). நகரங்களுக்கு காலநிலையால் தூண்டப்பட்ட புலம்பெயர்தல், பெரும்பாலும் நகர்ப்புற உட்கட்டமைப்பு வசதிகளின் சுமையை அதிகப்படுத்துவதோடு, பல புலம்பெயர்ந்தவர்கள் சேவைகளுக்கான குறைந்த அணுகல் கொண்ட ஒழுங்கற்ற குடியிருப்புகளில் தங்கநேரிடுகிறது. இலங்கை நகர அபிவிருத்தி அதிகார சபையின் பிரகாரம், தலைநகரில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள், ஒழுங்கற்ற குடியிருப்புக்கள் மற்றும் பாழடைந்த வீடுகள் உட்பட, அடிப்படை வசதிகள் குறைந்த வீடுகளில் வாழ்கின்றனர் (நகர அபிவிருத்தி அதிகார சபை 2023). நகரங்களில் போதிய வடிகால் மற்றும் கழிவுநீர் அமைப்புகள் இல்லாமை குறிப்பாக வெள்ளங்களுக்குப் பிறகு, நீரினால் பரவும் நோய்களுக்கான பாதிப்பை அதிகரிக்கின்றன (உலக வங்கி குழு 2021b).

இந்த நிலைமைகள் மதுபானம், போதைப்பொருள் துஷ்பிரயோகம், மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை போன்ற சமூகப் பிரச்சினைகளுக்கு பங்களிக்கின்றன. இது, புலம்பெயர்ந்தோர் தங்களது வீடுகளுக்கு திரும்பும்போது, மீண்டும் கிராமிய சமுதாயங்களுக்கு பரவும் ஒரு நிலையற்ற சுழற்சிகளை உருவாக்குகிறது. உதாரணமாக, திரும்பி வரும் ஆண்களும், ஆண்பிள்ளைகளும், போதைப்பொருள் துஷ்பிரயோகம் அல்லது நகர்ப்புற குற்றங்களில் ஈடுபடுவது தொடர்பான நடத்தை மாற்றங்களை கொண்டு வருவதுடன், இது குடும்ப பரிமாணத்தையும் சமூக ஒற்றுமையையும் சீர்குலைக்கிறது.

மறுபுறம், பெண்களும், சிறுமிகளும், நெரிசலான வீடுகள் அல்லது பணியிடங்களில் துன்புறுத்தல் உட்பட நகர்ப்புற அமைப்புகளில் சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்தின் அதிக அபாயங்களை எதிர்கொள்கின்றனர். கிராமப்புற பகுதிகளுக்குத் திரும்பும்போது, குறிப்பாக பெண்கள் முறைசாரா அல்லது நிச்சயமற்ற வேலைகளில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் பழிதூற்றல் அல்லது குறைந்த சமூக அந்தஸ்தை அனுபவிக்கலாம். மேலதிகமாக, ஆண்கள் புலம்பெயர்வதால் ஏற்படும் விளைவுகளை சமாளிக்கும் சுமையை, அதாவது அதிகரித்த பராமரிப்புப் பொறுப்புகளை, அவர்களை அனுப்பும் சமுதாயங்களில் உள்ள பெண்கள் பெரும்பாலும் சுமக்கின்றனர். அதேசமயம், திரும்பி வரும் புலம்பெயர்ந்தவர்களால் ஏற்படும் சமூக மற்றும் பொருளாதார எதிர்விளைவுகளையும் அவர்கள் சமாளிக்கின்றனர். இந்த பால்நிலை ரீதியான பரிமாணம், நகர்ப்புற சவால்களை மட்டுமல்லாமல் இடர்பாடுகளை குறைக்கும் மற்றும் நகர்ப்புற மற்றும் கிராமப்புற அமைப்புகளில் மீண்டெழுதிறனை ஊக்குவிக்கும் வழிகளில் புலம்பெயர்ந்தோரின் மீள் ஒருங்கிணைப்பையும் நிவர்த்தி செய்யும் இலக்குடைய கொள்கைகளின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றன.

இந்த புலம் பெயர்தல் போக்குகள், காலநிலை நலிவு மற்றும் பொருளாதார வாய்ப்புகள் என்பன புவியியல் மற்றும் இனத்தால் மட்டுமல்லாது பால்நிலையாலும் வடிவமைக்கப்படுவதுடன் வெவ்வேறு மாகாணங்களில் உள்ள ஆண்களும், பெண்களும், முற்றிலும் சமமற்ற இடர்பாடுகள் மற்றும் வெகுமதிகளை எதிர்கொள்கின்றனர் என்பதை சுட்டிக்காட்டுகின்றன.

வாழ்வாதாரங்கள் மீதான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களும் இதேபோல் சமமற்றவை என்பதுடன் இதில், நலிவடைந்த குழுக்கள் அதன் விளைவுகளின் முழுச் சுமையையும் தாங்குகின்றனர். உதாரணமாக, இலங்கையில் உள்ள கிராமப்புற பெண்கள் ஆண்களை விட விவசாய வேலைகளில் கணிசமானளவு குறைவாக சம்பாதிக்கின்றனர். அதேசமயம், மேலதிக பராமரிப்பு மற்றும் வீட்டுப் பொறுப்புகளையும் அவர்கள் சுமக்கின்றனர். காலநிலையால் தூண்டப்பட்ட வாழ்வாதார சீர்குலைவுகள் இந்த இடைவெளியை மேலும் விரிவாக்குவதுடன், தங்களது வாழ்வாதாரத்தை நடாத்த, பெண்களை நிலையற்ற மற்றும் குறைந்த ஊதிய வேலைகளுக்கு தள்ளுகிறது. ஒற்றை பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ள வீடுகள், இளைஞர்கள் மற்றும் பெருந்தோட்ட சமூகங்கள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவையாகும். வடக்கு மற்றும் கிழக்கில், விதவை நிலை மற்றும் அதிக விவாகரத்து விகிதங்கள் பெண்களின் நலிவுகளை அதிகரிப்பதுடன், இது, அவர்களுக்கு வளங்கள் மற்றும் ஆதரவு அமைப்புகளுக்கான அணுகலை கட்டுப்படுத்துகிறது.

இதற்கிடையில், இளைஞர்கள், விவசாயம் மற்றும் மீன்பிடித்தல் போன்ற பாரம்பரிய வாழ்வாதாரங்களை இலாபமற்றதாகவும், அதிக உழைப்பு தேவைப்படுவதாகவும் கருதுவதால் அவற்றிலிருந்து அதிகரித்தளவில் விலகிச் செல்கின்றனர். பதுளை போன்ற மாவட்டங்களில் இந்த போக்கு குறிப்பாக பின்பற்றப்படுவதுடன், அங்கு இளைஞர்கள் நகர்ப்புற மையங்களுக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ புலம்பெயர்கின்றனர். இதனால், கிராமப்புற சமுதாயங்கள் குறைந்து வரும் தொழிலாளர் மற்றும் பலவீனமான சமூக ஒற்றுமையுடன் காணப்படுகின்றன. பெருந்தோட்ட சமூகங்களில், குறைந்த ஊதியம், மோசமான வீடமைப்பு மற்றும் சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் போன்ற கட்டமைப்பு சமத்துவமின்மைகள், மீண்டெழுதிறனை மேலும் மட்டுப்படுத்துகின்றன. இது குடும்பங்களை கடன் பொறிகள் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் போன்ற எதிர்மறையான சமாளிக்கும் பொறிமுறைகளுக்குள் தள்ளுகிறது.

இலங்கையின் விரிவான தொழிலாளர் புலம்பெயர்தலுக்கான நிறுவனக் கட்டமைப்பானது, வெளியுறவு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் போன்ற முக்கிய அமைப்புகளை உள்ளடக்கியிருந்தாலும், இது காலநிலை மாற்றம் மற்றும் புலம்பெயர்தல் பாய்ச்சல்களுக்கு இடையேயான முக்கியமான தொடர்பை கவனிக்கத் தவறுகிறது (SLYCAN 2022). இந்த இடைவெளியானது, நலிவுற்ற மக்களை அளவுக்கு மீறிப் பாதிக்கின்றது, காலநிலை அழுத்தங்களால் புலம்பெயரக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளன, ஆனால் தற்போதுள்ள கொள்கைகளால் ஆதரிக்கப்படவில்லை.

## பின்தங்கவிடப்பட்ட சமுதாயங்களுக்கான சவால்கள்

> "இப்போது பெண்கள் ஆண்களின் வேலையைச் செய்கிறார்கள். இப்போது பெண்கள் அனைத்து வேலைகளையும் செய்கிறார்கள்."
>
> -ஷமிலா, பெண், 29, கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு

பணி செய்யும் வயதுடைய வளர்ந்தவர்கள் புலம்பெயர்வது, கிராமிய சமுதாயங்களுக்கு ஆழ்ந்த சமூக மற்றும் பொருளாதார விளைவுகளை ஏற்படுத்துகிறது. இது சமூக ஒற்றுமையை பலவீனப்படுத்துவதுடன், சில சந்தர்ப்பங்களில், சமூகத்தின் நிலைத்தன்மையை அச்சுறுத்தும் மனக் குறைகளுக்கு பங்களிக்கிறது. குடும்பங்களை நிர்வகிக்க பெரும்பாலும் தங்கியிருக்கும் பெண்கள், அதிகரித்த வேலைப்பளுவையும், உளநல அழுத்தத்தையும் எதிர்கொள்கின்றனர். கணவர் புலம்பெயரும்போது, பின்தங்கி குடும்ப பண்ணைகளில் ஊதியமில்லாத விவசாய உழைப்பை வழங்கும் பெண்கள் பெரும்பாலும் பொருளாதார ரீதியாக செயலற்றவர்களாக வகைப்படுத்தப்படுகிறார்கள். மேலும், சட்ட ஆவணங்களில் வீட்டு வேலை செய்யும் பெண்கள் என்று குறிப்பிடப்படுகிறார்கள். இது அவர்களது பங்களிப்புகளை குறைமதிப்பிற்குள்ளாக்குவது மட்டுமல்லாமல், பொருளாதாரச் செயற்பாட்டாளர்களாக அவர்களுக்கு முறையான அங்கீகாரம் இல்லாமல் செய்கிறது. இது வளங்கள், தீர்மானமெடுக்கும் அதிகாரம் மற்றும் ஆதரவு அமைப்புகளுக்கான அவர்களது அணுகலை கட்டுப்படுத்துகிறது (கௌதம் 2023). உதாரணமாக, முல்லைத்தீவில், பெண் தலைமைத்துவ குடும்பங்கள் காணி, சந்தைகள் மற்றும் பொது சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலுடன் போராடுவதுடன், இது அவர்களை வறுமைச் சுழற்சிகளில் சிக்க வைக்கிறது.

அனைத்து மாவட்டங்களிலும், புலம்பெயர்ந்தோரின் வீடுகளில் உள்ள குழந்தைகள் குறிப்பாக நலிவுற்றவர்கள் என்பதுடன், அவர்களில் பலர் போதுமான மேற்பார்வை மற்றும் ஆதரவு இல்லாமல் உள்ளனர். இது புறக்கணிப்பு, உள அழுத்தம் மற்றும் சமூக தனிமைப்படுத்தல் போன்ற உணர்ச்சிகரமான சவால்களுக்கு வழிவகுக்கிறது. இந்த பரிமாணங்கள் குடும்பப் பிணைப்புகளை பலவீனப்படுத்தி, சமூக ஒற்றுமையை மோசமாக்கலாம். ஊதியமில்லாத பராமரிப்புப் பணியின் சுமை, பெண்களை சமமற்ற வகையில் பாதிக்கிறது. இது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகள் அல்லது சமூக மீண்டெழுதிறன் முயற்சிகளில் ஈடுபடும் அவர்களது திறனை மேலும் கட்டுப்படுத்துகிறது. இந்த சமநிலையின்மையானது, பால்நிலை சமத்துவமின்மையை நீடிப்பது மட்டுமல்லாமல், மோதல்களுக்குப் பிந்தைய அமைப்புகளில் நம்பிக்கை மற்றும் ஒற்றுமையை மீண்டும் கட்டியெழுப்பும் பரந்த முயற்சிகளை பலவீனப்படுத்துகிறது.

பெருந்தோட்ட சமூகங்களில் உள்ள, மற்றும் குறிப்பாக வடக்கிலும், கிழக்கிலும் உள்ள பெண்கள் நகர்ப்புற மையங்களுக்கு ஆண்களின் அதிகரித்த சுழற்சியான புலம்பெயர்வுகளுடன் தொடர்புடைய மதுபானம் மற்றும் வீட்டு வன்முறையில் அதிகரிப்பு உள்ளதாக தெரிவித்தனர். வரையறுக்கப்பட்ட பாதுகாப்பு தெரிவுகளுடன், விவாகரத்து, உளவியல் நோய் மற்றும் தற்கொலை ஆகியவையும் அதிகரிக்கின்றன. பெற்றோர் அல்லது பராமரிப்பாளரின் புலம்பெயர்தல், பெரும்பாலும் சமூக நிலையற்ற தன்மைக்கு வழிவகுக்கிறது. இதனால், பின்தங்க விடப்பட்ட குழந்தைகள் பாடசாலைகளில் இருந்து இடைவிலகல், இளவயதுத் திருமணம், மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் ஆகியவற்றின் அபாயத்தில் உள்ளனர். பெண்கள் மற்றும் குழந்தைகள் உள்ளிட்ட பாதிக்கப்படக்கூடிய குழுக்கள், போதிய மேற்பார்வை மற்றும் ஆதரவு அமைப்புகள் இல்லாததால், சுரண்டல், துஷ்பிரயோகம் மற்றும் ஆட்கடத்தல் ஆகியவற்றின் அதிகரித்த அபாயங்களை எதிர்கொள்கின்றனர் (Yatawara 2023 FGDs' மற்றும் KIIs மார்ச் 2025). வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள ஏழைக் குடும்பங்கள், குடும்பங்களின் பொருளாதார சுமை காரணமாக, சிறுவர் விவாகம் உட்பட சிறுமிகளின் இளவயதுத் திருமணங்கள் அதிகரித்துள்ளதாக தெரிவித்தனர்.



## 3.2 ஓரங்கட்டப்படலும் சேவைகளுக்கான சமமற்ற அணுகலும் மீண்டெழுதிறனை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது

**வழிமுறைச் சுருக்கம்:** சேவைகளுக்கான சமமற்ற அணுகல் மற்றும் ஆளுகைத் தோல்விகள் ஆகியன காலநிலை அபாயங்களுக்கான இலங்கையின் மீண்டெழுதிறனை பலவீனப்படுத்தி வருவதுடன், இனம், மதம் மற்றும் கிராமப்புற-நகர்ப்புற ரீதியாக சமூக பதற்றங்களை அதிகரிக்கிறது. உட்கட்டமைப்பு முதலீடுகள், விவசாய ஆதரவு, மற்றும் வனவிலங்கு முகாமைத்துவம் ஆகியவற்றில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களை தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளில் இருந்து புறந்தள்ளப்பட்டதாக உணரவைக்கின்றன. உதாரணமாக, கிழக்கில் உள்ள விவசாயிகள், தெற்குக்காக வடிவமைக்கப்பட்ட விவசாய கால அட்டவணைகள் மற்றும் உர ஒதுக்கீடுகளுடன் போராடுகின்றனர். அதேசமயம், இராணுவ வீரர்கள், விறகுக்காக மரம் சேகரிக்கும் உள்ளூர் கிராமவாசிகளோடு ஒப்பிடுகையில், மரம் வெட்டுவதில் குறைவான கட்டுப்பாடுகளை எதிர்கொள்கின்றனர். இதற்கிடையில், மோசமான நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள், கிராமப்புற பெண்களை கடன் சுழற்சிகளில் சிக்க வைத்து, அவர்களுடைய பொருளாதார மீண்டெழுதிறனை கட்டியெழுப்பாமல் தடுக்கிறது. இந்த சமத்துவமின்மைகள் வெளிப்படையான ஆளுகை, சமமான சேவை வழங்கல் மற்றும் கடுமையான ஒழுங்குபடுத்துதல்களுடனான நுண்கடன்கள் ஆகியன இல்லாமல் ஆழமடையும். இது நிறுவனங்கள் மீதான நம்பிக்கையையும், காலநிலை மாற்றத்திற்கு இசைவாகிக் கொள்ளும் முயற்சிகளையும் பலவீனப்படுத்தும்.

### மாறுபடும் காலநிலையில் சமமற்ற சேவை வழங்கல்

இலங்கையின் காலநிலை மாற்றத்திற்கான பாதிப்பு, சுற்றுச்சூழல் ஆபத்துகளுக்கு அது ஆளாகும் தன்மையால் மட்டுமலல்லாது, அதன் சமுதாயங்களின் இசைவாகிக் கொள்ளும் மாறுபட்ட இயலளவுகளாலும் வடிவமைக்கப்படுகிறது. இந்த இயலளவுகள், சேவைகளுக்கான அணுகல், ஆளுகை நடைமுறைகள் மற்றும் சமூக பரிமாணங்களில் உள்ள வேறுபாடுகளால் பாதிக்கப்படுகின்றன. காலநிலை இடர்பாடுகளைத் தீர்க்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டிருந்தாலும், சில சமுதாயங்களிடையே சேவைகள் மற்றும் வளங்களுக்கான அணுகல் சீரற்றதாக உள்ளது என்ற கருத்துக்கள் நிலவுவதுடன், இது புறந்தள்ளப்பட்ட உணர்வுகளுக்கு பங்களிக்கிறது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் சேவை வழங்கலில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், நிறுவனங்கள் மீதான நம்பிக்கையை பலவீனப்படுத்தி, மோதல்களுக்குப் பிந்தைய மனக்குறைகளை அதிகரித்துள்ளன. உதாரணமாக, முல்லைத்தீவில் உள்ள பதிலளிப்பவர்கள், வடக்கு மாகாணம் அரசாங்க வளங்களைப் பெற்றாலும், முல்லைத்தீவு குறிப்பாக வீதி புனரமைப்பு மற்றும் பேருந்து சேவைகள் போன்ற பகுதிகளில் பாராபட்சமாக புறக்கணிக்கப்படுவதாக உணர்ந்தனர். விவசாயிகளை கணிசமாக பாதிக்கின்ற யானை வேலிகள் அமைப்பதற்கான அனுமதிகள் கிடைக்காமைக்கு, இப்பகுதியில் தமிழ் மக்கள் அதிகமாக இருப்பதுதான் காரணம் என்று பல பதிலளிப்பவர்கள் உறுதியாக நம்பினர்.

"யானை வேலிகள் அமைக்க, அரசாங்கத்திடமிருந்து பணம் வேண்டாம், அனுமதி மட்டுமே போதும். ஆனால், ஒரு வருடத்திற்கும் மேலாக எங்களுக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இங்குள்ள தமிழர்களை அடக்கி வைக்கவே அவர்கள் இதைச் செய்கிறார்கள் என்று நான் நம்புகிறேன்."

- முரளி, ஆண், 31, செம்மலை, முல்லைத்தீவு

காலநிலை மாற்றம், இந்த எண்ணங்கள் மற்றும் யதார்த்தங்களுடன் தொடர்புற்று பாதிப்புகளை அதிகரிப்பதுடன் மீண்டெழுதிறனை கட்டியெழுப்புவதற்கு சவால்களை உருவாக்குகிறது.

சேவைகள் மற்றும் உட்கட்டமைப்பு ஒதுக்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், இலங்கை முழுவதும் ஒரு தொடர்ச்சியான கரிசனமாக உள்ளது. இந்த எண்ணங்கள், விவசாயம், நீர் முகாமைத்துவம், மற்றும் போக்குவரத்து உட்கட்டமைப்பு போன்ற காலநிலை மீண்டெழுதிறனுக்கு முக்கியமான துறைகளில் குறிப்பாக கூர்மையாக உள்ளன. உதாரணமாக, கிழக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள், தெற்கு மற்றும் மத்திய பிராந்தியங்களின் அறுவடை சுழற்சிகளுடன் சீரமைக்கப்பட்ட விவசாய கால அட்டவணைகள் மற்றும் உர ஒதுக்கீடுகளால் தாங்கள் பாதிக்கப்படுவதாக உணர்கின்றனர்.

இந்த பொருந்தாமை, அதிகரித்து வரும் சீரற்ற மழையுடன் சேர்ந்து, பயிர்நடுகை மற்றும் அறுவடை சுழற்சிகளை சீர்குலைப்பதுடன் இது கிழக்கில் உள்ள விவசாயிகள் காலநிலை மாறுபாட்டிற்கு இசைவாகிக் கொள்வதையும், அவர்களது வாழ்வாதாரத்தை நிலைநிறுத்துவதையும் கடினமாக்குகிறது. தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில், சேவைகளுக்கான அணுகலில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், புவியியல் அல்லது மதம் என்பதை விட, சமூக அந்தஸ்து, அரசியல் மற்றும் நிதி செல்வாக்கின் அடிப்படையில் அமைந்திருந்தன.

ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் போதிய உட்கட்டமைப்பு இல்லாமை மற்றும் வரையறுக்கப்பட்ட மீள்சுழற்சி திட்டங்கள் என்பவற்றுடன் திண்மக்கழிவு முகாமைத்துவ பற்றாக்குறை ஒரு முக்கியமான பிரச்சினையாகும். திண்மக்கழிவு முகாமைத்துவ பிரச்சினைகள், கலந்தாலோசிக்கப்பட்ட தோட்ட சமூகங்களிடையே குறிப்பாக கடுமையானதாக இருந்தன. பிளாஸ்டிக் மற்றும் அபாயகரமான பொருட்கள் உட்பட, முகாமை செய்யப்படாத கழிவுகள், நீர் ஆதாரங்களை மாசுபடுத்தி, சுற்றுச்சூழல் அமைப்புகளுக்கு தீங்கு விளைவித்து, உள்ளூர் சமூகங்களுக்கு குறிப்பிடத்தக்க சுகாதார இடர்பாடுகளை ஏற்படுத்துவதுடன் சுற்றுச்சூழல் மற்றும் மனித பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. சேவை வழங்கலில் உள்ள இந்த ஏற்றத்தாழ்வு, ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை ஆழப்படுத்துவதுடன் சமூக ஒப்பந்தத்தை பலவீனப்படுத்துகிறது. குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள குடியிருப்பாளர்கள், தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள் மற்றும் சமமான வள ஒதுக்கீட்டில் இருந்து விலக்கப்பட்டதாக உணர்கின்றனர். இதேபோல், நீர்ப்பாசன குளங்களை புனரமைத்தல் மற்றும் யானை வேலிகள் அமைப்பதற்கான அனுமதிகள், பெரும்பாலும் பணக்கார அல்லது அதிக செல்வாக்குள்ள சமூகங்களுக்கு ஆதரவாக இருப்பதாக உணரப்படுகிறது. இந்த கருத்துக்கள் புவியியல் ஏற்றத்தாழ்வுகளுக்கு மட்டுப்படுத்தப்படவில்லை என்பதுடன், ஆனால், வர்க்கம் மற்றும் சமூக அந்தஸ்துடன் இணைகின்றன. உதாரணமாக, பதுளையில் உள்ள ஒரு சிங்கள கோழிப்பண்ணை விவசாயி, அரசாங்க சேவைகளை அணுகுவதில் உள்ள பாகுபாடு, இனம் அல்லது மதம் என்பதை விட, பெரும்பாலும் சமூக அந்தஸ்துடன் தொடர்புடையது என்று குறிப்பிட்டார். அத்தகைய எண்ணங்கள், நம்பிக்கையை கட்டியெழுப்பவும், வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்யவும், தீர்மானமெடுக்கும் செயன்முறைகளில் அதிக வெளிப்படைத்தன்மை மற்றும் உள்ளடங்கலின் அவசியத்தை சுட்டிக்காட்டுகின்றன.

## ஆளுகை மற்றும் சமத்துவமின்மை தொடர்பான புரிதல்கள்

சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன, மற்றும் வளங்களுக்கான தங்கள் அணுகலை சமூகங்கள் எவ்வாறு உணர்கின்றன என்பதை வடிவமைப்பதில் ஆளுகை ஒரு முக்கிய வகிபங்கைக் கொண்டுள்ளது. சில சந்தர்ப்பங்களில், விறகு போன்ற இயற்கை வளங்களை நம்பியிருக்கும் தனிநபர்கள், (சட்டபூர்வமான அல்லது சட்டவிரோதமான) வணிக ரீதியில் மரம் வெட்டுவதில் ஈடுபடும் மற்றவர்களை விட, தாங்கள் பாரபட்சமாக தண்டிக்கப்படுவதாக உணர்கின்றனர். இந்த உணரப்பட்ட சமத்துவமின்மை, அடையாளத்தை அடிப்படையாகக் கொண்டதுடன் இது, காலநிலையால் தூண்டப்பட்ட வள பற்றாக்குறையால் அதிகரிக்கிறது. நிலையான வள முகாமைத்துவத்திற்கு ஒழுங்குவிதிகள் அவசியம் என்றாலும், கொள்கை மேம்பாட்டில் தங்களை ஈடுபடுத்தும் மற்றும் சாத்தியமான மாற்று வழிகளை வழங்கும், அதிகமான பங்கேற்பு மற்றும் சமமான அணுகுமுறைகளுக்கான விருப்பத்தை சமூகங்கள் வெளிப்படுத்தியுள்ளன.

> "நாங்கள் ஒரு சிங்களப் பகுதியாகவோ அல்லது முஸ்லிம் பகுதியாகவோ இருந்தால், எங்களுக்கு இன்னும் அதிகமான அரசாங்க ஆதரவு கிடைக்கும். தமிழ் பகுதிகள் வீதிகள், மருத்துவமனைகள், குடிநீர், என எல்லாவற்றிலும் மோசமானவற்றை எதிர்கொள்கின்றன. இது அனைத்தும் அரசியல்."
>
> \- முத்துசா, பெண், 24, கதிரவெளி, மட்டக்களப்பு

சேவை வழங்கலில் உள்ள பாரபட்சம் பற்றிய புரிதல்கள், அரசாங்க அதிகாரிகளுடனான தொடர்புகளுக்கும் நீள்கின்றன. சில சிறுபான்மைக் குழுக்கள், சில அதிகாரிகளின் மனப்பான்மை காரணமாக தாங்கள் பாகுபாட்டை உணர்வதாக உணர்கின்றனர். உதாரணமாக, வடக்கில் உள்ள தமிழ் விவசாயிகள், விவசாய ஆதரவு நிகழ்ச்சித் திட்டங்களில் இருந்து தாங்கள் விலக்கப்பட்டதாக உணர்வதாக தெரிவித்துள்ளனர். அதேசமயம், கிழக்கில் உள்ள சில முஸ்லிம் சமூகங்கள், அனர்த்த நிவாரண ஒதுக்கீட்டில் ஏற்றத்தாழ்வுகளை உணர்கின்றனர். இந்த அனுபவங்கள், இனம் மற்றும் மத அடிப்படையிலானவை மட்டுமல்லாது மற்றைய விடயமான இனம் மற்றும் மத வரம்புகளை கடந்த, வர்க்க அடிப்படையிலான சார்புகளை சுட்டிக்காட்டுகின்றன. மேலதிகமாக, உள்ளூர் கலந்துரையாடல் அமைப்புகளில் பெண்கள் 11% ஆக இருந்தாலும், கலந்தாலோசிக்கப்பட்ட சமுதாயங்கள் ஆண் அல்லது பெண் பிரதிநிதிகளிடம் மாறுபட்ட திருப்தி நிலைகளை தெரிவிக்கவில்லை (ஐ.நா. பெண்கள் 2023b). இந்த எண்ணங்களை உள்ளடங்கலான ஆட்சி மற்றும் உள்ளூர் அதிகாரிகளுக்கான இயலளவு மேம்பாடு மூலம் தீர்ப்பது நம்பிக்கை மற்றும் சமூக ஒற்றுமையை வளர்க்க உதவும்.

அனைத்து நான்கு மாவட்டங்களிலிருந்தும் பதிலளிப்பாளர்கள், புதிய தேசிய அரசாங்கத்தின் மீது நம்பிக்கை மற்றும் நேர்மறையான உணர்வுகளை வெளிப்படுத்தினர். மட்டக்களப்பில் உள்ள ஒரு தமிழ் பெண் பதிலளிப்பாளர், "அவர்கள் அனைத்து மாவட்டங்களையும் சமமாகப் பார்க்கிறார்கள் என்று நாங்கள் உணர்கிறோம்" என்று கூறினார்.

இந்த நம்பிக்கை, காலப்போக்கில் சமத்துவமின்மைகளைத் தீர்க்க ஆரம்பிக்கும் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டில் உள்ள நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக, நீண்ட கால மாற்றத்திற்கான சாத்தியக்கூறுகளை நோக்கி பெரும்பாலும் வழிப்படுத்தப்பட்டது.

ஆனால், சில தமிழ் மற்றும் முஸ்லிம் பதிலளிப்பாளர்கள், ஜனாதிபதியும், கொழும்பில் உள்ள தேசிய அரசாங்கமும் அதிக சமமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளித்தாலும், அவற்றின் அமுலாக்கமானது நிர்வாகம் பெரும்பாலும் சிங்கள அதிகாரிகளால் நிர்வகிக்கப்படுகின்ற உள்ளூர் மட்டத்தில் சவால்களை எதிர்கொள்ளக்கூடும் என்று கவலை தெரிவித்தனர்.

## உணவு பாதுகாப்பு சவால்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள்

இலங்கையில் பல சமுதாயங்களுக்கு உணவு பாதுகாப்பு ஒரு வளர்ந்து வரும் கரிசனமாக உள்ளதுடன், இது குறிப்பாக காலநிலை மாற்றம் விவசாய உற்பத்தியை சீர்குலைத்து, தீவிர வானிலை நிகழ்வுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதால் ஏற்படுகிறது. கிராமிய விவசாயிகள், தோட்டத் தொழிலாளர்கள், மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளிட்ட ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் இந்த சவால்களுக்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவர்களாவர். இந்த நலிவுகள் வடக்கு மற்றும் கிழக்கு போன்ற மோதல்களுக்குப் பிந்தைய பகுதிகளில், சேதமடைந்த உட்கட்டமைப்பு, தீர்க்கப்படாத காணி தகராறுகள் மற்றும் வரையறுக்கப்பட்ட நிறுவன ஆதரவு உள்ளிட்ட போரின் நீண்டகால தாக்கங்களால் அதிகரிக்கிறது. இந்த காரணிகள் உணவு பாதுகாப்பின்மையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், மோதல்களுக்குப் பிந்தைய மீட்சியை தடை செய்யும் அபாயத்தையும், சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளையும் பலவீனமாக்குகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில், நீண்ட வறட்சிகள் மற்றும் சீரற்ற மழை, பயிர் விளைச்சலைக் குறைத்துள்ளதுடன், இது சில விவசாயிகளை பாரம்பரிய பயிர்களை விட்டு, குறைவான இலாபகரமான மாற்று வழிகளுக்கு மாற கட்டாயப்படுத்துகிறது. நிலம் மற்றும் நிதி வளங்களுக்கான அணுகல் இல்லாத பெண் தலைமைத்துவ குடும்பங்கள், பாராபட்சமாக பாதிக்கப்படுகின்றன. உதாரணமாக முல்லைத்தீவில், பெண் விவசாயிகள் வறண்ட காலங்களில் பயிர்களை நிலைநிறுத்துவதற்காக முக்கிய நீர்ப்பாசன அமைப்புகளில் முதலீடு செய்வதற்கு மூலதனம் மற்றும் கடன்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலே இருப்பதாக தெரிவித்தனர். இந்த சவால்கள் அதிகரித்து வரும் உணவு விலைகளால் மேலும் அதிகரிப்பதுடன் இது, குடும்ப வரவு செலவுகளுக்கு அழுத்தம் கொடுத்து, உணவுப் பன்முகத்தன்மையை கட்டுப்படுத்துகிறது.

பதுளையில் உள்ள தோட்டத் தொழிலாளர்கள், கட்டமைப்பு சமத்துவமின்மைகளுடன் தொடர்புடைய தனித்துவமான உணவு பாதுகாப்பு சவால்களை எதிர்கொள்கின்றனர். குறைந்த ஊதியங்கள் மற்றும் சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ஆகியன பல குடும்பங்களை அவர்களது உணவுத் தேவைகளுக்காக வாழ்வாதார விவசாயம் அல்லது சந்தை கொள்வனவை நம்பியிருக்க வைக்கிறது. பெண்கள் குறிப்பாக பாதிக்கப்படுவதுடன், இயந்திரமய-மாக்கப்பட்ட அல்லது பொதுவான கைமுறையிலான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஆண்களின் வகிபாகங்களுடன் ஒப்பிடும்போது, அதிக உழைப்பு தேவைப்படும் தேயிலை பறிக்கும் பணியில் அவர்களது உழைப்பு குறைவாக மதிப்பிடப்படுவதுடன், நாளாந்தம் பறிக்கும் இலக்குகளின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் ஊதியங்கள், ஆண்களுக்கு இணையான ஊதியத்தை ஈட்ட பெண்கள் அதிக நேரம் வேலை செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்துகிறது. கணிக்க முடியாத காலநிலை போக்குகள் மற்றும் மண் வளங்குன்றல், வீட்டுத் தோட்டங்களின் சாத்தியக்கூறை குறைத்துள்ளன. இதனால், வெளிப்புற உணவு வழங்கல்களைச் சார்ந்து இருப்பது அதிகரிக்கிறது. இது, குடும்பங்கள் அடிப்படைத் தேவைகளை ஈடுகட்டுவதற்கு கடன் வாங்குவதற்கு வழிவகுப்பதால், கடன் சுழற்சிகளுக்கு ஆளாக்குகிறது. இதனால், அவர்கள் பொருளாதார மற்றும் காலநிலை தொடர்பான அதிர்ச்சிகளுக்கு ஆளாகின்றனர். இந்த சூழ்நிலைகளில், முறையான ஆதரவு இல்லாதது வறுமையை நீடிப்பது மட்டுமல்லாமல், குறிப்பாக இந்த சமூகங்கள் தேசிய அபிவிருத்தி முயற்சிகளால் புறக்கணிக்கப்பட்டதாக உணர்ந்தால், மேலதிக மனக்குறைகளை ஏற்படுத்தும் அபாயத்தையும் கொண்டுள்ளது.

அம்பாந்தோட்டை போன்ற கடலோரப் பகுதிகளில் உள்ள ஏழை இன மற்றும் மத சிறுபான்மையினர், குறைந்து வரும் மீன் வளங்கள் மற்றும் உவர் நீர் உட்புகுதலால் மேலதிக அழுத்தங்களை எதிர்கொள்கின்றனர். இது அவர்களது வாழ்வாதாரங்கள் மற்றும் உணவு பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுகிறது. இந்த சவால்களை காலநிலை-மீண்டெழுதிறன் கொண்ட விவசாயம் மற்றும் மீன்பிடித்தல், மற்றும் சமமான வள விநியோகம் போன்ற இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் மூலமாக தீர்ப்பது உணவு பாதுகாப்பை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல், சமூக ஒற்றுமையையும் வலுப்படுத்தும் ஒரு வாய்ப்பை வழங்குகிறது. உள்ளடங்கலான மற்றும் மோதலுக்கு உணர்திறனான அணுகுமுறைகள் மூலம் இந்த பாதிப்புகளை தீர்ப்பதன் மூலமாக காலநிலை நடவடிக்கையானது நம்பிக்கையை வளர்க்கவும், மனக்குறைகளை குறைக்கவும் நலிவடைந்த சமுதாயங்களில் நீண்டகால சமாதானத்தை கட்டியெழுப்ப பங்களிக்கவும் முடியும்.

## பால்நிலை தொடர்பான ஓரங்கட்டப்படுதலும் காலநிலை தாக்கங்களும்

காலநிலை மாற்றம் மற்றும் சேவைகளுக்கான சமமற்ற அணுகல் ஆகியவற்றால் பெண்கள் குறிப்பாகப் பாதிக்கப்படுகின்றனர். கிராமப்புறங்களில், காலநிலை தாக்கங்களால் அதிகரித்து வரும் அழுத்தத்தில் உள்ள வீட்டு வளங்களை நிர்வகிக்கும் பொறுப்பு பெரும்பாலும் பெண்களுக்கே உள்ளது. இந்த அழுத்தம் ஏற்கனவே இருக்கும் சமத்துவமின்மையை ஆழமாக்குவதோடு மட்டுமல்லாமல், சமுதாயங்களுக்குள் பதட்டங்களையும் அதிகரிப்பதுடன், இது சமூக நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் சவால்களை உருவாக்குகிறது. உதாரணமாக, நீண்ட வறட்சி காரணமாக, பெண்கள் அதிக நேரம் தண்ணீர் சேகரிக்க வேண்டியுள்ளதுடன், இதனால் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அவர்களின் திறன் குறைகிறது. இத்தகைய சவால்கள், முல்லைத்தீவு போன்ற மோதல் பாதிப்புள்ள பகுதிகளில் அதிக அளவில் காணப்படும் பெண் தலைமைத்துவ குடும்பங்களில் மிகவும் வெளிப்படையாக உள்ளன. பெண்கள் வளங்கள் மற்றும் ஆதரவு அமைப்புகளை அணுகுவதை உறுதி செய்வதனால், காலநிலை அபாயங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ளும் அவர்களின் திறனை கணிசமாக மேம்படுத்த முடியும்.

கிராமப்புறப் பெண்களுக்கு வலுவூட்டவும் வறுமையைக் குறைக்கவும் ஒரு கருவியாக ஊக்குவிக்கப்பட்ட நுண்கடன், பல பெண்களை கடன் சுழற்சியில் சிக்க வைத்துள்ளது. இலங்கை முழுவதும், மோசமான கடன் வழங்கும் நடைமுறைகள், அதிக வட்டி விகிதங்கள் மற்றும் குறைந்த நிதியியல் அறிவு ஆகியவை பெண்களை குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவர்களாக ஆக்கியுள்ளன. குறைந்த ஆவணங்களைக் கோரி, குறைந்த மேற்பார்வையுடன் கடன்களை வழங்கும் தனியார் நுண்கடன் நிறுவனங்கள், முறையான வங்கி சேவைகளை அணுக முடியாத பெண்களை இலக்கு வைக்கின்றன. கடன் ஒப்பந்தங்கள், பெரும்பாலும் கடன் வாங்குபவர்களின் தாய்மொழியில் இல்லாதது, இந்த அபாயங்களை மேலும் அதிகரிக்கின்றன (அரம்பேபொல மற்றும் ரொமேஷுன் 2019).

மட்டக்களப்பில், ஒரு இளம் பெண், தனது கணவர் வெளிநாட்டில் பணிபுரியும் போது, தனது சொத்து பத்திரங்களை ஒரு கடனுக்கான பிணையமாக அறியாமல் கையெழுத்திட்டார். அவர் திரும்பி வந்தபோது, அவள் வீட்டு வன்முறை மற்றும் சமுதாய அவமானத்தை எதிர்கொண்டாள். இது நுண்கடன் எவ்வாறு சமூக நலிவுகளை சுரண்டலாம் என்பதை எடுத்துக்காட்டுகிறது. பதுளையில், மற்றொரு பெண், குழந்தைகளை கவனிக்கும் பொறுப்புகள் முறைசார் வேலைக்கு செல்ல முடியாமல் தடுத்ததால், தனது வீட்டுத் தோட்டத்திற்கு ஆதரவாக கடன் வாங்கினார். கனமழையும் மோசமான வடிகாலமைப்பும் அவரது பயிர்களை அழித்தன, இதனால் அவரால் கடனை திருப்பிச் செலுத்த முடியாமல் நிதி பாதுகாப்பின்மையை ஆழமாக்கியது.

இந்த சவால்களை காலநிலை மாற்றம் மேலும் சிக்கலாக்குகிறது. கணிக்க முடியாத வானிலை போக்குகள் மற்றும் தீவிர நிகழ்வுகள் கிராமிய வாழ்வாதாரங்களை அதிகளவில் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதுடன், இதனால் கடன் வாங்குபவர்களுக்கு கடனை திருப்பிச் செலுத்துவது கடினமாகிறது (அத்தநாயக்க 2024). பெண்கள் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை விட நுகர்வுக்காக கடன்களை எடுத்துக்கொள்வதுடன், இது கடனில் இருந்து தப்பிக்கும் அவர்களின் திறனை மேலும் குறைக்கிறது (அரம்பேபொல மற்றும் ரொமேஷுன் 2019). தொலைபேசி அழைப்புகள் மற்றும் குறுஞ்செய்திகள் மூலம் துன்புறுத்தல், பாலியல் லஞ்சம், அல்லது கடன் வாங்குபவர்களின் வீடுகளுக்கு வெளியே முகவர்கள் காத்திருத்தல் போன்ற தீவிரமான கடன் வசூலிப்பு நடைமுறைகள், கடன் சுமையின் உள ரீதியாகவும் சமூக ரீதியாகவும் ஏற்படும் பாதிப்பை அதிகரிக்கின்றன (போர்ஹாம் 2019). பதிலளித்தவர்கள் கடன் தொடர்பான உளநலப் பிரச்சினைகள் மற்றும் தற்கொலைகள் அதிகரிப்பதாக தெரிவித்தனர்.

கடன் சலுகைக்காலம் மற்றும் வட்டி விகித எல்லைகள் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைகள் அறிமுகப்படுத்தப்பட்ட போதிலும், இடைவெளிகள் இன்னமும் உள்ளன. உதாரணமாக, 2018 ஆம் ஆண்டின் நிதி அமைச்சின் முன்முயற்சி, 12 மாவட்டங்களில் 100,000 ரூபாய்க்கும் குறைவாக கடன் வாங்கியிருந்த, 35% க்கும் அதிகமான வட்டி விகிதங்களைக் கொண்டிருந்த, மற்றும் மூன்று மாதங்களுக்கு திருப்பிச் செலுத்த முடியாமல் இருந்த பெண்களுக்கு தற்காலிக நிவாரணம் அளித்தது (அரம்பேபொல மற்றும் ரொமேஷுன் 2019). நிதியியல் அறிவை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்கள், நியாயமான கடன் வழங்கும் நடைமுறைகளை உறுதி செய்தல், மற்றும் மேற்பார்வையை மேம்படுத்துதல் ஆகியவை பெண்கள் வளங்களை வினைத்திறனாக நிர்வகிக்கவும், காலநிலை மாறுபாடுகளுக்கு மத்தியிலும் மீண்டெழுதலை உருவாக்கும் நடவடிக்கைகளில் முதலீடு செய்யவும் உதவும். இருக்கும் சமத்துவமின்மையை ஆழப்படுத்துவதற்கு பதிலாக நுண்கடன்கள் பெண்களை வலுவூட்டுவதை உறுதிப்படுத்துவதற்கு முறைசார் வங்கிச் சேவைகளுக்கான அணுகலை அதிகரிப்பது உட்பட பரந்தளவிலான சீர்திருத்தங்கள் அத்தியாவசியமானவையாகும்.

## புவியியல் ரீதியான ஓரங்கட்டப்படுதலும் நலிவுத்தன்மையும்

இலங்கையின் புவியியல் பன்முகத்தன்மையானது அதன் பிராந்தியங்கள் முழுவதும் தனித்துவமான காலநிலை சவால்களை உருவாக்குகிறது. அம்பாந்தோட்டை போன்ற கடலோரப் பகுதிகள் கடல் மட்டம் உயர்வு மற்றும் உவர்நீர் உட்புகுதல் ஆகியவற்றால் ஏற்படும் அபாயங்களை எதிர்கொள்வதுடன், இது மீன்பிடி மற்றும் விவசாய வாழ்வாதாரங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது. பதுளை போன்ற உள்நாட்டுப் பகுதிகள் சீரற்ற மழைப்பொழிவு மற்றும் மண் வளங்குன்றல் ஆகியவற்றுடன் போராடுவதுடன், இது விவசாய உற்பத்தித்திறனைக் குறைத்து விவசாயிகள் மாற்று வாழ்வாதாரங்களை பின்பற்றுவதற்குத் தூண்டுகிறது. சில பிராந்தியங்கள் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகளிலிருந்து பயனடைந்துள்ள நிலையில், மற்றவை, குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய பிராந்தியங்கள், மோதலின் பாரம்பரியம் மற்றும் உட்கட்டமைப்புக்கான முதலீட்டுக் குறைவு காரணமாக மேலதிகமான சவால்களை எதிர்கொள்கின்றன. உதாரணமாக, வடக்கில் வறட்சிக்கு ஆளாகக்கூடிய பகுதிகளில் பெரும்பாலும் போதுமான நீர்ப்பாசன உட்கட்டமைப்பு இல்லாததுடன், இதனால் விவசாயிகள் அதிகரித்தளவில் எதிர்வு கூறமுடியாத வானிலை முறைமைகளுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்வது கடினமாக உள்ளது. இத்தகைய உட்கட்டமைப்பை அணுகுவதை விரிவுபடுத்துவதும், உள்ளூர் தேவைகளுடன் சேவை வழங்கலை சீரமைப்பதும் இந்த சமூகங்கள் காலநிலை தாக்கங்களுக்கு மீண்டெழுதிறனை உருவாக்க உதவும். இந்த முயற்சிகள் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்வதற்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துவதுடன், சமூக நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையை வலுப்படுத்தும்.




முச்சக்கர வண்டி (c) ஸ்வஸ்திக் அரோரா / அன்ஸ்பிளாஷ்

கலந்துரையாடப்பட்ட மாவட்டங்களில் உள்ள கிராமிய சமுதாயங்கள், காலநிலை தாக்கங்களுக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்வதற்கு அவசியமான நீர்ப்பாசனம், போக்குவரத்து மற்றும் விவசாய ஆதரவு போன்ற அத்தியாவசிய சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் காரணமாகத் தாங்கள் மேலும் ஓரங்கட்டப்பட்டதாக உணர்ந்ததாக தெரிவித்தனர். கிராமப்புறங்களில், குறிப்பாக மோதல்களின் வரலாறு உள்ள பகுதிகளில் அல்லது அபிவிருத்தி செயற்திட்டங்கள் அல்லது காலநிலை அனர்த்தங்கள் காரணமாக இடம்பெயர்ந்த பகுதிகளில் அத்தியாவசிய சேவைகளுக்கான குறைந்த அணுகல் மற்றும் சமமற்ற வள ஒதுக்கீடு பற்றிய எண்ணங்கள் ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை ஆழமாக்குகின்றன. இந்த ஏற்றத்தாழ்வுகள் சமூக நல்லிணக்கத்தை சிதைத்து, இன மற்றும் புவியியல் ரீதியான பிளவுகளை அதிகரிக்கலாம் என்பதுடன் இது சமுதாயங்கள் மீண்டும் கட்டியெழுப்ப முயற்சிக்கும் பலவீனமான சமாதானத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது. செழுமையான அல்லது நகர்ப்புற பகுதிகளுக்கு ஆதரவான சமமற்ற வள ஒதுக்கீடு மற்றும் ஆளுகை தொடர்பான சவால்கள் பற்றிய புரிதல்கள், சீரற்ற மழைப்பொழிவு, வறட்சி மற்றும் உணவு பாதுகாப்பின்மை ஆகியவற்றுக்கான அவர்களின் பாதிப்பை அதிகரிக்கின்றன.

## மேற்பொருந்தும் நலிவுத்தன்மைகள் மற்றும் வாய்ப்புகள்

காலநிலை தாக்கங்களை தனிநபர்களும் சமுதாயங்களும் அனுபவிக்கும் விதமானது, அவர்களின் பால்நிலை, வயது, இனம், வர்க்கம், இயலாமை நிலை மற்றும் அடையாளத்தின் பிற அம்சங்களால் ஆழமாக வடிவமைக்கப்பட்டு, மீண்டெழு திறனுக்கான சமமற்ற வாய்ப்புகளை உருவாக்குகின்றன. ஏழை இளைஞர்களிடையே, விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற பாரம்பரிய வாழ்வாதாரங்கள் சீரற்ற மழையினாலும் குறைந்து வரும் வளங்களாலும் நம்பகத்தன்மை இழந்ததால், பலர் திசை தெரியாமல் தவிக்கின்றனர். சில மாற்றீட்டு வழிகளே இருப்பதால், சிலர் குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோக சுழற்சிகளில் விழுந்து, விரக்தியான பாதைகளை நாடுகின்றனர். இந்த கவலையளிக்கும் போக்கானது நான்கு மாவட்டங்களிலுமே காணப்பட்டாலும், நிலையற்ற உலகில் ஸ்திரத்தன்மையைத் தேடும் ஒரு தலைமுறையின் போராட்டங்களை மோதல் மற்றும் ஓரங்கட்டலின் வடுக்கள் அதிகரித்து வரும் வடக்கு மற்றும் கிழக்கில் ஆழமாக காணப்படுகின்றன.



## 3.3 மனித–வனவிலங்கு மோதல் மனித பாதுகாப்பு, வாழ்வாதாரங்கள் மற்றும் உயிர்ப்பல்வகைமையை அச்சுறுத்துகிறது

**வழிமுறைச் சுருக்கம்:** இலங்கையில் மனித-வனவிலங்கு மோதல் ஒரு நெருக்கடியாக அதிகரித்துள்ளதுடன், இது வாழ்வாதாரங்கள், மனித பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பல்வகைமையை அச்சுறுத்துகிறது. காலநிலை மாற்றம், காடழிப்பு மற்றும் வனவிலங்கு வாழ்விடங்களுக்குள் மனித ஆக்கிரமிப்பு ஆகியவை மோதல்களை தீவிரப்படுத்தியுள்ளன. கிராமிய சமுதாயங்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்கள், பயிர் அழிவு, உடல் ரீதியான ஆபத்து மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவற்றை எதிர்கொண்டு, இந்த மோதல்களின் சுமையை சுமக்கின்றன. காலம்கடந்த முறைமைகள் மற்றும் வினைத்திறனற்ற அரசாங்க பதிலளிப்புகள் சமுதாயங்களை பாதிக்கப்படக்கூடியவையாக விட்டுவிடுவதால், நிர்வாக இடைவெளிகள் இந்த சிக்கலை மேலும் அதிகரிக்கின்றன. பாதிக்கப்பட்ட சில சமுதாயங்கள், விலங்குகளும் காடுகளும் தங்களது வாழ்க்கையை விட கொள்கை முன்னுரிமை பெறுகின்றன என்று உணர்கின்றன. மின்சார வேலிகள், ஒருங்கிணைந்த காணிப் பயன்பாட்டு திட்டமிடல் மற்றும் மனித மற்றும் வனவிலங்கு தேவைகளை அங்கீகரிக்கும் பாதுகாப்புச் சட்டங்களின் சமநிலையான அமுலாக்கம் போன்ற இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் இல்லாமல், மனித மற்றும் வனவிலங்கு பாதுகாப்பானது தொடர்ந்து மோசமடைந்து, நாடு முழுவதும் சமூக, சுற்றுச்சூழல் மற்றும் அரசியல் பிளவுகளை ஆழமாக்கும்.

### மனித–வனவிலங்கு மோதல்

இலங்கையில் மனித-வனவிலங்கு மோதல் ஒரு புதிய நிகழ்வல்ல என்றாலும், சமீபத்திய ஆண்டுகளில் அதன் அதிர்வெண்ணும் தீவிரமும் அதிகரித்துள்ளது. இது வாழ்வாதாரங்கள், பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பல்வகைமையை பெரும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது. விவசாயிகள் இப்போது ஒரே இரவில் பயிர்கள் அழிவதைச் சந்திப்பதுடன், வீடுகள் அலைந்து திரியும் விலங்குகளால் சேதப்படுத்தப்படுகின்றன, மேலும் மனித உயிரிழப்புகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. 1974 மற்றும் 2019 க்கு இடையில், விலங்கு தாக்குதல்களால் கிட்டத்தட்ட 800 வீடுகள் சேதமடைந்தன என்றும், 80,000 க்கும் அதிகமான மக்கள் மறைமுகமாகப் பாதிக்கப்பட்டனர் என்றும், இது கிட்டத்தட்ட 1,000 இறப்புகளுக்கு வழிவகுத்தது என்றும் கூறப்படுகிறது.

2020 முதல் 2024 வரையிலான காலகட்டத்தில் மட்டும், மனித-யானை மோதல் காரணமாக 700 க்கும் மேற்பட்ட மக்கள் உயிரிழந்துள்ளனர். 2023 ஆம் ஆண்டில், 470 யானைகள் இறந்ததாகப் பதிவாகியுள்ளது. இது 2010 இல் பதிவான இறப்புகளுடன் ஒப்பிடும்போது இரு மடங்கு அதிகரிப்பாகும் (தி கார்டியன் 2024 கோப்கே மற்றும் பலர் 2024).

மனித-வனவிலங்கு மோதலின் இந்த அதிகரிப்பானது, காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் சுருங்கி வரும் வனவிலங்கு வாழ்விடங்களுக்குள் மனித ஆக்கிரமிப்பு ஆகியவற்றின் கலவையால் தூண்டப்படுகிறது. பதுளை போன்ற முக்கிய மாவட்டங்களில் 30-35% விவசாய உற்பத்தி பாதிக்கப்படுவதுடன் யானைகள், மயில்கள், குரங்குகள், காட்டுப் பன்றிகள் மற்றும் இராட்சத அணில்கள் அழிவின் தடயத்தை விட்டுச்செல்கின்றன (ஜெயதிலக மற்றும் பலர் 2021). தேசிய அளவில், இந்த தாக்குதல்கள் 35 % விவசாய இழப்புகளுக்கு காரணமாவதுடன், 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில், சேத மதிப்பு 55.3 பில்லியன் ரூபாவாக (தோராயமாக 648 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) மதிப்பிடப்பட்டுள்ளது. ஊவா மாகாணம் 45,000 ஹெக்டேயர் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டதால் பெரும் சுமையைச் சுமந்துள்ளது (குணதிலக 2024).

மத்திய சுற்றுச்சூழல் அதிகாரசபையால் யானை வேலிக்கான அனுமதி வழங்குவது, மனித நலனை விட விலங்குகளின் நலனுக்கு முன்னுரிமை அளிப்பதாக சிலரால் கருதப்படுகிறது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள குடியிருப்பாளர்கள் இந்த அனுமதிகள் சிங்கள பெரும்பான்மைப் பிராந்தியங்களுக்கும் அவர்களின் நலன்களுக்கும் சார்பாக பாராபட்சமாக ஆதரவளிக்கின்றன என்று கவலை தெரிவித்துள்ளதுடன், இது ஓரங்கட்டப்படுதல் உணர்வை மேலும் ஆழமாக்குகிறது.

### பொருளாதார மற்றும் விவசாய தாக்கங்கள்

மனித-வனவிலங்கு மோதலின் தாக்கங்கள் அதிகரித்தளவில் சமமற்றவை என்பதுடன், பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் அதன் விளைவுகளின் சுமையை சுமக்கின்றன. கிராமப்புறங்களில் உள்ள பெண்கள், பெரும்பாலும் விவசாயம், உணவு பாதுகாப்பு மற்றும் வீட்டு நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் என்பதுடன், பயிர்களை பராமரிப்பது அல்லது குடிநீர் சேகரிப்பது போன்ற நாளாந்த பணிகளில் அபாயங்களை எதிர்கொள்கின்றனர். மொனராகலையில், பெண் விவசாயிகள் காட்டுப் பன்றிகள் மற்றும் யானைகளால் அடிக்கடி பயிர்கள் அழிக்கப்படுவதாகவும், இதனால் அவர்களின் அறுவடைகள் அழிக்கப்படுவதாகவும், உடல் ரீதியான ஆபத்துக்கு ஆளாவதாகவும் தெரிவித்தனர்.

வனவிலங்கு அழிவு பெண்களை கடுமையாக பாதிப்பதுடன், அவர்களின் அறுவடைகளை பறித்து, பெரும்பாலும் அவர்களுக்கு இழப்பீடு அல்லது வாழ்வாதாரத்திற்கான பிற வழிவகைகள் இல்லாதவர்களாக ஆளாக்குகின்றது.



யானை மற்றும் புல்வெளி (c) ஒலெக்சாண்டர் பித்வாலேன்யி / பிக்சாபேய்

பதுளையில், இனரீதியான சிறுபான்மையினர் மேலும் கடுமையான சவால்களை எதிர்கொள்வதுடன், குறைந்த வளங்கள் மற்றும் முறைப்படுத்தப்பட்ட தடைகள் மீட்பு நடவடிக்கைகளை அவர்களுக்கு எட்டாததாக ஆக்கியிருக்கின்றது.

வனவிலங்கு மோதல்களால் காயம் அல்லது மரணம் ஏற்படும்போது, பெண்கள் பெரும்பாலும் பராமரிப்பின் சுமையை சுமக்க வேண்டியுள்ளதுடன், இது பொருளாதார ரீதியாக பங்கேற்பதற்கான அவர்களின் திறனை மேலும் கட்டுப்படுத்துகிறது. வீரவிலவில் (அம்பாந்தோட்டை மாவட்டம்), ஒரு தொழிலாளியான தாய், தனது கணவரை மருத்துவமனையில் சேர்க்கவேண்டி ஏற்பட்ட காட்டு யானை தாக்குதலின் விளைவுகளுடன் போராடி வருகிறார். இப்போது தனது குடும்பத்தை நிர்வகிக்கும் ஒரே நபராகவும், முதன்மை பணமீட்டுபவராகவும் உள்ள அவர், அதிகரித்த பொறுப்புகளை கையாள்கிறார். இருப்பினும், நலிவுத்தன்மை மற்றும் முறைப்படுத்தப்பட்ட தடைகளால் அவர் நிதி உதவியை நாடுவதிலிருந்து தடுக்கப்படுவதுடன், இது அவரது குடும்பத்தை மேலும் தனிமைப்படுத்தி, ஆபத்தான நிலையில் வைக்கிறது. இத்தகைய மோதல்களின் பேசப்படாத உளநல பாதிப்புகள், குறிப்பாக பெண்கள் மீது கனமாக விழுவதுடன், அவர்கள் பொருளாதார தப்பிப்பிழைத்தல் மற்றும் உணர்ச்சி அழுத்தத்தின் நசுக்கும் மேற்பொருந்துகையைக் கையாள வேண்டும்.

மனித-வனவிலங்கு தொடர்புகளை கையாளப் பயன்படுத்தப்பட்ட பாரம்பரிய நடைமுறைகள், சமுதாய ஒத்துழைப்பு அல்லது அரசாங்க தலையீடு போன்றவை அதிகரித்த அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன அல்லது வினைத்திறனற்றவையாகின்றன. இதன் விளைவாக, மனித-வனவிலங்கு மோதல் ஒரு தீவிர பிரச்சினையாகி, வாழ்வாதாரங்கள், பாதுகாப்பு மற்றும் சமூக நல்லிணக்கத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளது.

## வாழ்விட இழப்பு மற்றும் துண்டாடலுக்கான காரணிகள்

9,000 க்கும் மேற்பட்ட அறியப்பட்ட உயிரினங்களைக் கொண்ட உலகளாவிய உயிர்ப்பல்வகைமை செறிவான இலங்கையில், காலநிலை மாற்றம் வாழ்விடங்களை மாற்றி, வனவிலங்குகளின் நடத்தையை சீர்குலைப்பதால் சவால்கள் அதிகரித்து வருகின்றன. அதிக உமிழ்வு சூழ்நிலையில், உயரும் வெப்பநிலை அதிக நிலவுயரத்தில் உள்ள உயிரினங்களை குறிப்பாக ஏற்கனவே வாழ்விட இழப்பு மற்றும் துண்டாடலுக்கான நலிவை எதிர்நோக்கக்கூடிய அபாயத்திலுள்ள ஈரூடகவாழிகள், ஊர்வன, பறவைகள் மற்றும் பாலூட்டிகளின் பரம்பலை மாற்றுதல், இனவிருத்தி சுழற்சிகளை மாற்றுதல் மற்றும் அழிவு அபாயங்களை அதிகரிப்பதன் மூலமாக தீவிரமாக பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கெல்டின் 2025).

மாறிவரும் மழைவீழ்ச்சி போக்குகள், தீவிரமடைந்து வரும் வறட்சி மற்றும் உயரும் வெப்பநிலை ஆகியவை சூழற்தொகுதிகளை மீள்வடிவமைத்து வனவிலங்குகளை மனித குடியிருப்புகளுக்குள் தள்ளுகின்றன. அம்பாந்தோட்டையில், மாறிவரும் வானிலை போக்குகள் விவசாயத்தை சீர்குலையச் செய்து, இயற்கை உணவு ஆதாரங்களைக் குறைத்துள்ளதுடன் யானைகள், குரங்குகள் மற்றும் மயில்கள் விவசாய நிலங்களைத் தாக்கி, பயிர்களை அழித்து வருவதை தூண்டுகின்றன. இதேபோல், பதுளையில், குள்ளநரிகள் போன்ற வேட்டையாடும் உயிரினங்களின் இழப்பு மயில்களின் குடித்தொகையை கட்டுப்பாடில்லாமல் அதிகரிக்கச் செய்துள்ளது. இது விவசாய சவால்களை மேலும் சிக்கலாக்கி, விவசாயிகள் தங்கள் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க போராட வேண்டியுள்ளது. இந்த சவால்கள் பெரும்பாலும் வளங்கள், காணி உரிமை மற்றும் தீர்மானமெடுக்கும் அதிகாரம் பற்றாக்குறையாகவுள்ள பெண்கள் மற்றும் சிறுபான்மையினரை பாராபட்சமாக பாதிக்கின்றன. இது வனவிலங்குகளின் ஆக்கிரமிப்பால் ஏற்படும் பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களுக்கு அவர்களை மேலும் பாதிக்கப்படக்கூடியதாக ஆக்குகிறது.

இலங்கை வனப்பகுதியை பராமரிப்பதில் சிறப்பாக செயற்பட்டிருப்பதுடன் அதன் நிலப்பரப்பில் கிட்டத்தட்ட 30% இன்னும் வனப்பகுதியாக உள்ளது (உலக வங்கி 2025) - காடழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு சூழற்தொகுதி மற்றும் மனித பாதுகாப்பை தொடர்ந்து அச்சுறுத்துகின்றன. 2002 மற்றும் 2023 க்கு இடையில், முல்லைத்தீவு 430 ஹெக்டேயர் ஈரப்பதனான முதன்மை காடுகளை இழந்ததுடன், இது அதன் மொத்த மரப்போர்வையின் 3.9% இழப்பாகும் (குளோபல் /பாரஸ்ட் வாட்ச் 2025). இந்த வாழ்விட இழப்பு, யானைகள் மற்றும் குரங்குகள் போன்ற வனவிலங்குகளை உணவு மற்றும் தண்ணீரைத் தேடி கிராமங்கள் மற்றும் விவசாய நிலங்களுக்குள் நுழையத் தூண்டுகிறது.

மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவில், நிலத்தின் மீதான மேலதிக அழுத்தங்களில், அதிக வளமான நிலங்களின் பரந்த பகுதிகளை இராணுவ கட்டுப்பாட்டில் வைத்திருப்பதும் உள்ளடங்கும். மட்டக்களப்பில், இரண்டு கிலோமீட்டருக்கும் அதிகமான பிரதான கடலோர நிலப்பரப்பானது, இராணுவத்தால் நடாத்தப்படும் முந்திரி தோட்டத்தின் அமைவிடமாக உள்ளது. பதிலளிப்பாளர்கள் குறிப்பிட்டபடி, இரண்டு உள்ளூர்வாசிகள் மட்டுமே இராணுவத்தால் குறைந்த திறன் கொண்ட வேலைகளில் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். மீதமுள்ள வேலைவாய்ப்பு மற்றும் வருமானம் இராணுவத்தின் மூடிய சுழற்சிப் பொருளாதாரத்திற்குள்ளேயே உள்ளது. முல்லைத்தீவில், அகற்றப்படாத கண்ணிவெடிகள் இன்னும் மனிதர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் அபாயங்களை ஏற்படுத்துகின்றன.

முல்லைத்தீவில் சிங்கள குடும்பங்களை அரசாங்கம் மீண்டும் குடியேற்றுவது (அத்தியாயம் 6.4 ஐக் காண்க) பல்வேறு சவால்களை உருவாக்குவதுடன், இதில் எல்லைகளின் தெளிவான குறிப்பிடுகை இல்லாதது கால்நடைகளின் மேய்ச்சலை சிக்கலாக்குகிறது. மந்தை மேய்க்கும் தமிழர்கள், தாங்கள் முன்பு தங்கள் விலங்குகளை ஏற்கனவே உள்ள தாவர போர்வைகளில் சுதந்திரமாக மேய்ச்சலுக்கு அனுமதிக்கலாம் என்று குறிப்பிட்டனர், ஆனால் இப்போது, விலங்குகள் சிங்கள நிலங்களில் மேய்ச்சலுக்கு சென்றால், அவை காயமடையும் அல்லது கொல்லப்படும். தமிழர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையிலான இனப்பதட்டம் நிலம் மற்றும் தொடர்புடைய வாழ்வாதார ஆக்கிரமிப்பால் தூண்டப்படுவதாக தமிழ் பதிலளிப்பாளர்கள் குறிப்பிட்டனர். மோதலால் கைவிடப்பட்ட நிலத்தை அரசாங்கம் “கைப்பற்றி” சிங்களவர்களுக்கு கொடுத்ததாக பதிலளிப்பாளர்கள் குறிப்பிட்டனர். தமிழ் இந்துக்கள் மற்றும் முஸ்லிம்கள் அல்லது கிறிஸ்தவர்களுக்கு இடையே நிலம் குறித்த மனக்குறைகள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

மண் வளங்குன்றல் இந்த சவால்களை மேலும் அதிகரிப்பதுடன், இலங்கையின் 44% க்கும் அதிகமான மண்ணரிப்பு, போசணை இழப்பு, மற்றும் மண் உவராதலால் பாதிக்கப்பட்டுள்ளது. இந்த பிரச்சினைகள் ஊவா மாகாணத்தில் குறிப்பாக மிகத்தீவிரமாக உள்ளதுடன், அங்கு செங்குத்தான நில அமைப்பு மற்றும் செறிவான விவசாயம் சேதத்தை துரிதமாக்குகின்றது (தர்மகீர்த்தி மற்றும் பலர் 2015). பதுளையில், பைன் தோட்டங்கள் மண்ணரிப்பை மோசமாக்கியுள்ளதுடன் நீர் தக்கவைப்பை குறைத்துள்ளன. இது சூழற்தொகுதிகளை மேலும் சீரழித்து, வனவிலங்குகளை மனித குடியிருப்புகளுக்குள் நுழையத் தூண்டுகிறது.

மனித பாதுகாப்பு தேவைகளை நிவர்த்தி செய்யும் அதே வேளையில் உயிர்ப்பல்வகைமையை நிலைநிறுத்த, இலங்கை அதன் வனவியல் மற்றும் பாதுகாப்பு இலக்குகளை வாழ்வாதாரங்கள், உணவு பாதுகாப்பு மற்றும் காலநிலை இசைவாக்கம் போன்ற முன்னுரிமைகளுடன் சமநிலைப்படுத்த வேண்டும். இந்த சமநிலையை அடைவது நாட்டின் வளமான சூழற்தொகுதி மற்றும் அதன் மக்களின் நல்வாழ்வு ஆகிய இரண்டையும் பாதுகாப்பதற்கு முக்கியமானது.

## அமைவிட நகர்வு மற்றும் வளங்களுக்கான போட்டி

காலநிலையால் தூண்டப்பட்ட அனர்த்தங்கள் பெரிய அளவிலான உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் வளர்ந்து வரும் சமாதானத்தின் காரணமாக, மனித குடித்தொகை, முன்பு வனவிலங்குகள் ஆதிக்கம் செலுத்திய பகுதிகளுக்குள் அதிகரித்தளவில் நகர்ந்து வருகிறது.

- காலநிலையால் தூண்டப்பட்ட அனர்த்தங்கள்: 2004 சுனாமி மற்றும் தொடர்ச்சியான வெள்ளம் போன்ற நிகழ்வுகள் ஆயிரக்கணக்கானோரை இடம்பெயரச் செய்து, வனவிலங்கு வாழ்விடங்களில் மீண்டும் குடியேற அவர்களை கட்டாயப்படுத்தியுள்ளன. முல்லைத்தீவில், வெள்ளத்தால் இடம்பெயர்ந்த சமுதாயங்கள் அடிக்கடி யானைகளையும் குரங்குகளையும் எதிர்கொள்கின்றன. அவை பயிர்களை அழித்து பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்துகின்றன.

- உட்கட்டமைப்பு செயற்திட்டங்கள்: அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் வீதி வலைப்பின்னல்கள் போன்ற அபிவிருத்திகள் மனிதர்களையும் வனவிலங்கு-களையும் இடம்பெயரச் செய்து, அவற்றை பகிரப்பட்ட இடங்களுக்குள் தள்ளியுள்ளன. அம்பாந்- தோட்டையில், அபிவிருத்திக்காக இடமாற்றம் செய்யப்பட்ட மீன்பிடி சமூகங்கள் இப்போது யானைகளின் இடம்பெயர்வு வழித்தடங்களில் வாழ்வதுடன், அவர்கள் அடிக்கடி பயிர் தாக்குதல்களையும் சொத்து சேதங்களையும் எதிர்கொள்கின்றனர்.

- முல்லைத்தீவில், 30 ஆண்டுகளுக்கும் மேலாக மோதலால் இடம்பெயர்ந்த முஸ்லிம் சமூகங்கள் மீள் வருகை, மீள்வரும் குடும்பங்களின் அளவு அதிகரிப்பதால் நிலம் மற்றும் இயற்கை வளங்கள் மீது புதிய அழுத்தங்களை ஏற்படுத்தியுள்ளது. 1990களில் வெளியேறிய குடும்பங்கள் மூன்று தலைமுறைகளாக மூன்று மடங்கு அதிகரித்துள்ளதுடன், இப்போது குறைந்த நிலம், தீர்ந்துபோன இயற்கை வளங்கள் மற்றும் போதுமான அரசாங்க சேவைகள் இல்லாமை போன்ற சவால்களை எதிர்கொள்கின்றனர்.

> ”நாங்கள் 30 ஆண்டுகளுக்கு முன்பு வெளியேறியபோது, நாங்கள் 1,000 குடும்பங்கள். இப்போது நாங்கள் 3,000 க்கும் அதிகமான குடும்பங்கள் உள்ளன, ஆனால் எங்களிடம் 1,000 குடும்பங்களுக்கான நில உரிமைகள் மட்டுமே உள்ளன. எங்கள் குழந்தைகளுக்கு போதுமான பாடசாலை இடங்கள் போன்ற சேவைகளும் இல்லை.”
>
> - முகமது, ஆண், பாடசாலை ஆசிரியர், 31, முல்லைத்தீவு

காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசடைவு மற்றும் மனித இடமாற்றம் ஆகியவற்றின் ஒன்றிணைவானது, சுருங்கி வரும் வளங்களுக்கான போட்டியை தீவிரப்படுத்தியுள்ளது. இடமாற்றம் செய்யப்பட்ட சமுதாயங்கள் வனவிலங்கு அபாயங்களை நிர்வகிப்பதற்கு போதுமான திறனற்றவர்களாக உள்ளனர். குறிப்பாக இது நிர்வாக அமைப்புகள் பலவீனமடைந்துள்ள அல்லது அரசாங்க தலையீடுகள் குறைவாக உள்ள இடங்களில் காணப்படுகிறது.

## விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதம்

### விலங்குகளால் ஏற்படும் பயிர் சேதம்

மனித-வனவிலங்கு மோதல்கள் உயிரின வகைகளின்படி மற்றும் பிராந்தியத்திற்கு ஏற்ப வேறுபடுகின்றன, இவை பயிர்களை சேதப்படுத்தி, வாழ்வாதாரங்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தி, உயிர்களை ஆபத்துக்கு உள்ளாக்குகின்றன.

**யானைகள்:** ஆசிய யானை, ஒரு அபாயத்தை எதிர்நோக்கியுள்ள இனம் என்பதுடன், எல்லை நாடுகளிடையே மிக உயர்ந்த குடித்தொகை அடர்த்தியைக் கொண்டுள்ளது. நகரமயமாதல், உட்கட்டமைப்பு விரிவாக்கம் மற்றும் விவசாய நிலங்களை அழித்தல் ஆகியவற்றால் ஏற்படும் வாழ்விட இழப்பானது, யானைகளை மனிதர்களுடன் அடிக்கடி மற்றும் பெரும்பாலும் ஆபத்தான மோதல்களை கொண்டு வந்துள்ளது. 70% க்கும் அதிகமான யானைகளின் வாழ்விடங்கள் மனித குடியிருப்புகளுடன் மேற்பொருந்துகின்றன (குணவன்ஷா மற்றும் பலர் 2023 நிஜாம் 2025). காலநிலை மாற்றமானது, நீர் மற்றும் உணவு கிடைப்பதை மாற்றுவதன் மூலமாக இந்த மோதல்களை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. விபத்துக்கள் அல்லது பாம்புக்கடிகளை விட குறைவான மனித இறப்புகளுக்கு யானைகள் காரணமாக இருந்தாலும், ஊடக பரபரப்புத்தன்மையால் தூண்டப்படும் யானை தொடர்பான சம்பவங்கள், பாராபட்சமாக எதிர்மறையான எதிர்வினைகளைத் தூண்டுகின்றன (பிரகாஷ் மற்றும் பலர் 2020).

**மயில்கள்:** இந்திய மயில், ஒரு காலத்தில் அம்பாந்தோட்டை போன்ற உலர்வலயங்களுக்குள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும், வாழ்விட மாற்றங்கள் மற்றும் குறைந்த வேட்டையாடும் விலங்குகளின் பற்றாக்குறை காரணமாக கண்டி மற்றும் கொழும்பு போன்ற ஈரவலய பகுதிகளுக்கு பரவியுள்ளது. கலாச்சார பாதுகாப்புகள் மற்றும் பருவகால காலநிலை மாற்றங்களால் தாக்கம் செலுத்தப்படும் அவற்றின் குடித்தொகை வளர்ச்சியானது அவை உணவைத் தேடி கிராமங்களுக்கு இடம்பெயர்கின்றன, பெரும்போக காலத்தில் அதிகரித்த பயிர் சேதத்திற்கு வழிவகுத்துள்ளது. (தனசேகர 2020).

**குரங்குகள்:** இலங்கையின் சுதேசிய இனத்துக்குரியதும் அருகிவரும் உயிரினமுமான தொக் மக்காக் (toque macaque) ஒரு பிரதான விவசாய பீடையாக மாற்றமடைந்துள்ளது. 2022 ஆம் ஆண்டின் முதல் பாதியில், toque macaque-களும் ராட்சத அணில்களும் 92 மில்லியன் தேங்காய்களை அழித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது தென்னை பயிர்செய்கைக்கு அச்சுறுத்தலாக உள்ளது (விவசாய அமைச்சு 2025). இந்த இனங்களுக்கான காப்பு முயற்சிகளையும் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க வேண்டிய தேவையையும் சமநிலைப்படுத்துவது ஒரு முக்கிய சவாலாகவே உள்ளது.

**காட்டுப்பன்றிகள்:** காடழிப்பு மற்றும் நகரமயமாக்கல் காரணமாக இடம்பெயர்ந்த காட்டுப்பன்றிகள், விவசாய நிலங்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களுக்குள் அடிக்கடி அத்துமீறி நுழைந்து, பயிர்களுக்கு அதிக சேதத்தை ஏற்படுத்துகின்றன. தற்போது வீட்டுத் தோட்டங்களில் அதிகம் காணப்படுவதாகப் அறிக்கையிடப்பட்ட விலங்குகளில் காட்டுப்பன்றிகளும் ஒன்றாகும். மேலும், வனப்பகுதிகளுக்கு அருகிலுள்ள தோட்டப் பகுதிகளில் நெல் உற்பத்திக்கு இவை ஒரு குறிப்பிடத்தக்க தடையாக உள்ளன (தல்கஸ்பிட்டிய மற்றும் விஜேரத்னே 2023, குமார மற்றும் பலர். 2023, ஹோர்கன் மற்றும் குடாவிடனகே 2020).

**இராட்சத அணில்கள்:** இலங்கையின் தேசிய விலங்காகக் கருதப்படும், ஆபத்தை எதிர்நோக்கிய நிலையை அண்மித்த இனமான சாம்பல் நிற அணில் (grizzled giant squirrel), முரண்பாடுகளின் வளர்ந்து வரும் ஆதாரமாக மாறியுள்ளது. இந்த அணில்கள் பயிர்களை, குறிப்பாகத் தேங்காய்களை சேதப்படுத்துவதால், விவசாயிகள் அதன் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தக் கோருகின்றனர். இருப்பினும், இந்தக் கோரிக்கைகளை காப்பு முயற்சிகள் மற்றும் இந்த இனத்தின் அடையாள முக்கியத்துவம் ஆகியவை சிக்கலாக்குகின்றன (ரொட்றிக்கோ 2023).

இலங்கையில் மனித-வனவிலங்கு மோதல்கள், பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் வாழ்வாதாரங்கள் ஆகியவற்றுக்கு இடையேயான சிக்கலான இடைத்தொடர்பை எடுத்துக்காட்டுகின்றன. அத்துடன் இவை சில நேரங்களில் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும் வனவிலங்கு பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் சமூகக் கொள்கைகளைச் சமநிலைப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்துகின்றன. முழுமையாக வர்த்தக சமநிலையை உணர்ந்து, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய சமநிலையைக் கண்டறியும் இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் இல்லாமல் இந்த பதட்டங்கள் அதிகரிக்க வாய்ப்புள்ளதுடன், கிராமிய சமுதாயங்களையும், சுற்றுச்சூழல் அமைப்புகளையும் மேலும் பாதிப்படையச் செய்யும்.

## ஆளுகையில் உள்ள இடைவெளிகள் சமூக நெருக்கடிகளை அதிகரிக்கின்றன

வரலாற்று ரீதியாக, இலங்கை சமூகங்கள் வனவிலங்கு ஆபத்துகளை கூட்டாக முகாமை செய்யவும், பயிர்களைப் பாதுகாக்கவும் அத்தம்[1] (பரஸ்பர உழைப்புப் பரிமாற்றம்) போன்ற முறைசாரா முறைமைகளை நம்பியிருந்தன. மீண்டெழு-திறனையும், ஒத்துழைப்பையும் ஊக்குவித்த இந்த நடைமுறைகள் பெரும்பாலும் மறைந்துவிட்டதுடன், இன்று கூட்டுப்பணிகளுக்கான சில உதாரணங்களையே விட்டுச்சென்றுள்ளன.

ஒரு குறிப்பிடத்தக்க விதிவிலக்கு சில விவசாய சமுதாயங்களில் ஒருங்கிணைந்த காவல் கோபுரங்களின் வலையமைப்புகளின் பயன்பாடு என்பதுடன், அங்கு விவசாயிகள் இரவில் யானைகளுக்காக காவல் காக்கின்றனர். தகவல் தொடர்புக்கான கைத்தொலைபேசிகள் மற்றும் யானைகளை விரட்டுவதற்கான ஒலியெழுப்பும் கருவிகளுடனாக இந்த அமைப்பானது வளம் மற்றும் ஒத்துழைப்பைக் காட்டுவதுடன், இது மனித-வனவிலங்கு மோதலைத் தீர்ப்பதற்கான சமுதாயத்தின் இசைவாக்க திறனை பிரதிபலிக்கிறது. இந்த அமைப்பில் இரவில் காவல் காப்பவர்களுக்கு உணவு சமைப்பது மற்றும் ஆண் குடும்ப உறுப்பினர்கள் இல்லாத நிலையில் வீட்டுப் பொறுப்புகளை நிர்வகிப்பது என பெண்களும் முக்கிய பங்கு வகிக்கின்றதுடன், இது இசைவாக்க உத்திகளில் பால்நிலை சார் தொழில் பிரிப்பினை காட்டுகிறது.

இருப்பினும், இந்த நடைமுறையில் சவால்கள் இல்லாமல் இல்லை. யானைகளிடமிருந்து பாதுகாக்க ஆண்கள் இரவு முழுவதும் விழித்திருக்க வேண்டியதுடன், பின்னர் தங்களது நாளாந்த வேலைகளைத் தொடர வேண்டும், இது சோர்வு மற்றும் அவர்களின் வாழ்வாதாரங்களில் மேலும் சிரமத்திற்கு வழிவகுக்கிறது. இந்த சோர்வு உற்பத்தித்திறனைக் குறைப்பது மட்டுமல்லாமல், பயிர் பல்வகைப்படுத்தல் அல்லது மண் பாதுகாப்பு போன்ற நீண்ட கால மீண்டெழுதிறனை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அவர்களின் திறனையும் கட்டுப்படுத்துகிறது. ஒரு குடும்பத்தில் காணப்பட்டபடி, ஆண்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயரத் திட்டமிடுவதால், இந்த இசைவாக்க இயலளவு மேலும் பலவீனமடையக்கூடும் என்பதுடன் இதனால் பெண்கள் இன்னும் பாரிய சுமைகளைச் சுமக்க நேரிடும் அல்லது இந்த நடைமுறையை முழுவதுமாக கைவிட சமுதாயங்கள் கட்டாயப்படுத்தப்படும்.

சமூக ஒத்துழைப்பு இழப்பானது, மட்டுப்படுத்தப்பட்ட அரச ஆதரவுடன் இணைந்து, வனவிலங்கு அச்சுறுத்தல்களுக்கான சமுதாயங்களின் நலிவடையக்கூடிய தன்மையை அதிகரித்துள்ளது. உதாரணமாக, லுனுகம்வெஹெரவில் (அம்பாந்தோட்டை மாவட்டம்) விவசாயிகள், அதிகரித்து வரும் யானை நெருக்கடிக்கான வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தின் மெதுவான மற்றும் வினைத்திறனற்ற பதில்களால் விரக்தியை வெளிப்படுத்துகின்றனர். மேலதிகமாக, வடக்கு மற்றும் கிழக்கில் பலர், உள்ளூர் அரச வனபாதுகாப்பு, வனவிலங்கு மற்றும் பாதுகாப்பு அலுவலர்கள் தமிழர்களை விட சிங்கள சமுதாயங்களுக்கு சார்பான ஆதரவை வழங்குவதாக உணர்கின்றனர். உதாரணமாக, தமிழ் விவசாயிகள் யானை வேலிகளுக்கான அனுமதிகள் மறுக்கப்படுவதாக அறிக்கையிடுவதுடன், அவை சிங்கள விவசாயிகளுக்கு இலகுவாக வழங்கப்படுகின்றன என்று அவர்கள் நம்புகின்றனர்.

1 அத்தம் என்பது இலங்கையின் பாரம்பரியமான உழைப்பைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையாகும், இது கிராமப்புறங்களில் குறிப்பாகப் பரவலாகக் காணப்படுகிறது. இது பரஸ்பர உதவி மற்றும் சமூக ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த நடைமுறையில் தனிநபர்கள் அல்லது குடும்பங்கள் விவசாய வேலைகள் அல்லது பிற உழைப்பு சார்ந்த பணிகளில் பணப் பரிமாற்றம் இல்லாமல் இணைந்து செயற்படுவார்கள். மாறாக, ஒரு குடும்பம் மற்றொரு குடும்பத்திற்குத் தேவையான நேரத்தில் உதவி கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் உழைப்பை வழங்கும்.

பாராபட்சம் பற்றிய இந்த எண்ணங்கள் ஏற்கனவே உள்ள இனப் பதட்டங்களை அதிகரிப்பது மட்டுமல்லாமல், மோதலில் இருந்து மீண்டு வரும் பகுதிகள் உள்ளடங்கலாக ஒதுக்கப்பட்ட பிராந்தியங்களில் உள்ள மனக்குறைகளை மீண்டும் தூண்டிவிடும் அபாயத்தையும் ஏற்படுத்துகின்றன. வள ஒதுக்கீட்டில் இத்தகைய ஏற்றத்தாழ்வுகள் ஆளுகையின் மீதான நம்பிக்கையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதுடன் தேசிய ஒருங்கிணைப்புக்கான முயற்சிகளைத் தடுக்கின்றன.

வடகிழக்கு சமுதாயங்கள் மத்தளையில் புதிய சர்வதேச விமான நிலையம் அமைத்தமை போன்ற தெற்கில் அதிகரித்த அபிவிருத்தி காரணமாகவே தாங்கள் அதிக யானை ஊடுருவல்களை எதிர்கொள்வதாக நம்புகின்றன. இந்த அபிவிருத்திகள் யானைகளை இடம்பெயரச் செய்து, ஏற்கனவே வளங்கள் குறைவாகவும், வனவிலங்கு அபாயங்களை நிர்வகிக்கப் போதிய உட்கட்டமைப்பு இல்லாமலும் இருக்கும் பகுதிகளுக்குள் தள்ளுகின்றன.

வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களத்தின் முதன்மை நோக்கம் மனித வாழ்வாதாரங்களுக்கான அபாயங்களைக் குறைப்பதை விட வனவிலங்குகளைப் பாதுகாப்பது என்பதால், வனவிலங்குகளை நிர்வகிப்பதற்கு முறையான திட்டம் எதுவும் இல்லை என்பதை அரசாங்கம் ஏற்றுக்கொள்கின்றது. இந்த ஆளுகை இடைவெளியானது மனித உயிர்களுக்கும் வனவிலங்குகளுக்கும் ஆபத்தை விளைவிக்கிறது. கடந்த 13 ஆண்டுகளில், ரயில்வே மற்றும் வனவிலங்கு திணைக்களங்களுக்கு இடையிலான மோசமான ஒருங்கிணைப்பின் நேரடி விளைவாக, ரயில் மோதல்களில் 149 காட்டு யானைகள் கொல்லப்பட்டுள்ளன (ஜெயவர்தன 2025).

குப்பைக் கிடங்குகளில் உணவு தேடி, பிளாஸ்டிக் மற்றும் பிற கழிவுகளை உட்கொள்ளும் யானைகள் பெரும்பாலும் கொடிய உடல்நலக் கோளாறுகளால் இறப்பதுடன், அவற்றின் பிரேதப் பரிசோதனைகள் பெரும்பாலும் குப்பைகளால் நிரப்பப்பட்ட வயிற்றைக் காட்டுகின்றன்றன. (விஜேசிங் 2018).

இந்த பிரச்சினை குறித்து அறிந்திருந்த போதிலும், வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம் குப்பை கிடங்குகள் அல்லது சரணாலய எல்லைகளைச் சுற்றி மின்வேலிகள் போன்ற நடவடிக்கைகளைச் செயற்படுத்தத் தவறிவிட்டதுடன், இதனால் சுற்றுச்சூழல் தொகுதிகளையும் வனவிலங்குகளையும் ஆபத்தில் ஆழ்த்தியுள்ளது.

இந்த பொறுப்புக்கூறல் இல்லாதது சட்டவிரோத கொலைகளையும், ‘தாடை உடைப்பான்’ போன்ற வெடிக்கும் கண்ணிவெடிகளின் பயன்பாட்டையும் நிலைநிறுத்துகிறது. பலவீனமடைந்த சமுதாய ஒற்றுமை மற்றும் குறைந்த வளங்களால் ஏற்கனவே சிரமப்படும் கிராமிய சமுதாயங்கள், பெரும்பாலும் உயிர்ப்பல்வகைமையின் இழப்பில் இப்பிரச்சினைகளின் பெரும் சுமையைச் சுமக்க நேரிடுகின்றது. ஆளுகை இடைவெளிகளைக் களைவதற்கும், சமமான ஆதரவை உறுதிப்படுத்துவதற்குமாக இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் இல்லாமல், மனித வாழ்வாதாரங்கள் மற்றும் வனவிலங்கு பாதுகாப்பு இரண்டுமே ஆபத்தில் உள்ளன.



## 3.4 காலநிலை மாற்றம் மற்றும் மோசமான கல்வி சேவைகள் இலங்கையில் இளைஞர்களை எதிர்மறையாகப் பாதிக்கின்றன.

**வழிமுறைச் சுருக்கம்:** காலநிலை மாற்றம், மோசமான கல்விச் சேவைகள் மற்றும் சமூகப் பொருளாதார அழுத்தங்கள் ஆகியவற்றின் கலவையானது இலங்கையில் உள்ள இளைஞர்களுக்கு ஒரு குறிப்பிடத்தக்க சவாலை முன்வைக்கிறது. பருவநிலை சார்ந்த விவசாய வேலைகள், கல்வியில் நம்பிக்கையின்மை மற்றும் தனியார் கல்விக்கான நிதிச் சுமை ஆகியவை ஏற்கனவே குறைவாக உள்ள தரமான கல்விக்கான வாய்ப்புகளை மேலும் குறைப்பதுடன், குறிப்பாக கிராமப்புற மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இது அதிகமாக உள்ளது. பெண்கள் பராமரிப்புப் பொறுப்புகள் மற்றும் இளம் வயதில் திருமணம் போன்ற மேலதிக தடைகளை எதிர்கொள்கின்ற அதே சமயம் சிறுவர்கள் பாடசாலைக் கற்கையை நிறுத்திவிட்டு வேலைக்குச் செல்வதற்கோ அல்லது வேலைக்காக புலம் பெயர்வதற்கோ அதிக வாய்ப்புள்ளது. இந்த சவால்களை எதிர்கொள்ள, இலங்கையின் மாகாணங்கள் முழுவதும் உள்ள இளைஞர்களின் தனிப்பட்ட தேவைகளைக் கருத்தில் கொள்ளுகின்ற கல்வியானது காலநிலை மற்றும் சமூகப் பொருளாதார அழுத்தங்களின் பலியாக இல்லாமல், மீண்டெழு தன்மைக்கான வழிமுறையாக மாறுவதை உறுதி செய்கின்ற இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் அவசியமாகும்.

### காலநிலை மாற்றம் மற்றும் கல்வித் தடைகள்

இலங்கையில் இளைஞர்கள் பல சவால்களை எதிர்கொள்வதுடன், இதில் காலநிலை மாற்றம் மற்றும் போதிய கல்விச் சேவைகள் ஆகியன அவர்களின் மீண்டெழுதிறன் மற்றும் எதிர்கால வாய்ப்புகளைப் பாதிக்கின்றன. ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி, வெள்ளம் மற்றும் வறட்சி போன்ற காலநிலை சார்ந்த தடைகள் தரமான கல்விக்கான வாய்ப்புகள் ஏற்கனவே குறைவாக உள்ள கிராமிய மற்றும் பின்தங்கிய சமுதாயங்களை பாராபட்சமாக பாதிக்கின்றன. இந்த சவால்கள் சமூக பொருளாதார அழுத்தங்கள், பால்நிலை சமத்துவமின்மை மற்றும் கல்வியின் மதிப்பு பற்றிய இளைஞர்களிடையே வளர்ந்து வரும் நம்பிக்கையின்மை ஆகியவற்றால் மேலும் சிக்கலாகின்றன.

### பாடசாலை வருகை மற்றும் பருவகால தொழில் மீதான தாக்கம்

காலநிலை மாற்றங்களால் அவசியமாகின்ற பருவகால விவசாய வேலைகள், முக்கியமான காலங்களில் பல பிள்ளைகளை பாடசாலைக்குச் செல்ல முடியாமல் தடுக்கின்றன. அம்பாந்தோட்டை மற்றும் பதுளை மாவட்டங்களில் நாற்று நடுகை மற்றும் அறுவடை காலங்களில் விவசாயம் அல்லது தினக்கூலி வேலைகளுக்கு உதவுவதற்காக சிறுவர்கள் பாடசாலைக்கு செல்லாது விடுகின்ற அதே நேரத்தில் பெண்பிள்ளைகளுக்கு மேலதிக வீட்டு வேலைகள் அல்லது விவசாய வேலைகள் கொடுக்கப்படுகின்றன. இந்த வரவின்மைகள் மாணவர்களை கல்வியில் பின்தங்கச் செய்வதுடன், இதனால் அவர்கள் அதனை ஈடுசெய்வது கடினமாவதுடன் பாடசாலையிலிருந்து இடைவிலகும் வாய்ப்பு அதிகரிக்கிறது. மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவில், பருவகால வேலைகளுக்காக வாரக்கணக்கில் பாடசாலைக்கு வராத மாணவர்கள் படிப்பில் ஆர்வத்தை இழக்கிறார்கள் என்று ஆசிரியர்கள் தெரிவிப்பதுடன், இது கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களிடையே உள்ள கல்வி இடைவெளியை மேலும் அதிகரிக்கிறது.

### பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் கலைத்திட்டத்திற்கான இடையூறுகள்

வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற தீவிர காலநிலை நிகழ்வுகள், குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் பதுளை மாவட்டங்களில், பாடசாலை உட்கட்டமைப்பை சேதப்படுத்துவதுடன் போக்குவரத்துக்கு இடையூறுகளை விளைவிக்கின்றன. இந்த நிகழ்வுகளால் ஏற்படும் நீண்டகால மூடுகை கல்வி அட்டவணையைத் தடைசெய்வதுடன் இதனால் பாடசாலைகள் ஒரு சீரான பாடத்திட்டத்தை வழங்குவது கடினமாகிறது. வறட்சியால் பாதிக்கப்படும் அம்பாந்தோட்டையில், நீர் பற்றாக்குறை காரணமாக மாணவர்கள் தண்ணீர் எடுக்க பல மணிநேரம் செலவிடுவதால், அவர்கள் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் சோர்வடைகிறார்கள். நெருக்கடியின் போது பராமரிப்புப் பொறுப்புகள் பெரும்பாலும் பெண்களிடம் இருப்பதால், அவர்கள் பாடசாலைக்குத் தொடர்ந்து செல்வதற்கான வாய்ப்புகள் மேலும் குறைவடைவதுடன், அவர்கள் பாராபட்சமாக பாதிக்கப்படுகின்றனர்.

## கல்விக்கான சமூக பொருளாதாரத் தடைகள்

### தனியார் கல்விக்கான செலவீனம்

அரச கல்வியின் மோசமான நிலை, தனியார் கல்வியைச் சார்ந்திருப்பதை அதிகரித்துள்ளதுடன், இது குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு ஒரு பெரிய நிதிச் சுமையாக அமைகிறது. முல்லைத்தீவு மற்றும் பதுளை மாவட்டங்களில், அரச பாடசாலைகளிகளில் போதுமான ஆசிரியர்கள் மற்றும் கற்றல் உபகரணங்கள் இல்லாமையால், பெற்றோர்கள் தங்களது பிள்ளைகளின் கல்வி வெற்றிக்கு தனியார் கல்வியில் முதலீடு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின்றனர். காலநிலை மாற்றத்தால் ஏற்படும் வருமான இழப்புகளால் ஏற்கனவே சிரமப்படும் பல குடும்பங்களுக்கு இந்தச் செலவீனமானது நிலையானதாக இல்லை. கல்விக்கான அதிக செலவீனம் மற்றும் அதற்கு குறைந்த பலனே கிடைக்கும் என்ற எண்ணம் காரணமாக சிறுவர்கள் பாடசாலையில் இருந்து முழுமையாக விலகிச் செல்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

இலங்கையில் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையானது, ஏழை அல்லது கிராமப்புற சமுதாயங்களைச் சேர்ந்த பிள்ளைகள் தரமான கல்வியைப் பெறுவதற்கான சில வழிமுறைகளில் ஒன்றாக உள்ளது. போட்டி நிறைந்த இந்த பரீட்சைக்குத் தயாராகும் போது குடும்பங்களுக்கும் பிள்ளைகளுக்கும் அதிகளவான உள அழுத்தம் ஏற்படுவதால் இந்த வாய்ப்பானது கணிசமானளவு கடினத்துடனேயே கிடைக்கின்றது. இதில் வெற்றி பெறுபவர்களுக்கு கூட நிதிச் சுமை மற்றும் குடும்பத்தினரிடமிருந்து பிரிந்திருக்கும் உணர்ச்சிபூர்வமான அழுத்தம் மிக அதிகமாக இருக்கும்.

உதாரணமாக, ஆராய்ச்சியாளர்கள் அம்பாந்தோட்டையில் தூரமும் செலவீனமும் அதிகமாக இருந்ததால் தங்களது பிள்ளையை வெகு தொலைவில் உள்ள ஒரு சிறந்த பாடசாலைக்கு அனுப்ப விரும்பாத ஒரு குடும்பத்தைச் சந்தித்தனர். அதற்குப் பதிலாக, அவர்கள் தங்கள் பிள்ளையை குறைந்த தரமான உள்ளூர் பாடசாலையில் சேர்த்ததுடன், இது பின்தங்கிய பகுதிகளில் உள்ள பொருளாதார யதார்த்தங்களுக்கு ஏற்றவாறு தங்கள் கனவுகளை சமநிலைப்படுத்துவதில் உள்ள பரந்த சவால்களைப் பிரதிபலிக்கிறது.

### கல்வியின் மீதான நம்பிக்கையின்மை

கல்வியின் மதிப்பு குறித்த ஒரு விரக்தி இளையவர்களிடையே, குறிப்பாக ஆண்பிள்ளைகளிடையே அதிகரித்து வருகிறது. அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவில், பல இளையவர்கள் கல்வி கற்றாலும், அவர்களுக்கு வாழ்வாதார வாய்ப்புகள் குறைவாகவே இருப்பதால், தொடர்ந்து கற்பது பயனற்றது என்று நம்புகிறார்கள். இந்த உணர்வானது தொழிற் பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள் இல்லாததால், மேலும் அதிகரிப்பதுடன், இது பல இளைஞர்களை முறைசார் கல்வியிலிருந்து விலக்கி, அர்த்தமுள்ள வேலைவாய்ப்பு மற்றும் சமூக ஒருங்கிணைப்புக்கு ஒரு பாலமாகச் செயற்படக்கூடிய தொழிற்படைக்கு செல்லத் தயாரற்ற நிலையில் வைக்கிறது. பாடசாலையில் கற்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும் பெண்கள், தங்கள் கல்வி ஆர்வங்கள் குறிப்பாக இளம் வயதில் திருமணம் அல்லது பராமரிப்புப் பொறுப்புகளால் பாதிக்கப்படும் பகுதிகளில், இதேபோன்ற விரக்தியை எதிர்கொள்கின்றனர்.

## சமூக மற்றும் நடத்தை சவால்கள்

### கவனச்சிதறல்கள் மற்றும் ஆபத்தான நடத்தைகள்

குறிப்பாக மட்டக்களப்பு மற்றும் பதுளை போன்ற நகர்ப்புற மற்றும் பகுதியளவு நகர்ப்புற பகுதிகளில தொலைபேசிகள் மற்றும் சமூக ஊடகங்களின் அதிகரிப்பானது இளைஞர்களை அவர்களின் கல்வியிலிருந்து திசைதிருப்புவதை அதிகரித்து வருகிறது. மாணவர்கள் சமூக ஊடகங்களால் தங்கள் கல்விப் பொறுப்புகளிலிருந்து திசைதிருப்பப்படுவதாகவும், இது கல்வித் திறனில் சரிவு மற்றும் பாடசாலை இடைவிலகலுக்கு வழிவகுப்பதாகவும், மேலும் இளம் வயது திருமணம் மற்றும் பதின்ம வயது கர்ப்பம் போன்ற பிற நடத்தைகளுக்கும் இட்டுச்செல்வதாகவும் ஆசிரியர்கள் தெரிவிக்கின்றனர். மேலதிகமாக, சமூக மற்றும் பொருளாதார அழுத்தங்கள் இளைஞர்களிடையே ஆபத்தான நடத்தைகள் அதிகரிக்க பங்களித்துள்ளதுடன். அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவில், சமூகங்கள் மத்தியில் குறிப்பாக பாடசாலையிலிருந்து விலகியவர்கள் மத்தியில் மதுபானம், குற்றங்கள், இளம் வயது கர்ப்பம், மற்றும் தற்கொலைகள் அதிகரித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. சிறுவர்கள் போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபட அதிக வாய்ப்புள்ள அதே நேரத்தில் பெண்பிள்ளைகள் இளம் வயது கர்ப்பம் மற்றும் சுரண்டல் போன்றவற்றின் அதிகரித்த அபாயங்களை எதிர்கொள்கின்றனர். இந்த நடத்தைகள் தனிநபரின் நல்வாழ்வை மட்டுமல்ல, சமூக ஒற்றுமை மற்றும் சமூகத்தின் மீண்டெழுதிறனையும் பலவீனப்படுத்துகின்றன.

## இளையவர்கள் மீதான வேறுபட்ட தாக்கங்கள்

### பெண்பிள்ளைகள்: பராமரிப்புச் சுமைகள் மற்றும் இள வயது திருமணம்

இலங்கையில் குறிப்பாக கிராமப்புற மற்றும் மோதல் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பெண்பிள்ளைகள், கல்வியை அணுகுவதில் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பில், பராமரிப்பு பொறுப்புகளின் சுமையானது குறிப்பாக காலநிலை நெருக்கடிகளின் போது குடும்பங்கள் அதிக பொருளாதார அழுத்தத்தை எதிர்கொள்ளும் போது பெரும்பாலும் பெண்பிள்ளைகள் மீது சமமற்ற முறையில் விழுகின்றது. பருவகால தொழிலாளர் தேவைகள் பாடசாலைக்கு தொடர்ந்து செல்வதற்கான அவர்களின் திறனைக் கட்டுப்படுத்துவதுடன், இதனால் பல பெண்பிள்ளைகள் கல்வியில் பின்தங்குகின்றனர்.

ஏழை, கிராமப்புற முஸ்லிம் மற்றும் தமிழ் குடும்பங்களில்உள்ள பெண்பிள்ளைகள் நிதி ரீதியாக நிலையாகவுள்ள நகர்ப்புற முஸ்லிம் குடும்பங்களை விட வளைகுடா நாடுகளில் வேலைக்கு அனுப்பப்படுவதற்கு அதிக வாய்ப்புள்ளது என்று பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர். வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள பதிலளித்தவர்கள், மனித கடத்தல், பாலியல் துஷ்பிரயோகம், கட்டாய திருமணம் மற்றும் அடிமைத்தனம் ஆகியவற்றின் அபாயங்களை வாய்வழி தகவல்கள் மூலம் அறிந்திருந்தாலும், வேறு வழி இல்லாததால் மக்கள் எவ்வாறாயினும் செல்கின்றார்கள் என்று விளக்கினர்.

திருமணத்தை நிதிச் சுமைகளைக் குறைக்கும் ஒரு வழியாக பார்க்கின்ற குறிப்பாக பொருளாதார நெருக்கடியுடன் போராடும் தமிழ் மற்றும் முஸ்லிம் குடும்பங்களில் பெரும்பாலும் 14 வயதிலேயே நடக்கும் இளவயது திருமணம், இந்த பகுதிகளில் உள்ள பெண்பிள்ளைகளுக்கு ஒரு முக்கிய தடையாக உள்ளது. பதுளையில், பெருந்தோட்ட சமுதாயங்களைச் சேர்ந்த பெண்பிள்ளைகள் இளம் வயது திருமணத்திற்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதுடன் இது அவர்களின் கல்விப் பயணத்தை திறம்பட முடிவுக்குக் கொண்டுவருகிறது. ஏழை கிராமப்புற மற்றும் முஸ்லிம் குடும்பங்கள் இரண்டிலும் இளம் வயது திருமணம் அதிகரித்திருப்பதாக பதிலளித்தவர்கள் குறிப்பிட்டனர்.

> "எமது இளைஞர்களுக்கான முக்கிய சவால் என்னவென்றால், அவர்களுக்கு வழி காட்ட யாரும் இல்லை. பெற்றோர்களால் இனி வழிகாட்ட முடிவதில்லை. எனவே அவர்கள் கல்வியை விட்டுவிடுகிறார்கள், பெண்பிள்ளைகள் இளம் வயதிலேயே திருமணம் செய்துகொள்கிறார்கள், சிறுவர்கள் நகரத்திற்குச் சென்று போதைப்-பொருட்களுடன் சிக்கிக்கொள்கிறார்கள்."
>
> - யாளினி, பெண், 28, கதிரவெளி, மட்டக்களப்பு.

## ஆண்பிள்ளைகள்: தொழில்சார் அழுத்தம் மற்றும் ஈடுபாடின்மை

ஆண்பிள்ளைகளைப் பொறுத்தவரை, குடும்பத்தின் வருமானம் ஈட்டுபவர்கள் மற்றும் வழங்குபவர்கள் என்ற பால்நிலை எதிர்பார்ப்புகளே முதன்மையான சவாலாக உள்ளன. அம்பாந்தோட்டையில், விவசாயம் மற்றும் மீன்பிடித்தலில் காலநிலை தாக்கங்கள் கடுமையாக இருப்பதால், சிறுவர்கள் பெரும்பாலும் நாட்கூலி வேலைக்காக அல்லது நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர்வதற்காக பாடசாலை கல்வியிலிருந்து இடைநிறுத்தப்படுகின்றனர். இது அவர்களின் கல்வியை சீர்குலைப்பதுடன், அதன் மதிப்பு பற்றிய ஒரு ஏமாற்ற உணர்வையும் உருவாக்குகிறது. பதுளையில், பெருந்தோட்ட சமுதாயங்களைச் சேர்ந்த சிறுவர்கள் முறைசார் கல்வி குறைந்த பொருளாதார ஆதாயங்களை அளிக்கும் என்ற கருத்து நிலவுவதால் அதிலிருந்து விலக அதிக வாய்ப்புள்ளது. இந்த போக்கு குறிப்பாக வயதில் மூத்த சிறுவர்களிடையே தெளிவாகத் தெரிவதுடன் அவர்கள் பெரும்பாலும் தேயிலைத் தோட்டங்களில் அல்லது பிற அதிக உடல் உழைப்பு தேவைப்படும் துறைகளில் முழுநேர வேலைக்காகப் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றனர்.

மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவில் உள்ள சிறுவர்கள் மோசமான உள்ளூர் வேலைவாய்ப்புகளை எதிர்கொள்வதுடன், பல 14-15 வயதுடையவர்கள் நாட்கூலி தொழிலாளர்களாக வேலை செய்வதற்காக பாடசாலையை விட்டு விலகுகின்றனர். வேலை மூலம், அவர்கள் "கசிப்பு" என்ற சட்டவிரோத உள்ளூர் மதுபானத்திற்கு அறிமுகமாவதுடன், பெரும்பாலும் அதற்கு அடிமையாகி பின்னர் தங்கள் பழக்கத்திற்கு நிதி பெறுவதற்காக கசிப்பு உற்பத்தி அல்லது போதைப்பொருள் விற்பனை போன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடுகின்றனர்.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள போதைப்பொருள் மற்றும் மதுபான நெருக்கடியை ஒரு தொற்றுநோய் என்று பல பதிலளித்தவர்கள் விவரித்ததுடன், இது ஆண்பிள்ளைகள் மற்றும் இளைஞர்களை நேரடியாகப் பாதிப்பதோடு, அதிகரித்த வன்முறை, விவாகரத்து மற்றும் பாலியல் வன்முறை மூலம் பெண்களையும் பெண்பிள்ளைகளையும் மறைமுகமாக பாதிக்கிறது. போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கு பொலிசாரின் நடவடிக்கை அல்லது நீதித்துறை வழக்குகள் முற்றிலும் இல்லாததை பலரும் சுட்டிக்காட்டினர். இந்த பதிலளிப்பின்மை, அப்பகுதியில் உள்ள தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் மத்தியில் அடுத்த தலைமுறையின் கல்வி, முன்னேற்றம் மற்றும் எதிர்கால வாய்ப்புகளை சீர்குலைப்பதற்காக தமிழ் பகுதிகளில் போதைப்பொருட்கள் வேண்டுமென்றே அறிமுகப்படுத்தப்படுகின்றன என்ற ஒரு பொதுவான நம்பிக்கையை ஆதரிக்கும் ஆதாரமாக பரவலாகக் காணப்பட்டது. இந்த கண்ணோட்டம் அரசாங்கத்தால் நியாயமற்ற முறையில் நடாத்தப்படுகிறோம் என்ற உணர்வை வலுப்படுத்துவதுடன், சமூக ஒற்றுமை மற்றும் பொது நிறுவனங்கள் மீதான நம்பிக்கையையும் சிதைக்கிறது.

> "எமது மக்களை கீழே வைத்திருக்க அவர்கள் அமைத்த இந்த வலையிலிருந்து மிகச்சிறிய எண்ணிக்கையிலான இளைஞர்களாலேயே தப்பி-த்துக்கொள்ள முடியும்."
>
> -கேதீஸ், ஆண், 24, முல்லைத்தீவு.

## கல்வி வெளியீடுகளில் பிராந்திய வேறுபாடுகள்

### வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் (முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு)

முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பில், மோதலின் தாக்கங்கள் இன்றும் கல்வியின் வெளியீடுகளை வடிவமைக்கின்றன. இந்த பிராந்தியங்களில் உள்ள பாடசாலைகளில் பெரும்பாலும் போதுமான உட்கட்டமைப்பு மற்றும் கற்பிக்கும் ஊழியர்கள் இல்லை என்பதுடன் இது கற்றலுக்கு குறிப்பிடத்தக்க தடைகளை உருவாக்குகிறது. வெள்ளம் மற்றும் வறட்சி அதிகரிப்பதால் ஏற்படும் காலநிலை மாற்றம் இந்த சவால்களை மேலும் கடுமையாக்குவதுடன், இது பாடசாலை வருகையைத் தடுத்து பிள்ளைகளுக்கு கல்விக்கு பதிலாக வீட்டுப் பொறுப்புகளுக்கு முன்னுரிமை அளிக்க கட்டாயப்படுத்துகிறது. இந்த பிராந்தியங்களில் உள்ள பெண்பிள்ளைகள் இளவயது திருமணம் மற்றும் பராமரிப்பு சுமைகள் உள்ளிட்ட கூடுதல் சவால்களை எதிர்கொள்கின்ற அதேசமயம் சிறுவர்கள் வேலைக்காக நகர்ப்புறங்களுக்கு இடம்பெயர அதிக வாய்ப்புள்ளது, இதனால் கிராமப்புற பாடசாலைகளில் மாணவர் சேர்க்கை விகிதங்கள் குறைவடைகின்றன.

### தென் மாகாணம் (அம்பாந்தோட்டை)

அம்பாந்தோட்டையில், காலநிலை மாற்றமானது குறிப்பாக சிறுவர்களுக்கு கல்வியில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன், அவர்கள் பெரும்பாலும் மீன்பிடித்தல் அல்லது விவசாய வேலைகள் மூலம் தங்கள் குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்காக பாடசாலைக் கல்வியை விட்டு வெளியேற வேண்டியுள்ளது. இந்த பிராந்தியத்தில் உள்ள பெண்பிள்ளைகளுக்கு பொருளாதார அழுத்தங்கள் குறைவாக இருந்தாலும், இரண்டாம் நிலை பாடசாலைகளுக்கான மோசமான அணுகல் மற்றும் பால்நிலை உணர்திறனற்ற வசதிகளால் அவர்கள் இன்னும் பின்தங்கியே உள்ளனர். பருவகால நீர் பற்றாக்குறையும் கல்வியை மேலும் சீர்குலைக்கிறது, ஏனெனில் பாடசாலை சுகாதார வசதிகள் பாதிக்கப்படலாம் என்பதுடன் மாணவர்கள் வகுப்புகளில் கலந்து கொள்வதற்குப் பதிலாக தண்ணீர் எடுப்பதற்கு நேரத்தைச் செலவிட வேண்டியுள்ளது.

### ஊவா மாகாணம் (பதுளை)

பதுளையில், பெருந்தோட்டப் பொருளாதாரம் இளைஞர்களின் கல்விக்கு தனித்துவமான சவால்களை உருவாக்குகிறது. சிறுவர்கள் அடிக்கடி தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக பாடசாலையிலிருந்து விலக்கப்படுகின்றனர், அதேசமயம் பெண்பிள்ளைகள் இளம் வயது திருமண அழுத்தங்கள் மற்றும் இரண்டாம் நிலை கல்விக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலை எதிர்கொள்கின்றனர். காலநிலை மாற்றம், விவசாய நெருக்கடி காலங்களில் வீட்டு வருமானத்தை குறைத்து, சிறுவர் தொழிலாளர்களின் தேவையை அதிகரிப்பதன் மூலம் இந்த சிக்கல்களை மேலும் அதிகரிக்கிறது.



## 3.5 காலநிலை மாற்றம் ஏற்கெனவே பாதிக்கப்படக்கூடிய சுகாதார அமைப்பில் உள்ள தவறுகளை ஆழமாக்குகிறது

**வழிமுறைச் சுருக்கம்:** இலங்கையின் சுகாதார அமைப்பானது, நீண்டநாள் நிதி பற்றாக்குறை, துண்டுபடுதல், மற்றும் சமத்துவமின்மை ஆகியவற்றால் குறிக்கப்பட்டு, குறிப்பாக கிராமிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட பகுதிகளில் அதிகரித்து வரும் அழுத்தத்தில் உள்ளது. முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்கள் மருத்துவ பணியாளர்கள், மருந்துகள் மற்றும் நோய் கண்டறியும் உபகரணங்களின் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்வதுடன், இதனால் பலர் விலையுயர்ந்த தனியார் மருந்தகங்களை நம்பியிருக்க அல்லது சிகிச்சையை முற்றிலுமாக கைவிட வேண்டியுள்ளது. பல்பரிமாண வறுமையின் (UNDP 2023) முக்கிய காரணிகளாக அடையாளம் காணப்பட்ட இந்த அமைப்பு சார்ந்த இடைவெளிகள், காலநிலை தொடர்பான சவால்களுக்கு ஏற்றவாறு மட்டுமல்லாது, வழக்கமான தேவைகளை பூர்த்தி செய்வதற்கு கூட போதுமற்றதாக சுகாதார அமைப்பை விட்டுவிடுகின்றன. காலநிலை மாற்றமானது, காவிகள் மூலமாக பரவும் நோய்கள், ஊட்டச்சத்து குறைபாடு மற்றும் உளநலப் பிரச்சினைகள் போன்ற சுகாதார அபாயங்களை தீவிரப்படுத்துவதன் மூலம் இந்த பாதிப்புகளை அதிகரிக்கிறது. அதிக சுமை மற்றும் குறைந்த வளங்கள் கொண்ட அமைப்புக்கள் இந்த வளர்ந்து வரும் அழுத்தங்களுக்கு பதிலளிக்க போராடுகின்ற அதே நேரத்தில் தீவிர காலநிலை நிகழ்வுகள் சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் அணுகலை சீர்குலைக்கின்றன. இந்த பலவீனமான அடித்தளம் இலங்கையின் சுகாதார அமைப்பை வெளிப்புற அதிர்ச்சிகளை உள்வாங்க இயலாமல், மேலும் பராமரிப்பு தரம் மற்றும் மீண்டெழுதிறனை அதிகரித்தளவில் சாதகமற்றதாக்குகின்றது.

### சுகாதார அபாயங்களை அதிகரிக்கும் காலநிலை மாற்றம்

இலங்கையின் சுகாதார அமைப்பு, நிதி பற்றாக்குறை, பணியாளர் பற்றாக்குறை மற்றும் சமமற்ற அணுகல் ஆகியவற்றால் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்வதுடன், இது அதனை மேலும் அழுத்தத்திற்கு உள்ளாக்குகிறது. காலநிலை மாற்றமானது இந்த அழுத்தங்களை அதிகரிக்கிறது, ஏனெனில் அதிகரித்து வரும் வெப்பநிலை, ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் நீர் பற்றாக்குறை ஆகியவை டெங்கு மற்றும் நாள்பட்ட சிறுநீரக நோய் (CKDu) போன்ற நோய்களின் பரவலுக்கு பங்களிக்கின்ற அதே நேரத்தில் அதிக வெப்பம் விவசாய தொழிலாளர்கள் மற்றும் கிராமப்புற குடும்பங்களுக்கு அபாயங்களை ஏற்படுத்துகிறது. பொருளாதார சிரமங்கள் மற்றும் திறமையான மருத்துவர்களின் புலம்பெயர்வு, தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பெண்கள் தலைமையிலான குடும்பங்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்களை மேலும் பாதிப்பதுடன், வளர்ந்து வரும் சுகாதார தேவைகளை சமாளிக்கும் அவர்களின் திறனை மட்டுப்படுத்துகின்றன.

### சுகாதாரத்தின் மீதான காலநிலை தாக்கங்கள்

காலநிலை மாற்றமானது நலிவுகளை அதிகரித்து, புதிய சுகாதார அபாயங்களை கட்டவிழ்த்துவிடுவதுடன், பழையவற்றை மோசமாக்குகிறது. நீண்ட வறட்சி, ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை ஆகியவை நீர் பற்றாக்குறை மற்றும் வெப்ப அழுத்தத்தை ஏற்படுத்துகின்ற அதே நேரத்தில் CKDu -வின் அதிகரிப்பிற்கும் காரணமாகின்றன. வெள்ளம் மற்றும் வறட்சி உடனடி அபாயங்களையும் நீண்டகால சுகாதார தாக்கங்களையும் கொண்டுவருவதுடன், இதனால் தொடர்புடைய சுகாதார செலவினங்களில் இலங்கைக்கு ஆண்டுதோறும் சுமார் 19 மில்லியன் அமெரிக்க டொலர் இழப்பு ஏற்படுகிறது (De Alwis et al. 2019). இந்த நிகழ்வுகள் அடிக்கடி மற்றும் கடுமையானதாக விருத்தியடையும் போது, அவற்றின் மனித மற்றும் பொருளாதார இழப்புகள் மட்டுமே அதிகரிப்பதுடன், பெண்கள் மற்றும் சிறுபான்மையினர் உட்பட மிகவும் ஓரங்கட்டப்பட்டவர்களை பலவீனமான சுகாதார அமைப்புகளும் காலநிலை தாக்கங்களும் ஒன்றோடொன்று ஊடாடுகின்ற அபாயத்தின் இடைவிடாத சுழற்சியில் சிக்க வைக்கும்.

## காலநிலை மாற்றத்தால் தூண்டப்பட்ட சுகாதார அபாயங்கள்

காவிகள் மூலமாக பரவும் நோய்கள்: மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் மோசமான கழிவு முகாமைத்துவம் ஆகியவை டெங்கு மற்றும் மலேரியா போன்ற நுளம்புகளால் பரவும் நோய்களின் அதிகரிப்புக்கு பங்களித்துள்ளன. அதிக வெப்பநிலை, பருவமழை மற்றும் அதிகரித்த ஈரப்பதன் ஆகியவை நுளம்புகள் பெருகி வளர ஏற்ற சூழ்நிலையை உருவாக்குகின்றன. இருப்பினும், கடுமையான மற்றும் பரவலான நோய்த்தொற்றுகள் பெரும்பாலும் பல சுற்றுச்சூழல் காரணிகளின் சிக்கலான இடைவினையால் தூண்டப்படுவதுடன், இதில் போதுமான திண்மக்கழிவு அகற்றல் மற்றும் மோசமான வடிகால் அமைப்புகள் ஆகியவை உள்ளடங்கும். எதிர்கால காலநிலை நிலைமைகளின் கீழ் குறிப்பிடத்தக்க அபாயங்களை ஏற்படுத்தும் காவிகளால் பரவும் நோய்களில் டெங்கு, லெப்டோஸ்பிரோசிஸ் மற்றும் லீஷ்மேனியாசிஸ் ஆகியவை அடங்கும் (Geldin 2025).

அதிகரித்த நோய் பரவல்: பூச்சிகள், நத்தைகள் அல்லது பிற குளிர்ந்த இரத்தம் கொண்ட விலங்குகள் மூலம் பரவும் நோய்களை காலநிலை நிலைமைகள் வலுவாக பாதிக்கின்றன என்பதையும் ஆய்வுகள் எடுத்துக்காட்டுவதுடன், காலநிலை மாற்றமானது பரவும் காலங்களை நீட்டித்து புவியியல் எல்லைகளை மாற்றியமைக்க வாய்ப்புள்ளது.

நீர் பற்றாக்குறை மற்றும் CKDu: இலங்கை அதிக வெள்ள அபாயங்களை மட்டுமல்ல, சீரற்ற பிராந்திய மற்றும் பருவகால மழைவீழ்ச்சி வடிவங்கள் காரணமாக அதே நேரத்தில் கடுமையான நீர் பற்றாக்குறையையும் எதிர்கொள்கிறது. அதிக வருடாந்த மழைவீழ்ச்சி இருந்தபோதிலும், நீர் பற்றாக்குறை இலங்கையை அடிக்கடி பாதிக்கிறது. அதிக உமிழ்வு சூழ்நிலையின் கீழ், இலங்கை நூற்றாண்டின் நடுப்பகுதி வரை நடுத்தர முதல் உயர் மட்ட நீர் பற்றாக்குறையை கையாள எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே, பதுளை மற்றும் முல்லைத்தீவு போன்ற பிராந்தியங்களில் நீண்ட வறட்சி, சமுதாயங்கள் பாதுகாப்பற்ற நீர் ஆதாரங்களை நம்பியிருப்பதனை கட்டாயப்படுத்துவதுடன், இது CKDu-வின் அதிகரிப்புக்கு பங்களிக்கிறது. விவசாய இரசாயன மாசுபாடு இந்த சிக்கலை மேலும் அதிகரிப்பதுடன், CKDu-வை விவசாய சமூகங்களிடையே ஒரு அமைதி நிலையிலான தொற்றுநோயாக ஆக்குகிறது.

இலங்கையின் குடித்தொகையில் 8 % முதல் 21 % வரை CKDu பாதித்துள்ளதுடன், சில விவசாய சமுதாயங்கள் 5 இளைஞர்களில் 1 நபர் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றன. கவலையளிக்கும் விதமாக, இந்த சமுதாயங்களில் 5-10 % சிறுவர்கள் சிறுநீரக பாதிப்பின் ஆரம்ப அறிகுறிகளைக் காட்டுகிறார்கள் (Mandavilli 2024). வட மத்திய மற்றும் வடமேற்கு மாவட்டங்களில் உள்ள மக்கள் குடித்தொகையில் குறைந்தது 10 பேர் குறிப்பிடத்தக்க பாதிக்கப்படக்கூடிய குழுவை உருவாக்குகின்றனர் (Geldin 2025). உதாரணமாக, பெண்கள், அவர்களின் பராமரிப்பு வகிபாகம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் காரணமாக அதிக அபாயங்களை எதிர்கொள்கின்றனர். அனர்த்தங்களின் போது, அவர்கள் பெரும்பாலும் தங்கள் குடும்பங்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிப்பதுடன், இது அவர்களை உடல்நல சிக்கல்களுக்கு மேலும் பாதிப்படைய வைக்கிறது.

அதேபோல், ஏற்கனவே கடுமையான பணி நிலைமைகளுக்கு ஆளாகியுள்ள கிராமிய விவசாயத் தொழிலாளர்கள், தீவிர வெப்பநிலை மற்றும் அசுத்தமான நீருக்கான நீண்டகால வெளிப்பாடு காரணமாக வெப்ப அழுத்தம் மற்றும் CKDu -வின் அபாயங்களை எதிர்கொள்கின்றனர்.

அதிக வெப்பம்: அதிக ஈரப்பதனுடன் கூடிய பகல்நேர வெப்பநிலை, வெப்ப குறிகாட்டியால் அளவிடப்படுவதுடன், குறிப்பாக அவை 35°C -ஐ தாண்டும்போது குறிப்பிடத்தக்க உடல்நல அபாயங்களை ஏற்படுத்துகிறது. இந்த நிலைமைகள் இலங்கையின் உலர் வலயத்தில், குறிப்பாக வட மத்திய மாகாணத்தில் கடுமையாக அதிகரிக்கும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது. மூச்சுத் திணறல் ஏற்படுத்தும் உட்புற வெப்பம் ஏற்கனவே நகர்ப்புறங்களில் வேலையை பாதித்து வருவதுடன் பாடசாலைகள் விளையாட்டு நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க கட்டாயப்படுத்தியுள்ளது. இதற்கிடையில், வெளிப்புறத் தொழிலாளர்கள், குறிப்பாக பெண்கள், விவசாய மற்றும் வீட்டு வேலைகளின் போது நீண்ட வெளிப்பாடு காரணமாக இந்த தீவிர நிலைமைகளின் முழு சுமையையும் தாங்குகின்றனர்.

அதிகரித்த உமிழ்வு காலநிலை சூழ்நிலையின் கீழ், வட மத்திய மாகாணம் வெப்ப குறிகாட்டியுடன் 35°C-க்கு மேல் உள்ள நாட்களின் கூடுதலான 1.5 மாதங்களை குறுகிய காலத்தில் அனுபவிக்கக்கூடும் என்பதுடன், இது நடுத்தர காலத்தில் 4 மாதங்களாக உயரும். கோடை மாதங்களில் மிகவும் வியத்தகு அதிகரிப்புகள் எதிர்பார்க்கப்படுவதுடன், இது பிராந்தியத்தில் வெப்பமான மற்றும் ஈரப்பதனான நிலைமைகளை நோக்கி முன்னெப்போதுமில்லாத மாற்றத்தை குறிப்பதுடன் இது மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்களின் வாழ்க்கைச் சவால்களை மேலும் அதிகரிக்கிறது.

## பொருளாதார சவால்கள் பலவீனத்தை அதிகப்படுத்துகின்றன

2022 இல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி இலங்கையின் சுகாதார அமைப்பை பெரும் பாதிப்புக்குள்ளாக்கியதுடன், இதனால் அது காலநிலை மாற்றத்தால் ஏற்படும் சுகாதார அச்சுறுத்தல்களை சமாளிக்க போதுமான வசதிகள் இல்லாத நிலைக்குத் தள்ளப்பட்டது. மோசமடைந்து வரும் பொருளாதாரம், திறமையான மருத்துவர்களின் வெளியேற்றத்தையும் தூண்டியுள்ளதுடன் இதனால் மருத்துவ பணியாளர்களின் கடுமையான பற்றாக்குறை ஏற்பட்டு, ஏற்கெனவே பலவீனமான அமைப்பின் மீதான அழுத்தத்தை ஆழமாக்கியுள்ளது.

வெளிநாடுகளில் கற்கும் இலங்கை மருத்துவ மாணவர்களைப் பொறுத்தவரை, தங்கள் சொந்த நாடுகளை விட்டு வெளியேறுவதற்கான ஈர்ப்பானது அதிக சம்பளம், சிறந்த வாழ்க்கை நிலைமைகள் மற்றும் அதிக வேலைவாய்ப்புகள் ஆகியவற்றால் உந்தப்பட்டது. அதே நேரத்தில், அரசியல் மற்றும் பொருளாதார உறுதியற்ற நிலை போன்ற காரணங்களும், இலங்கையில் வேலைவாய்ப்புப்-பற்றாக்குறையும், வெளிநாடுகளில் தங்குவதற்கான அவர்களின் தீர்மானத்திற்கு மேலும் ஊக்கமளித்தன (Abeysooriya et al. 2023; FDG 2025).

2023 இல், நாட்டில் 2,000 ஆலோசகர்கள் பணிய-மர்த்தப்பட்டனர், இது தேவையான தேசிய எண்ணிக்கையில் அரைவாசியாகும் (Madhavi 2023). பதுளை மாவட்டத்தின் தோட்டச் சமுதாயங்களில், பல தோட்டங்களுக்குத் தகுதியான மருத்துவர்களின் அணுகல் இல்லை என்பதுடன் அதற்குப் பதிலாக, பெரும்பாலும் முறையான தகுதிகள் இல்லாதவர்களாகக் கருதப்படுகின்ற மருத்துவ உதவி-யாளர்களால் நடாத்தப்படும் மருந்தகங்களை நம்பியுள்ளனர். இத்தகைய அமைப்பு சார்ந்த பலவீனங்கள், சமுதாயங்களுக்குத் தடுப்புப் பராமரிப்பு, சரியான நேரத்தில் நோய் கண்டறிதல் மற்றும் செலவு குறைவான சிகிச்சைக்கான அணுகல் இருப்பதில்லை என்பதால் காலநிலை மாற்றத்திற்கு மீண்டெழுதிறனை உருவாக்கும் திறனைக் கட்டுப்-படுத்துகின்றன.

## மீட்பு மற்றும் தொடர்ச்சியான சவால்கள்

பணவீக்கத்தைக் கையாள்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் நிதி முகாமைத்துவத்தை மேம்படுத்துவது உட்பட, இலங்கையின் பொருளாதார நிலைமையின் சமீபத்திய ஸ்திரத்தன்மையானது வளங்களின் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துவதன் மூலமும், முக்கியமான பற்றாக்குறைகளை நிவர்த்தி செய்வதன் மூலமும் சுகாதாரத் துறையை வலுப்படுத்துவதற்குச் சாதகமாக உள்ளது. தனிநபர் சுகாதாரப் பாதுகாப்பு செலவினம் 2022 இல் 145 அமெரிக்க டொலராக இருந்தபோதிலும், சுகாதாரத் துறைக்கான அரசாங்கத்தின் 2025 வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடு ரூ. 604 பில்லியன் (தோராயமாக 2 பில்லியன் அமெரிக்க டொலர்) என்பது முன்னேற்றத்திற்கான சில நம்பிக்கையை அளிக்கிறது. இருப்பினும், வள பரம்பலில் உள்ள வினைத்திறனின்மைகள் மற்றும் கிராமிய பகுதிகளில் போதுமான உட்கட்டமைப்பு இல்லாதது உள்ளிட்ட தொடர்ச்சியான கட்டமைப்பு பிரச்சினைகள் முன்னேற்ற-த்திற்குத் தொடர்ந்து தடையாக உள்ளன.

## சமமற்ற அணுகல் மற்றும் ஒதுக்கப்பட்ட சமூகங்கள்

இலங்கையின் காலநிலை தொடர்பான பல சுகாதார அபாயங்கள் குறுகிய மற்றும் நடுத்தர காலத்தில் மோசமடையும் என எதிர்வுகூறப்பட்டுள்ளன. இது, வெளிச்சூழலில் பணியாற்றும் தொழிலாளர்கள், முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்கள், குழந்தைகள் மற்றும் ஏற்கனவே உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் போன்ற குறிப்பிட்ட மக்கள் குடித்தொகைக் குழுக்களுக்குக் குறுகிய காலத்தில் இறப்பு மற்றும் நோயுறும் அபாயங்களை அதிகரிக்கக்கூடும் (Geldin 2025). அத்துடன் நேரடி அபாயங்கள் மட்டு-மல்லாமல், மறைமுக அபாயங்களில் உளநலப் பிரச்சினைகள் மற்றும் தற்கொலை ஆகியவையும் உள்ளடங்கும்.

பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் இன சிறுபான்மையினர் உள்ளிட்ட ஓரங்கட்டப்பட்ட குழுக்கள், காலநிலை சார்ந்த சுகாதார அபாயங்களுக்கு ஆளாகக்கூடிய கடுமையான சுகாதார சமத்துவமின்மையை எதிர்கொள்கின்றனர். வேலை மற்றும் வீட்டுப் பொறுப்புகளைச் சமநிலைப்படுத்தும் பெண்கள், வரையறுக்கப்பட்ட ஆதரவுடன் இடைவிடாத அழுத்தத்தைத் தாங்குகின்றனர். இது பெரும்பாலும் உள ஆரோக்கியம் மோசமடைவதற்கு வழிவகுக்கிறது. ஆண்கள் சமூக வட்டங்கள் அல்லது மதுபானங்களுக்குத் திரும்பும்போது, பெண்கள் இந்தச் சுமைகளைத் தனியாகச் சுமக்க வேண்டியுள்ளது.

தேயிலைத் தோட்டச் சமுதாயங்கள் மதுபான துஷ்பிரயோகம், போதைப்பொருள் பயன்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை உள்ளிட்ட அதிகரித்து வரும் சமூகச் சவால்களை எதிர்கொள்கின்றன. சில தோட்ட உரிமையாளர்களால் வழங்கப்படும் மழலையர் பாடசாலை மற்றும் மருத்துவ நிலையங்கள் போன்ற அடிப்படை சமூக வசதிகள் பெரும்பாலும் போதுமானதாக இல்லை என்பதுடன் தொழிலாளர்களைத் தோட்டத்துடன் பிணைக்க வடிவமைக்கப்பட்டுள்ளன என்று விமர்சிக்கப்படுகிறது. பொதுவாக மருந்தகங்களை விட சற்றே உயர்வான மருத்துவ நிலையங்களில், பயிற்சி பெற்ற ஊழியர்கள் இருப்பதில்லை என்பதுடன் சரியான பராமரிப்பை வழங்கத் தவறிவிடுகின்றன. தோட்டங்கள் தனியார் சொத்தாக இருப்பதால், அரசாங்கச் சேவைகள் இந்தச் சமுதாயங்களை அடைவதற்குப் போராடுவதுடன் அவர்களைத் தனிமைப்படுத்துகின்றன. குடும்ப வன்முறை மற்றும் பாதுகாப்பான இடங்கள் இல்லாததால் பாராபட்சமாக பாதிக்கப்படுகின்ற பெண்கள் குறிப்பாகப் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதுடன்,

அதே நேரத்தில் இளைஞர்கள் அதிக வேலை மற்றும் தனிமையிலிருந்து அதிகளவு உள-சமூக அழுத்தத்தை எதிர்கொள்வதுடன் இது உளநலத் தலையீடுகளுக்கான அவசரத் தேவையை சுட்டிக் காட்டுகிறது. மட்டக்களப்பில் உள்ள பதிலளித்தவர்கள், மோசமான மருத்துவமனை கழிவு முகாமைத்துவம் ஒரு பிரச்சினையாக இருப்பதாக எடுத்துக்காட்டுவதுடன் இது, சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரச் சவால்களை ஏற்படுத்துகிறது.

அனர்த்தபதிலளிப்பு பொறிமுறைகள் பெரும்பாலும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் குறிப்பான தேவைகளை நிவர்த்தி செய்யத் தவறிவிடுகின்றன. நெருக்கடிகளின் போது மாதவிடாய் சுகநலப் பொருட்களுக்கான போதுமான அணுகல் இல்லை என்று பெண்கள் தெரிவிக்கின்றனர்.

## சமாளிக்கும் பொறிமுறைகள் மற்றும் உள்ளூர் முயற்சிகள்

முறைசார் இடைவெளிகள் இருந்தபோதிலும், சுகாதார சவால்களை எதிர்கொள்வதில் சமுதாயங்கள் தங்களது மீண்டெழும் திறனை நிரூபித்துள்ளன. முல்லைத்தீவில், வறட்சியின் போது சுத்தமான நீரைப் பெறுவதற்காக குடும்பங்கள் தங்களது வளங்களைத் திரட்டுகின்ற அதேநேரம், உள்ளூர் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் கழிவு முகாமைத்துவ பிரச்சாரங்களை முன்னெடுத்து வருகின்றன. சிலர் தங்கள் ஆரோக்கியத்தையும் நிலத்தையும் நச்சு இரசாயனங்களிலிருந்து பாதுகாக்க இயற்கை விவசாயத்திற்கு மாறுகின்றனர். இருப்பினும், வலுவான அரசாங்க ஆதரவு இல்லாமல், இந்த முயற்சிகள் மோசமடைந்து வரும் நெருக்கடிக்கு மத்தியில் பாதிக்கப்-படக்கூடியவையாகவே இருக்கின்றன.

அதேபோல், இயலாமைடையுடையவர்கள் சுகாதார வசதிகளை அணுகும் போது குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்கின்றனர். சுகாதாரப் பராமரிப்பு வழங்கலில் உள்ள இந்த இடைவெளிகள் பாதிப்புகளை ஆழமாக்குவதுடன், காலநிலை அதிர்ச்சிகளில் இருந்து மீண்டெழுவதைத் தடுக்கின்றன. இது, உள்ளடங்கலான சுகாதாரக் கொள்கைகள் மற்றும் சேவைகளுக்கான முக்கியமான தேவையை எடுத்துக்காட்டுகிறது.



நீர் பாய்ச்சல் முகாமைத்துவம், வெலிமடை, பதுளை மாவட்டம்

# 4 இலங்கையில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றம்

இந்தப் பிரிவானது, இலங்கையில் காலநிலை மாற்றத்தின் தற்போதைய மற்றும் எதிர்கால தாக்கங்களை, குறுகிய காலத்திலும் (2020-2039) மற்றும் நடுத்தர காலத்திலும் (2040-2059) கவனம் செலுத்தி ஆராய்கின்றது. அவதானிக்கப்பட்ட காலநிலை தரவுகள், கிழக்கு ஆங்கிலியா பல்கலைக்கழகத்தின் காலநிலை ஆய்வுப் பிரிவு மற்றும் ஐரோப்பிய மத்திய-தூர காலநிலை முன்னறிவிப்பு நிலையத்தின் கோப்பர்நிக்கஸ் காலநிலை மாற்ற சேவை (C3S) தரவு சேமிப்பகத்திலிருந்து பெறப்பட்டுள்ளன. இவை இரண்டும் உலக வங்கியின் காலநிலை மாற்ற அறிவுக் -களஞ்சியம் வழியாக அணுகப்பட்டன. கணிக்கப்பட்ட காலநிலை தரவுகள், உலக காலநிலை ஆராய்ச்சி திட்டத்தின் CMIP6 , அதாவது, ஒன்றிணைக்கப்பட்ட மாதிரி ஒப்பீட்டுத் செயற்திட்டத்தின் 6 ஆம் கட்டத்திலிருந்து எடுக்கப்பட்டது. இலங்கையின் காலநிலை மற்றும் குறுகிய மற்றும் நடுத்தர கால போக்குகள் குறித்த முழுமையான ஆய்வு மற்றும் விரிவான மதிப்பீட்டிற்காக, அடெல்பி நிறுவனம் இலங்கைக்கான காலநிலை தாக்க விவரக் குறிப்பை வழங்கியது.

## 4.2 வளிமண்டல வெப்பநிலை

இலங்கையின் வெப்பமான, அயன வலய காலநிலையிலும், பிராந்திய ரீதியாக வேறுபடும் மழைப்பொழிவு வடிவங்களும், உயர்ந்து வரும் வெப்பநிலையும் வாழ்வாதாரங்களுக்கு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தல்களை ஏற்படுத்துகிறது. அதிக உமிழ்வு சூழ்நிலையின் கீழ், குறுகிய காலத்தில் (2020-2039) சராசரி வெப்பநிலை 0.84°C வரையும், நூற்றாண்டின் நடுப்பகுதியில் (2040-2059) 1.64°C வரையும் உயரக்கூடும் என்பதுடன், வெப்பக் குறிகாட்டி (Heat Index) 35°C -க்கு மேல் உள்ள நாட்களின் எண்ணிக்கை 4 மாதங்கள் வரை அதிகரிக்கலாம் என கணிக்கப்பட்டுள்ளது. (Geldin 2025).

இந்த விஞ்ஞான எதிர்வுகூறல்கள் ஏற்கனவே பாதிக்கப்படக்கூடிய உற்பத்தியாளர்களுக்கு நிஜமாகி வருகின்றன. "வெப்பநிலை அதிகரித்து வருவதை நாங்கள் ஏற்கனவே உணர்கிறோம், இது கோழிகளின் வளர்ச்சியைப் பாதிக்கிறது" என்று பதுளை மாவட்டத்தில் உள்ள ஹிம்பிலியாகஹ மதித்தவைச் சேர்ந்த ஒரு கோழிப் பண்ணையாளர் கூறுவதுடன், தொடர்ச்சியான வெப்பமயமாதல் அவரது இலாபத்தை மேலும் குறைக்கும் என்று அவர் அஞ்சுகிறார். அவரது சிறிய அளவிலான செயற்பாட்டுக்கு, குளிரூட்டும் அமைப்புகள் போன்ற இசைவாக்க நடவடிக்கைகள் நிதி ரீதியாக எட்டாதவையாகவே உள்ளன. இத்தகைய உள்ளூர் அனுபவங்கள் பரந்த பொருளாதார எதிர்வுகூறல்களுடன் ஒத்துப்போகின்றன. ஆய்வுகளின்படி, காலநிலை தாக்கங்கள் யாழ்ப்பாணம் போன்ற வடக்கு பிராந்தியங்களில் வாழ்க்கைத் தரத்தை 10 % வரை குறைக்கக்கூடும் என்று உலக வங்கி (2021b) தெரிவித்துள்ளது.

## 4.2 மாறிவரும் மழைப்பொழிவு

### வறட்சி

இலங்கையின் உலர் வலயம் மற்றும் தாழ்நில இடைவலயம் ஆகியன வாழ்வாதாரங்களுக்கு இடையூறு விளைவித்து, நலிவுகளை மிகையாக்கும் தொடர்ச்சியான வறட்சியை எதிர்கொள்கின்றன. சிறுபோக (யல) விவசாயப் பருவத்தில் (மார்ச் - செப்ரெம்பர்), தென்கிழக்கு உலர் வலயம் நீண்ட வறண்ட காலங்களை அனுபவிக்கிறது. அதே நேரத்தில், வடமேற்கு உலர் வலயம் பெரும்போக (மகா) பருவத்தில் (அக்டோபர்-பெப்ரவரி) இதேபோன்ற சவால்களை எதிர்கொள்கிறது. இந்த வறட்சிகள், மழைநீரை நம்பி நடைபெறும் விவசாயத்தை, குறிப்பாக நெல் பயிர்ச்செய்கையை கடுமையாகப் பாதிக்கின்றன. இது பயிர் இழப்புகளுக்கும் பொருளாதார நெருக்கடிக்கும் வழிவகுக்கிறது. அம்பாந்தோட்டையில் உள்ள விவசாயிகள் வறட்சியைத் தாங்கும் தினை போன்ற வறட்சியை தாங்கும் பயிர்களுக்கு மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். ஆனால், விலை குறைவான விதைகள் மற்றும் தொழில்நுட்ப அறிவிற்கான வரையறுக்கப்பட்ட அணுகல் பரவலான இசைவாக்கத்திற்கு தடையாக உள்ளது. அதிக உமிழ்வு சூழ்நிலையின் கீழ் காலநிலை எதிர்வுகூறல்கள் வறட்சி அபாயங்கள் அதிகரிக்கும் என சுட்டிக்காட்டுகின்றன. குறிப்பாக, உலர் வலயத்தில், சிறுபோகத்தில் நீர் பற்றாக்குறை மோசமடையக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதேபோல், பெரும்போகத்திலும் மழைப்பொழிவு மாறுபாடு அதிகரித்து, விவசாய உற்பத்தித்திறனுக்கு மேலும் அச்சுறுத்தல் ஏற்படலாம்.

வறட்சியின் தாக்கங்கள் பெரும்பாலும் வீட்டு நீர் தேவைகளை நிர்வகிப்பதோடு, விவசாய வேலைகளுக்கும் பங்களிக்கும் இரட்டைச் சுமையைத் தாங்குகின்ற பெண்களுக்கு குறிப்பாகக் கடுமையாக உள்ளன. மொனராகலையில், பெண் விவசாயிகள் வறண்ட காலங்களில் நீர் கொண்டுவர நீண்ட தூரம் நடப்பதாக தெரிவிப்பதுடன் இது, வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கான அவர்களின் நேரத்தைக் குறைப்பதோடு, வனவிலங்குகளுடனான சந்திப்புகள் மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறை போன்ற உடல் அபாயங்களுக்கும் அவர்களை வெளிப்படுத்துகிறது.



வெள்ளத்தில் மூழ்கிய விவசாய நிலம், எல்லேகல, அம்பாந்தோட்டை மாவட்டம்

## வெள்ளம்

இலங்கையானது கடும் பருவமழை, காலநிலை மாற்றம் மற்றும் போதுமான வானிலை ஆய்வு வசதிகள் இல்லாததால் ஏற்படும் வெள்ளப் பெருக்கு சவால்களை அடிக்கடி எதிர்கொள்கிறது. இவை நாட்டில் தொடர்ந்து நிகழும் இயற்கை அனர்த்தங்கள் என்பதுடன் இவை மேலும் தீவிரமடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. கிழக்கு, வடக்கு மற்றும் வட மத்திய மாகாணங்களில் அயனமண்டல புயல்களுக்கு இலங்கை ஆளாகிறது (Geldin 2025). அதிகளவில் ஆறுகளிலிருந்து வரும் வெள்ள அபாயமும் உள்ளது.

மே – யூன் 2024 க்கு இடையில், கனமழை, வெள்ளம், பலத்த காற்று மற்றும் நிலச்சரிவுகள் 25 மாவட்டங்களில் 20 மாவட்டங்களை பாதித்து பரவலான சேதத்தை ஏற்படுத்தியதுடன், 12,000 க்கும் மேற்பட்ட வீடுகளை சேதப்படுத்தி 6,000 மக்களை வெளியேறுவதற்கு ஆளாக்கியது.(OCHA 2024). இந்த வெள்ளம் கல்விக்கு இடையூறு விளைவித்தது, ஆயிரக்கணக்கானவர்களை இடம்பெயர வைத்ததுடன், உயிரிழப்புகளை ஏற்படுத்திய அதே நேரத்தில் முக்கிய வீதிகளை மூழ்கடித்தது, நெல் வயல்களை சேதப்படுத்தியதுடன் நீர்த்தேக்கங்கள் பாய்ந்ததுடன், இது வெள்ளத்தை மோசமாக்கியது. நீர்த்தேக்கங்கள் நிரம்பி வழிவதும், முறையான உட்கட்டமைப்பு இல்லாததும் பிரச்சினையை மேலும் அதிகரித்துள்ளதுடன் இது போக்குவரத்து, வாழ்வாதாரங்கள் மற்றும் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கிறது.

இந்த தீவிர வானிலை நிகழ்வுகளின் தாக்கம் ஆழமாக பால்நிலைப்படுத்தப்படுகிறது. பெண்கள், குறிப்பாக கிராமப்புறங்களில், வெள்ளத்தின் போது மிகவும் சவாலானதாக மாறுகின்ற பராமரிப்பு, நீரைப் பாதுகாத்தல் மற்றும் வீட்டு வளங்களை நிர்வகித்தல் ஆகியவற்றுக்கு அடிக்கடி பொறுப்பாவதால், அதிக பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் மேலதிக உடல்நல அபாயங்கள் மற்றும் நடமாடும் சவால்களை எதிர்கொள்கின்ற அதே நேரத்தில் கல்வி தடைபடும் போது பெண்பிள்ளைகள் பாடசாலை கல்வியை கைவிட அதிக வாய்ப்புள்ளது. மறுபுறம், ஆண்கள் உட்கட்டமைப்பை மீண்டும் கட்டியெழுப்புதல் அல்லது சிக்கித் தவிக்கும் நபர்களை மீட்டல் போன்ற உடல் ரீதியாக கடினமான பணிகளை அடிக்கடி மேற்கொள்வதுடன், இது அவர்களை உடல் அபாயங்களுக்கு வெளிப்படுத்தலாம். இசைவாக்க திறன்களும் வேறுபடுவதுடன், வளங்கள், தீர்மானமெடுக்கும் அதிகாரம் மற்றும் நடமாடும் திறன் ஆகியவற்றிற்கான வரையறுக்கப்பட்ட அணுகல் காரணமாக பெண்களின் பதிலளிக்கும் திறன் பெரும்பாலும் கட்டுப்படுத்தப்படுகின்ற அதே நேரத்தில் ஆண்களுக்கு நிதி ஆதாரங்கள் அல்லது வெளி வலையமைப்புகளுக்கான அதிக அணுகல் இருக்கலாம், ஆனால் அவர்கள் முதன்மை நபராக இருப்பதற்கான அழுத்தத்தை எதிர்கொள்கிறார்கள்.

## 4.3 மண் வளங்குன்றல் (Soil Degradation)

மண் அளவு மாறுதல் மற்றும் மண்ணரிப்பு உட்பட மண் வளங்குன்றல் என்பது இலங்கையில் அதிகரித்து வரும் ஒரு சவாலாக உள்ளது. பதுளையில் உள்ள விவசாயிகள், கணிக்க முடியாத மழைவீழ்ச்சி மற்றும் மோசமான நில முகாமைத்துவ நடைமுறைகள் மண் அரிப்பைத் துரிதப்படுத்தியுள்ளதாகவும், இதனால் விவசாய உற்பத்தித்திறன் குறைந்து, பலர் பாரம்பரிய பயிர்களை கைவிட வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளானதாகவும் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பில், ஆறுகள் மற்றும் கடலோரப் பகுதிகளில் கட்டுப்பாடு இல்லாத மணல் அகழ்வு, ஆற்றங்கரைகளை நிலையற்றதாக்கி, நீர் வளங்களை குறைத்து, மண் அரிப்பை மோசமாக்கியுள்ளது. முல்லைத்தீவில், சட்டவிரோதமான மரம் வெட்டுதல் மற்றும் நிலத்தை துப்புரவு செய்தல் ஆகியவற்றால் ஏற்படும் காடழிப்பு, மண் வளங்குன்றலை மேலும் அதிகரித்துள்ளது.

கலந்தாலோசிக்கப்பட்ட சமுதாயங்கள், மண் வளங்குன்றலைப் பற்றி ஆராயவும் அதைத் தீர்க்கவும் ஆதரவு இல்லாததால், நிலையான தீர்வுகளைச் அமுல்படுத்துவதற்குத் தேவையான கருவிகள் அல்லது அறிவு இல்லாத நிலைக்கு விவசாயிகளை ஆளாக்கியதாக தெரிவித்தனர் (FGD 2025).

அதிக உமிழ்வு சூழ்நிலையின் கீழ், மழைவீழ்ச்சி வடிவங்களில் அதிகரித்து வரும் மாறுபாடு மற்றும் அடிக்கடி நிகழும் தீவிர வானிலை நிகழ்வுகள் மண் அரிப்பை மோசமாக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, குறிப்பாகப் பதுளை போன்ற மலைப்பாங்கான பகுதிகளில் மண் வளங்குன்றலை தீவிரப்படுத்தும் என காலநிலை கணிப்புகள் சுட்டிக்-காட்டுகின்றன.

## 4.4 தீவிர காலநிலை நிகழ்வுகள்

### மண்சரிவுகள்

1992 ஆம் ஆண்டு முதல், தேசிய கட்டிட ஆராய்ச்சி அமைப்பானது அதிக ஆபத்துள்ள பகுதிகளை அடையாளம் காண உதவுகின்ற இலங்கையில் மண்சரிவு அபாய வலய வரைபடங்களை உருவாக்கி வருகிறது. இது, (Jayathilake and de Silva 2018). மத்திய மலைநாடு, அத்துடன் ஈர மற்றும் இடைநிலை வலயங்களில் உள்ள சரிவுகள், குறிப்பாக இரண்டாவது இடைப்பருவமழை காலத்திலும், தென்மேற்குப் பருவமழை காலத்தின் ஆரம்பத்திலும் நிலச்சரிவு அபாயத்தில் உள்ளன (Geldin 2025). மத்திய மலைநாட்டுப் பகுதியில் அமைந்துள்ள பதுளை மாவட்டத்தில் 24, 419 கட்டிடங்களில் நடாத்தப்பட்ட ஒரு ஆய்வில், 22, 436 கட்டிடங்கள் நிலச்சரிவுகள் எதிர்பார்க்கப்படும் பகுதிகளில் இருந்த அதே நேரத்தில் 1,170 கட்டிடங்கள் அதிக ஆபத்துள்ள வலயத்தில் இருப்பதாக அடையாளம் காணப்பட்டன (Jayathilake and de Silva 2018).

மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் உள்ள வீடுகளில் ஏறக்குறைய 72 % கிராமப்புறங்களிலும், 18 % பெருந்தோட்டத் துறைகளிலும், 10% நகர்ப்புறங்களிலும் உள்ளன (Jayathilake and de Silva 2018). மேலும், மண்சரிவு அபாயமுள்ள பகுதிகளில் உள்ள பெரும்பாலான வீடுகள் முறையான அனுமதி இல்லாமல் கட்டப்பட்டுள்ளன. மேலும், கிட்டத்தட்ட 44 % வீடுகள் செங்குத்தான சரிவுகளில் கட்டப்பட்டுள்ளன (Jayathilake and de Silva 2018). இந்த அதிக மண்சரிவு அபாயத்துடன், போதுமான அனர்த்த தயார்நிலை இல்லாததும் ஒரு முக்கியப் பிரச்சினையாக உள்ளதுடன், அபாயகரமான பகுதிகளில் வசிப்பவர்களில் 81 % பேர் போதுமான அனர்த்த தயார்நிலை பொறிமுறைகள் இல்லை எனத் தெரிவித்தனர். மேலும், 38 % பேர் தங்கள் கிராமங்களில் அனர்த்த முகா-மைத்துவ குழுக்கள் உள்ளதா என்பது பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருந்தனர் (Jayathilake and de Silva 2018).

### சுனாமிகள்

2004 இந்தியப் பெருங்கடல் சுனாமி இலங்கையில் பேரழிவை ஏற்படுத்தியதுடன், இதில் 30,000 பேர் உயிரிழந்தனர். மேலும், ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இடம்பெயர்ந்தனர் (Geldin 2025 & FGD 2025). இந்தோனேசியா, இலங்கை மற்றும் இந்தியா ஆகிய சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், ஆண்களை விட நான்கு மடங்கு அதிகமான பெண்கள் உயிரிழந்தனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது (MacDonald 2005). சுனாமியின் தாக்கங்கள் பிராந்திய ரீதியாக வேறுபட்டதுடன், மொத்த சேதத்தில் மூன்றில் இரண்டு பங்கு சேதங்கள் தமிழ் மற்றும் முஸ்லிம் சிறுபான்மை மக்கள் அதிகம் வசித்து வந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டது. ( Kuhn 2009). சமூக அளவில் பெறப்பட்ட தரவுகளின்படி, இந்த அனர்த்தத்தில் அழிக்கப்பட்ட வீடுகளில் 48 % தமிழர்களுக்கும், 23 % முஸ்லிம்களுக்கும், 29 % சிங்களவர்களுக்கும் சொந்தமானவை என்று குறிப்பிடப்பட்டுள்ளது ( Kuhn 2009).

சேத பரம்பலுக்கு மாறாக, உதவி வழங்கல் மற்றும் அனர்த்தத்திற்கு பிந்தைய புனரமைப்பு ஆகியவை மிகவும் வித்தியாசமாக இருந்தன. ஏனெனில், LTTE கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கு நிதியளிக்க நன்கொடையாளர்கள் தயங்கினர் ( Kuhn 2009). உண்மையில், அனர்த்தம் நடந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, அம்பாறையில் அழிக்கப்பட்ட வீடுகளில் 20% மட்டுமே மீண்டும் கட்டப்பட்டன. மட்டக்களப்பில் 30% வீடுகள் மீண்டும் கட்டப்பட்டன. ஆனால், அப்போதைய ஜனாதிபதி ராஜபக்சவின் சொந்த மாவட்டமான அம்பாந்தோட்டையில், அழிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை-யை விட மூன்று மடங்கு அதிகமான வீடுகள் கட்டப்பட்டன ( Kuhn 2009). சுனாமி மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட நிவாரண முயற்சிகளுக்கு இடையே, வடகிழக்குடன் ஒப்பிடும்போது தென்மேற்கு பகுதிக்கு சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலர் மதிப்புள்ள நிவாரணம் சென்றடைந்தது ( Kuhn 2009).

சுனாமிக்குப் பிந்தைய பல மீள்கட்டுமானத் திட்டங்கள் அரசியல் தொடர்புகள், அதிகார இயக்கங்கள் மற்றும் விருப்பங்களால் வடிவமைக்கப்பட்டன. இதன் விளைவாக, நியாயமற்ற மற்றும் மோதல் உணர்திறனற்ற உதவி விநியோகம், வளப் பகிர்வு மற்றும் கொள்கைத் தீர்மான நடைமுறைகள் மூலம், நிலவும் பாதிப்புகளை மேலும் மோசமாக்கியதோடு, புதிய பாதிப்புகளையும் உருவாக்கின. இந்தத் தவறான மேலாண்மை, சமத்துவமின்மைகளை ஆழப்படுத்தியதோடு மட்டுமல்லாமல், ஏற்கனவே நசுங்கியிருந்த சமூகங்களில் பதற்றத்தையும் அதிகரித்தது.

கடந்த 20 ஆண்டுகளில், இலங்கையானது ஆரம்ப எச்சரிக்கை அமைப்புகள், வெளியேற்றுதல் திட்டங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான திட்டங்கள் ஆகியவற்றின் மூலமாக அனர்த்த தயார்நிலையை மேம்படுத்தியுள்ளது. பாடசாலைகளில் அனர்த்த கல்வி மற்றும் ஒத்திகைகள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இருப்பினும், வளங்கள் மற்றும் வெளியேற்றுவதற்கான வழிகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலை எதிர்கொள்ளும் பெண்கள் உட்பட குறிப்பாக ஒதுக்கப்பட்ட குழுக்களுக்கு இடைவெளிகள் இன்னமும் உள்ளன. அனர்த்தங்களின் போது பெண்களின் பராமரிப்புப் பங்கும், நடமாடும் கட்டுப்பாடுகளும் அவர்களின் பாதிப்புகளை மேலும் அதிகரிப்பதுடன், இன மற்றும் சமூகப் பொருளாதார வேறுபாடுகள் சமமான அனர்த்த பதிலளிப்புக்குத் தடையாக உள்ளன.

## 4.5 மேற்பொருந்துகின்ற பால்நிலை கண்ணோட்டத்தில் காலநிலை மாற்றத்தின் துறைசார் தாக்கங்கள்

இலங்கையில் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் ஆழமான பல்துறைகளைக் கொண்டுள்ளதுடன், இது பெண்கள், இளைஞர்கள், வயதானவர்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களை பாரபட்சமான முறையில் பாதிக்கிறது. பால்நிலை, சமூகப் பொருளாதார நிலை மற்றும் பிராந்திய வேறுபாடுகளின் மேற்பொருந்துகையானது, மீண்டெழுதிறனுக்கான சமமற்ற பாதிப்புகளையும் வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. இந்த சவால்களை எதிர்கொள்ள, உள்ளடங்கல் மற்றும் மீண்டெழுதிறனுக்கு முன்னுரிமை அளித்து அதிகரித்து வரும் காலநிலை அழுத்தங்களுடன் நாடு போராடும்போது எந்தவொரு குழுவும் பின்தள்ளி விடப்படாமல் இருப்பதை உறுதிசெய்யும் இலக்கு சார்ந்த தலையீடுகள் அவசியமாகும்.

### உழைப்பு மற்றும் பராமரிப்பு சுமைகள்

இலங்கையில் காலநிலை மாற்றமானது, பல்வேறு குழுக்களில் உழைப்பு சுமைகளை பாரபட்சமான முறையில் அதிகரித்துள்ளதுடன், குறிப்பாக, பெண்கள், இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 2024 இல் ஏற்பட்ட நீண்ட வறட்சி, பெண்கள் நீர் கொண்டுவரவும், பயிர்களைப் பராமரிக்கவும் கூடுதலான மணிநேரத்தை செலவழிக்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கிய அதே நேரத்தில், விவசாய வருமானங்கள் குறைவடைந்ததால் பலர் துணை வேலைகளைத் தேட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர் ( Arulingam et al. 2024). முல்லைத்தீவில், நீர்ப்பாசன மற்றும் சந்தைகளுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகலால் ஏற்கனவே ஓரங்கட்டப்பட்ட பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வாழ்க்கைத் தேவைக்கான விவசாயத்திற்குத் திரும்பியுள்ளதுடன், இது நீண்டகால வறுமையை ஆழமாக்குகிறது ( FGD மற்றும் KII நேர்காணல்கள் 2025). வாழ்க்கைத் தேவைக்கான விவசாயம் என்பது காலநிலை மாறுபாட்டிற்கான ஒரு பாரம்பரிய தணிப்பு பொறிமுறையாகக் கருதப்பட்டாலும், இது வருமான ஈட்டல் மற்றும் பொருளாதார அசைவை கட்டுப்படுத்துவதன் மூலமாக நீண்டகால வறுமையை ஆழமாக்குகிறது. விவசாயிகள் முதன்மையாக தங்களது சொந்த நுகர்வுக்காக பயிரிடுவதால், விற்பனை செய்யவோ அல்லது சிறந்த கருவிகள் மற்றும் நுட்பங்களில் முதலீடு செய்யவோ மிகக் குறைவான உபரி மட்டுமே உள்ளது. வறட்சி அல்லது வெள்ளம் போன்ற காலநிலை அதிர்ச்சிகளுக்கு அதிகளவில் பாதிக்கப்படக்கூடிய வாழ்க்கைத் தேவைக்கான விவசாயம், பெரும்பாலும் குடும்பங்களை கடனில் சிக்க வைப்பதுடன், கல்வி, சுகாதாரம் மற்றும் பிற வாய்ப்புகளுக்கான அணுகலை கட்டுப்படுத்துவதுடன், இது தலைமுறைகள் தாண்டி வறுமை சுழற்சியைத் தொடரச் செய்கிறது.

வடக்கு மாகாணத்தில், பெண் தொழிலாளர் பங்கேற்பு 25 % மட்டுமே உள்ளதுடன், அங்கு வெப்ப அழுத்தமானது கடல்பாசி வளர்ப்புக்கான வாய்ப்புகளை கடுமையாக பாதித்துள்ளது. மட்டக்களப்பில், பெண்களும் பெண்பிள்ளைகளும் ஆழமற்ற நீரில் இறால் மற்றும் மீன்களைப் பிடிப்பதில் ஈடுபடுகின்றனர். ஆனால், அதிகரித்த மழை மற்றும் வெள்ளத்தால் அவர்கள் தொடர்ந்து ஈடுபடுவது கடினமாகிறது. இதனால், இந்த வேலைகள் அதிகளவில் ஆண்களுக்கும் சிறுவர்களுக்கும் மட்டுமே உரியதாகிவிட்டது. ஆழமான நீரில் நீந்துவதற்கு கலாச்சார ரீதியாக சாத்தியமில்லாத பெண்கள், குளிர்ந்த ஆழமான பகுதிகளுக்கு மாற்றப்பட்ட செயற்பாடுகளிலிருந்து விலக்கப்படுகிறார்கள் (Arudpragasam 2025). இதேபோல், பெண்களை வலுவூட்டுவதற்காக வடிவமைக்கப்பட்ட வன்னி முந்திரி நடவடிக்கையின் உற்பத்தித்திறனானது, வேலை நேரங்களைக் கட்டுப்படுத்துகின்ற வெப்பமான உட்புற வெப்பநிலையால் குறைந்துள்ளது (Arudpragasam 2025). பதுளை மற்றும் மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களில் உள்ள இளைஞர்கள், சீரற்ற வானிலை போக்குகளால் பாரம்பரிய வாழ்வாதாரங்கள் குறைந்த ஈர்ப்புள்ளதாக மாறுவதால், விவசாயத்தை சாத்தியமற்றதாக கருதுகின்றனர் ( FGD மற்றும் KII நேர்காணல்கள் 2025).

இந்த போக்கு கட்டுப்படுத்தப்படாமல் விடப்பட்டால், இது தொழிற்படையின் சுமார் 30 % பங்கு வகிக்கும் ஒரு முழுத் துறையையும் சீர்குலைக்கக்கூடும். இவ்வளவு பெரிய அளவிலான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால், இதன் விளைவாக ஏற்படும் பொருளாதார உறுதியற்ற தன்மை, குறிப்பாக ஏற்கெனவே பாதிக்கப்படக்கூடிய பிராந்தியங்களில் சமாதானம் மற்றும் சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கக்கூடும்.

மாவு அரைத்தல் மற்றும் மிளகாய் தூளிற்கு மிளகாய் அரைத்தல் ஆகியவை பெண்களுக்கு வாழ்வாதார விருப்பங்களாகப் பரிந்துரைக்கப்பட்டன. ஆனால், இது அரைக்கும் இயந்திரங்களுக்கான அணுகல் உள்ளவர்களுக்கு மட்டுமே சாத்தியமாகும். இதேபோல், வடக்கிலும் கிழக்கிலும் உள்ள பெண்களுக்கு மீன், மிளகாய், இஞ்சி மற்றும் மஞ்சள் ஆகியவற்றை உலர்த்துவது மாற்று வருமான ஆதாரங்களாக அடையாளம் காணப்பட்ட போதிலும் அவை அரிதாகவே பின்தொடரப்பட்டன.

அதற்கான காரணம் வினாவப்பட்ட போது, சந்தைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகுமுறை, சந்தைகளைச் சென்றடைந்தாலும் நியாயமான விலைகளைப் பெறுவதில் உள்ள சிரமம், மற்றும் பிள்ளைப் பராமரிப்பு, வீட்டு வேலைகள் போன்ற ஏற்கனவே எதிர்கொள்ளும் வேலைகளைச் சமாளிக்க முடியாத நிலையில் நம்பிக்கையின்மை காரணமாக எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு உந்துதலின்மை போன்ற தடைகளை எதிர்கொள்வதாகப் பெண்கள் விளக்கமளித்தனர்.

## இயற்கை அனர்த்தங்களில் மேற்பொருந்துகின்ற நலிவுநிலைகள்

இயற்கை அனர்த்தங்கள், பெண்கள், சிறுவர்கள், வயதானவர்கள், மற்றும் வறிய குடும்பங்கள் உட்பட நலிவடைந்த குழுக்களைப் பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் வளங்களுக்கான சமனற்ற அணுகுமுறை காரணமாக பாராபட்சமாக பாதிக்கின்றன. ஆண்களுக்கு நீந்துதல் மற்றும் மரம் ஏறுதல் போன்ற உயிர்காக்கும் திறன்கள் அதிகம் தெரிந்திருக்க வாய்ப்புள்ள அதேவேளைப் பெண்களுக்கு இணைய அணுகல் குறைவாக இருப்பதால், அவர்களுக்கு உரிய நேரத்தில் எச்சரிக்கைகள் கிடைப்பது குறைவாகும் (Caballero-Anthony et al. 2023). மறுபுறம், சில ஆதாரங்கள், பெண்களை விட ஆண்கள் ஆபத்தான நடவடிக்கைகளை எடுப்பதால், அனர்த்தங்களின் போது அவர்கள் அதிகமாக இறக்கக்கூடும் என்று கூறுவதுடன், இது சூழலுக்குத் தகுந்த ஒரு விபரிப்பினை அளிக்கிறது (BBC 2024).

பதுளையில், வயதான குடியிருப்பாளர்கள் தீவிர வானிலை நிகழ்வுகளின்போது தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்ந்ததாகத் தெரிவித்தனர், போதிய உட்கட்டமைப்பு மற்றும் வரையறுக்கப்பட்ட இடப்பெயர்வு உதவிகளை அவர்கள் மேற்கோள் காட்டினர் (குழு கலந்துரையாடல் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் 2025). இதற்கிடையில், கிளிநொச்சியில், பெண்கள் வெள்ளத்தின்போது உரிய நேரத்தில் வெளியேறுவதற்கான தடையாகக் கவனிப்புப் பொறுப்புகளை எடுத்துரைத்தனர், இது குடும்பங்களை மேலும் ஆபத்தில் ஆழ்த்துகிறது (குழு கலந்துரையாடல் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் 2025). மட்டக்களப்பில், மோதல்களின் போது கட்டாயமாக இடம்பெயர்ந்ததன் பாதிப்புகள் இன்னும் புதிதாக இருக்கும் நிலையில், சிங்கள ஆதிக்கம் செலுத்தும் இராணுவத்தால் செயல்படுத்தப்படும் அனர்த்த நிவாரண முயற்சிகள் தமிழ்ச் சமூகங்களிடையே குறிப்பிடத்தக்க நம்பிக்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன. வெள்ளத்தின்போது இடம்பெயர நேரிட்ட குடும்பங்களுக்கு மட்டுமே உணவு மற்றும் நிதி அனர்த்த நிவாரணம் வழங்கப்படும் நிலையிலும், பதிலளித்தவர்கள் மீளக்குடியமர்த்தப்படுவதற்குத் தயக்கம் தெரிவித்தனர், இது முக்கியமான உதவிகளுக்கான அவர்களின் அணுகுமுறையை மேலும் வரையறுக்கிறது.

## உணவுப் பாதுகாப்பின்மை

இலங்கையின் உணவுப் பாதுகாப்பு அதிகரித்து வரும் நெருக்கடியில் உள்ளது. நாட்டின் பிரதான பயிரான நெல், அதன் அதிகபட்ச வெப்பநிலையை நெருங்குவதுடன், உலர் வலயத்தில் அதன் விளைச்சல் 2080ஆம் ஆண்டளவில் 34 % வரை குறையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது (Esham et al. 2018). நுகர்வுக்கும் ஏற்றுமதிக்கும் அவசியமான தெங்கு உற்பத்தி, ஒரு மோசமான தெங்கு நோயால் தீவிரமாகப் பாதிக்கப்பட்டு, 2040ஆம் ஆண்டளவில் உள்நாட்டுத் தேவையைக் காட்டிலும் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது (Esham et al. 2018).

வனவிலங்குகளின் அத்துமீறல்களும் விவசாய உற்பத்தியை அச்சுறுத்துகின்றன. முல்லைத்தீவில் யானைகள் அடிக்கடிப் பயிர்களை அழிக்கின்ற அதேவேளை பதுளையில் குரங்குகள் சிறுபோகப் பண்ணைகளை நாசமாக்குகின்றன. இந்த அத்துமீறல்கள் விளைச்சலைக் குறைப்பது மட்டுமல்லாமல், விவசாய நிலங்கள் மீதான மோதல்களையும் அதிகரிக்கின்றன (Geldin 2025, FGD and KII நேர்காணல்கள் 2025).


இந்த இழப்புகளைத் தணிப்பதற்கான வளங்கள் பற்றாக்குறையாகவுள்ள இளைஞர்களும் வறிய விவசாயிகளும் குறிப்பாகப் பாதிக்கப்படுகின்றனர்.

இலங்கையில் உணவுப் பாதுகாப்பின்மை, பெரும்பாலும் வீட்டிற்குத் தேவையான உணவு வழங்கல்களை நிர்வகிக்கின்ற ஆனால் நிலம், வளங்கள் மற்றும் தீர்மானமெடுக்கும் அதிகாரத்திற்கான அணுகல் குறைவாக உள்ள பெண்களை பாராபட்சமான முறையில் பாதிப்பதுடன், இது அவர்களைக் காலநிலை அதிர்ச்சிகள் மற்றும் உயர்ந்துவரும் உணவு விலைகளின் பாதிப்புகளுக்கு ஆளாக்குகிறது. ஆண்கள், முதன்மை வருமானம் ஈட்டுபவர்களாக, உணவு நெருக்கடிகளின்போது வேலை தேடி புலம்பெயர்வதற்கு தள்ளப்படுவதுடன் இதனால் பெண்கள் மீதான பராமரிப்பு மற்றும் விவசாய சுமைகள் அதிகரிக்கின்ற அதேவேளைப் பெண்கள் குடும்பத் தேவைகளுக்குத் தங்களது சொந்தத் தேவைகளை விட முன்னுரிமை அளிப்பதால், ஊட்டச்சத்துக் குறைபாடு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு ஆளாகும் அபாயம் உள்ளதால் பால்நிலை சமத்துவமின்மை மேலும் ஆழமாகிறது.

## சக்தி

இலங்கையின் சக்தி உட்கட்டமைப்பு, காலநிலை மாற்ற விடயத்தில் அதிகரித்தளவில் பாதிக்கப்படக்கூடியதாக உள்ளது. நாட்டின் 40% மின்சாரத்தை உருவாக்கும் நீர் மின்சாரமானது, நீர்த்தேக்க நீர்மட்டங்களைக் குறைக்கும் வரட்சி மற்றும் வண்டல் படிமங்களை அதிகரிக்கும் கனமழையால் பலவீனப்படுத்தப்படுகிறது (IEA 2022). உயர்ந்துவரும் வெப்பநிலைகளும் சக்தித் தேவையை அதிகரிப்பதுடன், குளிரூட்டும் தேவைகள் 2040ஆம் ஆண்டளவில் 10 அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது (World Bank 2022a).

கடற்கரைச் சக்தி அமைப்புக்கள் கடல் மட்ட உயர்வு மற்றும் புயல் அலைகளால் கூடுதலான அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. அம்பாந்தோட்டையில் உள்ள சமுதாயங்கள், தீவிர வானிலை நிகழ்வுகளின்போது உள்ளூர் சக்தி உட்கட்டமைப்பின் மீண்டெழுதன்மை குறித்துக் கவலைகளைத் தெரிவித்தன (குழு கலந்துரையாடல் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் 2025).



இரவு நேர இறால் பிடித்தல், மட்டக்களப்பு மாவட்டம்

## மீன்பிடித் துறை

இலங்கையர்கள் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் பேருக்கு வாழ்வாதாரத்தின் முக்கிய மூலமாக உள்ள மீன்பிடித் துறையானது, கடல் வெப்பமயமாதல் மற்றும் அமிலமயமாதல் காரணமாக 2050ஆம் ஆண்டளவில் மீன் பிடிப்பு 20 % குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது (World Bank 2021b). மீன்பிடிக்கு பிந்தைய வேலைகளை முதன்மையாகச் செய்யும் பெண்கள், மீன் வளங்கள் குறைவதால் தங்கள் வருமானம் குறைவதைக் காண்கின்றனர்.

தங்காலையில், சிறிய அளவிலான மீனவர்கள் தங்களது மீன்பிடியை அதிகப்படுத்துவதற்காக LED விளக்கு மீன்பிடிக்கு மாறியுள்ளதுடன், இது மீன் வளங்களின் நிலைத்தன்மை குறித்துக் கவலைகளை ஏற்படுத்துகிறது.

(குழு கலந்துரையாடல் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் 2025). இதற்கிடையில், மட்டக்களப்பில், களப்பு நீர் உட்புகுதல் காரணமாகக் குளத்து மீன்பிடி குறைந்து வருவதாக மீனவர்கள் தெரிவித்தனர், இது அவர்களின் வாழ்வாதாரங்களை மேலும் அச்சுறுத்துகிறது (குழு கலந்துரையாடல் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் 2025). மீனவ சமுதாயத்தில் உள்ள இளைஞர்கள் இத்துறையை அதிகளவில் கைவிட்டு, அதற்குப் பதிலாக நகர்ப்புற புலம்பெயர்வு அல்லது நாளாந்த கூலி வேலைக்குச் செல்கின்றனர் (குழு கலந்துரையாடல் மற்றும் முக்கிய தகவல் அளிப்பவர் நேர்காணல்கள் 2025).

## சுகாதாரம்

உயர்ந்துவரும் வெப்பநிலை மற்றும் மாற்றமடைந்த மழைவீழ்ச்சி போக்குகள், குறிப்பாக வடக்கிலும் தெற்கிலும் டெங்கு மற்றும் லீஷ்மேனியசிஸ் போன்ற காவிகளால் பரவும் நோய்களின் பரவலை அதிகரிக்கின்றன (Geldin 2025). பெண்கள், வயதானவர்கள், மற்றும் ஏற்கனவே உடல்நலப் பிரச்சினைகள் உள்ளவர்கள் வெப்ப அழுத்தத்தால் சமமற்ற முறையில் பாதிக்கப்படுவதுடன், வெப்ப வெளிப்பாடானது முன்கூட்டிய பிரசவம் மற்றும் கருச்சிதைவு ஏற்படும் அபாயங்களுடன் இணைக்கப்பட்டுள்ள அதேவேளைப் பாரம்பரியப் பராமரிப்புப் பொறுப்புகள் பெரும்பாலும் பெண்களின் மருத்துவ அணுகலைத் தாமதப்படுத்துகின்றன (ADB மற்றும் Arudpragasam 2025).

குறிப்பாக விவசாய சமுதாயங்களில் நாள்பட்ட சிறுநீரக நோய் இன்னொரு வளர்ந்துவரும் கரிசனமாகும். அதிக வெப்பநிலை மற்றும் பீடைக்கொல்லி வெளிப்பாடு சிறுநீரக பாதிப்புடன் இணைக்கப்பட்டுள்ளதுடன், விவசாயப் பகுதிகளில் உள்ள ஆழமற்ற கிணறுகள் மாசுபாட்டின் முக்கிய மூலமாக விளங்குகின்றன. (Rajapakse et al. 2016).

## இடம்பெயர்வு

காலநிலை தொடர்பான அனர்த்தங்களால் ஏற்படும் இடம்பெயர்வு அதிகரித்து வருகிறது. 2024 இல், நீடித்த தென்மேற்குப் பருவமழை கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவில் 13,000க்கும் அதிகமான மக்களை இடம்பெயரச் செய்ததுடன், இது 2022 இல் 10,000 ஆக இருந்தது ( IDMC 2025). மோசமாகத் திட்டமிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களும் சமுதாயங்களை போதிய ஆதரவு இல்லாமல் இடம்பெயரச் செய்துள்ளதுடன், இது அவர்களின் பாதிப்புத்திறனை அதிகரிக்கிறது.

பாரம்பரிய வாழ்வாதாரங்கள் குறைந்த சாத்தியமுள்ளதாக மாறுவதால் இளைஞர்களின் புலம்பெயர்வு விரைவுபடுகிறது. மட்டக்களப்பில், இளைஞர்கள் விவசாயத்தை விட்டுவிட்டு நகர்ப்புற வேலைகளைத் தேடிச் செல்கின்றனர். “இளைஞர்கள் இனி விவசாயம் செய்ய விரும்புவதில்லை. அவர்களுக்கு அரசாங்க வேலைகள் வேண்டும், ஆனால் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய வேலைகள் இல்லை” என்று ஒரு தாய் ஆதங்கப்பட்டார் (குழு கலந்துரையாடல் 2025).

## தேயிலை தோட்டங்கள்

இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதியான தேயிலை, நாட்டின் சனத்தொகையில் சுமார் 10% பேருக்கு ஆதரவளிப்பதுடன், இதில் பெண் தொழிலாளர்கள் முக்கியமாக தேயிலை பறித்தல் மற்றும் களை பிடுங்குதல் போன்ற வேலைகளில் ஈடுபடுகின்றனர் United Nations Sri Lanka 2021; Mohotti and Mohotti 2020) பெரும்பாலான தோட்டங்கள் மழை நீரை நம்பியுள்ளதுடன், இதனால் அவை வரட்சி மற்றும் அதிக மழைவிழ்ச்சி உட்பட மாறிவரும் மழை போக்குகளுக்கு மிகவும் பாதிக்கப்படக்கூடியவையாக உள்ளன 'Mohotti and Mohotti 2020' உயர்ந்துவரும் வெப்பநிலைகள், தேயிலை விளையும் பிராந்தியங்களின் உகந்த தன்மையானது 2050க்குள் 14% ஆகவும், 2070க்குள் கிட்டத்தட்ட 30% ஆகவும் குறையும் என எதிர்பார்க்கப்படுவதால், கூடுதலான ஆபத்துகளை ஏற்படுத்துகின்றன (Mowbray 2024). உயர்ந்துவரும் வெப்பநிலைகள் மற்றும் தேயிலை விளையும் பிராந்தியங்களின் குறைந்த சாத்தியத்தன்மை, தங்களது வாழ்வாதாரங்களுக்காகத் தேயிலை விவசாயத்தை பெரிதும் நம்பியுள்ள தோட்டத் தொழிலாளர்களின் பொருளாதாரப் பாதுகாப்பை அச்சுறுத்துகின்றன. தொழிலாளர்கள் குறைந்த வேலை பாதுகாப்பு, குறைந்த வருமானம் மற்றும் அதிகரித்த பொருளாதாரப் பாதிப்புத்திறனை எதிர்கொள்கின்றனர். இது குறைவான சம்பளம், போதிய குடியிருப்பு வசதியின்மை மற்றும் கல்வி, சுகாதாரத்திற்கான வரையறுக்கப்பட்ட அணுகுமுறை போன்ற தற்போதைய சவால்களை அதிகரிக்கக்கூடும் என்பதுடன் பெருந்தோட்ட சமுதாயங்களில் வறுமைச் சுழற்சியை ஆழமாக்கலாம்.

## சுற்றுலா

2023இல், இலங்கையின் சுற்றுலாத் துறை கிட்டத்தட்ட 430,000 வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளித்ததுடன், இதில் 200,000 நேரடி வேலைகள் உள்ளடங்கும் அதேவேளை 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு நாணய வருவாயாக ஈட்டியதுடன் GDPக்கு 2.5% பங்களித்தது (Sri Lanka Tourism Development Authority 2024). சர்வதேச வருகைகள் பெருந்தொற்றுக்கு முந்தைய நிலைகளின் 88%க்குத் திரும்பியதுடன், பெரும்பாலான சுற்றுலாப் பயணிகள் கொழும்பு மற்றும் தெற்கு கடற்கரைக்குச் சென்ற அதே நேரம் வடக்கு ஒரு சுற்றுலாத் தலமாக அபிவிருத்தியடையாமல் உள்ளது (Kiringoda 2022).

சுற்றுலாத் துறை பெண்கள் மற்றும் ஆண்கள் இருவருக்கும் வேலைவாய்ப்பளிக்கிறது. இருப்பினும், இலங்கையின் சுற்றுலாத் துறையில் பெண்களின் பங்களிப்பு, முறைப்படுத்தப்பட்ட மற்றும் சமூகத் தடைகள் காரணமாகக் குறைவாக உள்ளது. பெண்கள் சனத்தொகையில் 55% ஆக இருந்தபோதிலும், 30-35% மட்டுமே பொருளாதார ரீதியாகச் சுறுசுறுப்பாக உள்ளதுடன், இதில் இன்னும் குறைவானவர்களே சுற்றுலா வேலைகளில் உள்ளனர் (Gunatilaka and Chandrasiri 2022). பலருக்கு சுற்றுலா தொடர்பான வேலை வாய்ப்புகள் குறித்த விழிப்புணர்வு இல்லை, அதேவேளை சமூக களங்கம், வேலை பாதுகாப்பு இன்மை, சமமற்ற சம்பளம் மற்றும் வரையறுக்கப்பட்ட தொழில் வளர்ச்சி போன்ற காரணிகள் அவர்களின் ஈடுபாட்டை பின்னடையச் செய்கின்றன. போதிய போக்குவரத்து, பாதுகாப்பு கரிசனங்கள், குடியிருப்பு வசதியின்மை மற்றும் நீண்ட வேலை நேரங்கள் போன்ற நடைமுறைப் பிரச்சினைகள், குறிப்பாகப் பராமரிப்புப்பொறுப்புகள் உள்ள பெண்களுக்கு அணுகலை மேலும் மட்டுப்படுத்துகின்றன.

கடற்கரைகள், தேயிலை தோட்டங்கள் மற்றும் வனவிலங்குகள் போன்ற முக்கிய சுற்றுலாத் தலங்கள் காலநிலை மாற்றத்தால் அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கின்றன. கடற்கரை சுற்றுலா கடல் மட்ட உயர்வு, அரிப்பு மற்றும் பவளப் பாறை வெளுறலால் பாதிக்கப்படுகின்ற அதேவேளை வனவிலங்கு சுற்றுலா மாறிவரும் புலம்பெயர்வு போக்குகளால் பாதிக்கப்படுகிறது (Arachchi 2024).

அதிக மழைவீழ்ச்சி மற்றும் நிலச்சரிவுகள் காரணமாக மலையேற்றம் உட்பட சாகசச் சுற்றுலா அதிகரித்து வரும் அபாயத்தில் உள்ளது (SLTDA 2024). இலங்கையின் சுற்றுலாத் துறையைப் பாதுகாப்பதானது, அதன் இயற்கை சுற்றுலாத் தளங்களைப் பாதுகாப்பதற்கு குறிப்பிடத்தக்க முதலீடுகளைக் கோருவதுடன், இது வருமானத்தை தக்கவைத்து, கடலோர சமுதாயங்களுக்கு ஆதரவளிக்க அவசியமானதாகும்.

முல்லைத்தீவு மற்றும் மட்டக்களப்பில் பதிலளித்தவர்களில் பலர், சுற்றுலாத் துறையின் சாத்தியக்கூறுகள் தடுக்கப்படுவதையும், இதில் உள்ள வேறுபாட்டையும் சுட்டிக்காட்டினர். உட்கட்டமைப்பில் போதிய முதலீடுகளை உறுதிப்படுத்துவது, நிதி அணுகலை மேம்படுத்துவது மற்றும் தமிழ் மற்றும் முஸ்லிம் பகுதிகளில் உள்ளடங்கலான வளர்ச்சியை ஊக்குவிக்கும் இலக்கு வைக்கப்பட்ட கொள்கை ஊக்குவிப்புகளை வழங்குவதன் மூலமாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்களப் பகுதிகளில் சுற்றுலா வளர்வதற்கு ஒரு சமமான மற்றும் சாத்தியமான சூழலை உருவாக்குவதன் மூலம் சாத்தியமாகும் நன்மைகள் இந்த மனக்குறையை குறைக்கலாம்.



குண்டுகளால் சேதமடைந்த கைவிடப்பட்ட கட்டிடங்கள், முல்லைத்தீவு மாவட்டம்

# 5 இலங்கை சூழல் மற்றும் போக்குகள்

## 5.1 குடித்தொகை விவரங்கள்

2025 ஆம் ஆண்டு நிலவரப்படி இலங்கையின் சனத்தொகை 21.8 மில்லியனாக உள்ளது (கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2025). பெரும்பான்மையினராக (74.9%) சிங்களவர்கள் உள்ளதுடன், குறிப்பிடத்தக்க சிறுபான்மையினராக இலங்கைத் தமிழர்கள் (11.2%), முஸ்லிம்கள் (9.3%) மற்றும் இந்தியத் தமிழர்கள் (4.1%) உள்ளனர் ( Bunse மற்றும் Murugani 2023 ). நாட்டின் மத வேறுபாடுகள் அதன் இன அமைப்பைப் பிரதிபலிப்பதுடன் பௌத்தம், இந்து மதம், இஸ்லாம் மற்றும் கிறிஸ்தவம் ஆகியவை முக்கிய மதங்களாகும்.

நிர்வாக ரீதியாக, இலங்கை ஒன்பது மாகாணங்களாகவும் 25 மாவட்டங்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளதுடன், அவை உள்ளூர் நிர்வாகம், அபிவிருத்தி மற்றும் அனர்த்த முகாமைத்துவத்தை கண்காணிக்கின்ற மாவட்ட செயலாளர்களால் ஆளப்படுகின்றன. இதற்கு கீழாக, பிரதேச செயலகங்கள் மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் சமூக மட்டத்தில் நிர்வாகத்தை கையாளுகின்றன.

நகரமயமாக்கல் அதிகரித்து வருவதுடன், 28% மக்கள் நகரமயமாக்கப்பட்டவர்களாக உள்ள அதேசமயம் 72% கிராமப்புறங்களில் உள்ளனர் (கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2025). கொழும்பு, கம்பஹா மற்றும் குருநாகல் ஆகியவை பொருளாதார வாய்ப்புகளால் உந்தப்பட்டு, முக்கிய நகர்ப்புற புலம்பெயர்வு மையங்களாக உள்ளன. குறைந்து வரும் பிறப்பு விகிதங்கள் மற்றும் வயதான மக்கள் தொகையின் போக்குகளைப் பிரதிபலித்து, சனத்தொகை வளர்ச்சி ஆண்டுக்கு 0.5% ஆக குறைந்துள்ளது.

14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் குடித்தொகையில் 24% ஆகவும், 65 மற்றும் அதற்கு மேற்பட்டவர்கள் 12.5% ஆகவும் உள்ளனர் (கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2025). இந்த சனத்தொகை மாற்றங்கள், நகரமயமாக்கல் போக்குகளுடன் சேர்ந்து, ஆளுகை மற்றும் அபிவிருத்தி முன்னுரிமைகளை பாதிக்கின்றன.

## 5.2 மோதலின் வரலாறு

இலங்கையின் உள்நாட்டுப் போரானது (1983-2009) பெரும்பான்மையான பௌத்த சிங்களவர்களுக்கும், பெரும்பான்மையான இந்து தமிழ் சிறுபான்மையினருக்கும் இடையே நடைபெற்றதுடன் இது குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் ஆழமான வடுக்களை விட்டுச் சென்றது. மொழி, கல்வி, பொருளாதார வாய்ப்புகள் மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் தொடர்பான குறைகளால் தூண்டப்பட்ட இந்த மோதலில் சுமார் 100,000 பேர் உயிரிழந்தனர் (ஆனந்தகுகன் 2020).

1956 இன் தனிச்சிங்கள சட்டம் மற்றும் சிங்கள மாணவர்களுக்கு ஆதரவான சீர்திருத்த செயலாக்கம் போன்ற வரலாற்று கொள்கைகள் தமிழ் சமூகங்களை ஓரங்கட்டியதுடன், இதனால் அரசாங்க சேவைகள் மற்றும் கல்விக்கான அணுகல் மட்டுப்படுத்தப்பட்டது (ஆனந்தகுகன் 2020). 1979 இன் பயங்கரவாதச் சட்டம் மற்றும் பிற நடவடிக்கைகள் பதட்டங்களை மிகையாக்கி, பரவலான மனித உரிமை மீறல்கள் தீவிரமயமாக்கலுக்கு பங்களித்தன (Bunse and Murugani 2023).

மோதலின் பாரம்பரியம் நிலைத்துள்ளதுடன், தீர்க்கப்படாத மனக்குறைகள் மற்றும் கட்டமைப்பு சமத்துவமின்மைகள் பிளவுகளை ஆழப்படுத்துகின்றன. வடக்கு மற்றும் கிழக்கில் தொடர்ச்சியான இராணுவமயமாக்கல் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் குறைகளை அதிகரிப்பதுடன், சமூக ஒருமைப்பாட்டை குறைமதிப்பிற்கு உட்படுத்தி தேசிய ஒற்றுமையை பலவீனப்படுத்துகிறது, மேலும் காணி அணுகலுக்கான மட்டுப்பாடுகள் காரணமாக இந்த பிராந்தியங்களில் காலநிலை மீண்டெழுதிறனை உருவாக்குவதற்கான முயற்சிகளைத் தடுக்கிறது. வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் குடும்பங்கள் காணி தகராறுகள் மற்றும் காணாமல் போன உறவினர்களுக்கு இறப்பு சான்றிதழ்கள் இல்லாதது போன்ற தடைகளை தொடர்ந்து எதிர்கொள்வதுடன், இது கடன்கள் மற்றும் சட்ட உரிமைகளுக்கான அணுகலை கட்டுப்படுத்துகிறது (கௌதமன் 2023, FGD மற்றும் KII மார்ச் 2025).

2012 முதல், சிங்கள மற்றும் பௌத்த தீவிர தேசியவாதம் அதிகரித்து வருவதுடன், இது தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்களை இலக்கு வைத்து அவ்வப்போது வன்முறைக்கு வழி வகுக்கிறது.

(Bunse and Murugani 2023) 2014, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் முஸ்லிம்களுக்கு எதிரான கலவரங்கள் மற்றும் வன்முறைகள் நிகழ்ந்தன (பன்மைத்தன்மைக்கான உலக மையம் 2023). இலங்கையின் சமூக ஒருமைப்பாடு 2019 இல் ஒரு இஸ்லாமிய தீவிரவாத குழுவால் தேவாலயங்கள் மற்றும் ஹோட்டல்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலை குண்டுவெடிப்புகளால் மேலும் சேதமடைந்தது (Bunse and Murugani 2023) முஸ்லிம் மற்றும் தமிழ் சமூகங்களைச் சேர்ந்த பதிலளிப்பாளர்கள், இந்த சம்பவத்திற்கும் உள்ளூர் முஸ்லிம்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை, அதற்கு ISIS க்கு காரணமாக இருந்தபோதிலும், ஒற்றுமைக்கு வேண்டுகோள் விடுப்பதற்கு பதிலாக, அப்போதைய அரசாங்கம் முஸ்லிம்களுக்கு எதிரான உணர்வைத் தூண்ட பயன்படுத்தியது என்று குறிப்பிட்டனர்.

இலங்கையில் உள்ள பெரும்பான்மைவாதம் ஆழமான சமத்துவமின்மை மற்றும் முரண்பாட்டிற்கு பங்களிப்பதுடன், இது அதிகாரத்துவத்தில் 90% மற்றும் இராணுவத்தில் சுமார் 96% க்கும் அதிகமான சிங்கள பிரதிநிதித்துவத்தால் சான்றளிக்கப்படுகிறது (பன்மைத்தன்மைக்கான உலக மையம் 2023). சிறுபான்மையினர் முக்கிய அரசாங்க பதவிகளை அரிதாகவே வகிக்கின்றனர் என்பதுடன், இது பெரும்பான்மையினரால் ஆதிக்கம் செலுத்தப்படும் தீர்மானமெடுக்கும் நிலைக்கு வழிவகுக்கிறது. 2021 இல், 32 தேசிய அரசாங்க அமைச்சுக்களில் எதுவும் இன மத சிறுபான்மையினரைச் சேர்ந்த தனிநபர்களால் தலைமை தாங்கப்படவில்லை (பன்மைத்தன்மைக்கான உலக மையம் 2023). மேலும், துணை தேசிய மட்டத்தில் உள்ள 42 இராஜாங்க அளவிலான அமைச்சுக்களில் ஒன்று மட்டுமே ஒரு சிறுபான்மை சமூகத்தின் உறுப்பினரால் வழிநடாத்தப்பட்டது



இலங்கையின் வடக்கில் போரினால் சேதமடைந்த கட்டிடங்கள் (c) விடு குணரட்னே

(பன்மைத்தன்மைக்கான உலக மையம் 2023). இந்த தடைகள், தீர்மானமெடுக்கும் செயன்முறைகளிலிருந்து பல்வேறு குழுக்களை விலக்குவதன் மூலம், அனைவருக்கும் மீண்டெழுதிறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகளை கட்டுப்படுத்துகின்றன. குறைகளை நிவர்த்தி செய்வதற்கும் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கும் உறுதியளித்த ஜனாதிபதி திசாநாயக்காவின் நிர்வாகத்தின் கீழ் நம்பிக்கை இருந்தாலும், முறையான சமத்துவமின்மைகள் தொடர்கின்றன.

அரசியல் வம்சங்களுடன் தொடர்பில்லாத முதல் பெண்மணியாக ஹரினி அமரசூரிய பிரதமராக நியமிக்கப்பட்டது, தலைமைத்துவத்தில் ஒரு மாற்றத்தை குறிக்கிறது. இருப்பினும், குறிப்பாக கூறப்படும் போர்க் குற்றங்களுக்கு பொறுப்புக்கூறுவதற்கும் சிறுபான்மையினருக்கு சமமான பிரதிநிதித்துவத்தை உறுதி செய்வதற்குமான நல்லிணக்க முயற்சிகள் சவால்களை எதிர்கொள்கின்றன. (கீனன் 2024).

காலநிலை மாற்றம் இலங்கையின் பிந்தைய மோதல் பாதிப்புகளை அதிகரிப்பதுடன், இது பல தசாப்தங்களாக கட்டமைப்பு பாகுபாடு மற்றும் இன தேசியவாத கொள்கைகளில் வேரூன்றிய சமத்துவமின்மைகள் மற்றும் மனக்குறைகளை ஆழப்படுத்துகிறது.

மோதல்களால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில், காணி உரிமைகள், இராணுவமயமாக்கல் மற்றும் வள ஒதுக்கீடு தொடர்பான தீர்க்கப்படாத குறைகள், காலநிலையினால் தூண்டப்பட்ட வாழ்வாதார இடையூறுகளுடன் மேற்பொருந்தி, சமூக இணக்கப்பாட்டை மேலும் நலிவடையச் செய்வதுடன், புதுப்பிக்கப்பட்ட பதட்டங்களுக்கான ஆபத்தை விளைவிக்கின்றன. இதேபோல், ஓரங்கட்டப்பட்ட சமூகங்களில், மக்கள் குடித்தொகையானது காலநிலை வேறுபாடு, பொருளாதார ரீதியான நிச்சயமற்ற தன்மை மற்றும் முறையான புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து கலவையான சவால்களை எதிர்கொள்வதுடன், இது வறுமை மற்றும் புறக்கணிக்கப்படுவதற்கான சுழற்சிகளை நிலைநிறுத்தி நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கான பரந்த முயற்சிகளை குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

## 5.3 பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் அமைதியின்மை

2022 இல் உச்சக்கட்டத்தை எட்டிய இலங்கையின் பொருளாதார நெருக்கடியானது, பல தசாப்த கால நிதி முகாமைத்துவ தவறுகளுடன் இணைந்த உலகளாவிய அதிர்ச்சிகளால் ஏற்பட்டது. தொடர்ச்சியான வரவுசெலவுத் திட்ட பற்றாக்குறைகள், வெளிநாட்டுக் கடன்களை சார்ந்திருத்தல் மற்றும் 2021 இல் இரசாயன உரங்களுக்கு தடை போன்ற கொள்கை தவறுகள் பொருளாதாரத்தை பலவீனப்படுத்தின. COVID-19 தொற்றுநோய் மற்றும் 2019 ஈஸ்டர் குண்டுவெடிப்புகள் சுற்றுலா போன்ற முக்கிய துறைகளை மேலும் அழித்ததுடன், அதன் GDP பங்களிப்பானது 2018 இல் கிட்டத்தட்ட 5% இலிருந்து 2020 இல் 0.8% ஆக குறைவடைந்தது (Perera 2023).

2022 அளவில், இலங்கை முதன்முறையாக தனது வெளிநாட்டுக் கடனை செலுத்தத் தவறியதுடன், உணவு மற்றும் எரிபொருள் பற்றாக்குறை, பணவீக்கம் மற்றும் மின்வெட்டு காரணமாக பரவலான போராட்டங்களைத் தூண்டியது.

அந்நிய செலாவணியை ஈட்டும் தொழில்களில் பாராபட்சமான அளவில் அதிகமாக வேலை செய்கின்ற குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் இந்தப் போராட்டங்களில் ஒரு முக்கிய பங்கை வகித்ததுடன், இது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ராஜினாமாவுக்கு வழிவகுத்தது (மாஷால் மற்றும் வரவிதா 2025).

ஜனாதிபதி திசாநாயக்காவின் தற்போதைய அரசாங்கம் பொதுமக்களின் அதிருப்தியை நிவர்த்தி செய்ய, விரிவான சமூகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிதி உட்பட, நலன்புரி நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இருப்பினும், 3 பில்லியன் அமெரிக்க டொலர் IMF கடனுடன் தொடர்புடைய சிக்கன நடவடிக்கைகள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் மற்றும் நலன்புரி திட்டங்களின் நிலைத்தன்மை மீதான அவற்றின் பாராபட்சமான தாக்கம் குறித்து கவலைகளை எழுப்பியுள்ளன (ஷாஹீட் 2025).

## 5.4 பால்நிலை, இயலாமை மற்றும் மேற்பொருந்துகை

இலங்கையின் ஊடக சூழலானது மொழியியல் மற்றும் கலாச்சார பிரிவுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில ஊடகங்கள் பெரும்பாலும் தனித்தனியாக செயற்படுகின்றன. சிங்கள ஊடகங்கள் முக்கியமாக சிங்கள பெரும்பான்மையை பாதிக்கும் பிரச்சினைகளில் கவனம் செலுத்துகின்ற அதேசமயம் தமிழ் ஊடகங்கள் தமிழ் பேசும் சிறுபான்மையினரின் கரிசனங்களை முன்னிலைப்படுத்துகின்றன. ஆங்கில ஊடகங்கள், மிகவும் சமநிலையாக இருந்தாலும், பெரும்பாலும் நகர்ப்புற உயரடுக்குக்கு சேவை செய்கின்றன (பன்மைத்தன்மைக்கான உலக மையம் 2023).

நிகழ்நிலை காப்புச் சட்டம் போன்ற சமீபத்திய சட்டங்கள் ஊடக சுதந்திரம் குறித்து கவலைகளை எழுப்பியுள்ளன. "தவறான அறிக்கைகளை" அரசாங்கம் நீக்குவதற்கு அனுமதிக்கும் ஏற்பாடுகள், குறிப்பாக தேர்தல்களுக்கு முன்னதாக எதிர்ப்பை அடக்கக்கூடும் என்று விமர்சகர்கள் வாதிடுகின்றனர் ( Ng 2024). சமூக ஊடகங்கள் 2022 போராட்டங்களின் போது ஒரு முக்கிய தகவல் தொடர்பாடல் கருவியாக இருந்தபோதிலும், இன மத பதட்டங்களை அதிகரித்துள்ளதுடன், உள்ளூர் முரண்பாடுகள் தேசிய பார்வையாளர்களுக்கு பெரிதுபடுத்தப்பட்டுள்ளன (Koralage 2024).

## 5.5 மாற்றமடையும் ஊடக தளம்

சுகாதாரம் மற்றும் கல்வி ஆகியவற்றில் பெண்களுக்கான நேர்மறையான சமூக அபிவிருத்தி குறிகாட்டிகள் இருந்தபோதிலும், இலங்கையில் பால்நிலை குறைகளுக்கு போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் அரசியல் பங்கேற்பதற்கான தடைகள் தொடர்கின்றன.

சுகாதாரம் மற்றும் கல்வியில் முன்னேற்றம் இருந்தபோதிலும், பால்நிலை சமத்துவமின்மைகள் தொடர்கின்றன. 2024 இல் பெண்களின் தொழிற்படை பங்கேற்பு சுமார் 30% ஆக குறைவாகவே உள்ளது (கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2024). மட்டுப்படுத்தப்பட்ட குழந்தை பராமரிப்பு, இரவு நேர வேலைக்கான கட்டுப்பாடுகள் மற்றும் பொது இடங்களில் பரவலான பாலியல் துன்புறுத்தல் போன்ற முறைப்படுத்தப்பட்ட தடைகளால் பெண்களின் வேலைவாய்ப்பு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது (குணதிலக மற்றும் சந்திரசிறி 2022).

வழக்காற்று சட்டங்கள் மற்றும் கலாச்சார விழுமியங்கள் ஆகியன திருமணம், மரபுரிமை மற்றும் சொத்து போன்ற பகுதிகளில் பெண்களின் உரிமைகளை மேலும் கட்டுப்படுத்துகின்றன.

வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள தமிழ் விதவைகள், காணாமல் போன குடும்ப உறுப்பினர்களுக்கு இறப்பு சான்றிதழ்கள் இல்லாததால், ஓய்வூதியங்களை அணுகுவது அல்லது காணி உறுதிகளை மாற்றுவது போன்ற தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர் Bunse and Murugani 2023).

பால்நிலை அடிப்படையிலான வன்முறை இலங்கையில் ஒரு பரவலான பிரச்சினையாக உள்ளதுடன், தொடர்ச்சியான தரவு சேகரிப்பில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் உள்ளன. 2015-2019 காலப்பகுதியை உள்ளடக்கிய கடுமையான குற்றங்கள் குறித்த கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் சமீபத்திய தரவானது, 2015 இல் 8,830 சம்பவங்களில் இருந்து 2019 இல் 6,831 ஆக மொத்த கடுமையான குற்றங்களின் நிகழ்வுகளில் குறைவினை காட்டுவதுடன், இதில் பெண்கள் தொடர்ந்து அரைவாசியனவான பாதிக்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் (கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2019). குற்றங்களின் வகைகளால் பிரிக்கையில், பெண்கள் பெரும்பாலும் கடத்தல் மற்றும் பாலியல் வன்புணர்விற்கு ஆளானவர்கள் என்பதுடன் கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளானவர்களில் பெரும்பான்மையானவர்களாவர் (கணக்காய்வு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2019).

இலங்கை பொலிஸ் திணைக்களம், துணை-மாவட்டம் வாரியாக பிரிக்கப்பட்ட கடுமையான குற்றங்களின் 2023 கண்ணோட்டத்தை வெளியிட்டிருந்தாலும் அது பால்நிலை ரீதியாக பிரிக்கப்பட்டிருக்கவில்லை (இலங்கை பொலிஸ் 2024).

இதன் மேற்பொருந்துகையானது, பெண் தலைமைத்துவ குடும்பங்கள், இயலாமை கொண்ட நபர்கள் மற்றும் LGBTQ+ நபர்கள் போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கான கூட்டு பாதிப்புகளை வெளிப்படுத்துகிறது.

இயலாமை கொண்ட நபர்களைக் கொண்ட குடும்பங்கள் அதிக பன்முகத்தன்மையான பாதிப்புகளை எதிர்கொள்வதுடன், மற்றைய குடும்பங்களின் 54.4 % உடன் ஒப்பிடும்போது சராசரி விகிதம் 60.4 % ஆகும் OPHI and UNDP 2023 இதற்கிடையில், ஒரே பால்நிலை உறவுகள் குற்றவியல் குற்றமாகவே இருப்பதுடன், LGBTQ+ சமுதாயம் பெரும்பாலும் சட்டப்பூர்வ நிவாரணம் இல்லாமல் வன்முறை மற்றும் பாகுபாட்டை எதிர்கொள்கிறது, (கொலுண்ட்ஜியா மற்றும் பலர் 2020).

இந்த சவால்கள் இருந்தபோதிலும், கொள்கை வகுப்பில் பால்நிலை சமத்துவத்தை அங்கீகரிப்பதில் அரசாங்கம் சில முன்னேற்றங்களை அடைந்துள்ளது. 2025 வரவுசெலவுத் திட்டம், பெண்கள் மற்றும் சிறுவர் விவகார அமைச்சிற்கு 45 பில்லியன் ரூபாய் (சுமார் 150 மில்லியன் USD ) ஒதுக்கப்பட்டுள்ளது, இது முந்தைய ஆண்டை விட 12 % அதிகரித்துள்ளதுடன், பால்நிலை சமத்துவத்தை நோக்கிய ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது. நுண்நிதி, தொழில்முனைவோர் மானியங்கள் மற்றும் திறன் மேம்பாடு மூலமாக பெண்களின் பொருளாதார வலுவூட்டலுக்காக 10 பில்லியன் ரூபாய் (சுமார் 33.3 மில்லியன் USD ) ஒதுக்கீடு ஆகியவை முக்கிய ஏற்பாடுகளில் உள்ளடங்கும். இருப்பினும், இந்த முன்முயற்சிகள் பெரும்பாலும் குறைந்த ஊதியம், சிறிய அளவிலான வணிகங்களில் கவனம் செலுத்துவதுடன், இது பெண்களை அதிக நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியை வழங்குகின்ற தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் போன்ற உயர் மதிப்பு துறைகளில் ஒருங்கிணைப்பதில் குறைவுபடுகிறது.

மேலதிகமாக, 1.4 பில்லியன் ரூபாய் (சுமார் 4.7 மில்லியன் USD ) பாடசாலை பெண்பிள்ளைகளுக்கு சுகநல நாப்கின்களை வழங்க ஒதுக்கப்பட்டுள்ளது, இது மாதவிடாய் சுகாதாரத்தை மேம்படுத்தவும் மற்றும் பாடசாலையிலிருந்தான விலகலை குறைக்கவும் ஒரு முக்கியமான நடவடிக்கை என்பதுடன், இதனால் கல்வியில் பால்நிலை சமத்துவத்தை ஊக்குவிக்கிறது. இருப்பினும், ஊதியம் இல்லாத பராமரிப்பு வேலை, பாகுபாடான சட்டங்கள் மற்றும் பெண்களின் அரசியல் மற்றும் பொருளாதார பங்கேற்பதற்கான முறையான தடைகளை நிவர்த்தி செய்வதில் குறிப்பிடத்தக்க இடைவெளிகள் உள்ளன.



அம்பாந்தோட்டை மாவட்டம், வீரவிலவில் வனவிலங்குகளால் அழிக்கப்பட்ட பயிர்கள்

# 6 சம்பவ ஆய்வுகள்

## 6.1 பதுளை

இலங்கையின் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள பதுளை, இரண்டாவது இடைப்பருவமழை மற்றும் தென்மேற்கு பருவமழைக் காலங்களில் அடிக்கடி ஏற்படும் மண்சரிவுகளால் மிகவும் பாதிக்கப்படக்கூடியதாகும். தேயிலை தோட்டங்கள் மற்றும் நீர்ப்பாசன விவசாயம் முதல் சுற்றுலா மற்றும் சிறியளவிலான பயிர்ச்செய்கை வரை அதன் மாறுபட்ட ஆனால் பலவீனமான வாழ்வாதாரங்கள் அதனது பெரும்பாலும் ஏழை மக்களை கடுமையான காலநிலை அதிர்ச்சிகளுக்கு வெளிப்படுத்துகின்றன (கெல்டின் 2025). சிங்களவர்கள், இந்தியத் தமிழர்கள் மற்றும் இலங்கை சோனகர்கள் பௌத்தம், இந்து மதம் மற்றும் இஸ்லாம் ஆகியவற்றைப் பின்பற்றும் மாவட்டத்தின் செழிப்பான இன மற்றும் மத வேறுபாடு, அனைத்தையும் உள்ளடங்கலான மற்றும் சூழலுக்கு குறிப்பான மீண்டெழுதிறன் உத்திகளின் தேவையை சுட்டிக் காட்டுகிறது.

விவசாயம் உள்ளூர் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்துவதுடன், தேயிலை, மரக்கறிகள் மற்றும் நெல் பிரதானமாக உள்ளன. ஆனால் காலநிலை மாற்றம் இப்பகுதியை சிரமத்திற்கு உள்ளாக்குகிறது. ஒழுங்கற்ற மழை, அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் தீவிர வானிலை நிகழ்வுகள் விவசாய சுழற்சிகளை சீர்குலைத்துள்ளன. ஐந்து தசாப்தங்களாக, ஊவா குறைந்தபட்ச வெப்பநிலை ஒரு தசாப்தத்திற்கு 0.12 °C உயர்ந்துள்ளதுடன் வடகிழக்கு பருவமழையின் போது மழை அதிகரித்துள்ளது, மற்ற பருவங்கள் குறைவாக எதிர்வு கூறக்கூடியனவாக மாறியுள்ளன (கெல்டின் 2025). மோசமான வள ஒதுக்கீடு, பலவீனமான அரசாங்க சேவைகள் மற்றும் பொருளாதார நெருக்கடி ஆகியவை புலம்பெயர்வு மற்றும் பால்நிலை வகிபாகங்களை மாற்றி, பெண்கள், ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் மற்றும் குறைந்த வசதி படைத்தவர்களுக்கான நலிவுகளை அதிகரிக்கின்றன.

## எல்லவின் சுற்றுலாத் துறை

ஊவா மாகாணத்தில் உள்ள ஒரு மலை கிராமமான எல்ல, அதன் மலை நிலப்பரப்புகள், மேகம் தொடும் காடுகள் மற்றும் தேயிலை தோட்டங்களுக்கு பெயர் பெற்ற ஒரு சுற்றுலா தளமாக உருவெடுத்துள்ளது. சுற்றுலாத் துறையானது அந்நிய செலாவணி ஈட்டல், வேலைவாய்ப்பு வாய்ப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாடு மூலம் உள்ளூர் பொருளாதாரத்திற்கு பங்களிக்கிறது.

எல்லவில் சுற்றுலாவின் விரைவான விரிவாக்கமானது அதிகரித்து வரும் காலநிலை மற்றும் நீரியல் அபாயங்களுடன் ஒத்துப்போகிறது. இப்பகுதி மண்சரிவுகள் மற்றும் மண் அரிப்பு ஆகியவற்றிலிருந்து வளர்ந்து வரும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்கிறது. இந்த இயற்கை அபாயங்கள் கட்டுப்படுத்தப்படாத கட்டுமானம், விரிவாக்கப்படும் உட்கட்டமைப்பு மற்றும் போதியதல்லாத கழிவு முகாமைத்துவ நடைமுறைகளால் மோசமடைகின்றன. காலநிலை பாதிப்புகள் மற்றும் அபிவிருத்தி அழுத்தங்களின் கலவையானது ஆரம்பத்தில் பார்வையாளர்களை ஈர்த்த சுற்றுச்சூழல் நிலைமைகளை சிதைத்து வருகிறது.

சமுதாய மட்டத்தில் பாதுகாப்பு கரிசனங்களும் உருவாகியுள்ளன. Pekoe Trai போன்ற முன்முயற்சிகள் குடியிருப்புப் பகுதிகளின் வழியாக கணிசமான எண்ணிக்கையிலான சுற்றுலாப் பயணிகளைக் கொண்டு வருவதால், நிலைபெற்றுள்ள சமூக போக்குகளுக்கு இடையூறுகளை ஏற்படுவதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்போதைய நிலைபேண்தகுதன்மையான முயற்சிகள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கான பாதுகாப்பு மற்றும் ஊடுருவல் பற்றிய மேற்பொருந்துகின்ற சுற்றுச்சூழல் அபாயங்கள், சமுதாய பாதுகாப்பு தேவைகள் மற்றும் கரினசங்களை போதுமான அளவு நிவர்த்தி செய்யவில்லை.

இந்த நிலைமை ஒரு குறிப்பிடத்தக்க சவாலை முன்வைக்கிறது: சுற்றுலாவின் பொருளாதார பெறுமதி இப்போது அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் பாதிப்புகள் மற்றும் சமுதாய கரிசனங்களுடன் பதட்டமான சூழலில் உள்ளது. காலநிலை தொடர்பான அபாயங்கள், குறிப்பாக அபிவிருத்தி போக்குகளால் தீவிரப்படுத்தப்பட்ட மண்சரிவுகள், குடியிருப்பாளர்கள் மற்றும் சுற்றுலாத் துறை இரண்டிற்குமான ஒரு நேரடி பாதுகாப்பு அச்சுறுத்தலைக் குறிக்கின்றன.

### பதுளையில் காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் தொடர்பான சவால்கள்

ஒரு வாரத்தில் திடீரென பெய்யும் கனமழை வயல்களை வெள்ளமாக்குகிறது, அடுத்த வாரம் இடைவிடாத சூரியனின் கீழ் வறண்ட மண் விரிசல் அடைகிறது, அத்துடன் தலைமுறைகளாக பின்பற்றப்பட்ட பயிர் சுழற்சிகளை குழப்பும் காலத்திற்கு ஒவ்வாத வெப்பநிலை மாற்றங்கள் பயிர் செய்யும் அறிவை சீர்குலைக்கின்றன. 1974 மற்றும் 2022 க்கு இடையில், பதுளை மாவட்டம் எந்தவொரு மாகாணத்திலும் வெள்ளத்தால் ஏற்பட்ட மிகக் கடுமையான பயிர் சேதத்தை அனுபவித்தது Alahacoon et al. 2024).

வெலிமடையில் உள்ள உருளைக்கிழங்கு விவசாயிகள் சீரற்ற மழை மற்றும் காற்றின் போக்குகள் தங்கள் அறுவடைகளை பாதிக்கிறது என்று தெரிவித்துள்ள அதேசமயம் மற்ற இடங்களில் உள்ள விவசாயிகள் மாறிவரும் நீர் கிடைப்பிற்கு ஏற்ப பாரம்பரிய பயிர்களில் இருந்து பூக்களுக்கு மாறுகின்றனர்.



எல்லே, பதுளை மாவட்டம், இலங்கை (c) ஏடிஎன் பௌலன்ஜேர் / அன்ஸ்பிளாஷ்

மாவட்டத்தின் மலைப்பாங்கான நிலப்பரப்பு அதை மண்சரிவுகளுக்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியதாக ஆக்குவதுடன், இது காடழிப்பு, மட்டுப்படுத்தப்படாத கட்டுமானம் மற்றும் நிலைபேண் தன்மையற்ற விவசாய நடைமுறைகளால் மோசமடைந்த ஒரு தொடர்ச்சியான ஆபத்து என்பதுடன் இந்த பிரச்சினைகளை பைன் மரங்களை பரவலாக நடுவது மூலம் மோசமடைந்த மண் வளங்குன்றலை மேலும் அதிகரிக்கிறது. மோதலுக்குப் பிந்தைய இலங்கையில், நிர்வாகத்தின் மீதான நம்பிக்கை பலவீனமாக உள்ளதுடன், இந்த சுற்றுச்சூழல் அபாயங்களை குறிப்பாக இன மற்றும் சமூக பொருளாதார சமத்துவமின்மைகள் தொடரும் பதுளை போன்ற பிராந்தியங்களில் சமமாக நிவர்த்தி செய்யத் தவறுவதானது ஏற்கனவே உள்ள குறைகளை ஆழமாக்கலாம்.

தொழில்துறை நோக்கங்களுக்காக வரலாற்று ரீதியாக நிறுவப்பட்ட பைன் தோட்டங்களில், நீர் தக்கவைப்பு திறன் குறைந்து, நீர் பற்றாக்குறை அதிகரித்து, மண் அரிப்புக்கு பங்களிக்கிறது. பரணகமவில், சமுதாய உறுப்பினர்கள் குறைந்து வரும் நீர் அணுகல் குறித்த ஒரு பிரச்சினை குறிப்பாக பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை குழுக்களுக்கு இடையே சமுதாய உறவுகளை எவ்வாறு கடினப்படுத்துகிறது என்பது குறித்த விவரங்களைப் பகிர்ந்து கொண்டனர். இத்தகைய பிரச்சினைகள் சுற்றுச்சூழல் சீரழிவு சமூக சமத்துவமின்மைகள் மற்றும் இனப் பிளவுகளுடன் எவ்வாறு மேற்பொருந்துகிறது என்பதை சுட்டிக்காட்டுவதுடன், இது போரின் பாரம்பரியங்களுடன் இன்னும் போராடும் ஒரு நாட்டில் சமூக ஒருமைப்பாடு மேலும் நலிவடையும் ஆபத்துக்குள்ளாக்குகிறது. இருப்பினும், இந்த பிரச்சினை ஒரு உள்ளூர் சிவில் சமூக அமைப்பின் ஆதரவுடன் தீர்க்கப்பட்டது, இந்த சவால்களை நிவர்த்தி செய்வதில் சமூகத்தால் வழிநடத்தப்படும் முன்முயற்சிகளின் முக்கிய பங்கை நிரூபிக்கிறது.

## வனவிலங்குகளிலிருந்தான தாக்கங்கள்

இந்த சவால்களுடன், மனித வனவிலங்கு மோதலின் வளர்ந்து வரும் பிரச்சினையும் உள்ளது. மயில்கள், குரங்குகள், காட்டுப்பன்றிகள் மற்றும் முள்ளம்பன்றிகளால் பயிர் அழிவு அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்ற அதேசமயம் மயில்களின் இயற்கை வேட்டையாடிகளான நரிகளின் சரிவு நிலைமையை மோசமாக்கியுள்ளது.

யானைகளும் சில பகுதிகளில் பயிர்கள் மற்றும் மனித பாதுகாப்புக்கு ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. காலநிலை மாற்றம் காரணமாக இடைநிலை வலயத்தில் உள்ள இனங்களுக்கு அச்சுறுத்தல் போன்ற ஊவா மாகாணத்தில் உள்ள உயிர்ப்பல்வகைமை சவால்கள், மனித வனவிலங்கு இடைவினைகளை மறைமுகமாக அதிகரிக்கலாம். வீட்டு உணவுப் பொருட்களை நிர்வகிப்பதற்கு பெரும்பாலும் பொறுப்பாகவுள்ள பெண்கள் மேலதிக உழைப்பு அல்லது வள முகாமை மூலமாக பயிர் இழப்புகளுக்கு ஈடுசெய்வதால் இந்த நெருக்கடிகளின் சுமையை தாங்குகிறார்கள்.

## சமூகப் பொருளாதார மற்றும் பால்நிலை பரிமாணம்

பதுளையில், ஆழமாக வேரூன்றிய சமத்துவமின்மையானது வர்க்கம், பால்நிலை மற்றும் காலநிலை மாற்றத்தின் கடுமையான யதார்த்தங்களால் வடிவமைக்கப்பட்டு அன்றாட வாழ்க்கையை வரையறுக்கிறது. பொருளாதார அழுத்தங்கள் மற்றும் புலம்பெயர்வு குடும்ப உறுப்பினர்களை விலக்கிச் செல்வதால், ஒரு காலத்தில் ஆண்களின் ஆதிக்கத்தில் இருந்த விவசாயம் மற்றும் சிறு தொழில்களில் இப்போது பெண்கள் ஈடுபடுகின்றனர்.

> "இது இன்னமும் ஒரு கனவு போல... எங்களது நாடு இன்னமும் "அனைவருக்கும் சமமான பாதுகாப்பை" தேடிக்கொண்டிருக்கிறது."
>
> \- ஊவா சக்தி அறக்கட்டளை

சமீபத்திய பொருளாதார நெருக்கடி மற்றும் இரசாயன உரங்கள் மீதான திடீர் தடை ஆகியவை கிராமிய சமுதாயங்களை கடுமையாக பாதித்துள்ளன. பாரம்பரிய வாழ்வாதாரங்கள் இந்த சவால்களின் கீழ் போராடும்போது, குடும்பங்கள் உயிர்வாழ்வதற்கு புதிய வழிவகைகளைத் தேடி அலைகின்றன.

> "ஒரு அரச வேலை கிடைத்திருந்தால் இலகுவாகவும், அதிக சம்பளத்துடனும் இருந்திருக்கும் என்று நினைக்கிறேன், ஆனால் இது (விவசாயம்) தான் எனக்குத் தெரிந்த ஒரே வேலை."
>
> \- அமல், ஆண், விவசாயி, 57, புத்தல

பல குடும்பங்களுக்கு புலம்பெயர்வானது ஒரு சமாளிப்பு உத்தியாக மாறியுள்ளதுடன், இது வருமானம் ஈட்டுவதற்கான வாய்ப்புகளையும், சிறந்த பொருள்சார் நல்வாழ்வையும் வழங்குகிறது, ஆனால் புதிய நலிவுகளையும் உருவாக்குகிறது. உதாரணமாக, ஆண்கள் இல்லாமையால் பெண்களை வீடுகளை நிர்வகித்தல் மற்றும் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் ஆகிய இரண்டின் சுமையையும் சுமக்க வேண்டியேற்படுகிறது. அத்துடன், இது ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த தீர்மானமெடுக்கும் இடங்கள் மற்றும் நிதி வலையமைப்புகளுக்கான அணுகலையும் கட்டுப்படுத்துகிறது. இடம்பெயர்வு, வயதானவர்களை இழத்தல் அல்லது சிதைந்த சமுதாய வலைப்பின்னல்கள் காரணமாக பாரம்பரிய அறிவு அமைப்புகளின் சிதைவானது சிலரால் வினைத்திறனாக இசைவாக்கமடைய முடியாமல் செய்வதுடன், இது அதிக மற்றும் குறைவான மீண்டெழுதிறன் கொண்ட சமுதாயங்களுக்கு இடையிலான இடைவெளியை மேலும் விரிவுபடுத்துகிறது.

இளைஞர்களின் புலம்பெயர்வானது கிராமிய சமுதாயங்களை சிரமத்தில் ஆழ்த்தியுள்ளதுடன், ஒருவருக்கொருவர் உதவும் பாரம்பரிய முறைமைகள் குறைவடைந்து, வறுமை ஆழமடைந்து வருகிறது. ரஹங்கலா போன்ற இடங்களில், சில இளைஞர்கள் தங்கியிருந்து நவீன விவசாய முறைகளில் ஆர்வம் காட்டி வருவதுடன், இது சரியான ஆதரவுடன், அவர்கள் வலுவான, நிலையான வாழ்வாதாரங்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையை அளிக்கிறது.

பெருந்தோட்ட சமுதாயங்களில் உள்ள பெண்களும், சிறு குழந்தைகளைக் கொண்ட மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட குழந்தை பராமரிப்பு வசதி கொண்ட பெண்களும், இந்த சமூகப் பொருளாதார மாற்றங்களால் பாராபட்சமான முறையில் பாதிக்கப்படுகின்றனர்.

அவர்கள் சமமற்ற ஊதியம், சுரண்டல் நிறைந்த வேலை நிலைமைகள், மற்றும் நிதி ஆதாரங்கள் அல்லது தீர்மானமெடுக்கும் இடங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர். நுண்கடன் திட்டங்கள் அதிக வட்டி விகிதங்கள் மற்றும் மோசமான நிதியியல் அறிவு காரணமாக பெரும்பாலும் கடன்களுக்கு வழிவகுக்கின்றன.

### சிலருக்கு மீண்டெழுதிறன்

> "விவசாயத் திணைக்களம் எங்களுக்கு புதிய முறைமைக்கான பயிற்சி மற்றும் அறிவை வழங்கியது, ஆனால் தகுதி பெறுவதற்கு, நீங்கள் விவசாயிகள் சங்கத்தால் பரிந்துரைக்கப்பட்டு குறைந்தது அரை ஏக்கர் நிலத்தை சொந்தமாக வைத்திருக்க வேண்டும்."
>
> \- ரவி, ஆண், விவசாயி, 60, சப்புகொல்ல

இந்த அதிகாரத்துவத் தேவைப்பாடுகள் குறிப்பாக, காணி உரிமைகள் சமமற்றதாகவும், தீர்க்கப்படாத காணிப் பிரச்சினைகள் தொடர்ந்து காணப்படும் மோதலுக்குப் பிந்தைய பகுதிகளில் இது பெரும்பாலும் சிறிய மற்றும் ஓரங்கட்டப்பட்ட விவசாயிகளை விலக்கி விடுகின்றன. இத்தகைய ஓரங்கட்டல்கள் முக்கியமான வளங்களுக்கான அணுகலை மட்டுப்படுத்துவது மட்டுமல்லாமல், ஏற்கனவே பாதிக்கப்படக்கூடிய சமுதாயங்களிடையே குறைகளை ஆழப்படுத்துவதற்கும், புறக்கணிப்பு உணர்வுகளை வலுப்படுத்துவதற்கும் காரணமாகின்றன.

நிதித் தடைகளை சமாளித்தவர்களுக்கு முதன்மையாக ஆண்கள், சில பெண்களும் கூட விளைவுகள் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபட்டிருந்தன. புதிய முயற்சிகளின் சாத்தியக்கூறை நிரூபிக்க தனிப்பட்ட கடன்களைப் பெற்ற பின்னர், நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியைப் பெற்ற பதுளையில் உள்ள விவசாயிகள், நவீனமயமாக்கப்பட்ட மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட விவசாய அணுகுமுறைகள் மூலம் மேம்பட்ட மீண்டெழுதிறனை வெளிப்படுத்தினர்.

உதாரணமாக, வெலிமடையில் உள்ள ஒரு விவசாயி, பூ விவசாயத்திற்கு மாறி, காணி வாங்குவதற்காக கடன் பெற்று நிதியியல் ஸ்திரத்தன்மையை அடைந்தார். இருப்பினும், 2019 முதல் அரசாங்க ஆதரவு குறைவடைந்ததுடன் விதை இறக்குமதி கட்டுப்பாடுகள் சிறு விவசாயிகளுக்கு தடைகளை உருவாக்கியுள்ளன.

இதேபோல், மற்ற விவசாயிகள் காளான் மற்றும் வாசனை திரவிய பயிர்களுக்கு மாறியுள்ளனர் அல்லது ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் மண் வளங்குன்றலிருந்து ஏற்படும் அபாயங்களைக் குறைக்க பொலித்தீன் கூடாரத்திலான விவசாயம், மூடுபயிர் மற்றும் ஸ்மார்ட் விவசாயம் போன்ற நுட்பங்களை ஏற்றுக்கொண்டுள்ளனர். விளைவுகளை மேம்படுத்துவதற்கு இந்த நுட்பங்களை பாரம்பரிய மற்றும் உள்ளூர் அறிவுடன் ஒன்றிணைக்க வேண்டும் என்று பலர் கூறினர்.

ஒரு உருளைக்கிழங்கு விவசாயி புதிதாக வழங்கப்பட்ட குளிர் சேமிப்பு அமைப்பின் நன்மைகளைக் குறிப்பிட்டார், ஆனால் உற்பத்தித்திறனை மேலும் மேம்படுத்தக்கூடிய பசுமை இல்லங்கள் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்பங்களுக்கான ஆரம்ப ஆதரவு இல்லாததை வலியுறுத்தினார்.

இந்த வெற்றிகள் இருந்தபோதிலும், விவசாயிகள் உயர்ந்து வரும் உள்ளீட்டு செலவீனங்கள், அரசாங்க ஆதரவு பற்றாக்குறை மற்றும் விதை மற்றும் உர வழங்கலை கட்டுப்படுத்தும் ஏகபோகங்கள் ஆகியவற்றுடன் போராட்டங்களை எதிர்கொள்கின்றனர். தங்களது கடினமான முன்னேற்றம் நழுவிச் செல்வதைத் தடுப்பதற்கு வளங்களுக்கான நியாயமான அணுகல், தொடர்ச்சியான ஆதரவு மற்றும் சிறந்த உட்கட்டமைப்பு ஆகியவை அவசரமாக தேவைப்படுவதாக பலர் வலியுறுத்தியுள்ளனர்.

## அரசாங்க சேவைகள்: இடைவெளிகளும் சார்புகளும்

பதுளையில், ஆழமான சமத்துவமின்மை இனக்குழு, வர்க்கம் மற்றும் பாலின அடிப்படையில் இயங்குவதுடன், யார் வளங்கள் மற்றும் வாய்ப்புகளை அணுகுகிறார்கள் என்பதை வடிவமைக்கிறது. ஊவா மாகாணம் பால்நிலை பொறுப்புணர்வு மதிப்பீட்டில் 100-க்கு 19.67 மதிப்பெண்களை மட்டுமே பெற்றதுடன், இது பெண்களின் பங்கேற்பு பற்றாக்குறை மற்றும் பால்நிலை மற்றும் சமூக பன்முகத்தன்மையை ஆளுகையில் ஒருங்கிணைக்கத் தவறியதை எடுத்துக்காட்டுகிறது (UNDP 2021).

> "விவசாய அதிகாரி எங்களிடம் தக்காளி செடிகளை நாங்கள் வழக்கமாகப் பயன்படுத்தும் 25 அங்குலத்திற்குப் பதிலாக 18 அங்குல இடைவெளியில் நடும்படி கூறினார். இது அவற்றின் வளர்ச்சியை கடுமையாகத் தடுத்துள்ளது. அடுத்த முறை, நான் பாரம்பரிய முறையைப் பின்பற்றுவேன்."
>
> - பிரதீப், ஆண், விவசாயி, 54, சப்புகொல்ல

ஒரு முஸ்லிம் கோழிப் பண்ணை விவசாயி, அரசாங்க வள ஒதுக்கீடு பெரும்பாலும் பணம் மற்றும் சமூக தொடர்புகள் உள்ளவர்களுக்கு சாதகமாக இருப்பதாகவும், ஏழை சமுதாயங்கள் சேவைகளை அணுகுவதற்காக அல்லது தங்களது குரல்களைக் கேட்பதற்காக போராடுவதாகவும் தெரிவித்தார். இது இனக்குழு அல்லது மதத்தை விட நிதி நிலைமையே யாருக்கு ஆதரவு கிடைக்கும், யார் பின்தங்கி விடுகிறார்கள் என்பதை தீர்மானிக்கும் ஒரு கடுமையான யதார்த்தத்தை பிரதிபலிக்கிறது.

பதுளையில், சமமற்ற வள ஒதுக்கீடு, வரையறுக்கப்பட்ட வெளிப்படுத்துகை மற்றும் கிடைக்கக்கூடிய நிகழ்ச்சித்திட்டங்களைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமை போன்ற தொடர்ச்சியான சவால்களை எதிர்கொள்ள மிகவும் பயனுள்ள அரசாங்க ஆதரவுக்காக சமூகங்கள் ஆவலுடன் உள்ளன.

விவசாயிகள் விவசாய அலுவலர்களிடமிருந்தான செயன்முறை, உள்ளூர் தகவலறிந்த வழிகாட்டுதல் மற்றும் விலை குறைவான உரம் போன்ற அத்தியாவசிய வளங்களுக்கான நியாயமான அணுகல் ஆகியவற்றிற்கான தேவைக்கு குரல் கொடுத்தனர். உயர்ந்து வரும் செலவீனங்கள் பலரை வீட்டில் தயாரிக்கப்பட்ட உரங்களை உருவாக்கத் தூண்டியுள்ளதுடன், இது அவசியத்தின் காரணமாகப் பிறந்த ஒரு அணுகுமுறையாகும், ஆனால் இது பெரும்பாலும் குறிப்பிடத்தக்க உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழல் அபாயங்களுடன் வருகிறது. விவசாயிகள் பாதுகாப்பான, நிலையான நடைமுறைகளை பின்பற்றுவதை உறுதி-செய்வதற்கும், அவர்கள் எதிர்கொள்ளும் நிதிச் சுமையை குறைப்பதற்கும், தொழில்நுட்ப உதவி மற்றும் சிறந்த தொடர்புக்கான அவசரத் தேவையை இந்த பிரச்சினைகள் எடுத்துக்காட்டுகின்றன.

## சுகாதாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகள்

பதுளையில் உள்ள சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதார சவால்கள் உயர்ந்து வரும் உடல்நலம் மற்றும் சமூக பாதிப்புகளுடன் நெருக்கமாக தொடர்புடையவையாகும். குறிப்பாக பெருந்தோட்ட சமூகங்களில் சிறுநீரக நோய் ஒரு வளர்ந்து வரும் கரிசனமாக உள்ளதுடன், அங்கு மோசமான நீர் தரம் மற்றும் மாறிவரும் விவசாய நடைமுறைகள் மண்ணின் இரசாயன அமைப்பை மாற்றியுள்ளன. சமுதாயங்கள் செலவு குறைவான மற்றும் வினைத்திறனான சுகாதார சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் குறித்து அறிக்கையிட்டன. பலர் தனியார் வழங்குநர்களை நம்பியுள்ளதுடன், அவை பெரும்பாலும் மிகவும் விலை உயர்ந்தவை, இதனால் நலிவடைந்த குழுக்கள் போதுமான மருத்துவ கவனிப்பு இல்லாமல் இருக்கின்றனர். குறிப்பாக பெருந்தோட்ட மற்றும் தொலைதூர கிராமப்புறங்களில் மது அருந்துதல், குடும்ப வன்முறை மற்றும் இளம் வயது கர்ப்பங்களும் அதிகரித்து வருகின்றன. இந்த பிரச்சினைகளை பொருளாதார அழுத்தம், சமூக தனிமைப்படுத்தல் மற்றும் வரையறுக்கப்பட்ட வீதி உட்கட்டமைப்பு ஆகியவை அதிகப்படுத்துகின்றன.

இந்த சமுதாயங்களில் உள்ள பெண்கள், வேலை, வீட்டு முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றின் சுமையுடன் போராடுவதால், குறிப்பிடத்தக்க உளவியல் சமூக அழுத்தத்தை எதிர்கொள்கின்றனர். இந்த சவால்களுடன், விவசாயச் செலவீனங்கள் அதிகரிப்பது உணவுத் தெரிவுகளில் மாற்றங்களுக்கு வழிவகுத்துள்ளது. "நமது சொந்த உணவை வளர்ப்பதும் விற்பதும் அதிக செலவாகும் போது, நாங்கள் மக்கள் சாப்பிடும் உணவில் மாற்றங்களை கவனித்தோம். கிராமங்களில் நூடுல்ஸ், ரொட்டி மற்றும் பிஸ்கட் போன்ற துரித உணவுகளை மக்கள் அதிகம் நாடி வருகிறார்கள்," என்று ஒரு சமுதாய உறுப்பினர் பகிர்ந்து கொண்டதுடன், இது பொருளாதார அழுத்தங்களால் உந்தப்பட்ட உணவுகளில் ஏற்பட்ட ஒரு மாற்றத்தை பிரதிபலிக்கிறது.

**மீண்டெழும் திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள்: பதுளை மாவட்டத்திற்கான பிரத்தியேக பரிந்துரைகள்**

**1. விவசாயத்தின் மீண்டெழுதன்மையை வலுப்படுத்துதல்:**

- காலநிலை மாற்றங்களால் ஏற்படும் மழைவீழ்ச்சி மற்றும் மண் அரிப்புப் பிரச்சினைகளை சமாளிக்க, வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர்கள் மற்றும் மூடுபயிர்களை வளர்த்தல், காடு வளர்த்தல் போன்ற நிலைபேண்தகு விவசாய முறைமைகளை ஊக்குவித்தல்.
- குறிப்பாக சிறியளவிலான விவசாயிகளுக்காக மழையை நம்பியுள்ள விவசாயத்தை மட்டும் சார்ந்திருப்பதைத் தவிர்த்து, சமுதாயத்தால் வழிநடாத்தப்படும் நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு முறைகளை நிறுவுதல்.
- பெண்கள், இளைஞர்கள் மற்றும் நலிவடைந்த குழுக்களுக்கு காலநிலைக்கு உணர்திறனுடைய ஸ்மார்ட் விவசாய பயிற்சிக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலமாக உள்ளடங்கலான பங்கேற்பை உறுதிப்படுத்தல்.

**2. கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்:**

- பெருந்தோட்டப் பகுதிகளில் குப்பைகள் குவிவதைத் தடுக்க, உரம் தயாரித்தல் மற்றும் மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட சமுதாய அடிப்படையிலான திண்மக்கழிவு முகாமைத்துவ முறைமைகளை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைப்பதோடு, தூய்மையான ஆற்றலை உருவாக்கும் கழிவிலிருந்து ஆற்றல் உருவாக்கும் முன்முயற்சிகளுக்கு (waste-to-energy) மானியங்கள் அல்லது சலுகைகளை வழங்குதல்.

**3. வனவிலங்கு மோதல்களுக்கு தீர்வு காணுதல்:**

- யானை வேலி போன்ற சமுதாயத்தால் நிர்வகிக்கப்படும் வனவிலங்கு தடுப்பு அமைப்புகளை அமுல்படுத்தி, அனுமதி மற்றும் வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்தல்.
- வனவிலங்குகளால் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டு திட்டங்கள் மற்றும் மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குதல்.

**4. இளைஞர்களின் பங்கேற்பு மற்றும் வாழ்வாதாரம்:**

- புலம்பெயர்வுகளை குறைக்கவும், உள்ளூர் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்கவும், விவசாயம் அல்லாத துறைகளில் (உதாரணமாக, சூழல் நேய - சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க ஆற்றல்) பால்நிலை உணர்திறனான இளைஞர் தொழில்முனைவோர் நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்.
- இளம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கு சூரியப் படல்களை நிறுவுதல் அல்லது சேதன விவசாயம் போன்ற நிலைபேண்தகு தொழிற்துறைகளில் கலாச்சார உணர்திறன் கொண்ட தொழிற்பயிற்சிகளை அறிமுகப்படுத்துதல்.

**5. பெண்கள் மற்றும் ஓரங்கட்டப்பட்ட குழுக்களை வலுவூட்டுதல்:**

- பெண்களை பொருளாதார ரீதியாக மேம்படுத்துவதற்காக நிதியியல் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், நியாயமான நுண்கடன் திட்டங்கள் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சிகளை வழங்குதல்.
- பூக்கள் அல்லது காளான்கள் போன்ற அதிக பெறுமதியுடைய பயிர்களை விளைவிப்பதைத் ஊக்குவித்து, நிதியியல் ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதோடு, காலநிலை அபாயங்களையும் குறைத்தல்.
- தீர்மானமெடுக்கும் தளங்களில் பெண்களின் பங்கேற்பை ஊக்குவித்து, அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதை உறுதி செய்தல்.

**6. பாரம்பரிய மற்றும் நவீன விவசாய முறைகளை ஒன்றிணைத்தல்:**

- மூடுபயிர் வளர்த்தல், பொலித்தீன் கூடார விவசாயம் மற்றும் வறட்சியைத் தாங்கக்கூடிய பயிர்கள் போன்ற நவீன விவசாய முறைகளை மேம்படுத்துவதற்கு செலவு குறைவான பசுமை இல்லங்கள், நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் குளிரூட்டிய சேமிப்பு வசதிகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்.
- விவசாயத்தின் ஸ்திரத்தன்மையை அதிகரிப்பதற்கு பாரம்பரிய அறிவை நவீன தொழில்நுட்பங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- பால்நிலை அல்லது சமூக பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், விவசாய வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்தல்.

**7. சமூக நல்லிணக்கத்தை பலப்படுத்துதல்:**

- பல்வகைப்பட்ட இன மற்றும் மத குழுக்களிடையே நம்பிக்கையை வளர்க்க, நீர்-பகிர்வு முயற்சிகள் போன்ற சமுதாயங்களுக்கு இடையிலான உரையாடல்கள் மற்றும் கூட்டு செயற்திட்டங்களுக்கு உதவுதல்.
- சமூக பிணைப்புகளை வலுப்படுத்தவும், பணம் செலுத்தி வேலை செய்வதை குறைக்கவும், "அத்தம்" போன்ற பாரம்பரிய பரஸ்பர தொழில் பரிமாற்ற நடைமுறைகளை புதுப்பித்தல்.
- தோட்டத் தொழிலாளர்களுக்கு பிறப்புச் சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களுக்கான அணுகலை மேம்படுத்துதல் மற்றும் சமூகத்துடன் அவர்களை ஒருங்கிணைத்து அத்தியாவசிய சேவைகளை பெறுவதை உறுதி செய்தல்.

8. சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்:

- விவசாய ஆதரவை உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றியமைப்பதன் மூலமும், வளங்கள் வெளிப்படையாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலமும் அரசாங்க வள ஒதுக்கீட்டில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குதல்.
- பெண்களின் குறிப்பிட்ட தேவைகளான குழந்தை பராமரிப்பு மற்றும் சுகாதார சேவைகள் போன்றவற்றை நிவர்த்தி செய்யும் பால்நிலை உணர்திறன் கொண்ட பொது சேவைகளை வழங்குதல்.
- தேயிலைத் தோட்டங்களில் நடமாடும் மருத்துவமனைகள் மூலம் சுகாதார வசதிகளை மேம்படுத்துவதுடன் தமிழ் மொழி பேசுபவர்களுக்கு ஏற்படும் மொழித் தடைகளை நீக்குவதுடன் குறிப்பாக, பெண்களுக்கு மற்றும் சிறுவர்களுக்கு ஏற்படும் சுகாதார அபாயங்களில் அதிக கவனம் செலுத்துதல்.

9. உளநலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்:

- சமுதாய அடிப்படையிலான உளநல ஆதரவு அமைப்புகளை நிறுவுவதுடன் பெண்கள், இளைஞர்களிடையே ஏற்படும் உளவியல் சமூக உள அழுத்தத்தை நிவர்த்தி செய்வதற்கு பால்நிலை உணர்திறன் கொண்ட ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
- உளநலச் சுமையைக் குறைக்கவும், சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் உரையாடலுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்குதல். உளநலப் பிரச்சினைகள் குறித்த சமுதாய களங்கத்தை தடையை நீக்குவதுடன் சமுதாயத்தின் மீண்டெழுதிறனை மேம்படுத்த சுகாதார சேவைகளில் உளநல ஆதரவை ஒருங்கிணைத்தல்.
- பௌதீக மற்றும் சமூக ரீதியான ஓரங்கட்டப்படுதலால் ஏற்படும் உளநலச் சுமைகளைக் குறைப்பதற்காக, தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் லயன் வீடுகளில் உள்ள தனிமைப்படுத்தலை நீக்குவதுடன் சமூக ஆதரவு அமைப்புகளை மேம்படுத்துதல்.

## தேயிலைத் தோட்டம்

இலங்கையில் உள்ள தேயிலைத் தோட்ட சமூகங்கள் வரலாற்று ரீதியான ஓரங்கட்டப்படுதல், நிர்வாக புறக்கணிப்பு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வாய்ப்புகள் போன்ற தனித்துவமான பிரச்சினைகளை எதிர்கொள்வதுடன், இது நாட்டின் வேறு எந்த பகுதியிலும் இல்லாத பாதிப்புகளை உருவாக்குகிறது. பல தசாப்தங்களாக பல துண்டுபடுத்தப்பட்ட நடவடிக்கைகள் கொண்டுவரப்பட்டபோதிலும், பெருந்தோட்ட சமூகங்களின் வாழ்க்கை மற்றும் பணி நிலைமைகள் காலனித்துவ காலத்திலிருந்து பெரிய அளவில் மாறாமல் உள்ளதுடன், இது காலநிலை சார்ந்த அபாயங்களை மேலும் அதிகரிக்கின்றன.

தோட்டங்களில் அன்றாட வாழ்க்கை என்பது பௌதீக தனிமைப்படுத்தல் மற்றும் தரமற்ற வாழ்க்கை நிலைமைகளைக் கொண்டுள்ளது. பெரும்பாலும், பல குடும்பங்கள், பல தலைமுறைகளாக, அதிக கூட்டம் நிறைந்த தோட்டத்திற்கு சொந்தமான லயன் வீடுகளைப் பகிர்ந்து கொள்வதுடன், அதில் சுகாதாரம், சுத்தமான நீர் மற்றும் கழிவு முகாமை உட்பட அடிப்படை சேவைகளுக்கான அணுகல் மிகக் குறைவாக உள்ளது. போதுமான அரசாங்க கழிவு சேகரிப்பு சேவைகள் இல்லாததால், சமுதாயங்கள் தொடர்ச்சியான கழிவுகள் தொடர்பான சுற்றுச்சூழல் அபாயங்களை எதிர்கொள்வதுடன், இது அவர்களின் ஆரோக்கியத்தை மேலும் பாதிக்கிறது.

### பராமரிப்பின் தரம்

இந்த அடிப்படை சேவை குறைபாடுகளில், சுகாதாரப் பாதுகாப்புக்கான அணுகல் மிக முக்கியமான சவால்களில் ஒன்றாகும். பல தோட்டங்களில் தகுதியான மருத்துவர்கள் இருப்பதில்லை என்பதுடன், மாறாக தகுதியற்றவர்கள் என பரவலாக கருதப்படுகின்ற மருத்துவ உதவியாளர்களால் நடாத்தப்படும் மருந்தகங்களை மட்டுமே சார்ந்துள்ளனர். புவியியல் ரீதியான தனிமைப்படுத்தல் சரியான மருத்துவ சிகிச்சையைப் பெறுவதில் கடுமையான தடைகளை உருவாக்குவதுடன், மலைப்பாங்கான பகுதிகளில் பொதுவான ஆபத்தான பாம்புக் கடி போன்ற உயிருக்கு ஆபத்தான அவசரநிலைகளின் போது கூட சமுதாய உறுப்பினர்கள் போதுமான வசதிகளை அடைய கடினமான நிலப்பரப்பில் தங்களது சொந்த போக்குவரத்தைப் பெற வேண்டும். இந்த தொலைதூர வசதிகளை அடைந்ததும், அவர்கள் மொழித் தடைகள் காரணமாக மேலதிக சவால்களை எதிர்கொள்வதுடன், இது பராமரிப்பின் தரத்தை மேலும் பாதிக்கிறது. இந்த புறக்கணிப்பின் சுகாதார விளைவுகள் தெளிவாக உள்ளன: பெருந்தோட்ட மக்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு விகிதங்கள் மிக அதிகமாக உள்ளதுடன், நகர்ப்புற இடங்களை விட குறைவான எடையுள்ள குழந்தைகள் 2.9 மடங்கு அதிகமாகவும், குறைவான எடையுள்ள வயது வந்த பெண்கள் 3.4 மடங்கு அதிகமாகவும் உள்ளனர் (உலக வங்கி 2017).

இந்த சூழ்நிலைகளில் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகள் அதிக சுமையைக் கொண்டுள்ளதுடன், குறிப்பாக வானிலை சீர்கேடுகளின் போது தனிமைப்படுத்தல் மேலும் வெளிப்படையாகும்போது, சுகாதாரம் மற்றும் மாதவிடாய் ஆரோக்கியம் தொடர்பான கூடுதல் சிரமங்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர். இந்த அதிகரித்து வரும் சுகாதார ஏற்றத்தாழ்வுகள் கல்வி மற்றும் பிற அத்தியாவசிய சேவைகளுக்கான வரையறுக்கப்பட்ட அணுகலால் மேலும் சிக்கலாகின்றன. கலந்தாலோசனை செய்யப்பட்ட சமுதாயங்கள், இலவச மதிய உணவைப் பெறுவதற்காக மட்டுமே தங்கள் குழந்தைகளை தோட்டப் பாடசாலைகளுக்கு அனுப்புவதாக தெரிவித்தன.

தனிப்படுத்தப்பட்ட அரசாங்க முயற்சிகள் அவ்வப்போது மாற்று வழிகளை வழங்கினாலும் (உதாரணமாக, ஊவா மாகாணத்தில் ஒரு நிகழ்ச்சித் திட்டம் இளம் தோட்டத் தொழிலாளர்களுக்கு 7 பேர்ச்சஸ் கொண்ட சிறிய காணித் துண்டுகளின் உரிமையை வழங்கியது. இது அவர்கள் லயன் வீடுகளை விட்டு வெளியேறி, தோட்டங்களை கொண்டதாக தங்களது சொந்த வீடுகளைக் கட்ட அனுமதித்தது) இந்த முயற்சிகள் பரந்த சமுதாயத்திற்கு முன்னேற்றமாக மாறவில்லை. சமுதாய உறுப்பினர்கள், 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்ற இந்த முன்முயற்சியானது வாழ்க்கை நிலைமைகள் அல்லது வாழ்க்கைத் தரத்தில் முறைப்படுத்தப்பட்ட மாற்றத்திற்கான ஒரு ஊக்கியாக இல்லாமல், ஒரு விதிவிலக்காகவே உள்ளது என குறிப்பிட்டனர்.

தேயிலைத் தோட்டங்களில் உள்ள பெண்கள் அதிக உழைப்பு தேவைப்படும் தேயிலை பறித்தல், வீட்டு முகாமை மற்றும் பராமரிப்பு என மூன்று மடங்கு பொறுப்புகளை எதிர்கொள்கின்றனர். பெருந்தோட்டங்களில் உள்ள சம்பள முறைமையானது இயந்திரமயமாக்கப்பட்ட அல்லது பொதுவான கைமுறையிலான செயற்பாடுகளில் உள்ள ஆண்களின் பங்கை ஒப்பிடும்போது, கொழுந்து பறிக்கும் வேலையில் பெண்களின் உழைப்பு குறைவாக மதிப்பிடப்படுவதால் சமத்துவமின்மையை நிலைநிறுத்துகிறது. நாளாந்தம் பறிக்கும் கொழுந்தின் அளவு அடிப்படையில் அமைந்த ஊதிய முறைமை பொருளாதார பாதிப்பை நிலைநிறுத்துவதுடன், குறிப்பாக, பெண்கள் அதிக உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளை செய்த போதிலும், ஆண்களுக்கு நிகரான ஊதியத்தைப் பெற அதிக நேரம் வேலை செய்ய வேண்டியுள்ளது.

### காலநிலை அபாயங்களுக்கு அதிகரித்த வெளிப்பாடு

தேயிலைத் பெருந்தோட்ட சமுதாயங்கள் தேயிலை பயிர்ச்செய்கையைச் சார்ந்து இருப்பதாலும், புவியியல் சார் அபாயங்களுக்கு ஆளாகியிருப்பதாலும், காலநிலை மாற்றத்தின் தாக்கங்களுக்கு தனித்துவமான வகையில் பாதிக்கப்படக்கூடியவையாக உள்ளன. ஈர மற்றும் இடைநிலை வலயங்களில் அமைந்துள்ள தோட்டங்கள், மாறும் வானிலை முறைகள் மற்றும் ஊவா மாகாணத்தில் கனமழையால் ஏற்படும் நிலச்சரிவு அபாயங்களுக்கு மிகவும் உணர்திறன் கொண்டவையாகும். நீண்ட வறட்சி, ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலை தேயிலை உற்பத்தியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. 2020ல் 25 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைவாக தேயிலை உற்பத்தி செய்யப்பட்டது (Sidhakaran et al. 2022). இந்த காலநிலை தாக்கங்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் விடுப்பது மட்டுமல்லாமல், ஏற்கனவே உள்ள சமூக பொருளாதார பாதிப்புகளையும் அதிகரிக்கின்றன.

முக்கியமாக 50 வயதுக்கு மேற்பட்ட வயதான பணியாளர்கள், அதிக உடல் உழைப்பு தேவைப்படும் வேலைகளை செய்வது மேலும் நிலையற்றதாக இருப்பதால், மற்றொரு பாதிப்பின் அடுக்கினை சேர்க்கிறது.

### மாற்று வாழ்வாதாரங்கள்

சமீபத்திய ஆண்டுகளில், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் தோட்டங்களுக்கு வெளியே தற்காலிக பொருளாதார வாய்ப்புகளைத் தேடும் போக்கு அதிகரித்து வருகிறது. பெண்கள் வெளிநாடுகளுக்கு, குறிப்பாக மத்திய கிழக்கில் வீட்டு வேலைகளில் ஈடுபடுவதற்காக திறன் அற்ற தொழிலாளர்களாக புலம்பெயர்கின்றனர். இந்த புலம்பெயர்வு அவர்களின் குடும்பங்களுக்கு முக்கியமான பணப் பரிமாற்றத்திற்கான ஒரு ஆதாரத்தை வழங்கினாலும் பெண்களை புதிய பாதிப்புகளுக்கு ஆளாக்குகிறது. 'பல பெண்கள் குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட கல்வி காரணமாக, ஆட்சேர்ப்பு நிறுவனங்களால் ஏற்படும் மோசடிகளுக்கு பலியாகி பணத்தையும் நம்பிக்கையையும் இழக்கின்றனர்.' பெற்றோர்கள் வேலை தேடி வெளிநாடு சென்றதால், தாத்தா, பாட்டிகள் குழந்தைகளை பராமரிக்கும் பொறுப்பை ஏற்க வேண்டியிருந்ததால், 'தவற விடும் தலைமுறைகள்' என்ற கருத்தை சமுதாயங்கள் குறிப்பிட்டன.

இளம் ஆண்களும் தோட்டங்களுக்கு வெளியே பொருளாதார வாய்ப்புகளைத் தேடுவதுடன், பெரும்பாலும், கட்டுமானம், போக்குவரத்து மற்றும் பிற முறைசாரா துறைகளில் தற்காலிக வேலைக்காக நகர்ப்புற மையங்களுக்கு இடம்பெயர்கின்றனர். இந்த வாய்ப்புகள் குறுகிய கால நிதி நிவாரணத்தை அளித்தாலும், தேயிலைத் தோட்டங்களில் சமுதாய நல்லிணக்கத்தை பலவீனப்படுத்துவதற்கும், மது மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோக அபாயங்களை அதிகரிப்பதற்கும் வழிவகுக்கின்றன. இளைய தலைமுறையினர் இல்லாததால், வயதான தொழிலாளர்கள், குறிப்பாக பெண்கள், அதிக உழைப்பு தேவைப்படும் தேயிலை பறிக்கும் சுமையை தாங்க வேண்டியுள்ளதுடன், இது ஏற்கனவே உள்ள பாதிப்புகளை மேலும் அதிகரிக்கிறது.

இந்த புலம்பெயர்வு போக்குகள் தேயிலைத் தோட்ட சமுதாயங்களின் அதிகரித்து வரும் பொருளாதார நிச்சயமற்ற தன்மையையும், மாறிவரும் சமூக பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப அவர்களின் போராட்டத்தையும் பிரதிபலிக்கின்றன.

### மட்டுப்படுத்தப்பட்ட மீண்டெழுதிறன்

இந்த சவால்கள் இருந்தபோதிலும், தேயிலைத் தோட்ட சமுதாயங்கள் தங்களது பாதிப்புகளை எதிர்கொள்ள சில சமாளிக்கும் உத்திகளை உருவாக்கியுள்ளன. குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்காக பெண்கள் சிறு அளவிலான விவசாயம் அல்லது வீட்டிலிருந்து இயங்கும் சிறு வணிகங்கள் போன்ற முறைசாரா தொழில் முயற்சியாண்மைகளை அதிகரித்தளவில் ஏற்று வருகின்றனர். இது குடும்பங்களுக்கு மிகவும் தேவையான நிதி ஆதரவை வழங்கினாலும், ஏற்கனவே வீட்டுப் பொறுப்புகள் மற்றும் பராமரிப்பு கடமைகளை நிர்வகிக்கும் பெண்கள் மீது கூடுதல் சுமையை ஏற்படுத்தலாம்

என்பதுடன் இது உளஅழுத்தம் மற்றும் நேரமின்மைக்கு வழிவகுக்கும். இந்த முயற்சிகள் சந்தைகள் மற்றும் நிதி வளங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் அல்லது கல்வியறிவு போன்ற கட்டமைப்பு தடைகளால் மேலும் தடைபடுகின்றன. இதற்கு பதிலளிக்கும் விதமாக, அதிக எண்ணிக்கையிலான பெண்கள் அதிக வட்டி விகிதங்களைக் கொண்ட நுண்கடன் திட்டங்களை நாடுவதுடன், பதுளை மாவட்டத்தில் குறைந்த மற்றும் நிலையற்ற வருமானம் காரணமாக பல பெண்கள் கடன் வலையில் சிக்கி கடனைத் திருப்பிச் செலுத்த முடியாமல் தவிப்பதாக பெருந்தோட்ட சமுதாயங்கள் பகிர்ந்து கொண்டன.

### ஒருங்கிணைப்புக்கான சவால்கள்

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பெருந்தோட்டங்களின் எல்லைகளைத் தாண்டியது. அவர்களின் இன மற்றும் மொழியியல் அடையாளம் (பெரும்பாலும் இந்திய தமிழர்கள்) பரந்த இலங்கை சமூகத்துடன் ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை தடைகளை உருவாக்குகிறது. தோட்டத் தொழிலாளர் குறித்த பரவலான சமூக களங்கமானது, அவர்கள் வெளி நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள முயற்சிக்கும் போது அல்லது தோட்டங்களுக்கு வெளியே வாய்ப்புகளைப் பெற முயலும் போது அவர்களை பின்தொடர்கிறது.

இந்த பல்லடுக்கு புறக்கணிப்பானது, அத்தியாவசிய உரிமைகள் மற்றும் சேவைகளுக்கான அணுகலை நேரடியாக கட்டுப்படுத்துகிறது. அடிப்படை ஆவணங்களான பிறப்புச் சான்றிதழ்களைப் பெற முயற்சிக்கும் போது குறிப்பிடத்தக்க தடைகள் இருப்பதாக கலந்தாலோசனை செய்யப்பட்ட சமுதாயங்கள் தெரிவித்தன. இது தோட்ட வாழ்க்கையைத் தாண்டி அவர்களின் பயணங்களுக்கு தடையாக உள்ளது. உள்ளூர் பொலிசார் உட்பட முறைசார் நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ளும்போது பெண்கள் கடும் பாதிப்பை எதிர்கொள்வதாக தெரிவித்ததுடன், இது வன்முறை அல்லது குற்றங்களுக்கு நீதி தேடுவதிலிருந்து அவர்களைத் தடுக்கிறது.

இவை அனைத்தும் இணைந்து சமுதாய உறுப்பினர்களுக்கு முழுமையான சமூக மற்றும் பொருளாதார குடியுரிமைக்கான அடிப்படை உரிமையை முறையான ரீதியில் மறுப்பதுடன் தேசிய அபிவிருத்தி பாதைகளில் முன்னேறுவதற்கும், அர்த்தமுள்ள பங்கேற்புக்கும் உள்ள வாய்ப்புகளை கட்டுப்படுத்தும் ஒரு சுய செயற்பாட்டு சுழற்சியை உருவாக்குகின்றன. இந்த ஆழமாக வேரூன்றிய புறக்கணிப்பு முறைமையானது வளர்ந்து வரும் காலநிலை தொடர்பான சவால்களுக்கான அவர்களின் பாதுகாப்பை குறைமதிப்பிற்கு உட்படுத்துவதுடன், பல தலைமுறைகளாக நீடித்த நலிவுகளை நிலைநிறுத்துகிறது.

## 6.2 மட்டக்களப்பு

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மாவட்டமான மட்டக்களப்பு, காலநிலை மாற்றம், சமூக பொருளாதார ஓரங்கட்டப்படுதல் மற்றும் ஆளுகை இடைவெளிகளின் மேற்பொருந்துகையில் சிக்கலான சவால்களை எதிர்கொள்கிறது. விவசாயம் மற்றும் மீன்பிடியை பெரிதும் நம்பியிருக்கும் ஒரு பகுதியில் அமைந்துள்ள மட்டக்களப்பு, வெள்ளம், வறட்சி மற்றும் சுற்றுச்சூழல் மாசடைவு போன்ற காலநிலை சார்ந்த அபாயங்களால் குறிப்பாக பாதிக்கப்படுகிறது. இந்த பாதிப்புகள், முறைப்படுத்தப்பட்ட சமத்துவமின்மைகள் மற்றும் இலங்கையின் உள்நாட்டுப் போரின் நீடித்த தாக்கங்களால் மேலும் சிக்கலாவதுடன், பிராந்தியத்தின் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டதாக உணர வைக்கிறது. பால்நிலை பரிமாணம் இந்த சவால்களை மேலும் வடிவமைப்பதுடன், இதில் பெண்கள் காலநிலை தாக்கங்கள் மற்றும் ஆளுகை தோல்விகளால் பாராபட்சமாக பாதிக்கப்படுகின்றனர். இந்த ஆய்வானது மட்டக்களப்பில் உள்ள குறிப்பான பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பு வழிமுறைகளை ஆராய்ந்து, மாவட்டத்தின் சவால்களை எதிர்கொள்வதில் அனைவரையும் உள்ளடக்கிய, பால்நிலை உணர்திறன் கொண்ட கொள்கைகளின் முக்கிய வகிபங்கை வலியுறுத்துகிறது.

### காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள்

#### வெள்ளம் மற்றும் மழையை நம்பிய விவசாயம்

மட்டக்களப்பு சமீபத்திய ஆண்டுகளில் மூன்று பெரிய வெள்ளங்களை அனுபவித்துள்ளதுடன், இது மாவட்டத்தின் பொருளாதாரத்தின் முதுகெலும்பான மழையை நம்பிய விவசாயத்தை கடுமையாக பாதித்துள்ளது. வெள்ளமானது, பயிரிடுகை மற்றும் அறுவடை சுழற்சிகளை சீர்குலைப்பதுடன், பயிர்களை அழித்து குடும்பங்களை வறுமைச் சுழற்சியில் தள்ளுகிறது. வீட்டு உணவுப் பாதுகாப்பிற்கு முக்கியமாக பொறுப்பான பெண்கள், விவசாய இழப்புகள் ஏற்படும் போது சமமற்ற சுமையை தாங்குகின்றனர். குவிநோக்கு குழுக் கலந்துரையாடல்களில், பெண் விவசாயிகள் அவர்களின் ஊதியமில்லாத பராமரிப்பு பொறுப்புகளை வெள்ளம் அதிகரிப்பதாக குறிப்பிட்டனர். இதில் மாற்று உணவுப் பொருட்களை தேடுவது, வீட்டு பழுதுபார்ப்புகளை முகாமை செய்வது மற்றும் நோய்வாய்ப்பட்ட குடும்ப உறுப்பினர்களை கவனித்துக்கொள்வது ஆகியவை உள்ளடங்கும்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) காலநிலை பாதிப்பு அபாய மதிப்பீடு (2023) மற்றும் வானிலை அபாய இலங்கை காலநிலை ஆபத்து விவரக்குறிப்பு (2025, forthcoming ஆகியவை காலநிலை மாற்றம் காரணமாக மட்டக்களப்பில் தீவிர வானிலை நிகழ்வுகளின் அதிர்வெண், தீவிரம் மற்றும் எதிர்வு கூறமுடியாத தன்மை என்பன அதிகரிக்கும் என எடுத்துக்காட்டுகின்றன. இருப்பினும், மாவட்டத்தில் போதுமான வெள்ள முகாமைத்துவ உட்கட்டமைப்பு இல்லை. இது சமுதாயங்களை, குறிப்பாக பெண்கள் தலைமையிலான குடும்பங்களை தொடர்ச்சியான இழப்புகளுக்கு ஆளாக்குகிறது.

#### மணல் அகழ்வும் சுற்றுச்சூழல் சீரழிவும்

மட்டக்களப்பின் ஆறுகள் மற்றும் கடற்கரையோரப் பகுதிகளில் கட்டுப்பாடு இல்லாத மணல் அகழ்வு சுற்றுச்சூழல் சீரழிவுக்கு ஒரு முக்கிய காரணியாக மாறியுள்ளது. இது ஆற்றுப்படுக்கைகளை நிலையற்றதாக்குவதுடன், நீர் வளங்களை குறைத்து மண் அரிப்பை விரைவுபடுத்துகிறது. இந்த நடைமுறையானது சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளையும் பாதிக்கப்பட்ட சமுதாயங்களின் கரிசனங்களையும் புறக்கணித்து தண்டனையின்றி செயற்படுகின்ற அரசியல் தரப்பினர் மற்றும் மணல் அள்ளும் மா∴பியாக்கள் உட்பட சக்திவாய்ந்த உள்ளூர் விரும்பிகளுடன் பெரும்பாலும் இணைந்துள்ளது. உள்ளூராட்சி அமைப்புக்களின் அமுலாக்கம் பலவீனமாக உள்ளதாகவும், சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்பவர்கள் அபராதங்களைத் தவிர்க்க அதிகாரிகளுக்கு அடிக்கடி லஞ்சம் கொடுப்பதாகவும் குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு சமுதாய உறுப்பினர், "லொறிகள் தினமும் வந்து மணலை அள்ளிச் செல்வதை நாங்கள் பார்க்கிறோம். ஆனால் யாரும் அவர்களைத் தடுப்பதில்லை. அவர்களுக்கு செல்வாக்கு இருப்பதால் விதிகள் அவர்களுக்குப் பொருந்தாது என்று தோன்றுகிறது," எனப் பகிர்ந்து கொண்டார்.

மணல் அகழ்வதன் சுற்றுச்சூழல் தாக்கங்கள் வாழ்வாதாரங்கள் மற்றும் நீர் பாதுகாப்பிற்கு நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துகின்றன. ஆற்றுப்படுகைகளில் குறைந்த நீர் தேக்கம் பருவகால நீர் பற்றாக்குறையை மோசமாக்கியுள்ளதுடன், இது வீட்டு உபயோகத்திற்காக தண்ணீர் சேகரிப்பதற்கு முக்கியமாக பொறுப்பான பெண்களை தூய்மையான நீராதாரங்களைக் கண்டறிய அதிக தூரம் பயணிக்க கட்டாயப்படுத்துகிறது. இது அவர்களின் உடல் சுமையை அதிகரிப்பது மட்டுமல்லாமல், இந்த பயணங்களின் போது துன்புறுத்தல் அல்லது வன்முறை அபாயங்களுக்கும் அவர்களை ஆளாக்குகிறது. மேலதிகமாக, மணல் வளங்கள் குறைந்து வருவதால் ஏற்படும் நிலையற்ற ஆற்றுப்படுக்கைகள் மற்றும் குறைந்தளவான நீர் கிடைக்கும் தன்மை விவசாயிகளுக்கு தங்கள் வயல்களுக்கு நீர்ப்பாசனம் செய்வது கடினமாக்குவதால் விவசாய உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

மணல் அகழ்வதை சுற்றிக் காணப்படுகின்ற தண்டனையின்றி செயற்படும் கலாச்சாரம், சமுதாயத்தில் அதிருப்தி மற்றும் நம்பிக்கையின்மையை வளர்த்துள்ளது. இந்த சுரண்டலால் இலாபம் ஈட்டும் ஆழமாக வேரூன்றிய அமைப்புகளை எதிர்க்க தாங்கள் சக்தியற்றவர்கள் என்று பல குடியிருப்பாளர்கள் உணர்வதுடன், இது அவர்களின் ஓரங்கட்டப்பட்ட உணர்வை மேலும் ஆழமாக்குகிறது. இந்த பரிமாணம் சமூக நல்லிணக்கத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துவது மட்டுமல்லாமல், ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை அதிர்ச்சிகளுக்கு பாதிக்கப்படக்கூடிய தன்மையை மேலும் அதிகரித்து, ஏழை குடும்பங்களை பாராபட்சமாக பாதிக்கிறது. இந்த பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்கு சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளை கடுமையாக அமுலாக்குவது மட்டுமல்லாமல், நலிவுற்ற சமுதாயங்களின் குரல்கள் கேட்கப்படுவதையும், அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்படுவதையும் உறுதி செய்வதற்கு உள்ளூர் நிர்வாகத்தில் அதிக வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் தேவைப்படுகிறது. நிர்வாக சீர்திருத்தங்களில் காலநிலை பாதுகாப்பு நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பது இந்த அபாயங்களைக் குறைக்க உதவுவதோடு, நம்பிக்கையையும் நீண்டகால ஸ்திரத்தன்மையையும் வளர்க்கும்.

### மனித–வனவிலங்கு மோதல்

மட்டக்களப்பில் மனித யானை மோதல் தீவிரமடைவது ஒரு முக்கிய பிரச்சினையாக மாறியுள்ளதுடன், மாவட்டத்தில் மனித இறப்பு விகிதங்கள் தேசிய சராசரியை விட அதிகமாக உள்ளன (Gunawansa et al. 2023). யானைகளும் அடிக்கடி பயிர்கள் மற்றும் சொத்துக்களை அழிக்கின்றன. காடழிப்பு, காடுகளில் மணல் அகழ்தல் போன்ற வாழ்விடங்களை சீரழிக்கும் காரணிகளுடன் மோசமாக பராமரிக்கப்படும் வனப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகள், யானைகளை வெளியே தண்ணீர் தேடத் தூண்டி மனிதர்களுடன் தொடர்பு கொள்வதை அதிகரிக்கின்றன.

விவசாயிகள் குறிப்பிடத்தக்க பொருளாதார இழப்புகளைப் பற்றி தெரிவிக்கின்ற அதே நேரத்தில் பெண்கள் பயிர்களை பராமரிப்பதிலும், வீட்டு உணவுப் பொருட்களை நிர்வகிப்பதிலும் அதிக அபாயங்களை எதிர்கொள்கின்றனர். மயிலம்பாவெளியைச் சேர்ந்த ஒரு விவசாயி ஒரு கலந்துரையாடலின் போது, "நாங்கள் வயல்களுக்கு தனியாக செல்ல எப்போதும் பயப்படுகிறோம். யானைகள் இரவில் வருகின்றன, எங்களிடம் மீதமுள்ள சிறிதளவு பொருட்களைப் பாதுகாக்க நாங்கள் விழித்திருக்க வேண்டும்," என கூறினார்.

பிரச்சினையின் தீவிரம் இருந்தபோதிலும், யானை வேலி போன்ற அரசாங்க தலையீடுகள் தெற்கில் குவிந்துள்ளன என்றும், மட்டக்களப்பின் சமுதாயங்கள் மோதலை தாங்களாகவே சமாளிக்க வேண்டியுள்ளது என்றும் குடியிருப்பாளர்கள் உணர்கின்றனர். இழப்பீட்டு திட்டங்களுக்கு அணுகல் இல்லாத பெண்கள் குறிப்பாக பாதிக்கப்படுகின்றனர். பயிர் இழப்புகளுக்கு விவசாயிகளுக்கும், இறப்புகள், காயங்கள் மற்றும் சொத்து சேதங்களுக்கு சமுதாய உறுப்பினர்களுக்கும் இழப்பீடு வழங்குவதற்கு வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் ஒரு திட்டத்தை முகாமை செய்தாலும், சேதத்தை முற்கூட்டியே தடுப்பதற்கு உறுதியான செயற்திட்டங்கள் அவசரமாக தேவைப்படுகின்றன.

குடியிருப்பாளர்கள் முதலை தாக்குதல்களும் ஒரு வளர்ந்து வரும் கரிசனமாக இருப்பதாக தெரிவிக்கின்றனர். மட்டக்களப்பில் உள்ள களப்புகளை சுற்றியுள்ள பகுதிகள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவையாக உள்ளதுடன், இலங்கையில் 2010-2024 க்கு இடையில் நடந்த மனித-முதலை சம்பவங்களில் 28% களப்புகளிலும் அதைச் சுற்றியும் நிகழ்ந்துள்ளன (Wijesundara and Karawita 2024).

வெள்ளமானது முதலைகளை அவற்றின் சாதாரண எல்லைக்கு வெளியே கொண்டு வருவதுடன் நீர் வற்றும் போது அவற்றைப் சிக்க வைக்கலாம் (Rodrigo 2024) முதலை பூங்காக்களை ஒரு சுற்றுலா முயற்சியாக நிறுவுவது தொடர்பில் ஆராய்வது குடியிருப்பாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட ஒரு தீர்வாகும். இது குடித்தொகையை நிர்வகிப்பதோடு வருமானத்தை ஈட்டவும் உதவும். அத்தகைய ஒரு பூங்கா அதிகமான மனித-முதலை சம்பவங்கள் நடைபெறும் மற்றொரு மாவட்டமான தெற்கு மாகாணத்தின் மாத்தறையிலும் உள்ளது.

### கடலோர வலயம்

கடற்கரை அரிப்பானது மட்டக்களப்பில் ஒரு பெரிய கரிசனமாக உள்ளதுடன், மட்டக்களப்பில் உள்ள கண்டல் தாவரங்கள் கரையோர நிலைப்படுத்துதல் மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு மூலமாக கடற்கரையோர பாதுகாப்பை வழங்குகின்றன. ஆனால் அவை 1995 மற்றும் 2022 க்கு இடையில் 26% குறைந்துள்ளன (Veettil 2022). உயிர்ப்பல்வகைமை மற்றும் வாழ்வாதாரங்களை ஆதரிக்கின்ற உற்பத்தி சுற்றுச்சூழல் அமைப்பான மட்டக்களப்பு கடனீரேரி சூழற்தொகுதிக்கு உடனடியாக அவதானம் அவசியமாகும். வண்டல் படிவதால் கடனீரேரியின் ஆழம் குறைந்துள்ளதுடன், இது மீன்பிடி மற்றும் நீர் ஓட்டத்தை பாதிப்பதுடன் கடனீரேரி பகுதியின் வெள்ளக் கட்டுப்பாட்டு திறன்களைத் தடுக்கிறது. கடனீரேரி பகுதியை மீட்டெடுப்பதற்கு ஆழப்படுத்துவதற்கான ஒரு சாத்தியக்கூறு ஆய்வும் நிதி ஆதரவும் தேவையாகும்.

### தெங்கு நோய்

மட்டக்களப்பில் ஒரு முக்கிய விவசாய நடவடிக்கையான தென்னை பயிர்ச்செய்கை இப்பகுதியில் பரவி வருகின்ற தென்னை உற்பத்தியை அழித்து வருகின்ற ஒரு புதிய காலநிலை தொடர்பான நோயால் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளது. பெண்கள் தென்னை பயிர்ச்செய்கை மற்றும் பதப்படுத்துதலில் குறிப்பிடத்தக்க பங்கு வகிப்பதுடன், அவர்களுக்கு தொழில்நுட்ப ஆதரவோ அல்லது நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட பயிர் வகைகளுக்கு அணுகலோ அல்லது மாற்று வருமானத்தை ஈட்டும் நடவடிக்கைகளோ பற்றாக்குறையாக உள்ளது. தென்னை உற்பத்தி குறைவடைந்து வருவதால், மாற்று வருமான வழிகளை வழங்கக்கூடிய தென்னையை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகளுக்கு பெறுமதி சேர்த்தலானது குறைந்த முதலீடு மற்றும் சந்தை அணுகல் காரணமாக வளர்ச்சி அடையாமல் உள்ளது.

## காணி மற்றும் மீள்குடியேற்ற சவால்கள்

மட்டக்களப்பு மாவட்டமானது சனத்தொகையில் சுமார் 25% கொண்ட ஒரு பெரிய முஸ்லிம் சமூகத்தைக் கொண்டுள்ளது. இருப்பினும், தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவுகள் பெரும்பாலும் மோசமாக உள்ளதுடன், இரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் வன்முறை சம்பவங்கள், குறிப்பாக இளைஞர்களிடையே அடிக்கடி நடப்பதாக தெரிவித்தனர். வணிகம் அல்லது நெல் பயிர்ச்செய்கை போன்ற விடயங்களில் தமிழர்களும் முஸ்லிம்களும் ஒத்துழைக்க முடியும் என சிலர் குறிப்பிட்டாலும், முஸ்லிம்கள் குடியேறிய பகுதிகளில் சுதந்திரமாக கால்நடைகளை மேய்ப்பது குறித்து தமிழ் மக்கள் கவலை தெரிவித்தனர். சிலர் முஸ்லிம்களுடன் வாழ்வதை விட வெளியேற விரும்புவதாகக் கூறினர். அதே நேரத்தில், தமிழர்கள் பெரும்பாலான வர்த்தகங்களில் பிராந்தியத்தில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்துவதை ஏற்றுக்கொண்டதுடன், தங்களது பொருட்களை விற்பனை செய்ய சந்தைகளை அணுகுவதை உறுதி செய்யவதற்கு உறவுகளைப் பேணுவது அவசியம் என்றும் கூறினர். பெரும்பாலான பகுதிகளில் மீள்குடியேற்ற செயன்முறை நிறைவடைந்துவிட்டதாக அரசாங்கம் கூறினாலும், தீர்க்கப்படாத மீள்குடியேற்றம் மற்றும் காணிப் பிரச்சினைகள் குறித்து முஸ்லிம் சமுதாயங்கள் கவலை தெரிவித்தன. முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளை அரசு கையகப்படுத்துவதாக கூறப்படும் குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக நீடித்து வரும் ஒரு தொடர்ச்சியான மனக்குறையாகும். இது போருக்குப் பிறகு பலரால் தங்களது காணிகளுக்குத் திரும்பி தங்களது வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப இயலாத நிலையை ஏற்படுத்தியுள்ளதுடன், இது அவர்களின் சட்டபூர்வமான உரிமைகளை மறுத்து, அவர்களின் வாழ்வாதாரத் தேவைகளை புறக்கணிக்கிறது.

ஒரு குடியிருப்புவாசி விவசாயிகளின் அவலநிலையை எடுத்துரைத்து, “போரின் போது கூட, இந்த காணிகளை நாங்கள் மிகுந்த சிரமத்துடன் பயிரிட்டோம். இப்போது, அரசாங்கம் எங்களை பயிரிட விடாமல் தடுக்கிறது,” என்று கூறினார். முஸ்லிம் சமுதாய உறுப்பினர்களும், காணிப் பிரச்சினைகள் சிவில் நிர்வாக பொறிமுறைகள் மூலம் தீர்க்கப்பட வேண்டும் என சுட்டிக்காட்டினர். இருப்பினும், கிழக்கு மாகாணத்தில், இராணுவம் காணி கையகப்படுத்தும் செயன்முறைகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதுடன், இது மேலும் பதட்டங்களை அதிகரிக்கிறது என அவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

சவால்கள் காணிப் பிரச்சினைகளைத் தாண்டி வாழ்வாதார கட்டுப்பாடுகளுக்கும் நீட்டிக்கின்றன. முஸ்லிம் மீனவர்கள், கடனீரேரியிலுள்ள சில குறிப்பிட்ட பகுதிகளில் மீன்பிடிக்க தமக்கு அனுமதி மறுக்கப்படுவதாகவும், மற்றைய படகுகள் சுதந்திரமாக செயற்பட அனுமதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர். “மக்கள் இன அடிப்படையில் தாங்கள் பாகுபாடு காட்டப்படுவதாக உணர்கின்றனர்,” என ஒரு பிரதிவாதி குறிப்பிட்டார். இது முறைப்படுத்தப்பட்ட சமத்துவமின்மைகள் குறித்த பரந்த கண்ணோட்டத்தை பிரதிபலிக்கிறது.

## ஓரங்கட்டப்படுதல் மற்றும் நிர்வாக இடைவெளிகள்

மட்டக்களப்பு குடியிருப்பாளர்கள், வள ஒதுக்கீடு மற்றும் ஆளுகை கவனம் செலுத்துகையில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை மேற்கோள்காட்டி, மத்திய அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படுவதாக அடிக்கடி உணர்வுகளை வெளிப்படுத்துகின்றனர். போருக்குப் பிறகு நிறுவப்பட்ட சமாதானத்தால் மட்டக்களப்பில் உள்ள சமுதாயங்கள் பயனடைய அரசாங்கம் சிறிதளவிலேயே செயற்பட்டுள்ளது என பதிலளிப்பாளர்கள் உணர்ந்தனர்.

> “போருக்குப் பிறகு 15 ஆண்டுகள் ஆகியும், மக்கள் தங்களது தனிப்பட்ட வாழ்வாதாரங்களில் முன்னேற்றங்களைக் காணவில்லை.”
>
> - காயத்ரி, பெண், 27, மட்டக்களப்பு

> “தமிழர்களுக்கான பெரும்பாலான முதலீடுகள் யாழ்ப்பாணத்திற்கும், துறைமுகம் காரணமாக திருகோணமலைக்கும் செல்கின்றன. மட்டக்களப்பு புறக்கணிக்கப்பட்டுள்ளது.”
>
> - சுஜிதா, 50, மட்டக்களப்பு

நெல் பயிர்ச்செய்கையின் காலநேரத்தை தீர்மானிக்கும் இலங்கையின் தேசிய பயிர் நாட்காட்டி தென் மற்றும் மத்திய வலயங்களுக்கு முன்னுரிமை அளிப்பதாக கருதப்படுகிறதுடன், இது கிழக்கில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளை பாதகமான நிலையில் வைக்கிறது. இந்த நாட்காட்டி தென் மற்றும் மத்திய வலயங்களின் எதிர்வு கூறக்கூடிய மழைவீழ்ச்சி மற்றும் வலுவான நீர்ப்பாசன அமைப்புகளை சுற்றி வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிலைமைகள் கிழக்கில் உள்ள ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் விருத்தியடையாத நீர்ப்பாசன உட்கட்டமைப்புடன் ஒத்துப்போவதில்லை.

மழையை நம்பிய விவசாயம் மற்றும் மோசமாக பராமரிக்கப்பட்ட குளங்களை நம்பியிருக்கும் தமிழ் விவசாயிகள், பரிந்துரைக்கப்பட்ட கால அட்டவணையைப் பின்தொடர்வதற்கு அடிக்கடி போராடுவதுடன், இது குறைந்த விளைச்சல் மற்றும் அதிக செலவீனங்களுக்கு வழிவகுக்கிறது. போருக்குப் பிந்தைய சூழ்நிலையில், தமிழ் விவசாயிகள் பயிர் நாட்காட்டியை வரலாற்று ஏற்றத்தாழ்வுகளில் வேரூன்றிய முறைப்படுத்தப்பட்ட ஓரங்கட்டலுக்கான மற்றொரு உதாரணமாக பார்ப்பதால் இந்த ஏற்றத்தாழ்வுகள் ஏற்கனவே உள்ள மனக்குறைகளை ஆழமாக்குகின்றன.

உரம், விதைகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்ற அரசாங்க ஆதரவானது பயிர் நாட்காட்டியுடன் பிணைக்கப்பட்டுள்ளதுடன், இது கிழக்கில் உள்ள விவசாயிகளுக்கு மேலும் பாதகத்தை ஏற்படுத்துகிறது. தமிழ் விவசாயிகளுக்கு உரம் மற்றும் விதை வழங்கலானது பெரும்பாலும் மிக முன்னதாகவோ அல்லது தாமதமாகவோ வருவதால், உற்பத்தித்திறனை அதிகரிப்பது கடினமாக உள்ளது. தமிழ் விவசாயிகள் தங்களது தேவைகள் சிங்கள-பெரும்பான்மை பிராந்தியங்களுக்கு ஆதரவாக கவனிக்கப்படாமல் இருப்பதாக நம்புவதால் இந்த பக்கச்சார்பானது புறக்கணிப்பு உணர்வுகளை வலுப்படுத்துகிறது. காலநிலை மாற்றம் காரணமாக மழைவீழ்ச்சியின் எதிர்வு கூற முடியாத தன்மை அதிகரிப்பதால் இந்த விரக்திகள் மேலும் சிக்கலாவதுடன், இது தமிழ் விவசாயிகளின் இசைவாகி வாழும் திறனை மேலும் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது. காலநிலையின் நிச்சயமற்ற தன்மை மற்றும் ஆளுகைத் தோல்விகளின் மேற்பொருந்துகை சமூக நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் அபாயத்தைக் கொண்டுள்ளது. ஏனெனில், சமுதாயங்கள் மேற்பொருந்துகின்ற சவால்களைச் சமாளிப்பதற்கான தங்களது போராட்டத்தில் தாம் கைவிடப்பட்டதாக உணர்கின்றன. மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு தமிழ் விவசாயி, “இந்த நாட்காட்டி அவர்களுக்காக உருவாக்கப்பட்டது, எங்களுக்காக அல்ல. அவர்களுக்கு எங்கள் பிரச்சினைகள் புரியவில்லை அல்லது எங்களுக்கு என்ன தேவை என்பதைக் கேட்கவில்லை,” என விளக்கினார்.

இலங்கையின் தேசிய பயிர் நாட்காட்டியானது, தென் மற்றும் மத்திய வலயங்களுக்கு முன்னுரிமை அளிப்பதாகவும், கிழக்கில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளுக்கு பாதகத்தை ஏற்படுத்துவதாகவும் கருதப்படுவது பல கட்டமைப்பு, காலநிலை மற்றும் ஆளுகை தொடர்பான காரணிகளால் ஏற்படுகிறது. நெல் பயிர் செய்கையின் காலநேரத்தை தீர்மானிக்கும் பயிர் நாட்காட்டியானது காலநிலை நிலைமைகள், நீர் கிடைக்கும் தன்மை மற்றும் வரலாற்று விவசாய நடைமுறைகளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இருப்பினும், அதன் அமுல்படுத்தல் பெரும்பாலும் இந்த காரணிகளில் உள்ள பல்வேறு பிராந்திய வேறுபாடுகளை, குறிப்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகள் குவிந்துள்ள கிழக்கு மாகாணத்தில் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

1. **காலநிலை மற்றும் நீரியல் சார்ந்த வேறுபாடுகள்**

இலங்கையின் தென் மற்றும் மத்திய வலயங்கள், தேசிய பயிர் நாட்காட்டியின் பயிரிடுகை மற்றும் அறுவடைக்கான காலஎல்லையுடன் நெருக்கமாக ஒத்துப்போகும் எதிர்வு கூறக்கூடிய மழைவீழ்ச்சி போக்குகள் மற்றும் சிறந்த நீர்ப்பாசன உட்கட்டமைப்பிலிருந்து பயனடைகின்றன. இதற்கு நேர்மாறாக, கிழக்கு மாகாணத்தில் அதிக ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி போக்குகள் உள்ளதுடன், நீர்ப்பாசனத்திற்கு மழையை நம்பிய விவசாயம் மற்றும் குளங்களை பெரிதும் சார்ந்துள்ளது. தேசிய பயிர் நாட்காட்டியால் தீர்மானிக்கப்படும் காலநேரம், பிராந்தியத்தின் உண்மையான நீர் கிடைக்கும் தன்மையுடன் பெரும்பாலும் ஒத்துப்போவதில்லை. இது கிழக்கில் உள்ள விவசாயிகளை பரிந்துரைக்கப்பட்ட கால அட்டவணையைப் பின்பற்றுவதில் போராட வைக்கிறது.

2. **நீர்ப்பாசன உட்கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகள்**

தென் மற்றும் மத்திய வலயங்களில் பொதுவாக பெரிய அளவிலான குளம் புனரமைப்பு செயற்திட்டங்கள் மற்றும் கால்வாய்கள் உட்பட மிகவும் மேம்பட்ட நீர்ப்பாசன அமைப்புகள் உள்ளன. இது விவசாயிகள் பயிர் நாட்காட்டியை மிகவும் வினைத்திறனாக கடைபிடிக்க அனுமதிக்கிறது. இருப்பினும், கிழக்கில், குளம் புனரமைப்பு மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பில் அரசாங்க முதலீடு இல்லாததால், விவசாயிகள் முக்கியமான பயிரிடுகை மற்றும் அறுவடை காலங்களில் போதுமான நீரை அணுகுவது பெரும்பாலும் இயலாதுள்ளது. இந்த ஏற்றத்தாழ்வு, தேசிய விவசாய முன்னுரிமைகளிலிருந்து தாங்கள் விலக்கப்பட்டதாக உணரும் தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களை மேலும் அதிகரிக்கிறது.

3. **ஆளுகை மற்றும் வள ஒதுக்கீடு**

கிழக்கில் உள்ள விவசாயிகள், அரசாங்கம் வளங்கள் மற்றும் கவனத்தை பெரும்பாலும் சிங்கள பெரும்பான்மை பகுதிகளான தென் மற்றும் மத்திய வலயங்களுக்கு பாராபட்சமாக ஒதுக்குவதாக உணர்கின்றனர். இந்த உணர்வானது வரலாற்று மற்றும் அரசியல் குறைகளில் வேரூன்றியுள்ளதுடன், தமிழ் பெரும்பான்மை பிராந்தியங்கள் தேசிய அபிவிருத்தி திட்டங்களில் பெரும்பாலும் ஓரங்கட்டப்பட்டுள்ளன. உதாரணமாக, நீர்ப்பாசனத்திற்காக நீரை எப்போது வெளியிடுவது என்பது குறித்த முடிவுகள், கிழக்கில் உள்ள உள்ளூர் விவசாயிகளுடன் கலந்தாலோசிக்காமல் பெரும்பாலும் எடுக்கப்படுவதுடன், இது உற்பத்தித்திறனைத் தடுக்கும் பொருந்தாத அட்டவணைகளுக்கு வழிவகுக்கிறது.

4. **உற்பத்தித்திறன் மற்றும் வாழ்வாதாரங்கள் மீதான தாக்கம்**

பயிர் நாட்காட்டிக்கும் கிழக்கில் உள்ள விவசாயத்தின் யதார்த்தங்களுக்கும் இடையிலான பொருந்தாத தன்மையானது தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகள் பெரும்பாலும் குறைந்த விளைச்சல் மற்றும் அதிக செலவீனங்களை எதிர்கொள்ள வேண்டும் என அர்த்தமாகின்றது. நீர் பற்றாக்குறையால் மிக முன்னதாகவோ அல்லது மிக தாமதமாகவோ பயிர் செய்வது பயிர்களை பூச்சிகள், நோய்கள் அல்லது சாதகமற்ற வானிலை நிலைமைகளுக்கு ஆளாக்கி, நெல் விளைச்சலின் ஒட்டுமொத்த உற்பத்தித்திறனைக் குறைக்கும். இது வறுமை மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட சந்தை அணுகலுடன் போராடும் தமிழ் விவசாயிகளின் வாழ்வாதாரங்களை நேரடியாக பாதிக்கிறது.

5. **உணரப்பட்ட இன-மத பக்கச்சார்பு**

பயிர் நாட்காட்டியானது, தமிழ் பெரும்பான்மை பகுதிகளுக்கு எதிரான முறைப்படுத்தப்பட்ட பக்கச்சார்புக்கு ஒரு உதாரணமாக சிலரால் பார்க்கப்படுகிறது. கிழக்கில் உள்ள விவசாயிகள், தென் மற்றும் மத்திய வலயங்களில் உள்ள சிங்கள விவசாயிகளின் தேவைகளுக்கு அரசாங்கம் முன்னுரிமை அளிப்பதாக நம்புகின்றனர். இது புறக்கணிப்பு மற்றும் ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை மேலும் ஆழமாக்குகிறது.



யானை மற்றும் புல்வெளி (c) ஒலெக்சாண்டர் பித்வாலேன்யி / பிக்சாபேய்

பெண் விவசாயிகள், குறிப்பாக, தங்களுக்கு ஏற்ற விவசாய ஆதரவு இல்லாததால் சவால்களை எதிர்கொள்கின்றனர். பங்கேற்பாளர்களில் ஒருவர், "எப்போது பயிரிட வேண்டும், எப்போது அறுவடை செய்ய வேண்டும் என்பதை அரசாங்கம் தீர்மானிக்கிறது, ஆனால் அவர்களுக்கு எங்கள் தேவைகள் புரிவதில்லை. நாங்கள் எப்போதும் பின்தங்கியே இருக்கிறோம்" என்று குறிப்பிட்டார்.

### கட்டமைப்பு மற்றும் நிறுவன தடைகள்

முறைப்படுத்தப்பட்ட ஆளுகை சவால்கள் மட்டக்களப்பின் பாதிப்புகளை மேலும் மோசமாக்குகின்றன. மருத்துவமனைகளில் போதிய பணியாளர்கள் இருப்பதில்லை என்பதுடன் மருத்துவ ஒப்புதல் படிவங்கள் பெரும்பாலும் சிங்களத்தில் மட்டுமே கிடைப்பதுடன் இது தமிழ் பேசும் நோயாளிகளுக்குத் தடைகளை உருவாக்குகிறது. தங்கள் குடும்பங்களுக்காக மருத்துவ உதவியை நாடும் பெண்கள், இந்த முறைமைகளைச் சமாளிப்பதில் மேலதிக சவால்களை எதிர்கொள்கின்றனர். வனத் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் ஆகியவை சார்புடையவையாகக் கருதப்படுவதுடன், தமிழ் பகுதிகளில் பௌத்த சிலைகள்/கோயில்களை நிறுவுவதன் மூலம் மத ஆக்கிரமிப்பு செய்வதாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன. இந்த நடைமுறைகள் அவநம்பிக்கையை ஆழமாக்குவதுடன் இன முரண்பாடுகளைத் தூண்டுவதுடன், சமுதாய எதிர்ப்புகளில் பெண்கள் பெரும்பாலும் முன்னணியில் உள்ளனர்.

### வனஜீவராசிகள் முகாமைத்துவத்தில் ஏற்றத்தாழ்வுகள்

யானை வேலி பரம்பலில் சமத்துவமின்மை பற்றிய எண்ணம் ஆளுகை ஏற்றத்தாழ்வு குறித்த உணர்வுகளை மேலும் எடுத்துக்காட்டுகிறது. இலங்கையில் மாகாணங்கள் வாரியாக யானை வேலிகளின் துல்லியமான புள்ளிவிவரங்கள் இலகுவாக கிடைக்கவில்லை என்றாலும், வனஜீவராசிகள் முகாமைத்துவத்தில் அரசாங்க முதலீடுகள் தெற்கில் குவிக்கப்பட்டுள்ளதாகப் பதிலளித்தவர்கள் நம்புகின்றனர். குறைந்த ஆதரவுடன் மனித-யானை மோதல்களைத் தாங்களே நிர்வகிக்க வேண்டியுள்ளதாக நேர்காணலில் பதிலளித்தவர்கள் விளக்கினர். பயிர் அழிவால் பாராபட்சமாக பாதிக்கப்பட்ட பெண் விவசாயிகள், தங்கள் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க போதிய நடவடிக்கைகள் இல்லாததால் விரக்தி அடைந்துள்ளனர்.

## பால்நிலை அடிப்படையிலான வாழ்வாதார சவால்கள்

### விவசாயம் மற்றும் மீன்பிடி

மட்டக்களப்பின் முக்கிய வாழ்வாதாரங்கள் விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகும். ஆனால் இரண்டு துறைகளும் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றன. விவசாயிகள் மோசமான சந்தை வசதிகள், வளங்களுக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் மற்றும் விவசாயப்பயிர்கள் மற்றும் பால் பொருட்களுக்கு பெறுமதி சேர்க்கப்படாமையால் சிரமப்படுகின்றனர். பெரும்பாலும் சிறியளவிலான விவசாயம் மற்றும் பால் உற்பத்தியை நிர்வகிக்கும் பெண்கள், நெஸ்லே போன்ற பெரிய நிறுவனங்களுக்கு தங்களது பொருட்களை குறைந்த விலைக்கு விற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளதுடன், அவர்களுக்கு குறைந்த இலாபமே கிடைப்பதாக தெரிவித்தனர். மீன்பிடி சமுதாயங்களும் இதேபோன்ற சவால்களை எதிர்கொள்வதுடன், சட்டவிரோத மீன்பிடி நடைமுறைகள் மற்றும் பிற சமுதாயங்களின் அத்துமீறல் ஆகியவை நிலைத்தன்மையை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன. மீன் பதப்படுத்துதல் மற்றும் சந்தைப்படுத்துதலில் ஈடுபட்டுள்ள

பெண்கள் சந்தையில் போட்டியிடத் தேவையான வளங்கள் மற்றும் வலையமைப்புகள் அவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதால் குறிப்பாகப் பாதிக்கப்படுகின்றனர்.

### மாற்றீட்டு வாழ்வாதாரங்கள்

இந்த சவால்களுக்குப் பதிலளிக்கும் விதமாக, சில குடியிருப்பாளர்கள் தேன் உற்பத்தி, கைவினைப்பொருட்கள் மற்றும் நெய்யப்படும் பொருட்கள் போன்ற மாற்று வாழ்வாதாரங்களை நோக்கித் திரும்பியுள்ளனர். இந்த நடவடிக்கைகளில் பெண்கள் முக்கிய பங்கு வகிக்கின்றனர், ஆனால் அவர்களின் முயற்சிகள் பெரும்பாலும் தொழில்நுட்ப ஆதரவு, சந்தை அணுகல் மற்றும் முதலீடு இல்லாததால் மட்டுப்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக, தேங்காய் சார்ந்த பொருட்கள் குறிப்பிடத்தக்க பொருளாதார வாய்ப்புகளை வழங்கக்கூடும் என்றாலும் உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான வளங்களும் பயிற்சியும் பெண்களுக்கு இருப்பதில்லை. ஒரு பெண் தொழில்முனைவோர் விளக்கியதாவது, "தேங்காய் எண்ணெய் மற்றும் பிற பொருட்களை உருவாக்கும் திறமை எங்களிடம் உள்ளது, ஆனால் விரிவாக்குவதற்கு தேவையான இயந்திரங்கள் அல்லது பணம் எங்களிடம் இல்லை. ஆதரவு கிடைத்தால், எங்களால் இன்னும் நிறைய செய்ய முடியும்."

### பெண்களின் வேலைவாய்ப்பு

மட்டக்களப்பில் பெண்கள் வாழ்வாதார வாய்ப்புகளை அணுகுவதில் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். இந்து மற்றும் தமிழ் சமுதாயங்கள் பெண்கள் வீட்டிற்கு வெளியே வேலை செய்வதை அதிகமாக ஏற்றுக்கொள்கின்ற போதிலும் முஸ்லிம் சமுதாயங்கள் அதிக கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளன. இப்பகுதியில் உள்ள ஓர் ஆடை மற்றும் சாயம் தயாரிக்கும் தொழிற்சாலை சில பெண்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கினாலும் போதிய போக்குவரத்து வசதிகள் இல்லாததால் கிராமப்புறப் பெண்களின் பங்கேற்பு குறைவாக உள்ளது. மேலும், தொழிற்பயிற்சி மற்றும் திறமையான தொழில் வாய்ப்புகள் இல்லாதது, முதன்மை உணவு உற்பத்திக்கு பெறுமதி சேர்த்தல் போன்ற பெண்களின் பொருளாதார வலுவூட்டலை மேலும் கட்டுப்படுத்துகிறது.

## சமூக மற்றும் பொருளாதார பிரச்சினைகள்

### உள்நாட்டுப் போரின் பாரம்பரியம்

இலங்கையின் உள்நாட்டுப் போரின் பராம்பரியம் மட்டக்களப்பில் சமூக-பொருளாதார பரிமாணத்தை தொடர்ந்து வடிவமைக்கிறது. COVID-19 அல்லது பொருளாதார மந்தநிலை போன்ற சமீபத்திய நெருக்கடிகளை விட, போரே சமுதாயத்திற்கு ஒரு முக்கிய குறிப்பு புள்ளியாக உள்ளது. தமிழ் சமுதாயங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு குறைந்த முயற்சிகளே எடுக்கப்பட்டுள்ளதுடன், நல்லிணக்க முயற்சிகள் மேலோட்டமானதாக இருப்பதாக பல குடியிருப்பாளர்கள் உணர்கின்றனர். பெண்கள், குறிப்பாக, போரின் விளைவாக ஏற்பட்ட உணர்வுபூர்வ மற்றும் பொருளாதார சுமையை சுமக்கின்றனர். பெண் தலைமைத்துவ குடும்பங்கள் வளங்கள் மற்றும் ஆதரவை அணுகுவதில் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்வதுடன், இதனால் அவர்கள் வறுமை சுழற்சியில் சிக்கிக்கொள்கின்றனர்.

### புலம்பெயர்வு மற்றும் சமூகப் பதற்றம்

காலநிலை மாற்றம் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வாழ்வாதார வாய்ப்புகளால் மட்டக்களப்பில் ஏற்பட்ட பொருளாதார சிரமங்கள், குறிப்பாக நடுத்தர மற்றும் குறைந்த வருமான குடும்பங்களைச் சேர்ந்த பெண்களிடையே புலம்பெயர்வை கணிசமாக அதிகரித்துள்ளன. பல பெண்கள் தங்கள் குடும்பங்களுக்கு நிதியியல் ரீதியாக ஆதரவளிக்க வீட்டுப் பணியாளர்கள், பராமரிப்பாளர்கள் அல்லது பிற குறைந்த ஊதியத் துறைகளில் வேலைவாய்ப்புக்காக மத்திய கிழக்கு நாடுகளுக்குக் புலம்பெயர்கின்றனர். அவர்கள் அனுப்பும் பணம் குடும்பங்களுக்கு முக்கியமான வருமானத்தை அளித்தாலும், புலம்பெயரவின் சமூக செலவீனங்கள் ஆழமானவை என்பதுடன் பெண்கள் மற்றும் குழந்தைகளை பாராபட்சமாக பாதிக்கின்றன.

புலம்பெயரும் பெண்களுக்கு, பயணம் பெரும்பாலும் அபாயங்கள் நிறைந்ததாகும். பலர் முறைசாரா ஆட்சேர்ப்பு முகவரகங்கள் அல்லது தரகர்களை நம்பியுள்ளதுடன், அவர்கள் அதிக கட்டணம் வசூலிப்பதுடன் வேலை நிலைமைகள் பற்றி குறைந்த தகவல்களையே வழங்குகின்றனர். நிதி அறிவு மற்றும் சட்டப் பாதுகாப்பு இல்லாததால், பல பெண்கள் சுரண்டல், ஊதிய திருட்டு மற்றும் புகலிட நாடுகளில் துஷ்பிரயோகம் ஆகியவற்றிற்கு ஆளாகின்றனர். குவைத்தில் வேலை செய்து திரும்பி வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு புலம்பெயர் பணியாளர் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார்: "என் குழந்தைகளின் கல்விக்காக பணம் சம்பாதிக்கச் சென்றேன், ஆனால் ஒரு அடிமை போல் நடாத்தப்பட்டேன். அவர்கள் என்னை ஓய்வெடுக்க அனுமதிக்கவில்லை, நான் மீளத் திரும்ப விரும்பியபோது என் கடவுச்சீட்டை எடுத்துக்கொண்டார்கள்."

குறிப்பாக தாய்மார்களுக்கு, புலம்பெயரும் தீர்மானம் ஒருபோதும் இலகுவானது அல்ல. தங்கள் குழந்தைகளை விட்டுச் செல்வது குறித்து பல பெண்கள் குற்ற உணர்வு மற்றும் கவலையை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் உள்ளூர் வேலைவாய்ப்புக்கான வாய்ப்புகள் இல்லாததால் அவர்களுக்கு வேறு வழிவகை தெரியவில்லை. சவுதி அரேபியாவுக்கு குடியேறத் தயாராக இருந்த ஒரு பெண் ஒரு குவிநோக்கு குழு கலந்துரையாடலில் விபரிக்கையில்: "நான் என் குழந்தைகளை விட்டுச் செல்ல விரும்பவில்லை, ஆனால் எனக்கு வேறு என்ன வழி? என் கணவரின் வருமானம் போதாது, கடன்கள் பெருகிக்கொண்டே இருக்கின்றன. நான் போகவில்லை என்றால், நாங்கள் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம்."

பின்தங்கி விடப்பட்டவர்களுக்கு, ஒரு தாய் அல்லது மனைவியின் இல்லாமையானது நிரப்புவதற்கு கடினமான ஒரு வெற்றிடத்தை உருவாக்குகிறது. மட்டக்களப்பில் குடும்பங்களை நிர்வகிக்க வேண்டிய நிலையிலுள்ள பெண்கள் பெரும்பாலும் குடும்பத்தினரிடமிருந்து அல்லது சமுதாய வலையமைப்புகளிலிருந்தான குறைந்த ஆதரவுடன், பராமரிப்பு மற்றும் வருமானம் ஈட்டுதல் ஆகிய இரட்டைச் சுமையை எதிர்கொள்கின்றனர். இந்த மேலதிக பணிச்சுமை குறிப்பாக பெண் தலைமைத்துவ குடும்பங்களில் உள்ள பெண்களுக்கு உடல் சோர்வு மற்றும் உளநல சவால்களுக்கு வழிவகுக்கின்றது. மோதலின் விளைவுகளை இன்னமும் சமாளித்து வரும் ஒரு பிராந்தியத்தில், இந்த அழுத்தங்கள் பல ஆண்டுகளாக இடப்பெயர்ச்சி மற்றும் சமூகப் பிளவு காரணமாக ஏற்கனவே பலவீனமடைந்த பாரம்பரிய சமூக ஆதரவு அமைப்புகளின் சிதைவால் மேலும் அதிகரிக்கின்றன.

புலம்பெயர்ந்த குடும்பங்களில் உள்ள குழந்தைகள் புறக்கணிப்பு, மோசமான கல்வி வெளியீடுகள் மற்றும் உணர்ச்சிரீதியான அழுத்தங்களுக்கு குறிப்பாக பாதிப்புள்ளவர்களாக உள்ளனர். ஆய்வின் பங்கேற்பாளர்கள், ஒரு தாயின் இருப்பு இல்லாத நிலையில், குழந்தைகள் போதுமான மேற்பார்வை இல்லாமல், நடத்தை சார் பிரச்சினைகள், பாடசாலை இடைவிலகல் அல்லது முன்கூட்டிய திருமணங்களுக்கு வழிவகுப்பதாகக் குறிப்பிட்டனர். மட்டக்களப்பில் உள்ள ஒரு பாடசாலை ஆசிரியர் குறிப்பிடுகையில்: "புலம்பெயர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த பல பிள்ளைகள் பாடசாலையில் சிரமப்படுவதை நாங்கள் பார்க்கிறோம். அவர்கள் தங்களது தாய்மார்களை தவற விடுவதுடன், வீட்டில் அவர்களுக்கு வழிகாட்ட யாரும் இல்லாததால் சிலர் பாடசாலைக்கு வருவதையே நிறுத்திவிடுகிறார்கள்." நிலையான பராமரிப்பு கட்டமைப்புகள் இல்லாமை, இந்த குடும்பங்களில் உள்ள குழந்தைகள் அடுத்தகட்ட நகர்வு மற்றும் மீண்டெழுதிறனை கட்டியெழுப்புவதில் மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புகளை எதிர்கொள்வதால், பாதிப்புகளின் சுழற்சியை நிலைநிறுத்தும் அபாயத்தையும் ஏற்படுத்துகிறது.

தாய்மார்கள் இல்லாதது, வீட்டுப் பணிகளை நிர்வகிப்பதில் அல்லது பராமரிப்பதில் பழக்கப்படாத தந்தைகளின் மீது மேலதிக பொறுப்புகளை சுமத்துகிறது. சில சந்தர்ப்பங்களில், இந்த பரிமாணம் அதிகரித்த விரக்தி மற்றும் பதற்றத்திற்கு வழிவகுப்பதுடன், இது குடும்ப வன்முறை அல்லது போதைப்பொருள் பாவனைக்கு பங்களிக்கிறது. ஒரு சமுதாய தலைவர் விபரிக்கையில்: "ஒரு தாய் வளைகுடாவுக்கு மூன்று வருடங்கள் வேலைக்குச் செல்லும்போது, தந்தை பெரும்பாலும் தனிமையாக உணர்கிறார். சிலர் தங்களது வேலைகளை மறந்துவிட்டு மதுவுக்கு அடிமையாகிவிடுகிறார்கள், இதனால் பெண்கள் மீண்டும் வெளிநாடு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்படுவதுடன், குடும்பம் இன்னும் அதிகமாக பாதிக்கப்படுகிறது."

புலம்பெயர்வானது மட்டக்களப்பில் அதிகரித்து வரும் விவாகரத்து விகிதங்களுடன் தொடர்புடையது. நீண்ட கால பிரிவுகள் திருமண உறவுகளை சிரமத்திற்குள்ளாக்குவதுடன், சில சந்தர்ப்பங்களில், ஆண்கள் மறுமணம் செய்துகொள்கிறார்கள் அல்லது தங்கள் குடும்பங்களை முற்றிலுமாக கைவிடுகிறார்கள். வெளிநாட்டில் இருந்து திரும்பும் பெண்கள், பெரும்பாலும் எந்தவிதமான நிதிப் பாதுகாப்பும் அல்லது சமூக ஆதரவும் இல்லாமல், நிச்சயமற்ற சூழ்நிலைகளில் தங்களைக் காண்கிறார்கள். மீளத் திரும்பிய ஒரு புலம்பெயர்ந்தவர் பகிர்ந்து கொள்ளுகையில்: "நான் பல ஆண்டுகளாக வீட்டிற்கு பணம் அனுப்புவதற்காக வேலை செய்தேன், ஆனால் நான் திரும்பி வந்தபோது, என் கணவர் வேறு ஒருவரை திருமணம் செய்துகொண்டிருந்தார். இப்போது என்னிடம் எதுவும் இல்லை."

பரந்த சமுதாயமும் புலம்பெயர்வின் தாக்கத்தை உணர்கிறது. வேலை செய்யும் வயதுடைய வளர்ந்தவர்கள், குறிப்பாக பெண்கள் வெளியேறுவது சமூக ஒற்றுமையை பலவீனப்படுத்துகின்றதுடன் சமுதாய மீண்டெழுதிறனில் இடைவெளிகளை ஏற்படுத்துகிறது. முறைசாரா குழந்தை பராமரிப்பு அல்லது பகிரப்பட்ட விவசாய உழைப்பு போன்ற பாரம்பரிய ஆதரவு முறைமைகள் சிதைக்கப்படுவதுடன், இது பொருளாதார அல்லது காலநிலை தொடர்பான அதிர்ச்சிகளை குடும்பங்கள் சமாளிப்பதை கடினமாக்குகிறது.

இந்த சவால்கள் இருந்தபோதிலும், மட்டக்களப்பில் உள்ள பல குடும்பங்களுக்கு புலம்பெயரவு ஒரு முக்கியமான சமாளிப்பு வழிவகையாகவே உள்ளது. வெளிநாட்டு பணம் அனுப்புகைகள் உணவு, கல்வி மற்றும் சுகாதாரம் போன்ற அத்தியாவசிய செலவீனங்களை ஈடுகட்ட உதவுவதுடன், அவை பெரும்பாலும் பொருளாதார மற்றும் காலநிலை தொடர்பான அழுத்தங்களுக்கு எதிரான ஒரு தாங்குதளமாக செயற்படுகின்றன. இருப்பினும், புலம்பெயர்வின் நன்மைகள் சமமற்ற வகையில் பரம்பலடைந்துள்ளதுடன், வசதியான குடும்பங்கள் புலம்பெயர்வின் ஆரம்ப செலவீனங்களை ஈடுகட்டவும் அதன் பலன்களைப் பெறவும் சிறந்த நிலையில் உள்ளன. இதற்கு மாறாக, ஏழை குடும்பங்கள் முறைசாரா வழிவகைகளை நம்புவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்பதுடன் இது சுரண்டல் மற்றும் துஷ்பிரயோகத்திற்கான அவர்களின் பாதிப்பை அதிகரிக்கிறது.

## போதைப்பொருள் மற்றும் சமூக சிதைவு

மட்டக்களப்பில் மது மற்றும் போதைப்பொருட்களுக்கு அடிமையாதலின் அதிகரித்து வரும் போக்கானது காலநிலை மாற்றம் உருவாக்கிய பொருளாதார மற்றும் சமூக அழுத்தங்களுடன் சிக்கலான முறையில் இணைக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டமானது விவசாயம் மற்றும் மீன்பிடி போன்ற காலநிலைக்கு உணர்திறனான வாழ்வாதாரங்களை நம்பியிருப்பதால், ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி, வெள்ளம் மற்றும் பிற தீவிர வானிலை நிகழ்வுகளின் தாக்கங்களுக்கு குடும்பங்கள் அதிகரித்தளவில் பாதிக்கப்படக்கூடியதாக உள்ளன. இந்த காலநிலை அதிர்ச்சிகள் வருமான ஓட்டங்களை இடையூறு செய்வதுடன் வறுமையை ஆழப்படுத்தி நம்பிக்கையின்மை உணர்வை உருவாக்குவதுடன் இந்த நிலைமைகள் பெரும்பாலும் தனிநபர்களை போதைப்பொருள் பயன்பாடு மூலம் தப்பிக்கத் தூண்டுகின்றன.

முதன்மை வருமானமீட்டுபவர்களாக கருதப்படும் ஆண்களுக்கு, பயிர்கள் அழிவது அல்லது வெள்ளம் அல்லது மனித-யானை மோதல் காரணமாக மீன்பிடி உபகரணங்கள் அழிவது, பற்றாக்குறை மற்றும் விரக்தி உணர்வுகளுக்கு வழிவகுக்கும். விவசாயிகள் விவசாயக் கடன்களைப் பெறுவதற்கு துணையாக நம்பியிருக்கும் பயிர் விளைச்சலின் இழப்பும் கடன் பொறிகளை துண்டுதல் செய்கிறது. பாரம்பரிய ஆண் என்ற உணர்வு சமரசம் செய்யப்படுவதுடன் இணைந்த வெட்க உணர்வு தொடர்பான இந்த உணர்பூர்வமான சிரமமானது பொருளாதார கடினத்தன்மையுடன் இணைந்து, பல ஆண்களை மது, போதைப்பொருட்கள், உளச்சோர்வு மற்றும் தற்கொலை போன்ற ஒரு சமாளிப்பு வழிமுறைக்குத் தள்ளுகின்றன. மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு விவசாயி ஒரு குவிநோக்கு குழுக் கலந்துரையாடலில் விபரிக்கையில், "அறுவடை தோல்வியடையும் போது, எங்களுக்கு எதுவும் செய்ய முடிவதில்லை. எங்களில் சிலர் மது அருந்துகிறோம், ஏனெனில் அதிலிருந்து வெளியேற வழி இல்லை என்று உணர்கிறோம்."

காலநிலை தொடர்பான வாழ்வாதார அழுத்தத்தின் பொருளாதாரப் பாதிப்பானது பெண்களை பாராபட்சமாக பாதிப்பதுடன், அவர்கள் பெரும்பாலும் குடும்ப நிதி மற்றும் உணவுப் பாதுகாப்பை நிர்வகிக்க மேலதிக பொறுப்புகளை ஏற்க வேண்டியுள்ளது. பல சந்தர்ப்பங்களில், விவசாய வருமான இழப்பை ஈடுகட்டுவதற்கு பெண்கள் சிறு அளவிலான கைவினைப்பொருட்கள் அல்லது பால் பொருட்களை விற்பனை செய்வது போன்ற மாற்றீட்டு வருமான வழிகளை நாட வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகின்றனர். இருப்பினும், இந்த முயற்சிகள் பெரும்பாலும் குறைவாக மதிப்பிடப்படுபவையாகவே உள்ளதுடன், பெண்கள் தங்கள் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை விரிவாக்க சந்தைகளை அணுகுவதிலோ அல்லது வளங்களை அணுகுவதிலோ குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்கின்றனர்.

வாழ்வாதார அழுத்தம் மற்றும் போதைப்பொருளுக்கு அடிமையாதல் ஆகியவற்றின் மேற்பொருந்துகையானது பெண்களுக்கு ஒரு பாதிக்கப்படக்கூடிய தன்மையின் தீய சுழற்சியை உருவாக்குகிறது. ஆண்கள் மது அல்லது போதைப்பொருட்களை நாடும்போது, குடும்ப வருமானம் மேலும் குறைவடைந்து அதன் விளைவுகளை பெண்கள் சுமக்கின்றனர். போதைப்பொருளுக்கு அடிமையாதல், ஆக்ரோஷமான நடத்தையை ஏற்படுத்தி ஏற்கனவே உள்ள சமத்துவமின்மைகளை மிகைப்படுத்துவதால் இது அதிகரித்த குடும்ப வன்முறையாக வெளிப்படுகிறது.

மட்டக்களப்பிற்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெண் பகிர்ந்து கொள்கையில், "பயிர்செய்கை தோல்வியடையும் போது, என் கணவர் அதிகம் குடிக்கிறார். அவர் எளிதில் கோபப்படுவதுடன், இதனால் நாங்கள் தான் பாதிக்கப்படுகிறோம். எங்களுக்கு உதவ யாரும் இல்லை." சமூக பாதுகாப்பு வலையமைப்புகள் சிதைந்திருப்பதாலும், நீதித்துறை அமைப்புகளை அணுகுவது குறைவாக இருப்பதாலும், பாதுகாப்பு அல்லது வளங்களுக்கு பெண்களுக்கு குறைந்தளவான வழிவகைகளே உள்ளதால் மோதலுக்குப் பிந்தைய பகுதிகளில் இது போன்ற பரிமாணம் தீவிரமாக உள்ளது.

காலநிலை மாற்றமானது GBV-க்கு வழிவகுக்கும் சூழ்நிலைகளை பிற வழிகளிலும் தீவிரப்படுத்துகிறது. உதாரணமாக, சுற்றுச்சூழல் மாசடைவு மற்றும் வள பற்றாக்குறையால் மட்டக்களப்பில் உள்ள பெண்கள் பெரும்பாலும் குடிநீர் எடுக்க அல்லது விறகு சேகரிக்க நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. இந்த பணிகள் குறிப்பாக பாரம்பரிய சமுதாய பாதுகாப்பு வலையமைப்புகள் சிதைந்த பகுதிகளில் துன்புறுத்தல் அல்லது வன்முறையின் அபாயங்களுக்கு அவர்களை வெளிப்படுத்துகின்றன. மேலதிகமாக, காலநிலை தாக்கங்களால் ஏற்படும் பொருளாதார சிரமம் குழந்தைகள், குறிப்பாக பெண்பிள்ளைகள் தங்களது குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்காக பாடசாலை கல்வியை கைவிட கட்டாயப்படுத்துவதுடன், இது அவர்களின் இளவயது திருமணம் அல்லது சுரண்டலுக்கான பாதிப்பை அதிகரிக்கிறது.

பெண்களின் உளநல பாதிப்பு குறிப்பிடத்தக்கதாயினும் பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை. பொருளாதார அழுத்தம், குடும்ப வன்முறை மற்றும் பாதுகாப்பான இடங்கள் அல்லது உளநல ஆதரவு இல்லாமை ஆகியன ஒன்றிணைந்து பல பெண்கள் தனிமையாகவும் பொறியில் சிக்கியதாகவும் உணர வழிவகுக்கின்றன. ஒரு பங்கேற்பாளர் குறிப்பிடுகையில், "நாங்கள் குடும்பத்திற்கு உணவளிப்பது, பணம் சம்பாதிப்பது மற்றும் வீட்டில் வன்முறையை சமாளிப்பது என எல்லாவற்றையும் எங்கள் தோள்களில் சுமக்கிறோம். ஆனால் எங்களுக்கு செவிசாய்ப்பதற்கு யாரும் இல்லை." போரின் கோரமான வடுக்கள் இன்னமும் ஆறாமல் உள்ள ஒரு பிராந்தியத்தில், காலநிலையால் தூண்டப்படும் அழுத்தமானது மேலதிகமான சுமை என்பதுடன் குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு உளநல சவால்களை மேலும் மிகைப்படுத்துகின்றது.

இந்த சவால்களை எதிர்கொள்ளும் முயற்சிகள், காலநிலை மாற்றம், போதைப்பொருளுக்கு அடிமையாதல் மற்றும் GBV ஆகியவற்றின் மேற்பொருந்துகின்ற தன்மையை அங்கீகரிக்க வேண்டும். காலநிலைக்கு மீண்டெழுதிறனுடைய விவசாயம் அல்லது சிறு தொழில்களைத் ஆரம்பிப்பதற்கான நுண்நிதிகளை அணுகுதல் போன்ற பெண்களுக்கான வாழ்வாதார ஆதரவை விரிவாக்குவது, காலநிலைக்கு உணர்திறனான நடவடிக்கைகளில் பொருளாதார ரீதியான தங்கியிருத்தலை குறைக்க உதவுவதுடன் பெண்களுக்கு அதிகமான நிதியியல் சுதந்திரத்தை வழங்கும். அதே நேரத்தில், போதைப்பொருளுக்கு அடிமையாதல் மற்றும் -க்கு எதிராகப் போராடுவதற்கான சமுதாய அடிப்படையிலான முன்முயற்சிகளை அதிகரிக்க வேண்டியதுடன், தீங்கு விளைவிக்கும் பால்நிலை விழுமியங்களை நிவர்த்தி செய்வதற்கு ஆண்களையும், ஆண்பிள்ளைகளையும், அத்துடன் ஆண் சமூக மற்றும் மதத் தலைவர்களையும் விழிப்புணர்வு பிரச்சாரங்களில் ஈடுபடுத்துவதில் கவனம் செலுத்த வேண்டும்.

மேலும், உள சுகாதார சேவைகளை அனர்த்த பதிலளிப்பு பொறிமுறைகளில் ஒருங்கிணைப்பதும், காலநிலையால் பாதிக்கப்பட்ட சமுதாயங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதும் முக்கியமான படிநிலைகளாகும். மட்டக்களப்பைச் சேர்ந்த ஒரு பெண்கள் குழுத் தலைவர் குறிப்பிட்டது போல், "வானிலை மாற்றம் என்பது காலநிலையைப் பற்றியது மட்டுமல்ல. அது எங்கள் வீடுகளையும், எங்கள் சமுதாயங்களையும் உடைக்கிறது. நாங்கள் தப்பிப் பிழைக்க விரும்பினால், ஒருவருக்கொருவர் ஆதரவளித்து, புதிய வழிவகைகளைக் கண்டறிய வேண்டும்."

## மீண்டெழும் திறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள்: மட்டக்களப்பு மாவட்டத்திற்கான பிரத்தியேக பரிந்துரைகள்

**1. சமுதாயத்தால் வழிநடாத்தப்படும் வறட்சி இசைவாக்கம்:**

- நீர்ப்பாசன குளங்கள் புனரமைப்பு மற்றும் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப வறட்சியைத் தாங்கும் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டங்கள் உள்ளிட்ட சமுதாய மட்டத்தில் உள்ள நீர் முகாமைத்துவத் திட்டங்களை விருத்தி செய்வதுடன் அமுலாக்கத்திற்கு ஆதரவளித்தல்.
- மாறிவரும் மழைவீழ்ச்சிக்கு ஏற்ப பயிர்செய்வதற்கான நாட்காட்டி குறித்து உள்ளூர் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.
- கழிவு முகாமைத்துவத்தைக் கையாள்தல்.
- திண்மக் கழிவுகளை, குறிப்பாகக் கடனீரேரி பகுதிகளில் வினைத்திறனாக முகாமைத்துவம் செய்வதற்கு சமுதாயத்தால் முன்னெடுக்கப்படும் கழிவு சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி நிலையங்களை அமைத்தல்.
- கழிவு தரம் பிரிப்பு குறித்து சமுதாயங்களுக்குக் அறிவூட்டுவதுடன் சுற்றுச்சூழல் சீரழிவைக் குறைப்பதற்காக, சேதன கழிவுகளை உக்கிய உரமாக மாற்றுவதற்கான உட்கட்டமைப்பை வழங்குதல்.

**2. இளைஞர்கள் மற்றும் வாழ்வாதாரங்கள்:**

- காலநிலை மீண்டெழுதிறன் கொண்ட விவசாயம் மற்றும் மீன்வளர்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவிக்க இளைஞர்களை இலக்காகக் கொண்ட விவசாயப் புத்தாக்க மையங்களை அறிமுகப்படுத்துதல்.
- சூழல்சார் சுற்றுலா மற்றும் நிலைபேண்தன்மையான கைவினைப் பொருட்களில் இளைய தொழில்முனைவோருக்காக நுண் மானியங்களை வழங்குதல்.

**4. ஆளுகை மற்றும் சமத்துவம்:**

- தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்கள் உள்ளிட்ட ஓரங்கட்டப்பட்ட குழுக்கள், காலநிலைக்கு இசைவான திட்டமிடலில் ஒரு குரலைக் கொண்டிருப்பதை உறுதிசெய்வதற்கு பங்கேற்பு ஆளுகை பொறிமுறைகளை மேம்படுத்துதல்.

**5. வாழ்வாதாரங்கள் மூலம் பெண்களை மேம்படுத்துவதுடன் போக்குவரத்து அணுகலை மேம்படுத்துதல்:**

- தேங்காய் சார்ந்த உற்பத்திப் பொருட்கள் போன்ற இலாபகரமான தொழில்களை நிறுவுவதற்குப் பெண்களுக்கு மானியங்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குதல்.
- வெளிச் சந்தைகளைச் சார்ந்திருப்பதைக் குறைக்கவும், வீட்டு வருமானத்தை அதிகரிக்கவும் பயிர்கள் மற்றும் பால் பொருட்களில் பெறுமதி சேர்த்தலுக்கான உள்ளூர்மயமாக்கப்பட்ட பதனிடல் நிலையங்களை நிறுவுதல்.
- பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்க உதவும் பாதுகாப்பான மற்றும் நம்பகரமான போக்குவரத்துத் தெரிவுகளில் முதலீடு செய்தல். இதற்கான உதாரணங்களில் நீண்ட தூரம் பயணிப்பதில் பெண்கள் பாதுகாப்புக் குறைவான உணர்வை எதிர்கொள்ளும் பகுதிகளில் ஆடைத் தொழிற்சாலைகள் அல்லது சந்தைகளுக்கான மானியத்துடன் கூடிய போக்குவரத்துச் சேவைகள் அடங்கும்.

**6. ஆளுகையை வலுப்படுத்துதல் மற்றும் விவசாயக் கொள்கைகளை உருவாக்குதல்:**

- பயிர் நாட்காட்டிகள் மற்றும் உர விநியோகம் தொடர்பான தீர்மானங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளுக்குக் குரல் கொடுப்பதற்காக, மட்டக்களப்பில் ஒரு நெல் சங்க அலுவலகத்தை நிறுவி, உள்ளூர் காலநிலை நிலைமைகளுடனான சீரமைப்பை உறுதிசெய்தல்.
- வெள்ளத் தணிப்பு மற்றும் கைவிடப்பட்ட குளங்களின் மீட்டெடுப்பு குறித்து ஏற்கனவே உள்ள திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு, கிழக்கில் விவசாயிகளுக்கான நீர் வள முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக நடைமுறைப்படுத்தலில் பின்தங்கியுள்ள மழை நீர் சேகரிப்பு குளங்கள் மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பு புனரமைப்பில் முதலீடு செய்தல்,
- மாகாணத்தின் குறிப்பிட்ட காலநிலை மற்றும் விவசாய நுட்பங்களுக்கு ஏற்ப காலநிலை மீண்டெழுதிறன் கொண்ட விவசாயம் மற்றும் அனர்த்த அபாய குறைப்பு (DRR) என்பவற்றில் கவனம் செலுத்தி, ஆண் மற்றும் பெண் விவசாயி-களுக்கான இயலளவை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சி திட்டங்களை ஆரம்பித்தல்.
- உள்ளூர் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணங்கியவாறு கொள்கைகளைச் சீரமைப்பதன் மூலம் விவசாய அபிவிருத்தியில் பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைச் சீர் செய்தல்.
- பல்துறை நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துவதுடன் உள்ளூர் ஆளுகையின் வினைத்திறனுக்காக மாநகர சபைகள், பிரதேச சபைகள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் விவசாய மற்றும் நீர்ப்பாசன திணைக்களங்கள் போன்ற தொடர்புடைய தரப்பினர் கலந்தாலோசனைகளில் முனைப்பாக ஈடுபடுவதை உறுதிசெய்தல்.

**7. சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் மற்றும் கல்வி அணுகலை விரிவுபடுத்துதல்:**

- நிறுவனங்களின் ஆதரவுடன் சமுதாயத்தால் வழிநடாத்தப்படும் அணுகுமுறைகள் மூலம் போதைப்பொருள் பாவனை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகளை எதிர்த்துப் போராடுதல்.
- பாதிக்கப்படக்கூடிய தன்மையைக் குறைத்து சமூக ஒற்றுமையை வளர்ப்பதற்காக பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்குவதுடன் போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடாத்துதல்
- பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதற்காக உள்ளூர் கைத்தொழில்களுக்கு ஏற்றவாறு தையல் தொழில் அல்லது சூழல் சார் சுற்றுலா போன்ற தொழில் பயிற்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- கிராமிய இளையவர்களுக்கு, குறிப்பாகப் பெண்பிள்ளைகள், ஆண்பிள்ளைகள் மற்றும் பால்நிலை பல்வகைப்பட்ட பிள்ளைகளுக்கு கல்வி பெறுவதில் உள்ள தடைகளைக் குறைக்கவும், இடைவிலகல் வீதத்தைக் குறைக்கவுமென இலக்கு வைக்கப்பட்ட புலமைப்பரிசில்கள் மற்றும் போக்குவரத்து உதவிகளை வழங்குதல்.
- கல்வி மற்றும் திறன்கள் விருத்தி திட்டங்கள் மூலமாக வறுமை மற்றும் காலநிலை சவால்களுக்கு எதிராக நீண்டகால மீண்டெழுதிறனை உருவாக்குதல்.

## வேடர்கள்: பழங்குடி சமூகம்

இலங்கையின் பழங்குடி சமுதாயங்களில் ஒன்றான வேடர்களுக்கு நிலத்துடன் ஒரு தனித்துவமான கலாச்சார மற்றும் வரலாற்றுத் தொடர்பு உள்ளதுடன் வேட்டையாடுதல், சேகரித்தல் மற்றும் சிறிய அளவிலான விவசாயம் போன்ற பாரம்பரிய வாழ்வாதாரங்களைக் கடைப்பிடிக்கின்றனர். மட்டக்களப்பில், காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் ஆளுகை பிரச்சினைகள் ஆகியவை வேடர்களின் வாழ்க்கை முறையைப் பெரிதும் பாதித்து வருவதுடன், இத்தகைய சவால்களால், அவர்கள் கடும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். சீரற்ற மழை, நீண்டகால வறட்சி மற்றும் காடழிப்பு ஆகியவை அவர்களின் வாழ்வாதாரத்திற்குத் தேவையான நீர், காட்டுத் தாவரங்கள் மற்றும் விலங்குகள் போன்ற இயற்கை வளங்களின் கிடைப்பைக் குறைத்துள்ளன. அவர்களின் பாரம்பரிய அறிவு அமைப்புகள் சுற்றுச்சூழலுடன் ஆழமாகப் பிணைந்துள்ளதால், இம்மாற்றங்கள் அவர்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் கலாச்சார பாரம்பரியத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளன.

காடுகளுக்குள் உள்ள வேடர் குடியிருப்புகளின் தனிமைப்படுத்தப்பட்ட இடம், குறிப்பாக சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற அத்தியாவசிய சேவைகளைப் பெறுவதில் அவர்களின் பாதிப்பை மேலும் அதிகரிக்கிறது. பருவகால மழை காரணமாகச் வீதிகள் பெரும்பாலும் பழுதடைந்து, சமுதாயங்களை பாடசாலைகள் மற்றும் மருத்துவமனைகளில் இருந்து துண்டிக்கின்றன. இது வரலாற்று ரீதியாக மழைக்காலத்தில் படகுகளைப் பயன்படுத்தி நிர்வகிக்கப்பட்டாலும் காலநிலை மாற்றத்தால் இப்போது வெள்ளம் கணிக்க முடியாததாகவும் படகுகள் கிடைக்க முடியாதுள்ளது. இந்த ஆய்விற்கான கள ஆய்வின் போது, ஒரு குடியேற்றத்திற்கான வீதி ஒரு வழமையான வாகனம் செல்ல முடியாததாக இருந்ததுடன், இதனால் குழந்தைகள் பேருந்தில் பாடசாலைக்குச் செல்வது சாத்தியமற்றதாகிறது.

நில ஆக்கிரமிப்பு, கடுமையான வனத்துறை ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்க மீள்குடியேற்ற திட்டங்கள் வேடர்களை மேலும் ஓரங்கட்டிவிட்டதுடன், அவர்களின் மூதாதையரின் நிலங்களுக்கான அணுகல் மற்றும் வனப் பொருட்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துகின்றன. இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு பழங்குடியினரின் உரிமைகளை மதிக்கும், இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் மற்றும் காலநிலை இசைவாக்க மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்பும் முயற்சிகளில் வேடர்களை ஒருங்கிணைக்கும் உள்ளடக்கிய கொள்கைகள் அவசியமாகும்.

## 6.3 அம்பாந்தோட்டை

அம்பாந்தோட்டை, இலங்கையின் தென் மாகாணத்தில் அமைந்துள்ளதுடன், இது காலநிலை பாதிப்புகள் மற்றும் சமூகப் பொருளாதார சவால்களின் தனித்துவமான கலவையைக் கொண்டுள்ள அதே நேரத்தில் நாட்டின் அரசியல் மற்றும் அபிவிருத்தி பரப்பில் வரலாற்று ரீதியாக ஒரு முக்கிய வகிபங்கைக் கொண்டிருந்தது. மாவட்டமானது உலர் வலயம், இடை வலயம் மற்றும் ஈர வலயம என மூன்று காலநிலை வலயங்களை உள்ளடக்கியுள்ளதால் பல்வேறு காலநிலை அபாயங்களை எதிர்கொள்கிறது.

நீடித்த வறட்சி, சீரற்ற மழை, அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் கடல் மட்ட உயர்வு போன்ற அபாயங்கள் உள்நாட்டு மற்றும் கடலோர வாழ்வாதாரங்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளன. கடலோர சமுதாயங்கள் குறிப்பாகப் பவளப் பாறைகள் வெளுறுதல், சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் உவர்நீர் உட்புகுதல் ஆகியவற்றால் பாதிக்கப்படுவதுடன் இது பாரம்பரிய மீன்பிடி நடைமுறைகள் மற்றும் தெற்குக் கடற்கரையோர சுற்றுலாவைத் சீர்குலைக்கிறது. அம்பாந்தோட்டை மிதமான இடப்பெயர்வு விகிதங்களையும் அனுபவித்து வருவதுடன் இதற்குச் சுற்றுச்சூழல் அழுத்தங்கள் மற்றும் சமூகப் பொருளாதார வளர்ச்சி ஆகிய இரண்டும் காரணமாகும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சொந்த ஊராக இருப்பதால், அம்பாந்தோட்டையின் கதை அதன் அரசியல் உறவுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவரது பதவிக் காலத்தில் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் போன்ற பாரிய உட்கட்டமைப்புத் திட்டங்களை மாவட்டம் கண்டது.

### சமூகப் பொருளாதார சூழல்

இது இந்தப் பகுதியை ஒரு பிராந்தியப் பொருளாதார மையமாக மாற்றுவதற்கான ஒரு வெளிப்படையான தொலைநோக்குப் பார்வையின் ஒரு பகுதியாகும்.

இந்த முதலீடுகள், பிற பல பிரதேசங்களில் இல்லாத வளங்களையும் வாய்ப்புகளையும் கொண்டு வந்ததுடன் இவை அதன் பொருளாதார பரப்பை வடிவமைத்து, இன்று அதன் சமுதாயங்களின் மீண்டெழுதிறனில் செல்வாக்கு செலுத்தியுள்ளன. எவ்வாறாயினும், இந்த செயற்திட்டங்கள் சமுதாயங்களுக்கான நிலையான நன்மைகளை விட அரசியல் அபிலாஷைகளுக்கு முன்னுரிமை அளித்தமைக்காக விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளன. இன்று, பல சமுதாயங்கள் மறுமலர்ச்சி குறித்த நிறைவேறாத வாக்குறுதிகளுடன் போராடி, சுற்றுச்சூழல் சவால்களுக்கும் சமூகப் பொருளாதாரப் போராட்டங்களுக்கும் இடையே ஒரு பலவீனமான சமநிலையை வழிநடாத்துகின்றன.

அம்பாந்தோட்டையின் சனத்தொகை பெரும்பாலும் சிங்களவர்கள் என்பதுடன் சிறியளவில் இலங்கைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள் சமுதாயங்கள் உள்ளன, அத்துடன் பௌத்த மற்றும் இஸ்லாம் மதங்கள் பின்பற்றப்படுகின்றன.

## காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள்

### எதிர்வு கூறமுடியாத மழைவீழ்ச்சி

அம்பாந்தோட்டையில் உள்ள சமுதாயங்கள் சீரற்ற மழை, நீண்ட வறட்சி மற்றும் அதிகரித்து வரும் வெப்பநிலையின் கடுமையான யதார்த்தங்களை உணர்ந்துள்ளதுடன் இது விவசாயம் மற்றும் மீன்பிடித்தல் ஆகிய இரண்டிலும் பேரழிவை ஏற்படுத்துகிறது. கடந்த பத்தாண்டுகளில், மழை எதிர்வு கூற முடியாததாகிவிட்டதுடன், வறட்சி காலங்கள் முன்பை விட நீண்டு, திடீர் மழை வயல்களை மூழ்கடிக்கின்றது. லுனுகம்வெஹெராவில், ஆண் மற்றும் பெண் விவசாயிகள் இருவரும் தங்களது பயிர்களான பப்பாசி, பச்சை மிளகாய், வெள்ளரி மற்றும் தக்காளி ஆகியவை எதிர்பாராத வெள்ளத்தால் அழிந்ததன் பேரழிவு தரும் தாக்கத்தை ஆராய்ச்சியாளர்களுக்குக் காட்டினர். இந்த மாறுபட்ட வானிலை முறைமைகள் அறுவடைகளைச் சேதப்படுத்துவது மட்டுமல்லாமல், நிலத்தை நம்பியுள்ள குடும்பங்களின் வாழ்வாதாரத்தையும் அச்சுறுத்துகின்றன.

அறுவடைக்கு முந்தைய மழை உட்பட மாறிவரும் மழைவீழ்ச்சி போக்குகளால் விவசாயிகள் தங்களது பயிர்களைப் பாதுகாக்க மேலதிக நடவடிக்கைகளை எடுக்க வேண்டியேற்படுவதால் விவசாயிகளுக்குக் மேலதிக செலவீனங்களை உருவாக்கியுள்ளன. சிறுபோக விவசாயப் பருவம் (மார்ச்-செப்டம்பர்) போதுமான மழை இல்லாமல் இருப்பதைக் குறிப்பதாகவும், அதே சமயம் பெரும்போக விவசாயப் பருவம் (அக்டோபர்-பெப்ரவரி) சில நிவாரணங்களை அளித்தாலும் சீரற்றதாகவே உள்ளது என்றும் விவசாயிகள் குறிப்பிட்டுள்ளனர்.

நீரியல் முறைமைகளின் எதிர்வு கூற முடியாத தன்மை அதிகரிப்பது, வினைத்திறனான பயிரிடல் அட்டவணைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்திகளை அமுல்படுத்துவதற்கான விவசாயிகளின் திறனைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதுடன் பிராந்தியத்தில் உணவுப் பாதுகாப்பு மற்றும் விவசாய வாழ்வாதாரங்கள் இரண்டையும் அச்சுறுத்துகிறது.

### அதிக வெப்பம்

அதிகரித்து வரும் வெப்பநிலையானது விவசாயிகள் மற்றும் மீனவர்களின் வாழ்க்கையை மேலும் கடினமாக்குவதுடன் அவர்களின் ஆரோக்கியத்திற்கும் அவர்களின் வேலைக்கும் தீங்கு விளைவிக்கின்ற வெப்ப அழுத்தத்தால் போராடுவதாகக் கூறுகின்றனர். கடலோர சமுதாயங்கள், குறிப்பாக வெளிப்புற உழைப்பை நம்பியிருப்பவர்கள், நீரிழப்பு மற்றும் வெப்பம் தொடர்பான நோய்களால் பாதிக்கப்படும் அபாயம் அதிகரித்து வருகிறது. வெப்பம் ஏற்கனவே தாங்க முடியாததாகி வருவதுடன், வெப்பநிலை 26°C க்கு கீழே குறையாதுள்ள வெப்ப இரவுகள் அதிகமாகி வருகின்றன (Geldin 2025). எதிர்வரும் காலங்களில், நூற்றாண்டின் நடுப்பகுதியில், அம்பாந்தோட்டை உட்பட வறண்ட வலயத்தில் சராசரி வெப்பநிலை 1°C க்கு மேல் உயரக்கூடும் என்பதுடன் இது இந்த சமுதாயங்களுக்கு மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தும் என்று கணிப்புகள் காட்டுகின்றன.

அம்பாந்தோட்டை மற்றும் காலி ஆகிய இடங்களில், அதிகரித்து வரும் வெப்பநிலையானது இளம் பருவப் பெண்களின் மாதவிடாய் சுழற்சியில் ஏற்படும் தொந்தரவுகள் உள்ளடங்கலாக பெண்களின் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது என்று சிவில் சமூகக் குழுக்கள் குறிப்பிட்டுள்ளன. ஏழை குடும்பங்கள் மிகவும் பாதிக்கப்படுவதுடன் வெப்பத்தின் விளைவுகளை மிகவும் கடுமையாக உணர்கின்றன. முஸ்லிம் பெண்களுக்கு அதிக வெப்பத்தில் அபாயா அணிவது அதிகரித்து வரும் வெப்பநிலையைச் சமாளிப்பதை மேலும் கடினமாக்குவதால் அவர்கள் மேலதிக சவால்களை எதிர்கொள்கின்றனர்.

பவளப் பாறைகள் வெளுத்தல் மற்றும் அதிகரித்து வரும் கடல் வெப்பநிலை மீன் இனப்பெருக்கம் மற்றும் "அய னயட" போன்ற பாரம்பரிய மீன்பிடி முறைகளைத் சீர்குலைத்து இலாபமற்றதாக ஆக்குவதால் கடலோர சமுதாயங்கள் அதிகரித்த அழுத்தத்தின் கீழ் உள்ளன. பல மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கைவிட்டு, மற்ற வேலைகளுக்கு அல்லது உள்நாட்டு விவசாயத்திற்கு மாற வேண்டிய கட்டாயத்தில் உள்ளதுடன். இது வளங்கள் மற்றும் கிடைக்கக்கூடிய காலநிலைக்கு பாதுகாப்புடைய வாழ்வாதாரங்களுக்கான போட்டியை அதிகரிக்கிறது. நூற்றாண்டின் நடுப்பகுதியில் 23 செ.மீ அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படும் கடல் மட்ட உயர்வானது வெள்ளம், அரிப்பு மற்றும் உவர்நீர் உட்புகுதல் அபாயங்களை ஏற்படுத்துவதுடன் இது வீடுகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கிறது. இந்தச் சவால்கள் ஏற்கனவே மாறிவரும் காலநிலைக்குத் இசைவாகிக்கொள்ளப் போராடும் சமுதாயங்களுக்கு அதனை மேலும் கடினமாக்குகின்றன.

## வனவிலங்குகளிலிருந்தான அச்சுறுத்தல்கள்

யானைகள், குரங்குகள் மற்றும் மயில்கள் போன்ற வனவிலங்கு மோதல்கள் அம்பாந்தோட்டையில் ஒரு தொடர்ச்சியான பிரச்சினை என்பதுடன் இது காலநிலை தாக்கங்கள் மற்றும் அபிவிருத்தியின் விளைவாக ஏற்படும் வாழ்விட மாற்றங்களால் தூண்டப்படுகிறது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கட்டுமானத்திற்காக இடம் மாற்றப்பட்ட சமுதாயங்கள் யானைகள் அடிக்கடி விவசாய நிலங்களை அழித்து உட்கட்டமைப்பைச் சேதப்படுத்துவதாக விரிவாகக் கூறின.

> "எங்களது சமுதாயம் இடம் மாற்றப்பட்டபோது, பாடசாலை நீண்ட காலமாக காணப்பட்ட யானை பாதையில் கட்டப்பட்டது. சுவர்கள் பல முறை யானைகளால் அழிக்கப்பட்டுள்ளன"
>
> \- இஷாரா, பெண், 50, துறைமுக கிராமம், KII 2025

இந்த இடமாற்றங்கள், பெரும்பாலும் குறைந்த சமுதாய ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படுவதுடன் பாரம்பரிய சமூக வலையமைப்புகளைத் சீர்குலைத்து, குறிப்பாக ஏழை குடும்பங்களிடையே ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை மோசமாக்கியுள்ளன.

விவசாயிகள் தங்களது பயிர்களைப் பாதுகாப்பதற்காக சோளக்கதிர்களைத் தனித்தனியாகப் பொலித்தீனில் மூடுவது போன்ற உழைப்பு மிகுந்த நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். இந்த மோதல்கள் வாழ்வாதாரங்கள் மற்றும் தனிப்பட்ட பாதுகாப்பு இரண்டிற்கும் அபாயங்களை ஏற்படுத்துவதுடன் இது சுற்றுச்சூழல் மற்றும் சமூகப் பொருளாதார பாதிப்புகளைச் சமநிலைப்படுத்துவதன் பரந்த சவால்களைப் பிரதிபலிக்கிறது. காலநிலை மாற்றம் ஏற்கனவே வாழ்வாதாரங்களை பாதிக்கின்ற ஒரு சூழலில், மனித-வனவிலங்கு மோதல்களின் மேலதிக சுமை பொருளாதார பாதுகாப்பின்மையை ஆழமாக்குவதுடன் வனவிலங்கு காப்பு முயற்சிகள் மற்றும் உள்ளூர் நிறுவனங்களின் மீது கோபத்தை வளர்க்கிறது.

காட்டு யானை தாக்குதல்கள் அதிகரித்தமைக்கு பதிலளிக்கும் விதமாக, சமுதாயங்கள் மற்றும் அமைச்சுகள் கிராமங்கள், சேனைப் பயிர்ச்செய்கைகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட யானைகள் காப்பகங்களைச் (MER) சுற்றி மின்சார வேலிகளை நிறுவ முயற்சிகளை ஒருங்கிணைத்துள்ளன. அருகிலுள்ள தேசிய பூங்காக்கள் மற்றும் காப்பகங்களில் இருந்து யானைகள் நுழைவதைத் தடுக்க இந்த நடவடிக்கைகள் ஓரளவு வினைத்திறனைக் வெளிக்காட்டியிருந்தாலும் அவை போதுமானதாக இல்லை.

சமுதாய ஆலோசனைகளின் போது, வீரவிலவில் ஒரு கிராமத்தில் இருந்து விலங்குகளை விரட்ட முயன்றபோது, காட்டு யானை தாக்கியதில் ஒரு நபர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவர் குணமடைந்து வரும் நிலையில் அவரது குடும்பம் இப்போது நிதி நெருக்கடியை எதிர்கொள்கிறது. இது மனித-வனவிலங்கு மோதல்களைத் தணிப்பதற்கான விரிவான மற்றும் நிலையான தீர்வுகளின் தொடர்ச்சியான தேவைப்பாட்டை காட்டுகிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்குப் போதுமான ஆதரவின்மையானது ஆளுகையின் மீதான நம்பிக்கையைக் குறைப்பது மட்டுமல்லாமல், காலநிலை பாதுகாப்பின்மை மற்றும் வனவிலங்கு மோதல்களின் கூட்டு அழுத்தங்களைச் சமாளிப்பதற்கு சமுதாயங்கள் போராடுவதால், சமூக ஒற்றுமையையும் பலவீனப்படுத்துகிறது. இந்தச் சவால்கள், மனித-வனவிலங்கு மோதல்கள் மட்டுமல்லாமல், அம்பாந்தோட்டையில் உள்ள சமுதாயங்கள் எதிர்கொள்ளும் பரந்த பாதிப்புகளையும் நிவர்த்தி செய்வதில் ஆளுகை மற்றும் பெண்களின் ஈடுபாட்டின் முக்கிய வகிபங்கை சுட்டிக் காட்டுகின்றன.

## ஆளுகை மற்றும் வள முகாமைத்துவத்தில் உள்ள இடைவெளிகள்

அரசாங்க சேவைகள் பெரும்பாலும் போதுமானதாக இல்லை அல்லது அணுகுவது கடினம் என்று கருதப்படுகிறது. வனவிலங்குகள் மற்றும் காலநிலை தாக்கங்களால் ஏற்படும் பயிர் சேதங்களுக்கு இழப்பீடு இல்லாமை, அத்துடன் காலநிலைக்கு மீண்டெழுதிறனுடைய நடைமுறைகளை ஏற்றுக்கொள்வதற்கான வரையறுக்கப்பட்ட ஆதரவு ஆகியவற்றால் விவசாயிகள் விரக்தியடைந்துள்ளனர். உதாரணத்திற்கு, பொலித்தீன் கூடாரத்தில் மேற்கொள்ளும் பயிர்செய்கைக்கான சில பயிற்சி மற்றும் நிதி உதவிகள் இருந்தாலும், பிராந்தியத்திற்கேற்ற பயிர் பரிந்துரைகள் இல்லாதது போன்ற கொள்கைகளில் உள்ள இடைவெளிகள் வினைத்திறனின்மை மற்றும் சந்தை உறுதியற்ற தன்மையை உருவாக்குகின்றன. பல கிராமவாசிகள், ஆண் மற்றும் பெண், பயிர் காப்பீடு அல்லது விவசாய தொழில்நுட்பத்திற்கான நிதி உதவி போன்ற சேவைகளுக்கான தங்களது உரிமைகளைப் பற்றி அறியாதவர்களாக இருக்கின்றனர்.

வரலாற்று ரீதியாக விவசாய வாழ்வாதாரங்களை ஆதரித்த பாரம்பரிய நீர்வீழ்ச்சி மற்றும் நீர்த்தேக்க அமைப்புகள் பெருகிய முறையில் அழுத்தத்தில் உள்ளன. பல நீர்த்தேக்கங்கள் வண்டல் மண்ணால் நிரம்பிவிட்டதுடன், வறண்ட காலத்திற்கு நீர் சேமிக்கும் அவற்றின் இயலளவை குறைத்து, சீரற்ற மழையின் தாக்கங்களை அதிகரிக்கின்றன. வறட்சி அபாயம் உள்ள இந்த பிராந்தியத்தில் நீர் வளங்களை நிர்வகிப்பதற்கு முக்கியமான இந்த அமைப்புகளைப் பராமரிக்கவும் புனரமைக்கவும் அரசாங்கத்தின் ஆதரவு இல்லாததால் விவசாயிகள் விரக்தியை வெளிப்படுத்தியுள்ளனர்.

> "அவர்கள் நீர்த்தேக்கங்களில் இருந்து தண்ணீரை வெளியிடும்போது, எமக்கு ஒருபோதும் அறிவிப்பதில்லை. இதனால் எங்கள் வீடு மற்றும் வயல்களுக்கு அருகிலுள்ள ஆறு நிரம்பி வழிகிறது. புயலின் போது அவர்கள் கடைசியாக நீர்த்தேக்கத்தைத் திறந்தபோது, நாங்கள் ஏற்கனவே ஒரு நீர்ப்பம்பியை இழந்திருந்தமையால், சேதத்தைத் தடுக்க எங்களது நீர்ப்பம்பியை அவசரமாக இணைப்பிலிருந்து அகற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது."
>
> - விஷ்மி, ஆண், விவசாயி, 62, அம்பாந்தோட்டை.

எல்லகலவில், ஒரு இயற்கை கால்வாயில் தண்ணீரைத் திசைதிருப்பிய ஒரு நீர்ப்பாசனத் திட்டம் ஆற்றுப் படுகை அரிப்பை மோசமாக்கியுள்ளதுடன் இது வீடுகள் மற்றும் விவசாய நிலங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கிறது. இந்தச் சவால்கள் இருந்தபோதிலும், அம்பாந்தோட்டையின் நிலைமைகளில் செழித்து வளரும் மிளகு மற்றும் மஞ்சள் போன்ற தாங்குதிறன் கொண்ட பயிர்களை ஊக்குவிக்க வாய்ப்புகள் உள்ளன. ஆனால் அரசாங்கத்தின் வரையறுக்கப்பட்ட ஊக்குவிப்பு காரணமாக அவை குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றன.

நுண்கடன் பல சமுதாயங்களுக்கு ஒரு இருமுனை வாளாக மாறியுள்ளது, இது அரசாங்கம் அல்லது வங்கிக் கடன்களுடன் ஒப்பிடும்போது வேகமான மற்றும் இலகுவாக அணுகக்கூடிய நிதி ஆதரவை ஆனால் பெரும்பாலும் அதிக செலவில் வழங்குகின்றது. பல கடன் வாங்குபவர்கள் அவர்கள் ஒப்புக்கொள்ளும் நிபந்தனைகளைப் பற்றி முழுமையாகப் புரிந்துகொள்வதில்லை என்பதுடன் இது வட்டி விகிதங்கள் குவிவதால் நிதி நெருக்கடிக்கு வழிவகுக்கிறது. கடனாளிகளிடமிருந்து கடன்களை மீட்டெடுக்க சேகரிப்பாளர்கள் அதிகரித்த முறையில் ஆக்கிரமிப்பு நுட்பங்களை ஏற்றுக்கொண்டதால் இந்த பிரச்சினை அதிகரித்துள்ளது. இது பாதிக்கப்படக்கூடிய குடும்பங்களுக்குக் மேலதிக உள அழுத்தத்தையும் பாதுகாப்பின்மையையும் உருவாக்குகிறது.

## சமூகப் பொருளாதார சவால்கள் மற்றும் இடப்பெயர்வு

அம்பாந்தோட்டையில், சுற்றுச்சூழல் சவால்கள் மற்றும் விரைவான மாற்றங்கள் பலருக்கு வாழ்க்கையை கடினமாக்கியுள்ளன. குறைந்து வரும் பயிர் விளைச்சல், பாரம்பரிய மீன்பிடியின் சரிவு மற்றும் அதிகரித்து வரும் விவசாய செலவீனங்கள் ஆகியவை குடும்பங்களை உள்நாட்டு விவசாயம் அல்லது சிறு வணிகங்கள் போன்ற பிற வழிகளில் வாழ்வாதாரங்களைத் தேடுவதற்கு கட்டாயப்படுத்தியுள்ளன. ஒரு காலத்தில் வீடுகளைக் கட்டவும் தங்களது வாழ்க்கையை மேம்படுத்தவும் உதவிய விவசாயத்தின் வருமானம் இப்போது அடிப்படைத் தேவைகளை மட்டுமே பூர்த்தி செய்கிறது என்று மக்கள் தெரிவித்தனர்.

> "நாங்கள் ஆங்கில முன்பள்ளியில் கற்பிக்கிறோம், ஒரு சிறிய கடை வைத்திருக்கிறோம், பயிர்களை வளர்க்கிறோம், ஆனாலும் போதுமான அளவு சம்பாதிப்பது கடினமாக உள்ளது."
>
> - ஆஷா, பெண், தொழில்முனைவோர், 54, அம்பாந்தோட்டை.

பொருளாதார பாதிப்புகள் குடும்ப சவால்களை அதிகரிப்பதுடன் இது குறிப்பாகப் அனர்த்த அபாயம் உள்ள மற்றும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய பகுதிகளில் அதிகமாக உள்ளது. அம்பாந்தோட்டையில், பெண்கள் குறிப்பிடத்தக்க நிதி மற்றும் உணர்ச்சி சுமைகளை எதிர்கொள்வதுடன் இது குறிப்பாக ஆண் குடும்ப உறுப்பினர்கள் வீட்டு வருமானத்திற்கு பங்களிக்க முடியாதபோது அல்லது விரும்பாதபோது நிகழ்கிறது. ரன்மினிதன்னவில் ஒரு சிறு வணிகப் பெண்மணி தனது கணவரின் மதுப்பழக்கம் மற்றும் ஆதரவின்மை இருந்தபோதிலும், தனது குடும்பத்தின் நிதிகளை நிர்வகித்து, ஒரு இனிப்பு விற்பனை வணிகத்தை நடாத்தி, நெல் பயிரிடுகையிலும் ஈடுபட்டுள்ளார். மீள்குடியேற்றப்பட்ட சமுதாயங்களில், ஆரம்ப இழப்பீடு வழங்கப்பட்ட போதிலும் பல குடும்பங்கள் இந்த நிதியைத் தீர்த்துவிட்டதாலும் நிலையான வேலைவாய்ப்பை அணுகுவதில் சிரமங்களை எதிர்கொள்வதாலும் நிதிசார் போராட்டங்கள் தொடர்கின்றன.

"மக்கள் எங்களிடம் பணம் இருப்பதாக நினைக்கிறார்கள், ஏனென்றால் நாங்கள் இடமாற்றம் செய்யப்பட்டதற்காக இழப்பீடு பெற்றோம். அந்தப் பணத்தை வீடு கட்டுவதற்குச் செலவிட்டோம், இப்போது எங்களிடம் அதிகம் இல்லை."

- சஹேலி, ஆண், தொழில்முனைவோர், 60, அம்பாந்தோட்டை

இந்தச் சமுதாயங்களில் நிதி நிலைத்ததன்மை குறைவது தனிப்பட்ட கஷ்டங்களை ஆழமாக்குவது மட்டுமல்லாமல், நம்பிக்கையையும் கூட்டு மீண்டெழுதன்மையையும் மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிகளுக்குத் தடையாக உள்ளதுடன் இது மேற்பொருந்தும் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்களின் சுமையின் கீழ் சமூகப் பிணைப்புகளை பாதிக்கிறது.

## நிலையற்ற அபிவிருத்தி

உட்கட்டமைப்பு அபிவிருத்தியானது, குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம், மாவட்டத்தின் சமூகப் பொருளாதார பரப்பினை வடிவமைப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இந்த செயற்திட்டங்கள் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்காக இருந்தபோதிலும், அவற்றின் நீண்டகால சாத்தியக்கூறு கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக அம்பாந்தோட்டை துறைமுகம், அதன் கட்டுமானத்திற்காக ஏற்பட்ட கடனைத் திருப்பிச் செலுத்த இயலாமையால், 2017 இல் இலங்கை சீனாவுக்கு ஒரு கட்டுப்பாட்டு பகுதி பங்கை 99 வருட குத்தகைக்கு வழங்கிய பின்னர், அதிகரித்து வரும் புவிசார் அரசியல் செல்வாக்கின் சின்னமாக மாறியுள்ளது (Hillman 2018). இடமாற்றம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாயங்கள், பெரிய அளவிலான அபிவிருத்தி செயற்திட்டங்கள் இருந்தபோதிலும், நிறைவேற்றப்படாத வேலை வாக்குறுதிகள் மற்றும் பொருளாதார நிலைத்தன்மை இல்லாததால் விரக்தியை வெளிப்படுத்தின.

## மாற்று வாழ்வாதாரங்கள்

இந்த பொருளாதார பலவீனம் பல குடும்பங்களை சமாளிக்கும் ஒரு உத்தியாக புலம்பெயர்வதை நம்பியிருக்கச் செய்துள்ளது. விவசாயம் மற்றும் மீன்பிடி இலாபமற்றது மற்றும் நிலையற்றது என்று கருதும் இளைஞர்களிடையே புலம்பெயர்வு குறிப்பாகப் பிரபலமாக உள்ளது. பல இளைஞர்கள், சிறந்த நிதியியல் நிலைத்தன்மைக்காக வெளிநாடுகளுக்கு குறிப்பாக இலங்கை புலம்பெயர் தொழிலாளர்களுக்கான வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டைக் கொண்ட கொரியா போன்ற நாடுகளுக்கு புலம்பெயர விரும்புகிறார்கள். இந்த போக்கினால் பரஸ்பர உதவி மற்றும் பகிரப்பட்ட உழைப்பு போன்ற பாரம்பரிய நடைமுறைகள் பணம் பெறும் வேலைகளால் மாற்றப்பட்டுள்ளதால் கிராமப்புற உழைப்பின் வீழ்ச்சிக்கும் சமூக நல்லிணக்கத்தின் பலவீனத்திற்கும் வழிவகுத்துள்ளது. பெண்களைப் பொறுத்தவரை, ஆண்களின் புலம்பெயர்வினால் அவர்கள் பராமரிக்கும் மற்றும் வருமானம் ஈட்டும் பாத்திரங்களை ஏற்றுக்கொள்வதால் பெரும்பாலும் இரட்டைச் சுமைகளுக்கு வழிவகுப்பதுடன் இது அவர்களின் வேலைப்பளுவையும் உளவியல் அழுத்தத்தையும் மேலும் தீவிரமாக்குகிறது.

## சமுதாய பரிமாணம் மற்றும் மீண்டெழுதிறன்

"அத்தம்" போன்ற பாரம்பரிய சமுதாய ஒத்துழைப்பு, இயந்திரமயமாக்கல் மற்றும் கூலித் தொழிலாளர்களால் மாற்றப்பட்டு, பல ஆண்டுகளாகக் குறைந்துவிட்டது. இந்த மாற்றம் சமூக ஒற்றுமை மற்றும் பரஸ்பர ஆதரவு முறைமைகளைப் பலவீனப்படுத்தியுள்ளதுடன் இவை ஒரு காலத்தில் விவசாய மற்றும் சுற்றுச்சூழல் சவால்களைச் கூட்டாக நிர்வகிப்பதற்கு இன்றியமையாதவையாக காணப்பட்டன. "சிரமதானம்" (தன்னார்வத் தொண்டு) போன்ற சில கூட்டு நடைமுறைகள், குறிப்பாக நெல் பயிரிடல் மற்றும் நீர் விநியோகத்தில் தொடர்கின்றன.

"நாங்கள் ஒன்றாக, ஒத்திசைந்து பயிர் செய்யும்போது, வனவிலங்குகளால் ஏற்படும் அழிவுக்குக் குறைவாகவே பாதிக்கப்படுவோம்."

- திலினி, ஆண், விவசாயி, 36, குடகம்மான

அம்பாந்தோட்டையின் சமுதாயங்கள் மீண்டெழுதிறன் மற்றும் இசைவாக்கத்தை காட்டுகின்றன. விவசாயிகள் புத்தாக்கமான நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு, பொலித்தீன் கூடார பயிர்ச்செய்கை மற்றும் கனமழை மற்றும் பூச்சிகளிலிருந்து பயிர்களைப் பாதுகாக்க புடவைகளைப் பயன்படுத்துவது போன்ற கிடைக்கக்கூடிய வளங்களிலிருந்து கட்டமைக்கின்றனர். பெண்கள் விவசாயம் மற்றும் சிறு அளவிலான வணிகங்களில் ஈடுபடுவது அதிகரித்து வருவதுடன் இந்த வகிபாகங்களை பராமரிக்கும் பொறுப்புகளுடன் சமநிலைப்படுத்துகின்றனர்.

அபிவிருத்தி அல்லது காலநிலை தாக்கங்கள் காரணமாக மீள்குடியேற்றம் செய்யப்பட்ட சமுதாயங்களில் வலுவான இனங்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் கலாச்சார ஒருங்கிணைப்பானது பொருளாதார போராட்டங்களுக்கு மத்தியிலும் நல்லிணக்கத்தை வளர்த்துள்ளது.

எவ்வாறாயினும், குடும்ப வன்முறை மற்றும் பால்நிலை அடிப்படையிலான சமத்துவமின்மை ஆகியவை குடும்ப மற்றும் சமூக பரிமாணத்திற்கு தொடர்ந்து சவால் விடுகின்றன. குடும்ப வன்முறையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் உள்ள பெண்கள் பெரும்பாலும் நிதி மற்றும் தீர்மானங்களில் வரையறுக்கப்பட்ட அதிகாரத்தை எதிர்கொள்வதுடன் இது அவர்களின் பாதிப்புகளை ஆழமாக்கும். அம்பாந்தோட்டையில் இருந்து கிடைக்கும் சான்றுகள், பெண்கள் முதன்மை வருமானம் ஈட்டுபவர்களாக இருந்தபோதிலும் தங்களது கணவர்களின் ஆதரவின்மை மற்றும் சில சந்தர்ப்பங்களில், வன்முறை உறவுகளைத் தாங்கிக்கொள்வதில் போராடுவதைக் காட்டுகின்றன.

களங்கம் மற்றும் முறைப்படுத்தப்பட்ட தடைகள் போன்ற பரந்த சமூக காரணிகள் நீதி அல்லது பாதுகாப்பை நாடும் பெண்களின் திறனை மேலும் கட்டுப்படுத்துகின்றன.

### மாறிவரும் சமூக கட்டமைப்புகள்

திருமணம் மற்றும் குடும்ப கட்டமைப்புகள் குறிப்பிடத்தக்க மாற்றங்களுக்கு உட்பட்டுள்ளதுடன் விவாகரத்து குறிப்பாக நிதியியல் சுதந்திரம் அல்லது குடும்ப ஆதரவு உள்ள பெண்கள் மத்தியில் அதிகரித்த அளவில் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன் பாரம்பரிய விதிமுறைகளிலிருந்து ஒரு விலகலைக் குறிப்பதுடன் இது பரந்த சமூக மாற்றங்களை பிரதிபலிக்கிறது.

> ”முன்பு சமூக விழுமியங்களால் பெண்ணின் குடும்பத்திற்கு ஒரு பெரிய சுமையாக இருந்ததைப் போல இல்லாமல், இப்போது திருமணங்களில் பிரச்சினைகள் ஏற்படும்போது விவாகரத்து அதிகமாக உள்ளது.”
>
> - பிரசானி, பெண், சிவில் சமூக அமைப்பு, 38, அம்பாந்தோட்டை.

எவ்வாறாயினும், சில பகுதிகளில் இளவயது திருமணங்கள் இன்னும் பரவலாக உள்ளதுடன் இது பெரும்பாலும் திருமணப் பொறுப்புகள் குறித்த வரையறுக்கப்பட்ட விழிப்புணர்வு மற்றும் பொருளாதார அழுத்தங்களால் தூண்டப்படுகிறது. இளம் தம்பதியினர் நீண்டகால ஸ்திரத்தன்மையை விட உடனடி உறவுகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடும் என்பதால் இந்த போக்கானது பிரிவுகள் மற்றும் விவாகரத்துகளின் விகிதங்கள் அதிகரிப்பதோடு இணைக்கப்பட்டுள்ளது. இந்த வளர்ந்து வரும் பரிமாணம் கலாச்சார விழுமியங்கள், பொருளாதார நிலைமைகள் மற்றும் தனிப்பட்ட விருப்பங்களுக்கு இடையிலான சிக்கலான இடைத்தொடர்பை சுட்டிக் காட்டுகிறது. தடைகள் இருந்தபோதிலும், பெண்கள் விவசாயம் மற்றும் சிறு அளவிலான நிறுவனங்களில் முனைப்பாக பங்கேற்பதும் உள்ளடங்கலாக அதிகரித்து வரும் பன்முக வகிபாகங்களை ஏற்றுக்கொள்கின்றனர். அவர்கள் பெரும்பாலும் பாரம்பரியமாக ஆண்களின் ஆதிக்கம் நிறைந்த நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். தங்காலையில், பெண் தொழிலாளர் செலவீனங்களைக் குறைக்க வலை மீன்பிடித்தலில் ஈடுபடுகின்றன அதேசமயம், முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களுக்கு இடையிலான சமுதாயங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் இனங்களுக்கிடையிலான திருமணங்கள் வலுவான சமூக நல்லிணக்கத்தை வளர்த்துள்ளன. இந்த உதாரணங்கள் பொருளாதார உறுதியற்ற தன்மை, சுற்றுச்சூழல் அழுத்தங்கள் மற்றும் மாறிவரும் கலாச்சார விழுமியங்கள் ஆகியவற்றின் கூட்டு சவால்களை வழிநடாத்துவதில் சமுதாயங்கள் எவ்வாறு சமூக நல்லிணக்கம் மற்றும் இசைவாக்கத்தை பயன்படுத்துகின்றன என்பதை விளக்குகின்றன.



### மீண்டெழுதன்மைக்கான வாய்ப்புகள்: அம்பாந்தோட்டை மாவட்டத்திற்கான குறிப்பான பரிந்துரைகள்

**1. கடற்கரையோர வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்**

- அதிகப்படியான மீன்பிடி மற்றும் பவளப்பாறைகளுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைப்பதற்கு செலவு குறைவான சுற்றுச்சூழலுக்கு உகந்த மீன்பிடி உபகரணங்கள் மற்றும் பருவகால நடைமுறைகளில் பயிற்சியை வழங்குவதன் மூலம் நிலைத்தன்மையுடன் கூடிய மீன்பிடி நடைமுறைகளுக்கு ஆதரவு அளித்தல்.
- மிளகு மற்றும் மஞ்சள் போன்ற வறட்சியைத் தாங்கும் பயிர்கள், மீன் வளர்ப்பு, கடல்பாசி வளர்ப்பு அல்லது கடலோர சுற்றுலா போன்ற மாற்று வாழ்வாதாரங்களை அனைத்து இன-மத, பால்நிலை மற்றும் வயது குழுக்களிடையே சமமாக ஊக்குவித்து, மீன்பிடி சமுதாயங்களுக்கான வருமான ஆதாரங்களைப் பல்வகைப்படுத்தல்.
- குறைந்து வரும் மீன் இருப்பில் நம்பியிருப்பதைக் குறைக்க உள்நாட்டு விவசாயத்திற்கு ஊக்கத்தொகைகள் மற்றும் சிறந்த நீர்ப்பாசன ஆதரவை வழங்குதல்.
- மீன் இனவிருத்தி பகுதிகளை மீட்டெடுக்கவும், நீண்டகால மீன் கிடைப்பினை மேம்படுத்தவும் பவளப்பாறை மறுசீரமைப்பு செயற்திட்டங்களுக்கு ஆதரவளித்தல்.

**2. வறட்சியின் தாக்கங்களை தணித்தல்**

- வறட்சி வாய்ப்புள்ள பகுதிகளில் நீர் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்கு கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட சமுதாய அடிப்படையிலான நீர் பாதுகாப்பு நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- வறட்சி முன் எச்சரிக்கை அமைப்புகளை உருவாக்கி, வறட்சியின் தாக்கங்களுக்குத் தயாராகவும் அவற்றைக் குறைக்கவும் சமுதாயங்களுக்குப் பயிற்சி அளித்தல்.

**3. கழிவு முகாமைத்துவ மற்றும் கடற்கரையோர பாதுகாப்பு**

- மீன்பிடி மற்றும் சுற்றுலாவைப் பாதுகாப்பதற்காக, பிளாஸ்டிக் மற்றும் கடல் குப்பைகளை நிவர்த்தி செய்வதற்கு கடற்கரையோரக் கழிவு முகாமைத்துவ அமைப்புகளை உருவாக்குதல்.
- கடல் மட்ட உயர்வு மற்றும் புயல் அலைகளுக்கு எதிரான இயற்கை கடற்கரையோர பாதுகாப்புகளை மேம்படுத்துவதற்கு கண்டல் தாவர மறுசீரமைப்பு திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

**4. பால்நிலை உள்ளடங்கலான மீண்டெழுதிறனை கட்டியெழுப்புதல்**

- பெண்களின் மீண்டெழுதிறனை மேம்படுத்துவதற்காக அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் மீன் உலர்த்துதல் மற்றும் பதப்படுத்துதல் போன்ற உபகரணங்களுக்கான அணுகலை வழங்கல் போன்ற பெண்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட ஆதரவை வழங்குதல்.
- நுண்கடன் நிகழ்ச்சித் திட்டங்களை நிர்வகிக்கவும், அதிக வட்டி வசூலிக்கும் கடன் நடைமுறைகளை நம்பியிருப்பதைக் குறைக்கவும் பெண்கள் கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல்.

**5. பெண்களை வலுவூட்டுதல் மற்றும் வாழ்வாதாரங்களை வலுப்படுத்துதல்**

- இனிப்பு தயாரித்தல் அல்லது சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தி போன்ற சிறிய அளவிலான, காலநிலை மீண்டெழுதிறன் கொண்ட நிறுவனங்களில் பெண்களுக்கு ஆதரவளிப்பதற்காக நிதியியல் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், வட்டி குறைவான நுண்கடன் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி ஆகியவற்றை விரிவுபடுத்துதல்.

**6. மனித–வனவிலங்கு மோதலை நிவர்த்தி செய்தல்**

- யானைகள் மற்றும் பிற வனவிலங்குகளுடன் மோதல்களைக் குறைக்க மின்சார வேலிகளுக்கான அனுமதி முறைமையை தளர்த்துதல், காணிப் பயன்பாட்டுத் திட்டமிடலை மேம்படுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நிதி அழுத்தத்தைக் குறைக்க பயிர் சேதத்திற்கான இழப்பீடு திட்டங்களில் அணுகல் மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்தல்.
- வனவிலங்கு வாழ்விடங்களுக்கு அருகிலுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களில் மனித மற்றும் விலங்கு சமூகங்களுக்கு ஏற்படும் இடையூறுகளைக் குறைப்பதற்காக சமுதாய ஆலோசனைகள் மற்றும் மோதலுக்கு உணர்திறனான திட்டமிடலை உறுதிப்படுத்தல்.
- பாதுகாப்பு இலக்குகளைச் சமுதாயத் தேவைகளுடன் சமநிலைப்படுத்தும் கூட்டு காணிப் பயன்பாட்டு உத்திகளைச் அமுல்படுத்துவதுடன் பயிர் இழப்புகளின் பெரும் சுமையைச் சுமக்கும் பெண்களை வனவிலங்கு முகாமைத்துவ முயற்சிகளில் முனைப்பாக ஈடுபடுத்தல்.

**7. ஆளுகை மற்றும் சேவைகளுக்கான அணுகலை வலுப்படுத்துதல்**

- ஈர மற்றும் உலர் காலங்களில் நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்த பாரம்பரிய நீர்வீழ்ச்சி முறைமைகளை மீட்டெடுப்பதுடன் வண்டல் மண்ணால் நிரம்பிய நீர்த்தேக்கங்களை புனரமைத்தல்.
- மாவட்ட மற்றும் மாகாண எல்லைகள் முழுவதும் நீர் வெளியீடுகள் குறித்த வெளிப்படையான தகவல்தொடர்பாடலை உறுதிப்படுத்துவதுடன் விவசாயிகள் மிகவும் வினைத்திறனான முறையில் திட்டமிட உதவும் பிராந்தியத்திற்கேற்ற பயிர் பரிந்துரைகளை வழங்குதல்.
- தீர்மானமெடுப்பதில் உள்ளூர் அறிவை பிரதிபலிப்பதற்காக நீர் முகாமைத்துவ செயற்திட்டங்களில் சமுதாய ஆலோசனைகளை ஒருங்கிணைத்தல்.
- விவசாயம் மற்றும் வீட்டுத் தேவைகள் இரண்டிற்குமான நீர் வளங்களின் நீண்டகால நிலைத்தன்மையை பேணுவதற்காக சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை நடாத்துதல்.

**8. இளைஞர்களை ஈடுபடுத்துவதுடன் சமூக நல்லிணக்கத்தை மீட்டெடுத்தல்**

- நவீன நுட்பங்கள், தொழில் பயிற்சி மற்றும் சூழல்சார் சுற்றுலா முயற்சிகள் மூலமாக இளைஞர்களை விவசாயத்தில் ஈடுபடுத்துவதன் மூலம் இளையவர்களின் புலம்பெயர்வைக் குறைத்தல்
- “அத்தம்” (பரஸ்பர உழைப்பு பரிமாற்றம்) போன்ற பாரம்பரிய நடைமுறைகளை மீட்டெடுத்து, சமூகப் பிணைப்புகளை மீண்டும் கட்டியெழுப்புவதுடன் “சிரமதானம்” (தன்னார்வத் தொண்டு) மூலமாக கூட்டு நடவடிக்கையை வளர்த்தல்.

**9. உளநலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்**

- மனநல அழுத்தத்தைச் சமாளிக்க சமுதாய அடிப்படையிலான உளநல ஆதரவு அமைப்புகளை நிறுவுவதுடன் பால்நிலை உணர்திறன் கொண்ட ஆலோசனை வழங்குவதற்கு உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலமாக உளநலப் பிரச்சினைகள் குறித்த சமுதாய களங்கத்தை நீக்குவதுடன் மீண்டெழுதிறனை மேம்படுத்த ஏற்கனவே உள்ள சுகாதார சேவைகளில் உளநல ஆதரவை ஒருங்கிணைத்தல்.
- உள்ளடங்கலான மற்றும் மோதலுக்கு உணர்திறனான சமுதாயங்களை கட்டியெழுப்புதல்
- நம்பிக்கையை கட்டியெழுப்புவதுடன் பதட்டங்களைக் குறைக்க நீர் பகிர்வு முயற்சிகள் போன்ற சமுதாயங்களுக்கிடையிலான கூட்டுத் திட்டங்களுக்கு உதவுதல்.
- சமத்துவமின்மை அல்லது பதட்டங்களை அதிகரிக்காமல் இருக்க அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடுகளில் மோதலுக்கு உணர்திறனான அணுகுமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளதை உறுதிசெய்யதல்.
- உள்ளடங்கல் மற்றும் நம்பிக்கையை வளர்க்க பல்வேறு சமுதாய குழுக்களுடன் கூட்டுத் திட்டமிடலை ஊக்குவித்தல்.

## 6.4 முல்லைத்தீவு

இலங்கையின் வட மாகாணத்தில் அமைந்துள்ள முல்லைத்தீவின் நலிவுறு நிலையானது காலநிலை அபாயங்கள், போருக்குப் பிந்தைய சவால்கள் மற்றும் முறைப்படுத்தப்பட்ட சமத்துவமின்மை ஆகியவற்றின் மேற்பொருந்துகையில அல்லது இடையீடுகளில் ஆழமாக வேரூன்றியுள்ளதுடன் இவையனைத்தும் ஆண் மற்றும் பெண் இருபாலாராலும் வெவ்வேறு வழிகளில் அனுபவிக்கப்படுகின்றன. விவசாயம் மற்றும் மீன்பிடியை பெரிதும் நம்பியுள்ள மக்கள் குடித்தொகையுடன், முல்லைத்தீவானது சீரற்ற வானிலை போக்குகள் மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவுகளால் தீவிரமடைந்த குறிப்பிடத்தக்க பாதிப்புகளை எதிர்கொள்கிறது. பால்நிலை பரிமாணம் இந்தச் சவால்களை வடிவமைப்பதில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது.

பெண்கள் - குறிப்பாகப் போர் விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் சமூகப் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்களின் பெரும் சுமையைச் சுமக்கின்றனர். இந்தச் சவால்களைச் சமாளிப்பதற்கு பால்நிலை உணர்திறனான கொள்கைகள், உள்ளடங்கலான ஆளுகை மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமுதாயங்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட ஆதரவு ஆகியவற்றை ஒருங்கிணைக்கின்ற பல்பரிமாண அணுகுமுறை தேவைப்படுகிறது. பெண்களின் மேம்பாடு, இளைஞர்களின் ஈடுபாடு மற்றும் மேம்பட்ட சேவை வழங்குதல் ஆகியவற்றில் முதலீடு செய்வதன் மூலமாக முல்லைத்தீவு ஒரு அதிக மீண்டெழுதிறன் கொண்ட மற்றும் சமத்துவமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப முடியும்.

### உள்நாட்டுப் போரின் மரபு

போர் விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்நாட்டுப் போரானது (1983-2009) முல்லைத்தீவில் ஒரு நீடித்த தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், இந்தப் பகுதியே போரின் வன்முறையின் பெரும் சுமையைச் சுமந்தது. இன்று மாவட்டத்தில் சுமார் 7,000 பெண் தலைமைத்துவ குடும்பங்கள் உள்ளதுடன் இவர்களில் பலர் போர் விதவைகளாவர் (Arudpragasam 2025). மாகாணம் முழுவதும், அண்ணளவாக 46,000 போர் விதவைகள் உள்ளதுடன் இது பெண்கள் மீதான மோதலின் தாக்கத்தின் அளவைப் பிரதிபலிக்கிறது. பல காணாமல் போன நபர்கள் இன்னும் கணக்கில் வராத நிலையில், பெண் குடும்பத் தலைவர்கள் சட்ட மற்றும் நிதியியல் சவால்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக, கணவரின் பெயரில் வீடுகள் இருந்தால் அவற்றைத் விற்கவோ அல்லது கடன்களுக்கு ஈடாகப் பயன்படுத்தவோ முடியாதுள்ளது. போர்க்காலக் குறைகளுக்குத் தீர்வு காணாத இந்த நிலை, பொருளாதார சிரமத்தைத் தொடர்வது மட்டுமல்லாமல் பல பெண்கள் அரசால் கைவிடப்பட்டதாகவும் நல்லிணக்கச் செயன்முறைகளில் இருந்து விலக்கப்பட்டதாகவும் உணர்வதால் நம்பிக்கை மற்றும் சமூக நல்லிணக்கத்தை மீண்டும் கட்டியெழுப்பும் முயற்சிகளைத் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

பிராந்தியத்தில் உள்ள பாரிய மனிதப் புதைகுழிகள் குறித்த விசாரணை இல்லாதது ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை ஆழமாக்குவதுடன் அரசாங்கம் மற்றும் சமூக ஒப்பந்தத்தின் மீதான நம்பிக்கையை மேலும் சிதைக்கிறது. இந்த தீர்க்கப்படாத குறைகள், சீரற்ற மழை, நீண்ட வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலநிலை தாக்கங்களால் மேலும் அதிகரிப்பதுடன், இது விவசாய வாழ்வாதாரங்களைத் சீர்குலைத்து, பெண் தலைமைத்துவ குடும்பங்களை இன்னும் பாதிக்கப்படக்கூடியவர்களாக ஆக்குகிறது.

> “16 ஆண்டுகளாகியும் எனக்கு இன்னும் எதுவும் தெரியவில்லை. நான் உளவியல் ரீதியாக முன்னேற ஒரு வழிவகையைக் கண்டாலும், இறப்புச் சான்றிதழ் இல்லாமல் என் பெயரில் கடன் பெற முடியாது, எனவே என்னால் நிதி ரீதியாக முன்னேற முடியாது.”
>
> -ஊகிக்கப்பட்ட போர் விதவை,
> 57, கொக்குத்தொடுவாய், முல்லைத்தீவு

பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார நிலைத்தன்மைக்கு மேலதிகமாகவும் தடைகளை எதிர்கொள்கின்றன. இவற்றில் வளங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல், குறைந்த சாதகமான சந்தை விலைகள், சமூகக் களங்கம் மற்றும் விவசாயம், கால்நடை வளர்ப்பு மற்றும் சந்தைகளுக்குப் பொருட்களை விற்பனை செய்வது ஆகியவற்றின் பௌதீக மற்றும் பொருளாதார சுமையைப் பகிர்ந்து கொள்ள ஆண் குடும்ப உறுப்பினர்கள் இல்லாமை ஆகியவை அடங்கும். அதிகாரத்துவ செயன்முறைகளானவை குறைந்த கல்வியறிவு கொண்ட தமிழ் பேசும் பெண்களால் பெரும்பாலும் அணுக முடியாதவையாக உள்ளதால் முல்லைத்தீவில் உள்ள பெண்கள் காணி உரிமையைப் பெறுவதற்கும் அல்லது அரசாங்க ஆதரவை அணுகுவதற்கும் போராடுகிறார்கள். கொக்குத்தொடுவாய் கிராமத்தைச் சேர்ந்த ஒரு விதவை பகிர்ந்து கொள்கையில், “என் உரிமைகளுக்காகப் போராட எனக்கு யாரும் இல்லை. நாங்கள் ஒன்றாக விவசாயம் செய்த காணி இப்போது மற்றவர்களால் உரிமை கோரப்படுகிறது, யாரும் நான் சொல்வதைக் கேட்பதில்லை.” என்றார். மண் மாசடைவு மற்றும் குறைக்கப்பட்ட பயிரிடக்கூடிய நிலம் போன்ற காலநிலையால் தூண்டப்பட்ட அழுத்தங்களால் தீவிரமடைந்த காணிக்கான போட்டி அதிகரிப்பது, சமுதாயங்களுக்குள் பதட்டங்களை அதிகரிப்பதுடன் ஆளுகையில் உள்ள சமத்துவமின்மைக்கு எதிரான குறைகளை வலுப்படுத்துகிறது.

### இயலாமை உடையவர்கள்

போரானது கண்ணிவெடிகள், ஷெல் தாக்குதல் மற்றும் மோதல் தொடர்பான பிற வன்முறைகளால் ஏற்பட்ட காயங்கள் காரணமாக பல குடியிருப்பாளர்களைப் நிரந்தர இயலாமையுடையவர்களாக விட்டுச்சென்றுள்ளது. இயலாமையுடையவர்கள் சுகாதாரம், கல்வி மற்றும் வேலைவாய்ப்புக்கான அணுகலில் குறிப்பிடத்தக்க தடைகளை எதிர்கொள்வதுடன் இது சமுதாயத்திற்குள் அவர்களை மேலும் ஓரங்கட்டுவதுடன் அணுகக்கூடிய வசதிகள் இல்லாத மருத்துவமனைகள் மற்றும் பாடசாலைகள் போன்ற போதுமான உட்கட்டமைப்பு இல்லாமை என்பன இந்தச் சவால்களை மேலும் அதிகரிக்கிறது. காலநிலை மாற்றமும் தீவிர வானிலை நிகழ்வுகளும் அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகலைத் சீர்குலைத்து, இயலாமையுடையவர்கள் எதிர்கொள்ளும் பௌதீக மற்றும் தளவாட சவால்களை அதிகரிக்கின்றன. உதாரணமாக, வெள்ளம் பெரும்பாலும் வீதிகள் மற்றும் சுகாதார வசதிகளைச் சேதப்படுத்துவதால் நடமாட்ட தடைகள் உள்ளவர்கள் முக்கியமான ஆதரவை அணுக முடியாமல் போகிறது.

## காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் சவால்கள்

### விவசாயத்தின் மீதான காலநிலையின் தாக்கங்கள்

விவசாயம் முல்லைத்தீவில் உள்ள பல குடும்பங்களுக்கு முதன்மை வாழ்வாதாரமாகும். ஆனால் அது காலநிலை மாற்றத்தால் பெருகிய முறையில் அச்சுறுத்தப்படுகிறது. விவசாயிகள் பயிரிடுகை மற்றும் அறுவடை சுழற்சிகளைத் சீர்குலைத்து பயிர் விளைச்சலைக் குறைக்கின்ற சீரற்ற மழை, நீண்ட வறட்சி மற்றும் அடிக்கடி ஏற்படும் வெள்ளம் ஆகியவற்றை எதிர்கொள்கின்றனர். இந்தச் சவால்களை யானைகள் மற்றும் குரங்குகள் உள்ளிட்ட காட்டு விலங்குகள் பயிர்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களை அழிப்பதன் மூலமாக மேலும் தீவிரப்படுத்துகின்றன. கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த ஒரு விவசாயி விபரிக்கையில், "நாங்கள் எங்கள் உணவை வளர்க்க கடுமையாக உழைக்கிறோம். ஆனால் யானைகள் இரவில் வந்து எல்லாவற்றையும் அழிக்கின்றன. எங்களுக்கு உதவ யாரும் இல்லை. இனிமேல் பயிரிட்டு நேரம் செலவிடுவது பெறுமதியானதல்ல என்று இப்போது நான் உணர்கிறேன்."

வீட்டு உணவுப் பொருட்களை நிர்வகிப்பதற்குப் பெரும்பாலும் பொறுப்பாக உள்ள பெண்கள், விவசாய உற்பத்தி குறைவடையும் போது பாராபட்சமான சுமையைச் சுமக்கின்றனர். அவர்கள் தங்களது குடும்பங்களுக்கு உணவளிக்க மாற்றீட்டு வழிவகைகளைக் கண்டறிய வேண்டி பெரும்பாலும் மேலதிக ஊதியம் இல்லாத உழைப்பு அல்லது வீட்டில் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்வது போன்ற சிறிய அளவிலான வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர்.

### காடழிப்பு மற்றும் சுற்றுச்சூழல் சீரழிவு

முல்லைத்தீவில் சட்டவிரோத மரக்கடத்தல் மற்றும் அபிவிருத்தி திட்டங்களுக்கான காணிகளை சுத்தமாக்கல் ஆகியவற்றின் காரணமான காடழிப்பு ஒரு அதிகரித்து வரும் பிரச்சினையாகும். தேக்கு மற்றும் மகோகனி போன்ற மதிப்புமிக்க மரங்களை பெரிய அளவில் பெரும்பாலும் தண்டனையின்றி அகற்றுவதில் அரசாங்க தரப்பினர், இராணுவம் மற்றும் செல்வாக்கு மிக்க தனியார் நிறுவனங்கள் என்பன உடந்தையாக இருப்பதாக குடியிருப்பாளர்கள் எண்ணுகின்றனர். அதே சமயம், உள்ளூர் தமிழ் சமுதாயங்கள் வீட்டு உபயோகத்திற்காக விறகு சேகரிப்பது போன்ற சிறிய மீறல்களுக்கு கடுமையான தண்டனைகளை எதிர்கொள்வதாகத் தெரிவித்தனர்.

இந்த இரட்டை நிலைப்பாடு ஆளுகையின் மீதான அவநம்பிக்கையை ஆழமாக்கியுள்ளதுடன் குடியிருப்பாளர்களிடையே கோபத்தைத் தூண்டியுள்ளது. கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த ஒரு விவசாயி விபரிக்கையில், "இராணுவம் பெரிய மற்றும் பெறுமதிமிக்க மரங்களை வெட்டி விறகுகளை விற்கின்றது. ஆனால் நாங்கள் உணவு சமைக்க சில உலர்ந்த குச்சிகளைச் சேகரித்தால், நாங்கள் குற்றவாளிகளாக நடத்தப்படுகிறோம். ஒழுங்குவிதிகள் எங்களுக்காக மட்டுமே இருப்பது போல் எண்ணத் தோன்றுகின்றது." விறகு அல்லது பிற வனப் பொருட்களைச் சேகரிப்பதற்கான தண்டனை குறித்த அச்சம், அவர்களின் வாழ்வாதாரங்கள் வன வளங்களுடன் ஆழமாகப் பிணைந்துள்ள வேடர் சமூகத்தின் மீது சமமற்ற முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இந்த அச்சமானது கல்விக்கான அவர்களின் வரையறுக்கப்பட்ட அணுகல் மற்றும் அதிகாரிகளின் மீதான நீண்டகால அவநம்பிக்கை ஆகியவற்றால் தீவிரமடைந்துள்ளதுடன்இ முறைசார் நீதி செயன்முறைகளை வழிநடாத்த அவர்களை தயாரில்லாத நிலைக்கு இட்டுச்செல்கிறது. பெரும்பாலும் விறகு சேகரிப்புக்குப் பொறுப்பானவர்கள் என்பதுடன் நீதிக்கான அணுகலில் மேலதிக கட்டமைப்புத் தடைகளையும் எதிர்கொள்வதால் பெண்கள் குறிப்பாகப் பாதிக்கப்படுகிறார்கள். இந்தச் சவால்களை அதிகரிக்கும் வகையில் பெண்கள் பாதுகாப்பு தரப்பினர்களிடமிருந்து உடல் ரீதியான தீங்கு குறித்தும் அச்சத்தை கொண்டுள்ளமை அத்தகைய வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து அவர்களை மேலும் தடுப்பதுடன்இ அந்நிலை அவர்களின் இசைவாக்க இயலளவு மற்றும் அவர்களின் குடும்பங்களின் நல்வாழ்வில் ஒரு தீங்கு விளைவிக்கும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

இந்தச் சுற்றுச்சூழல் மாசடைவானது பெண்கள் நாளாந்த வீட்டு வேலைகளுக்கு நம்பியிருக்கும் விறகு மற்றும் நீர் போன்ற இயற்கை வளங்களின் கிடைக்கக்கூடிய தன்மையை குறைத்துள்ளது. வனப்பகுதி குறைவதால் மண் அரிப்பு அதிகரிப்பதுடன் நீர் தக்கவைப்பு குறைவடைந்து விவசாய உற்பத்தியைக் மேலும் குறைத்து கிராமப்புற சமுதாயங்களின் காலநிலை அதிர்ச்சிகளுக்கு ஆளாகும் தன்மையை அதிகரிக்கிறது. சட்டவிரோத மரக்கடத்தலுக்குப் பொறுப்புக்கூறல் இல்லாமை குறித்து குடியிருப்பாளர்கள் விரக்தியை வெளிப்படுத்தியதுடன் சுற்றுச்சூழல் ஒழுங்குவிதிகளை வலுவாக அமுல்படுத்துதல் மற்றும் சமமான வள முகாமைத்துவம் ஆகியவற்றின் அவசியத்தை எடுத்துக்காட்டுகின்றனர்.

## வாழ்வாதார சவால்கள்

### பால்நிலை அடிப்படையிலான வாழ்வாதாரத் தடைகள்

முல்லைத்தீவில் உள்ள பெண்கள் நிலையான மற்றும் நீடித்த வாழ்வாதாரங்களை அணுகுவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர். விவசாயம் மற்றும் மீன்பிடி மாவட்டத்தில் முதன்மையான பொருளாதார நடவடிக்கைகளாக இருந்தாலும், காலநிலை தாக்கங்கள் மற்றும் முறைப்படுத்தப்பட்ட தடைகள் காரணமாக இந்தத் துறைகள் பெருகிய முறையில் நம்பகரமற்றதாக உள்ளன. பெண் விவசாயிகளுக்கு பெரும்பாலும் கடன், விவசாய உள்ளீடுகள் மற்றும் சந்தை வாய்ப்புகளுக்கான அணுகல் இல்லாதது, அவர்களை வாழ்வாதார விவசாயத்தையே நம்பியிருக்கும் நிலைக்கு ஆளாக்குகின்றது.

விவசாயத்திற்கு மேலதிகமாக சில பெண்கள் உள்ளூர் வியாபார நிலையங்களை நடாத்துவது அல்லது கையால் செய்யப்பட்ட பொருட்களைத் தயாரிப்பது போன்ற சிறிய அளவிலான தொழில் முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். எவ்வாறாயினும், இந்த நடவடிக்கைகள் பெரும்பாலும் குறைந்த பெறுமதி மற்றும் குறைந்த நிதி ஆதரவையே பெறுகின்றன. இது பொருளாதார பாதுகாப்பை வழங்கும் அவற்றின் திறனைக் கட்டுப்படுத்துகிறது. முல்லைத்தீவைச் சேர்ந்த ஒரு பெண் தொழில்முனைவோர் பகிர்ந்து கொள்கையில், "நான் சந்தையில் விற்க துடைப்பங்கள் மற்றும் கையால் நெய்த பாய்களை உருவாக்குகிறேன். ஆனால் விலைகள் மிகக் குறைவாக இருப்பதால் இலாபம் ஈட்டுவது கடினமாக உள்ளது. எங்கள் வணிகங்களை வளர்க்க எங்களுக்குச் சிறந்த ஆதரவு அவசியமாகும்."

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டத்தின் (UNDP) அபிவிருத்தி தரவரிசையில் மிகக்குறைந்த புள்ளிகளைப் பெற்றுள்ள முல்லைத்தீவு' பால்நிலை உணர்திறனில் உள்ள குறிப்பிடத்தக்களவு சவால்களை எடுத்துக்காட்டுகிறது. இந்த மாவட்டமானது பெண் ஊழியர்களின் பங்களிப்பு மற்றும் பால்நிலை தேவைகளை அடையாளம் காணும் பொறிமுறைகள் தொடர்பாக சிரமங்களை எதிர்கொள்கிறது. பெண்களின் குழுக்களுடனான ஆலோசனைகளும் வளர்ச்சியடையவில்லை. இந்த கண்டறிவுகள் முல்லைத்தீவு மற்றும் பரந்தளவில் வடக்கு மாகாணத்தில் உள்ள பால்நிலை உணர்திறனை மேம்படுத்துவதற்கு இலக்கு வைக்கப்பட்ட முன்முயற்சிகளின் தேவையினை வலியுறுத்துகிறது.

### இளைஞர் வேலையின்மை மற்றும் தொழிற்பயிற்சி இடைவெளிகள்

முல்லைத்தீவில் உள்ள இளைஞர்கள் அதிகளவு வேலையின்மை மற்றும் தகுதிக்கு குறைவான வேலை வாய்ப்புகளை எதிர்கொள்வதுடன் இவர்களுக்கான தொழிற்பயிற்சி மற்றும் வேலை வாய்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ஆண், பெண் இருபாலரும் பெரும்பாலும் தமது குடும்பத்தினரின் விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு வேலைகளிலேயே ஈடுபட்டாலும் இந்த வேலைகள் பெரும்பாலும் நிலையான வருமானத்தை வழங்குவதில்லை. பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் கல்வி வாய்ப்புகள் இல்லாததால் இளைஞர்கள் தனிமைப்படுத்தப்பட்டு விரக்தி மற்றும் நம்பிக்கையற்ற உணர்வுக்கு ஆளாகின்றனர்.

இப்பகுதியில் சட்டவிரோத மதுபானங்கள் மற்றும் போதைப்பொருட்கள் இலகுவாக கிடைப்பதால் இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரித்து வருகின்றது. ஓர் உள்ளூர் சமுதாயத் தலைவர், “இந்த கணிக்க முடியாத வானிலையினால் எங்களது இளைஞர்களுக்கு வேலை இல்லை, எதிர்காலத்தில் நம்பிக்கையும் இல்லை. வேறு வழியில்லாததால் பலர் போதைப்பொருட்களை நாடுகின்றனர்” என விபரித்தார்.

## சமூக நல்லிணக்கம் மற்றும் நிர்வாக இடைவெளிகள்

### காணி உரிமைப் பிரச்சினைகள்

முல்லைத்தீவில் தொடர்ச்சியாக உள்ள காணி உரிமைப் பிரச்சினைகள் குறிப்பாக ஜனகபுர போன்ற பகுதிகளில், அரசாங்க மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டங்கள் சிங்கள குடும்பங்களை தமிழ் சமூகத்தினர் வரலாற்று ரீதியாக உரிமைகோரப்பட்ட காணிகளில் மீள்குடியேற்றியுள்ளமை சமூக நல்லிணக்கத்தைக் குலைக்கின்றன. இவ்வாறான மீள்குடியேற்ற முயற்சிகளை தமிழ் மக்கள் பெரும்பாலும், இப்பகுதியின் சனத்தொகையியல் அமைப்பை மாற்றும் நோக்கில் செய்யப்பட்ட அரசாங்கத்தின் ஆதரவுடன் முன்னெடுக்கப்படும் குடியேற்றங்கள் எனப் பார்க்கின்றனர். இதனால் பல தமிழ் குடும்பங்கள், காணி ஒதுக்கீட்டில் வெளிப்படைத்தன்மை மற்றும் ஆலோசனை இல்லாததால் தமது உரிமை இழக்கப்பட்டுள்ளதாக உணர்கின்றனர். ஓர் தமிழ் விவசாயி, “எங்களது குடும்பங்கள் பல தலைமுறைகளாக இந்த காணியில் விவசாயம் செய்து வருகின்றன, ஆனால் இப்போது அது மற்றவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நாங்கள் எங்கள் சொந்த வீட்டிலேயே அந்நியர்கள் போல் உணர்கிறோம்” என தெரிவித்தார். இவ்வாறான தீர்க்கப்படாத மனக்குறைகள் இனங்களுக்கிடையிலான நம்பிக்கையின்மையை அதிகரிப்பதுடன், தமது வாழ்வாதாரம் மற்றும் கலாச்சார அடையாளத்தை நேரடியாகப் பாதிக்கும் தீர்மானமெடுக்கும் செயற்பாடுகளில் இருந்து தாம் விலக்கப்பட்டுள்ளதாக சமுதாயம் உணர்வதால் சமூக நல்லிணக்கத்தை மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளுக்கும் தடையாக உள்ளன.

எனினும், மீள்குடியேற்றப்பட்ட சிங்கள விவசாய குடும்பங்களும் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். இவர்களுக்கு வளமான நிலமும், அரசாங்கத்தின் உதவியும் உறுதியளிக்கப்பட்ட போதிலும், அவர்கள் குறைந்த உட்கட்டமைப்பு வசதிகள், வரையறுக்கப்பட்ட வளங்கள் மற்றும் உள்ளூர் தமிழ் சமூகத்தினரின் விரோதப் போக்கினை எதிர்கொள்கின்றனர். ஓர் மீள்குடியேற்றப்பட்ட விவசாயி, “எங்களது பழைய கிராமங்களில் எங்களிடம் எதுவுமே இல்லாததால் இங்கு வந்தோம். இந்த நிலம் எங்களுக்கு ஒரு புதிய ஆரம்பத்தை தரும் என்று சொல்லப்பட்டது, ஆனால் இப்போது நாங்கள் விரும்பாத பதட்டங்களை எதிர்கொள்கிறோம்” என விளக்கினார்.

இலங்கையின் சில பகுதிகளில் உள்ள இந்து மற்றும் பௌத்த வழிபாட்டுத் தலங்கள் தொடர்பான காணிப் பிரச்சினைகள் பதட்டங்களுக்கான முக்கிய புள்ளியாக மாறியுள்ளதுடன் முல்லைத்தீவின் கொக்குத்தொடுவாய் பகுதியில் முழுக்க முழுக்க இந்துக்களே வாழும் கிராமத்தில், முன்பு இந்து கோவில் இருந்த இடத்தில் ஒரு பௌத்த விகாரை கட்டப்பட்டு வன்முறை மோதல்களுக்கு வழிவகுத்ததுடன் அதில் உயிர் சேதங்களும் ஏற்பட்டன. தற்போது அந்த இடம் ஓர் விசேட இராணுவ முகாமை கொண்டு பாதுகாக்கப்படுவதுடன் கிராம மக்களின் அடிப்படை பாதுகாப்புத் தேவைகள் பூர்த்தி செய்யப்படாத நிலையில் இது வளங்களின் தவறான ஒதுக்கீடு என பதிலளித்தவர்கள் கருதுகின்றனர். புனித இடங்கள் தொடர்பான இந்த பிணக்குகள் கலாச்சார பாதுகாப்பிற்கும், காணி உரிமைக்கும் இடையிலான மேற்பொருந்தும் தொடர்பை சுட்டிக்காட்டுவதுடன், காலநிலை தாக்கங்கள் சிக்கலான விடயங்களின் மேலுமொரு அடுக்கினை சேர்க்கின்றன. உதாரணமாக, கரையோரப் பகுதிகளில் கடல் மட்டம் உயர்வினாலும், வெள்ளப் பெருக்கினாலும் மக்கள் மேலும் உள்நாட்டுப் பகுதிகளுக்குள் நகர்வதால், காணிகளுக்கான போட்டி அதிகரித்து, இவ்வாறான பிணக்குகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

தொல்பொருள் திணைக்களத்தின் மீது தமிழ் மக்கள் ஆழமான அவநம்பிக்கையை கொண்டுள்ளதுடன், அவர்கள், பௌத்த தொல்பொருள் இடங்களை பாதுகாத்தல் எனும் போர்வையில், சிங்கள ‘குடியேற்றத்தை’ வலுக்கட்டாயமாக ஏற்படுத்தும் ஓர் கருவியாக அதனைப் பார்க்கின்றனர். ஓர் இந்து பதிலளிப்பாளர் கூறியது போல, “அவர்கள் ஒரு மலை அல்லது ஒரு போதி மரத்தைப் பார்த்தால் அங்கே ஒரு விகாரையை வைத்து, அதை தங்களுடையது என்று உரிமை கொண்டாடுவார்கள்.” இந்த பிணக்குகள் இனங்களுக்கிடையிலான உறவுகளைப் பாதிப்பதுடன், காணி உரிமை, கலாச்சார பாதுகாப்பு மற்றும் சமத்துவமான ஆளுகை பற்றிய பரந்த கரிசனங்களையும் எழுப்புகின்றன.

முல்லைத்தீவில் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள காணி மற்றும் கண்ணிவெடிகள் அகற்றப்படாத பகுதிகள் காணித் தட்டுப்பாட்டிற்கு காரணமாகி விவசாயம், மேய்ச்சல் மற்றும் காலநிலை இசைவாக்க முயற்சிகளுக்குத் தடையாக உள்ளதுடன்

இது இடம்பெயர்ந்த சமூகங்கள் தமது வாழ்வாதாரத்தை மீளக் கட்டியெழுப்பி, மீண்டெழுதிறனுக்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்துகிறது. இந்த சமுதாயங்களின் நிதி நிலைத்தன்மை குறைவடைந்து, தனிப்பட்ட கஷ்டங்களை அதிகரிப்பதுடன், நம்பிக்கையையும், ஒத்துழைப்பையும் பலவீனப்படுத்துவதால் பொருளாதார மற்றும் சுற்றுச்சூழல் அழுத்தங்களுக்கு மத்தியில் மீண்டெழுதிறனையும் நீடித்த நிலைத்தன்மையையும் உருவாக்குவது கடினமாக உள்ளது.

இந்த பிணக்குகள் சமுதாயங்களுக்கிடையேயான நம்பிக்கையின்மையை அதிகரித்து, நீண்ட கால சகவாழ்வை உருவாக்குவதற்கான முயற்சிகளைத் தடுக்கின்றன. ஓரங்கட்டப்பட்ட குழுக்கள், அரசாங்கத்தால் தமது மனக்குறைகள் கவனிக்கப்படாமல் போதுமான ஆதரவு வழங்கப்படாமல் புறக்கணிக்கப்படுவதாக உணர்கின்றனர். இந்தப் பதட்டங்களைத் தீர்ப்பதற்கு அனைத்து சமுதாயங்களின் தேவைகள் மற்றும் வரலாற்றைக் கருத்தில் கொள்ளும் வெளிப்படையான காணி கொள்கைகள் தேவைப்படுவதுடன், தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்களுக்கிடையில் பேச்சுவார்த்தை மற்றும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கான முயற்சிகளும் அவசியமாகின்றன.

## தமிழ்–முஸ்லிம் உறவுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள்

முல்லைத்தீவில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களுக்கிடையிலான உறவுகள், வரலாற்றுப் பதட்டங்கள் மற்றும் பகிரப்பட்ட போராட்டங்களால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் காலநிலை மாற்றம் ஒரு பிரிப்பானாகவும், ஓர் ஒன்றிணைப்பானாகவும் செயற்படுகிறது. மீள்குடியேற்றக் கொள்கைகள் மற்றும் அத்துமீறல் குற்றச்சாட்டுகளில் வேரூன்றிய காணிப் பிணக்குகள் இரு சமூகங்களுக்குமிடையே பிணக்குகளை உருவாக்கியுள்ளது. இதேபோல், சில முஸ்லிம் குடும்பங்கள் அரசாங்கத்தின் ஆதரவுத் திட்டங்களில் இருந்து விலக்கப்படுவதாக கரிசனங்களை வெளிப்படுத்துவதுடன் இது நம்பிக்கையின்மையையும் அதிகரித்துள்ளது. எனினும், காலநிலை மாற்றம் ஒத்துழைப்பிற்கான வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது. இரண்டு சமுதாயங்களும் ஒழுங்கற்ற மழைவீழ்ச்சி மற்றும் நீர் பற்றாக்குறையால் பயிர்ச் சேதங்கள் போன்ற பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்கின்றனர். சில பகுதிகளில், தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகள் நீர்ப்பாசன குளங்களை பழுதுபார்க்க அல்லது அரசாங்கத்தின் உதவியை பெறுவதற்கு ஒன்றாக இணைந்துள்ளனர். ஓர் முஸ்லிம் விவசாயி, “மழை பெய்யாத போது, நாங்கள் அனைவரும் பாதிக்கப்படுகிறோம். ஒன்றாக வேலை செய்வது மட்டுமே உயிர்வாழ்வதற்கான ஒரே வழிவகை” எனக் குறிப்பிட்டார்.

இவ்வாறான பகிரப்பட்ட பாதிப்புகளின் அடிப்படையில் ஒன்றிணைந்து செய்யப்படும் காலநிலை இசைவாக்கல் செயற்திட்டங்கள், இரு சமுதாயங்களுக்கிடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கும், சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கும் உதவும். முல்லைத்தீவை சேர்ந்த ஓர் தமிழ் விவசாயி, “நாங்கள் (தமிழர்களும், முஸ்லிம்களும்) ஒரே மொழியைப் பேசுகிறோம், காணி மற்றும் வானிலை தொடர்பான ஒரேமாதிரியான போராட்டங்களை நாங்கள் அனைவரும் எதிர்கொள்கிறோம். நாங்கள் ஒன்றாக வேலை செய்தால், இன்னும் அதிகமாக சாதிக்க முடியும்” எனக் குறிப்பிட்டார். வர்த்தகம் ஓர் தொடர்புபடுத்தும் காரணியாக அடையாளம் காணப்பட்டது. முல்லைத்தீவை சேர்ந்த ஓர் தமிழ் வர்த்தகர், “எங்களிடம் நல்ல வீதிகள் மற்றும் களஞ்சிய வசதிகள் இருந்தால், நாங்கள் எங்களது காய்கறிகளை அதிக இடங்களுக்கு விற்க முடியும். ஆனால், நாங்கள் மற்றவர்களுடன் வேலை செய்ய வேண்டும். முஸ்லிம் வர்த்தகர்கள் பெரிய சந்தைகளை அடைய எங்களுக்கு உதவ முடியும்” என விளக்கினார்.

## பலவீனமான ஆளுகை மற்றும் சேவை வழங்கல்

முல்லைத்தீவில் உள்ள ஆளுகைச் சவால்கள் பாதிப்புகளை மேலும் அதிகரிக்கின்றன. இது காலநிலை தாக்கங்கள் மற்றும் வறுமையினால் அதிகம் பாதிக்கப்படக்கூடிய மாவட்டங்களில் ஒன்றாக இருந்தபோதிலும், இலங்கை முழுவதும் மிகக்குறைந்த சேவை வழங்கப்படும் மாவட்டங்களில் இதுவும் ஒன்றாகும். நீர்ப்பாசனத்திற்கான குளங்களை புனரமைத்தல் மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்கான வீதி திட்டங்கள் போன்ற முக்கிய உட்கட்டமைப்புகளில் அரசாங்கம் முதலீடு செய்யவில்லை என மக்கள் அடிக்கடி விரக்தியை வெளிப்படுத்துகின்றனர். கிராமப்புறங்களில் இந்த இடைவெளிகள் மிகத் தெளிவாக தெரிவதுடன், இங்கு மோசமான வீதிகள், விவசாயிகள் தமது பொருட்களை சந்தைகளுக்கு கொண்டு செல்வதையும் குடும்பங்கள் சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகளைப் பெறுவதையும் கடினமாக்குகின்றன. முல்லைத்தீவை சேர்ந்த ஓர் விவசாயி, “எங்களது குளங்கள் வறண்டுவிட்டன, வீதிகள் உடைந்த நிலையில் உள்ளன. அரசாங்கம் மற்றைய இடங்களில் பணம் செலவழிப்பதை நாங்கள் அறிவோம். நாங்கள் மறக்கப்பட்டவர்கள் போல் உணர்கிறோம்” என விளக்கினார்.

மாவட்டத்தில் உள்ள கிராமிய மருத்துவமனைகளில் மனிதவளம் பற்றாக்குறையாக உள்ளதுடன் மோசமான வீதிகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் காரணமாக மருத்துவர்கள் மற்றும் தாதியர்கள் போன்றோர் மருத்துவமனைகளை அடைவது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மொழித் தடைகள் பிரச்சினையை மேலும் சிக்கலாக்குவதுடன் தமிழ் பேசும் மக்கள் சிங்களம் பேசும் மருத்துவ ஊழியர்களுடன் தொடர்புகொள்வதற்கு சிரமப்படுகின்றனர். பெண்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் உள்ளவர்களால் தனியார் மருந்துகளுக்கான அதிக செலவீனங்களை அல்லது தொலைதூர மருத்துவமனைகளுக்கு பயணிப்பதற்கான செலவீனங்களை செலுத்த முடிவதில்லை என்பதால் சுகாதாரசேவைகளைப் பெறுவதில் மேலதிக தடைகளை எதிர்கொள்கின்றனர். ஓர் பங்கேற்பாளர், “நாங்கள் மருத்துவமனைக்கு சென்றாலும், தனியார் மருந்தகங்களில் மருந்துகளை வாங்கும்படி கூறுகிறார்கள். சாப்பிடுவதற்கு கூட போதுமான உணவில்லாத நிலையில், நாங்கள் இதை எப்படி வாங்க முடியும்?” எனக் குறிப்பிட்டார்.

முல்லைத்தீவானது அரசாங்கத்தால் முறைப்படுத்தப்பட்டு புறக்கணிக்கப்படுவதாக உள்ள எண்ணமானது, பிற பிராந்தியங்கள் அதிக கவனத்தையும், நிதியையும் பெறுவதாக நம்புகின்ற இங்குள்ள மக்களிடையே ஓரங்கட்டப்பட்ட உணர்வுகளை ஆழமாக்குகிறது. இந்த ஆளுகை இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கு, உட்கட்டமைப்பு, சுகாதாரம் மற்றும் சேவை வழங்கல் ஆகியவற்றில் இலக்கு சார்ந்த முதலீடுகள் தேவைப்படுவதுடன், அரசாங்கத்திற்கும் உள்ளூர் சமுதாயங்களுக்கும் இடையில் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளும் அவசியமாகின்றன.

முல்லைத்தீவில் ஆளுகையை மேம்படுத்துவதானது மனக்குறைகளுக்கு தீர்வு காண்பதிலும், சமுதாயங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதிலும் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக, தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கிடையே பதட்டங்கள் அதிகமாக உள்ள ஜனகபுர போன்ற பகுதிகளில் காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்கு வெளிப்படையான மற்றும் பங்கேற்பு செயன்முறைகள் மிகவும் அவசியமானதாகும். அனைத்து இனக் குழுக்களின் பிரதிநிதித்துவத்துடன் உள்ளூர் முரண்பாடு தீர்க்கும் குழுக்களை நிறுவுவது நியாயமான முடிவுகளை உறுதிப்படுத்தவும், பேச்சுவார்த்தையை வளர்க்கவும் உதவும்.

இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் அனைத்து சமுதாயங்களுக்கும் உள்ளடங்கலானதாகவும், தெளிவாகப் பயனளிப்பதாகவும் இருக்க வேண்டும். உதாரணமாக, வீதிகள், நீர்ப்பாசனக் குளங்கள், மற்றும் சுகாதார வசதிகள் போன்ற பொது உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்வதன் மூலம் சமத்துவமான அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் அர்ப்பணிப்பை வெளிப்படுத்த முடியும். தமிழ், சிங்கள, மற்றும் முஸ்லிம் ஊழியர்களைக் கொண்ட நடமாடும் சுகாதார பிரிவுகள் சேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துவதுடன், உள்ளடங்கலையும் அடையாளப்படுத்தும். மேலும், அரசாங்க செயற்திட்டங்களுக்கான குடிமக்கள் கண்காணிப்பு குழுக்கள் போன்ற சமுதாய பின்னூட்டங்களுக்கான பொறிமுறைகளை உருவாக்குவது பொறுப்புக்கூறலை மேம்படுத்துவதுடன், வளங்கள் நியாயமான முறையில் விநியோகிக்கப்படுவதையும் உறுதி செய்யும்.

## பால்நிலை பரிமாணம் மற்றும் மேற்பொருந்தும் பாதிப்புகள்

### போர் விதவைகள் மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்கள்

முல்லைத்தீவில் உள்ள பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் பாலினம், வறுமை, மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பான ஒன்றோடொன்று மேற்பொருந்துகின்ற அல்லது ஊடறுக்கின்ற பாதிப்புகளை எதிர்கொள்கின்றனர். போர் விதவைகள் பெரும்பாலும் தீர்மானமெடுக்கும் செயன்முறைகளில் இருந்து விலக்கப்படுவதாலும் காணி உரிமைகள் மற்றும் அரசாங்க ஆதரவை பெறுவதற்கு போராடுவதாலும் சமூக களங்கம் மற்றும் பொருளாதார ஓரங்கட்டலை அனுபவிக்கிறனர். அத்துடன், பல போர் விதவைகள், வயதான பெற்றோர்கள் அல்லது மாற்றுத்திறனாளி குழந்தைகளை கவனிப்பது போன்ற மேலதிக பொறுப்புகளையும் எதிர்கொள்கிவதுடன் இது வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடும் அவர்களது திறனைக் மட்டுப்படுத்துகிறது. கொக்குத்தொடுவாயைச் சேர்ந்த ஓர் விதவை, "எனது குழந்தைகளுக்கோ அல்லது பண்ணைக்கோ உதவ எனக்கு யாருமில்லை. நெற்பயிர்ச்செய்கைக்கான காணி என்னிடம் உள்ளது, ஆனால் நாட் கூலிகளை என்னால் அமர்த்த முடியவில்லை, மேலும் அதிக வெப்பத்தில் நடந்து செல்வது எனக்கு மிகவும் கடினமானது. ஒவ்வொரு நாளும் ஒரு சவாலாக உள்ளது" என தெரிவித்தார்.

### பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கான பாதுகாப்பு மற்றும் பாதுகாவல்

முல்லைத்தீவில் உள்ள பெண்களும், பெண்பிள்ளைகளும் குறிப்பாக வேலை செய்யும் இடங்களிலும் பொது இடங்களிலும் குறிப்பிடத்தக்க பாதுகாப்பு கரிசனங்களை எதிர்கொள்கின்றனர். பலவீனமான பாதுகாப்பு நடவடிக்கைகள் மற்றும் குறைந்தளவு பொறுப்புக்கூறல் அவர்களை துன்புறுத்தல் மற்றும் சுரண்டலுக்கு ஆளாக்குவதுடன் இது பொருளாதார மற்றும் சமூக நடவடிக்கைகளில் பங்கேற்பதற்கான அவர்களது திறனை மேலும் மட்டுப்படுத்துகிறது. இது தொலைதூரப் பகுதிகளில் பாடசாலைக்கு நடந்து செல்லும் பெண்பிள்ளைகளுக்கும், சந்தைகள் அல்லது வேலை செய்யும் இடங்களுக்கு நீண்ட தூரம் பயணிக்கும் பெண்களுக்கும் அதிகமாக காணப்படுகின்றது.

### காலநிலை மாற்றம் மற்றும் பால்நிலை தாக்கங்கள்

காலநிலை மாற்றத்தால் வாழ்வாதார இழப்பு மற்றும் ஊதியம் இல்லாத பராமரிப்பு வேலைகளின் அதிகரித்த சுமையினால் பெண்கள் பாராபட்சமாக பாதிக்கப்படுவதால் அது ஏற்கனவே உள்ள பால்நிலை சமத்துவமின்மையை மேலும் அதிகரிக்கிறது. உதாரணமாக, வறட்சி அல்லது வெள்ளம் காரணமாக விவசாய உற்பத்தி குறையும் போது, பெண்கள் தமது குடும்பங்களுக்கு உணவளிக்க மாற்று வழிவகைகளைக் கண்டறிய வேண்டியதுடன். நீர் எடுத்தல் அல்லது விறகு சேகரித்தல் போன்ற மேலதிக உழைப்புச் செறிந்த வேலைகளையும் செய்ய வேண்டியுள்ளது. மறுபுறம், ஆண்கள் அடிக்கடி வேலை தேடி புலம்பெயர்வதனால், பெண்கள் குடும்பங்களையும், விவசாய நிலங்களையும் தனியாக நிர்வகிக்க வேண்டியுள்ளது. இந்த நிலை, பெண்கள் மீது மேலதிக அழுத்தத்தை ஏற்படுத்துவதுடன், குடும்பத் தேவைகளை ஆதரிப்பதற்காக ஆண்பிள்ளை மற்றும் பெண் பிள்ளைகள் பாடசாலையை விட்டு இடைவிலக நேரிடலாம் என்பதால் அவர்கள் பின்தள்ளி விடப்படுவதற்கான பாதிப்பை அதிகரிக்கிறது.

இந்த சூழலில், காலநிலை மாற்றத்தால் ஏற்படும் இடையூறுகள் இயலாமையுடையவர்களின் அத்தியாவசிய சேவைகளையும், வளங்களையும் பெறுவதற்கான அவர்களது வாய்ப்புகளை மட்டுப்படுத்துவதால் இயலாமையுடையவர்கள் தனித்துவமான சவால்களை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக வெள்ளப்-பெருக்கு ஏற்படும் போது, இயலாமையுடையவர்கள் போதுமான உட்கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் வெளியேறுவதற்கோ அல்லது நிவாரண சேவைகளைப் பெறுவதற்கோ சிரமப்பட நேரிடலாம். தனது இயலாமையுடைய மகனை பராமரிக்கும் ஓர் தாய், "வெள்ளம் வரும் போது, நான் என்ன செய்வது என்று எனக்குத் தெரியவில்லை. ஒரே நேரத்தில் நான் அவனைத் தூக்கவும், எங்களது பொருட்களைப் பாதுகாக்கவும் முடியாது" என விபரித்தார்.

இந்த மேற்பொருந்துகின்ற பாதிப்புகளை நிவர்த்தி செய்வதற்கு, ஆண்கள், பெண்கள், ஆண், பெண் பிள்ளைகள் மற்றும் இயலாமையுடையவர்களின் மாறுபட்ட தேவைகளை அடையாளம் காணும் இலக்கு வைக்கப்பட்ட செயற்திட்ட முன்னெடுப்புக்கள் அவசியமாகும். இதில், குழந்தை பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்துதல், பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்குதல், மற்றும் அனர்த்த காலங்களில் பதிலளிப்பதற்கான திட்டங்கள் சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் உள்ளடங்கலானதாகவும், அணுகக்- கூடியதாகவும் இருப்பதை உறுதி செய்தல் என்பன உள்ளடங்கும்.

## மீண்டெழு தன்மைக்கான வாய்ப்புகள்: முல்லைத்தீவு மாவட்டத்திற்கான குறிப்பான பரிந்துரைகள்

1. வறட்சி மீண்டெழுதிறனை வலுப்படுத்துதல்:
   - வறண்ட காலங்களில் நீர் கிடைப்பதை மேம்படுத்துவதற்காக, சிறிய நீர்த்தேக்கங்கள் போன்ற சமுதாயத்தால் நிர்வகிக்கப்படும் நீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்குதல்.
   - விவசாய வாழ்வாதாரங்களை நிலைநிறுத்துவதற்காக, ஊடுபயிர்ச்செய்கை மற்றும் விவசாய காடுகள் போன்ற காலநிலைக்கு மீண்டெழுதிறன் கொண்ட விவசாய நுட்பங்களை ஊக்குவித்தல்.

2. கழிவு முகாமைத்துவத்தை நிவர்த்தி செய்தல்:
   - திறந்த வெளியில் குப்பைகளை கொட்டுதல் மற்றும் எரிப்பதைக் குறைப்பதற்காக, கிராம மட்டத்தில் கழிவிலிருந்து உரம் நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட கழிவு முகாமைத்துவ அமைப்புகளை நடைமுறைப்படுத்துதல்.
   - கிராமப்புறங்களில் பிளாஸ்டிக் மீள்சுழற்சி முயற்சிகளை அறிமுகப்படுத்துவதற்காக, உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (NGOs) இணைந்து செயற்படுதல்.

3. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு ஆதரவு:
   - பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு காணி, நுண்கடன் மற்றும் நிலையான வாழ்வாதாரங்களுக்கான பயிற்சி போன்ற இலக்கு வைக்கப்பட்ட உதவிகளை வழங்குதல்.
   - பெண்கள் மீதான ஊதியம் இல்லாத பராமரிப்பு சுமையைக் குறைக்கவும், பொருளாதார நடவடிக்கைகளில் பங்கேற்பதை உறுதிப்படுத்தவும், சமுதாய சிறுவர் பராமரிப்பு நிலையங்களை நிறுவுதல்.

4. முரண்பாடுகளுக்கு உணர்திறனான இசைவாக்கம்:
   - யானை வேலிகளை அமைப்பதற்கான அனுமதிகள் மற்றும் விவசாய உதவிகளுக்கான அணுகல் போன்ற வளங்களின் வெளிப்படையான ஒதுக்கீட்டை உறுதி செய்வதன் மூலமாக சமத்துவமின்மை பற்றிய எண்ணங்களை நிவர்த்தி செய்தல்.
   - ஓரங்கட்டப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களை உள்ளடக்கிய பங்கேற்பு திட்டமிடல் செயன்முறைகள் மூலமாக ஆளுகையின் மீது நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

5. சமுதாயங்களுக்கிடையே தொடர்புகளை கட்டியெழுப்ப பெண்களின் வாழ்வாதாரங்களுக்கு வலுவூட்டுதல்:
   - தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களுக்கிடையில் சமூக ஒற்றுமையை வளர்ப்பதற்கான ஒரு கருவியாக முல்லைத்தீவில் பெண்களின் வாழ்வாதாரத்தை ஆதரித்தல்.
   - பகிரப்பட்ட பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதுடன் இன எல்லைகளுக்கு அப்பால் நம்பிக்கையை உருவாக்குவதற்காக பெண்கள் தலைமையிலான விவசாய கூட்டுறவு அல்லது சிறிய அளவிலான உணவு பதப்படுத்தும் பிரிவுகள் போன்ற கூட்டுறவு நிறுவனங்களை நிறுவுதல்.
   - உரையாடல் மற்றும் பரஸ்பர புரிதலுக்கான இடங்களை உருவாக்குவதற்காக காலநிலைக்கு மீண்டெழுதிறனுடைய விவசாயம் அல்லது தொழில்முனைவு குறித்து சமுதாயங்களுக்கு இடையே பயிற்சி அமர்வுகளை ஏற்பாடு செய்தல்.
   - பல்வகைப்பட்ட குழுக்களிடையே ஒன்றையொன்று சார்ந்திருத்தல் மற்றும் ஒத்துழைப்பை வளர்க்கும் அதே வேளையில் பெண்களை பொருளாதார ரீதியாக வலுப்படுத்தல்.

6. இளைஞர்களை பகிரப்பட்ட தொழிற்பயிற்சி மற்றும் குடிமை நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடுத்துதல்:
   - தமிழ் மற்றும் முஸ்லிம் இளையவர்களுக்கான கூட்டு தொழிற்கல்வி பயிற்சித் திட்டங்களை ஆரம்பிப்பதன் மூலம் இயலளவு மேம்பாட்டை மேம்படுத்துவதோடு, கட்டமைக்கப்பட்ட ஒரே மாதிரியான உள எண்ணங்களை உடைத்து நட்பை வளர்த்தல்.
   - இனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு தேவைப்படும் குழு அடிப்படையிலான செயற்திட்டங்களுடன் இணைக்கப்பட்டதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவல், சுற்றுச்சூழல் சுற்றுலா அல்லது வெள்ளத்தைத் தாங்கும் உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் பயிற்சி வழங்குவதில் கவனம் செலுத்துதல்.
   - பகிரப்பட்ட இலக்குகளில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக சமுதாய தூய்மைப்படுத்தும் இயக்கங்கள், மரம் நடும் பிரச்சாரங்கள் அல்லது அனர்த்த தடுப்பு செயற்திட்டங்கள் போன்ற இளைஞர்கள் தலைமையிலான குடிமை முயற்சிகளை நிறுவுதல்.
   - இளைஞர்களின் இடைத்தொடர்பு மற்றும் நல்லிணக்கத்திற்கு நடுநிலையான இடங்களை வழங்கும் சமுதாயங்களுக்கு இடையேயான விளையாட்டு நிகழ்வுகள் அல்லது கலாச்சார பரிமாற்றங்களை நடாத்தக்கூடிய பொழுதுபோக்கு வசதிகளை உருவாக்குதல்.

1. சமூக ஒப்பந்தத்தை வலுப்படுத்த ஆளுகையை வலுப்படுத்துதல்:
   - ஜனகபுர போன்ற அதிக பதட்டம் நிறைந்த பகுதிகளில் இன-மத ரீதியான காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்காக, அனைத்து இனக் குழுக்களின் பிரதிநிதித்துவத்துடன் உள்ளூர் பிணக்கு தீர்க்கும் குழுக்களை நிறுவுதல்.
   - வீதிகள், நீர்ப்பாசன குளங்கள் மற்றும் சுகாதார பராமரிப்பு வசதிகள் போன்ற பகிரப்பட்ட உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்து அனைத்து சமுதாயங்களுக்கும் அது தெளிவாக நன்மை பயப்பதையும், அரசின் சமத்துவத்திற்கான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துதல்.

- தமிழ், சிங்கள, மற்றும் முஸ்லிம் சமுதாயங்களைச் சேர்ந்த மருத்துவ பணியாளர்களைக் கொண்ட நடமாடும் சுகாதார பிரிவுகளை உருவாக்குவதன் மூலம் உள்ளடங்கலை அடையாளப்படுத்துவதுடன், சமுதாயங்களுக்கிடையேயான நம்பிக்கையையும் வளர்க்கும் அதே நேரத்தில் சுகாதார சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தல்.
- அரசாங்கத் செயற்திட்டங்களின் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும், வளங்கள் நியாயமாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யவும் குடிமக்கள் கண்காணிப்பு குழுக்களை அமைத்தல்.

**8. சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்த சமுதாயங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை ஊக்குவித்தல்**

- வெள்ளம் அல்லது வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு கூட்டாக பதிலளிப்பதுடன் பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க உதவும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி அளிக்கும் சமுதாய அடிப்படையிலான அனர்த்த தயார்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
- பொங்கல் போன்ற அறுவடைத் திருவிழாக்கள் அல்லது பிற கலாச்சார நிகழ்வுகளை கூட்டாக ஏற்பாடு செய்வதன் மூலமாக புரிந்துணர்வை மேம்படுத்துவதுடன், தப்பெண்ணங்களையும் குறைத்தல்.
- சமுதாயங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கு சமூக ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதுடன், மீண்டெழுதிறனை வளர்க்கவும் உதவும் பொருளாதாரம், சமூகம் மற்றும் ஆளுகை தொடர்பான பல்வேறு முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

**9. உள்ளூர் பொருளாதாரங்கள் மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்த வர்த்தக வலையமைப்புகளை மேம்படுத்துதல்**

- பொருளாதார ரீதியாக ஒன்றிலொன்று தங்கியிருத்தலை ஏற்படுத்தி இனங்களுக்கிடையேயான பதட்டங்களைக் குறைப்பதற்காக தமிழ், சிங்கள, மற்றும் முஸ்லிம் உற்பத்தியாளர்கள், பதப்படுத்துனர்கள், மற்றும் வர்த்தகர்களை இணைக்கும் பிராந்திய வர்த்தக மையங்களை உருவாக்குதல்.
- விவசாயிகள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை போட்டியிடக்கூடிய விலையில் விற்கவும், அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைக் குறைக்கவும் கிராமப்புற சந்தை உட்கட்டமைப்பில் சேமிப்பு வசதிகள், குளிரூட்டப்பட்ட விநியோக சங்கிலிகள் மற்றும் போக்குவரத்து இணைப்புகள் ஆகியவற்றில் முதலீடு செய்தல்.
- மசாலாப் பொருட்கள் அல்லது சேதனப் பசளை மூலமான காய்கறிகள் போன்ற உள்ளூர் பொருட்களுக்கு நியாயமான வர்த்தக சான்றிதழ் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிக பெறுமதியான சந்தைக்கான அணுகலை உறுதிப்படுத்துதல்.
- நெல் மற்றும் காய்கறி உற்பத்தி செய்யும் தமிழ் விவசாயிகளை நகர்ப்புற சந்தைகளுக்கு வழங்கல் செய்யும் முஸ்லிம் வர்த்தகர்களுடன் இணைப்பது போன்ற விவசாய வர்த்தக வலைப்பின்னல்களில் சமுதாயங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.




முறைசாரா புலம்பெயர்வின் அபாயங்கள் குறித்த தமிழர்களுக்கான பொது விழிப்புணர்வு சுவரொட்டி.



முல்லைத்தீவு மாவட்டம், சமையலறைத் தோட்டம்.

# 7 தற்போதைய பதிலளிப்புகள் மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள்

## 7.1 தற்போதைய கொள்கை கட்டமைப்பு

**தேசிய ரீதியாகத் தீர்மானிக்கப்பட்ட பங்களிப்பு:** இலங்கையின் NDC 2.0 ஆனது, பாதிக்கப்படக்கூடிய மக்களின் குறிப்பான தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் உள்ளூர்மயமாக்கப்பட்ட அபாய மதிப்பீடுகள் மற்றும் துறைசார் திட்டங்களுக்கு அழைப்பு விடுக்கிறது. இந்தக் கட்டமைப்பின் அடிப்படையில் ஒரு நுணுக்கமான, பால்நிலை மற்றும் மோதலுக்கு உணர்திறனான அணுகுமுறையால் இசைவாக்கத்திற்கான நிலைமைகளை உருவாக்கும் அதே சமயத்தில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும், அரசாங்க சேவைகளுக்கான சமமற்ற அணுகல் தொடர்பான குறைகளை குறைக்கவும் முடியும்.

**பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய செயற் திட்டம்:** இலங்கை தனது முதலாவது பெண்கள், சமாதானம் மற்றும் பாதுகாப்பு (WPS) தொடர்பான தேசிய செயற் திட்டத்தை ஜப்பான் அரசாங்கம் மற்றும் ஐ.நா. பெண்கள் அமைப்பின் ஆதரவுடன் 2023-2027 ஆண்டிற்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தத் திட்டமானது, UN பாதுகாப்பு சபைத் தீர்மானம் 1325 (2000) இன் கீழான சர்வதேச கடப்பாடுகளுடன் இணைந்து, பெண்களைப் பாதுகாப்பதற்கும், அவர்களைவ வலுவூட்டுவதற்குமென நாட்டின் சட்ட மற்றும் கொள்கை கட்டமைப்புகளை பலப்படுத்துகிறது. இது நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்தியை அடைவதற்கான ஒரு முக்கியமான படிநிலையான WPS நிகழ்ச்சி நிரலில் ஈடுபட்டுள்ள பங்குதாரர்களிடையே ஒருங்கிணைப்பை மேம்படுத்தவும் முயல்கின்றது.

**காலநிலை மாற்றம் தொடர்பான தேசிய கொள்கை:** இந்தக் கொள்கையானது 2050 ஆம் ஆண்டளவில் காலநிலை நடுநிலையை அடைதல், அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலில் காலநிலை நடவடிக்கையை ஒருங்கிணைத்தல் மற்றும் குடிமக்களின் பகிரப்பட்ட பொறுப்பு மற்றும் தீர்மானமெடுப்பதில் இளைஞர்கள் மற்றும் பெண்களை உள்ளடக்குதல் ஆகியவற்றுக்கு அழைப்பு விடுக்கிறது (இலங்கை சுற்றாடல் அமைச்சு 2023). இதில் சுற்றாடல் அமைச்சு ஒரு பரந்த மேற்பார்வை பங்கை கொண்டுள்ளதுடன், கொள்கையின் வெவ்வேறு கூறுகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பு பல அரசாங்க திணைக்களங்களுக்கு இடையே பரவியுள்ளது (இலங்கை சுற்றாடல் அமைச்சு 2023).

**தேசிய சுற்றாடல் கொள்கை:** NEP ஆனது காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல், மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பங்காக வனப்பகுதியை அதிகரித்தல், மாசடைதல் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு, கழிவு முகாமைத்துவம், மற்றும் காலநிலைக்கு மீண்டெழுதிறன் கொண்ட நிலைபேண்தகு பொருளாதாரம் ஆகியவற்றைச் சுற்றி கொள்கை இலக்குகளை உருவாக்கியுள்ளது. (இலங்கை சுற்றாடல் அமைச்சு 2022). இது நிலைபேண்தகு அபிவிருத்தி, மாசுபடுத்துபவரே செலுத்துதல் (மாசை ஏற்படுத்துபவரே அதற்கான இழப்பீட்டுத் தொகையை செலுத்துதல் எனும் கொள்கை), வாழ்க்கைச் சுழற்சி கொள்கை, பாதுகாப்பான குறைந்தபட்ச தரநிலைகள், முற்காப்பு கொள்கை, பொறுப்புடைமை, சமத்துவம், வளப் பயன்பாட்டில் வினைத்திறன், உலகளாவிய கொள்கை, பொதுவான ஆனால் வேறுபட்ட பொறுப்புகள், மற்றும் பொது நம்பிக்கை கோட்பாடு ஆகியவற்றின் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டதாகும் (இலங்கை சுற்றாடல் அமைச்சு 2022).

**இலங்கையில் காலநிலை தாக்கங்களுக்கான தேசிய இசைவாக்கல் திட்டம்:** NAP ஆனது உணவுப் பாதுகாப்பு, நீர், கடற்கரை யோரத் துறை, சுகாதாரம், மனித குடியேற்றங்கள், உயிர்ப்பல்வகைமை, சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு, ஏற்றுமதி மேம்பாடு மற்றும் கைத்தொழில்-சக்தி-போக்குவரத்து ஆகிய ஒன்பது பாதிக்கப்படக்கூடிய துறைகளின் இசைவாக்கல் தேவைகளை உள்ளடக்கியதாகும்: (மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு 2016). இது மேலும் நிறுவன மேம்பாடு மற்றும் ஒருங்கிணைப்பு, சர்வதேச ஒத்துழைப்பு, தொழில்நுட்ப பரிமாற்றம், மற்றும் கல்வி மற்றும் பயிற்சி போன்ற தேசிய அளவிலான இசைவாக்கல் தேவை மற்றும் அமுல்படுத்தல் காரணிகளை உள்ளடக்கியது (மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு 2016).

**பிராந்திய ஒத்துழைப்பு கட்டமைப்புகள்:** தெற்காசியா உலகின் குறைவான ஒருங்கிணைந்த பிராந்தியங்களில் ஒன்றாகும். இது கலாச்சாரம், மொழி, மதம் மற்றும் இனம் ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு பன்முகத்தன்மை கொண்ட பிராந்தியம் என்பதுடன் பகிரப்பட்ட இயற்கை வளங்களைப் பிரிக்கும் அரசியல் எல்லைகளைப் பற்றிய மோதல்களின் வரலாற்றை கொண்டுள்ளது (விஸ்வநாத் மற்றும் பலர் 2024). இலங்கை ஒரு பகுதியாக இருக்கும் தற்போதைய பிராந்திய ஒத்துழைப்பு பொறிமுறைகளில் பின்வருவன உள்ளடங்கும்: தெற்காசிய பிராந்திய ஒத்துழைப்புக்கான சங்கம், தெற்காசிய கூட்டுறவு சுற்றாடல் நிகழ்ச்சித் திட்டம், தெற்காசிய கடல்சார் நிகழ்ச்சித் திட்டம், தெற்காசிய பவளப்பாறை பணிக்குழு, பல்துறை தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புக்கான வங்காள விரிகுடா முன்முயற்சி, இந்தியப் பெருங்கடல் சுஅஜ சங்கம், மற்றும் அனர்த்த தாங்குதிறன் கொண்ட உட்கட்டமைப்புக்கான கூட்டணி (விஸ்வநாத் மற்றும் பலர் 2024). பிராந்திய ஒத்துழைப்புக்கான சவால்களில் தரவு பற்றாக்குறை மற்றும் நம்பிக்கையின்மை ஆகியவை அடங்கும் (விஸ்வநாத் மற்றும் பலர் 2024).

## 7.2 கொள்கை இடைவெளிகள் மற்றும் காலநிலை பாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகள்

இலங்கையின் தற்போதைய கொள்கை பரப்பின் ஒரு விமர்சன பகுப்பாய்வானது தேசிய மற்றும் உள்ளூர் கட்டமைப்புகளில் காலநிலை பாதுகாப்பு பரிசீலனைகளை ஒருங்கிணைப்பதில் உள்ள இடைவெளிகளை வெளிப்படுத்துகிறது. இந்த இடைவெளிகளில் மோதல் உணர்திறன் பற்றாக்குறை, மட்டுப்படுத்தப்பட்ட பால்நிலை உள்ளடக்கம், மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கு இடையேயும், சிவில் சமூகத்துடனுமான பலவீனமான ஒருங்கிணைப்பு ஆகியவை உள்ளடங்கும். காலநிலை இசைவாக்கல் முயற்சிகள் தற்செயலாக சமூக பதட்டங்களை அதிகரிக்காமல் அல்லது சமத்துவமின்மையை ஆழமாக்காமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு இந்த இடைவெளிகளை நிவர்த்தி செய்வது அவசியமாகும்.

| பிரதான கொள்கை இடைவெளிகள் | மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் |
|---|---|
| மோதல் உணர்திறன்: தற்போதைய காலநிலை கொள்கைகளில் குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் போன்ற போருக்குப் பின்னான பிராந்தியங்களில் பாதிக்கப்படக்கூடிய தன்மை மற்றும் மோதலின் மூல காரணங்களை நிவர்த்தி செய்வதற்கான பொறிமுறைகள் இல்லை. | காலநிலை நடவடிக்கையின் அரசியல் பரிமாணங்களைப் புரிந்துகொண்டு, சமமான வள ஒதுக்கீடு மற்றும் உள்ளடங்கலான தீர்மானமெடுக்கும் செயன்முறைகளை உறுதி செய்வதன் மூலம் சமூக பதட்டங்களை முன்னெச்சரிக்கையுடன் குறைக்கும் வகையில் காலநிலை கொள்கைகளை வடிவமைத்தல். |
| பால்நிலை உள்ளடக்கம்: கொள்கைகள் குறிப்பாக கிராமப்புற மற்றும் மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பெரும்பாலும் பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் தனித்துவமான பாதிப்புகள் மற்றும் திறன்களை கணக்கில் எடுக்கத் தவறுகின்றன. | இலக்கு வைக்கப்பட்ட தலையீடுகள் மற்றும் இயலளவை கட்டியெழுப்பும் முயற்சிகள் மூலம் பெண்கள், ஆண்கள், சிறுவர்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் மேற்பொருந்துகின்ற பாதிப்புகளை நிவர்த்தி செய்வதன் மூலம் கொள்கைகளின் பால்நிலை பதிலளிப்பை பலப்படுத்துதல். |
| உள்ளூர் மட்ட இசைவாக்கம்: உள்ளூர் அரச மட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்கள் மற்றும் இயலளவு ஆகியவை சமுதாய மட்டத்திலான இசைவாக்க முயற்சிகளை வினைத்திறனாக அமுல்படுத்துவதைத் தடுக்கின்றன. முயற்சிகள் பெரும்பாலும் தொழில்நுட்ப ரீதியானவை என்பதுடன் இன-அரசியல் உணர்திறன் இல்லாதவையாகும். | சமுதாய அடிப்படையிலான இசைவாக்க முயற்சிகள் மோதல் பரிமாணத்தை கணக்கில் எடுத்துக்கொள்வதுடன் சமாதானத்திற்கு சாதகமானவை என்பதை உறுதிப்படுத்துதல். வினைத்திறனான, மோதலுக்கு உணர்திறன் கொண்ட அமுல்படுத்தல் மற்றும் விரிவாக்கத்திற்குத் தேவையான தொழில்நுட்ப ஆதரவு, நிதி, மற்றும் பயிற்சியை உள்ளூர் அரசாங்கங்களுக்கு வழங்குதல். |
| கொள்கை ஒருங்கிணைப்பு: அரசாங்க நிறுவனங்கள், ஐ.நா. திட்டங்கள், மற்றும் சிவில் சமூக அமைப்புகளுக்கு இடையே உள்ள துண்டுபடுத்தப்பட்ட முயற்சிகள் பிரதியெடுப்பு மற்றும் வினைத்திறனின்மைக்கு வழி வகுக்கின்றன. | பாதிப்புகள் மற்றும் மோதல்களை முழுமையாக நிவர்த்தி செய்வதற்கு அரசாங்க நிறுவனங்கள், ஐ.நா. திட்டங்கள், மற்றும் சிவில் சமூகத்திற்கு இடையே உள்ள முயற்சிகளை ஒருங்கிணைப்பதன் மூலம் தேசிய சமாதானத்தை கட்டியெழுப்பும் வியூகங்களில் காலநிலை பாதுகாப்பை ஒருங்கிணைத்தல். |

## 7.3 கற்றுக்கொண்ட பாடங்கள்: சமூக நல்லிணக்கம் மற்றும் உள்ளூர் ஆளுகையை வலுப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்

அத்தியாயம் 6 இல் உள்ள சம்பவக்கற்கைகள் மற்றும் அத்தியாயம் 3 இல் உள்ள ஐந்து வழிவகைகள் ஆகியன காலநிலை பாதுகாப்பு அபாயங்களுக்கு மீண்டெழு திறன் வாய்ந்த முக்கிய பரிமாணங்களாக இனங்களுக்கிடையேயான மற்றும் மத ஈடுபாட்டை வளர்ப்பதிலும், அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களுக்கும் உள்ளூர் அரசாங்கத்திற்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்துவதிலும் உள்ள முக்கிய வகிபங்கையும் எடுத்துக்காட்டுகின்றன. பின்வரும் பாடங்கள் காலநிலை தொடர்பான சவால்களுக்கான மீண்டெழு திறனை மேம்படுத்துவதற்கான செயற்படுத்தக்கூடிய உத்திகளை எடுத்துக்காட்டுகின்றன:

**1. புலம்பெயர்வு அழுத்தங்களைக் குறைப்பதற்கும் ஒத்துழைப்பை வளர்ப்பதற்கும் வாழ்வாதாரங்களை பல்வகைப்படுத்துதல்:**
பொலித்தீன் கூடார விவசாயம், காளான் பயிர்ச்செய்கை மற்றும் மசாலா உற்பத்தி போன்ற காலநிலைக்கு தாங்குதிறனுடைய வாழ்வாதாரங்கள் காலநிலைக்கு உணர்திறனான பயிர்களில் தங்கியிருப்பதைக் குறைப்பது மட்டுமல்லாமல், இனங்களுக்கு இடையேயான மற்றும் மத ஒத்துழைப்புக்கான வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளன. பதுளை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற பகுதிகளில், கூட்டுப் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பகிரப்பட்ட சந்தை அணுகல் ஆகியவை பல்வேறு சமுதாயங்களை ஒன்றிணைத்து, கட்டாய புலம்பெயர்வைக் குறைக்கும் அதே வேளையில் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துகின்றன.

**2. காலநிலைக்கு இசைவாக்கமான கொள்கைகள்:**
இலங்கையில் முன்னேற்றகரமான காலநிலை இசைவாக்க கட்டமைப்புகள் இருந்தாலும், அவற்றில் பெரும்பாலும் மோதலுக்கு உணர்திறனான பார்வை இருப்பதில்லை. உள்ளடங்கலான தீர்மானமெடுத்தல் மற்றும் சமமான வள ஒதுக்கீடு போன்ற சமாதானத்தை கட்டியெழுப்பும் நோக்கங்களை ஒருங்கிணைப்பது குறைகளை நிவர்த்தி செய்து நம்பிக்கையை வளர்க்கும். பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள சமுதாயங்கள் போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு முன்னுரிமை அளிப்பது, கொள்கைகள் பால்நிலைக்கு பதிலளிக்கக்கூடியதாகவும் சமூக ரீதியாக உள்ளடங்கலானதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. காலநிலை நடவடிக்கைகளை சமூக ஒத்திசைவு இலக்குகளுடன் இணைப்பதன் மூலம், இலங்கை ஒற்றுமையை ஊக்குவிக்கும் அதே வேளையில் மீண்டெழுதன்மையை கட்டியெழுப்ப முடியும்.

**3. நம்பிக்கை மற்றும் உள்ளடங்கலை கட்டியெழுப்ப சமத்துவமான சேவை வழங்கலுக்கு முன்னுரிமை அளித்தல்:**
வெளிப்படையான ஆளுகை மற்றும் நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் சுகாதார வசதிகள் போன்ற கிராமப்புற உட்கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் சமத்துவமான முதலீடுகள் ஒதுக்கீடு பற்றிய எண்ணங்களைக் குறைத்துள்ளன. சேவைகளுக்கான நியாயமான அணுகலை உறுதி செய்வதன் மூலமாக உள்ளூர் அரசாங்கங்கள் அரசியல் ரீதியாக ஓரங்கட்டப்பட்ட சமூகங்களுடன் நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பவும், வலுவான உறவுகளை வளர்க்கவும், குறிப்பாக வடக்கு மற்றும் கிழக்கு போன்ற வரலாற்று குறைகள் உள்ள பகுதிகளில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும் வாய்ப்புள்ளது.

**4. சமுதாயங்களுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்த மனித–வனவிலங்கு முரண்பாட்டு முகாமைத்துவத்தில் சமுதாயங்களை ஈடுபடுத்துதல்:**
கண்காணிப்பு கோபுர வலையமைப்புகள் மற்றும் ஒருங்கிணைந்த யானை தடுப்பு முறைமைகள் போன்ற சமுதாயத்தால் வழிநடாத்தப்படும் முயற்சிகள் பகிரப்பட்ட சவால்களை எதிர்கொள்வதில் கூட்டு நடவடிக்கையின் பெறுமதியை நிரூபித்துள்ளன. இந்த முயற்சிகள் அம்பாந்தோட்டை மற்றும் முல்லைத்தீவு போன்ற பிராந்தியங்களில் வெவ்வேறு இன மற்றும் மதப் பின்னணிகளைச் சேர்ந்த விவசாயிகளை ஒன்றிணைத்து ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர ஆதரவிற்கான ஒரு தளத்தை உருவாக்கியுள்ளன. இந்த மோதல்களை நிர்வகிப்பதில் பெண்களுக்கு தலைமைத்துவ வகிபாகங்களை வழங்க ஊக்குவிக்கும் உள்ளூர் அரசாங்கங்களுக்கும் சமூகங்களுக்கும் இடையிலான பங்காண்மைகள் நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் மேலும் வலுப்படுத்தும்.

**5. கல்வி முறைகளை காலநிலை அழுத்தங்களுக்கு ஏற்ப இசைவாக்குவதுடன் குழுக்களுக்கிடையேயான ஈடுபாட்டை வளர்த்தல்:**
நெகிழ்வான கற்றல் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் தொழில் பயிற்சி இளைஞர்களை காலநிலை மீண்டெழு திறன்களுடன் மட்டுமல்லாமல், சமுதாயங்களுக்கு இடையிலான தொடர்புக்கான வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளன. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் பழங்குடியின வேடர் சமுதாயங்கள் உட்பட பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கான உதவித்தொகை மற்றும் போக்குவரத்துக்கான ஊக்கத்தொகை என்பன, வருகை விகிதங்களை அதிகரித்துள்ள அதே நேரத்தில் உள்ளடங்கலான உணர்வையும் வளர்த்துள்ளன.

**6. நம்பிக்கை மற்றும் மீண்டெழுதிறனை மேம்படுத்த சுகாதார பராமரிப்பு அமைப்புகளை வலுப்படுத்துதல்:**
குறிப்பாக தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் போன்ற பாதிக்கப்படக்கூடிய குழுக்களுக்கு வெள்ளத்தடுப்பு சுகாதார உட்கட்டமைப்பு மற்றும் நடமாடும் மருத்துவமனைகளில் முதலீடுகள் போன்றன தீவிர வானிலை நிகழ்வுகளின் போது அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தியுள்ளன. இந்த முயற்சிகள், சமுதாயங்கள் முழுவதும் சமமாக அமுல்படுத்தப்படும்போது உள்ளூர் ஆளுகையில் நம்பிக்கை மேம்படுத்தப்படுவதுடன் மீண்டெழுதன்மையை உருவாக்குவதிலும் காலநிலையால் அதிகரிக்கும் சுகாதார சவால்களை நிவர்த்தி செய்வதிலும் உள்ளடங்கலான சேவை வழங்கலின் மதிப்பை நிரூபிக்க முடியும்.



கலப்பு பயிர்ச்செய்கை, வெலிமடை, பதுளை மாவட்டம்

# 8 முடிவுகளும் பரிந்துரைகளும்

இலங்கையின் பொருளாதார மீட்சி எதிர்பார்ப்புகளை விட அதிகமாக உள்ளதுடன் அதன் காலநிலை தணிப்பு முயற்சிகள் பாராட்டத்தக்கவை. எனினும், கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு மக்கள் இன்னும் வறுமையில் அல்லது மீண்டும் வறுமைக்குள் தள்ளப்படும் அபாயத்தில் உள்ளனர். பல தசாப்தகால உள்நாட்டுப் போர், இனரீதியான தேசியவாதம் மற்றும் சமூகப் பிளவுகள் ஆகியவை சமத்துவமின்மை மற்றும் புறக்கணிப்பு குறித்த கண்ணோட்டங்களை தொடர்ந்து வடிவமைத்து வருவதுடன் இது ஆளுகையின் மீதான நம்பிக்கையை பலவீனப்படுத்துவதுடன் சமூக குறைகளை ஆழப்படுத்துகிறது. இந்தப் பரிமாணம் ஆளுகை, சமூக நல்லிணக்கம் மற்றும் சமத்துவமான அபிவிருத்தி ஆகியவற்றில் நீடித்த தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளனதுடன் குறிப்பாக பெண்கள், இன சிறுபான்மையினர் மற்றும் இளைஞர்கள் போன்ற நலிவடைந்த குழுக்கள் வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு முறைப்படுத்தப்பட்ட தடைகளை எதிர்கொள்கின்றன.

ஒழுங்கற்ற மழைப்பொழிவு, கடும் வெப்பம் மற்றும் தீவிரமான புயல்கள் போன்ற காலநிலை அழுத்தங்கள் இப்போது இந்த வரலாற்று சவால்களை மேலும் அதிகரிக்கின்றன. குறிப்பாக மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் காலநிலை இசைவாக்கல் வளங்களுக்கான சமமற்ற அணுகலானது பாரபட்சம் மற்றும் புறக்கணிப்பு பற்றிய எண்ணங்களை வலுப்படுத்துவதுடன் இது இனங்களுக்கு இடையிலான மற்றும் மதங்களுக்கு இடையிலான உறவுகளை மேலும் பாதிக்கின்றது. பாதிக்கப்படக்கூடிய குடும்பங்கள் வறுமையில் மேலும் தள்ளப்படுகின்ற அதேசமயம் அதிக வளங்கள் உள்ளவர்கள் சிறப்பாக இசைவாக்கமடைந்து கொள்ளும் திறனைக் கொண்டுள்ளனர். இந்த வேறுபாடு ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களிடையே குறைகளைத் தூண்டும் அபாயத்தை ஏற்படுத்துவதுடன் அவர்கள் காலநிலை இசைவாக்க முயற்சிகளை சமமற்றதாக அல்லது புறக்கணிப்பு செய்வதாக உணரலாம். இந்த ஒன்றோடொன்று தொடர்புடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு கட்டமைப்பு சமத்துவமின்மை மற்றும் வளர்ந்து வரும் காலநிலை அபாயங்கள் ஆகிய இரண்டையும் கையாளுகின்ற உடனடியான ஒருங்கிணைந்த தீர்வுகள் அவசியமாகும்.

பல ஆண்டுகால பொருளாதார மற்றும் அரசியல் குழப்பங்களுக்குப் பிறகு, இலங்கையின் அண்மைய நிதி ஸ்திரத்தன்மை இந்த பாதிப்புகளைத் தீர்ப்பதற்கான ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்குகிறது. மேம்பட்ட நிதியியல் கொள்ளளவுடன், நாடு சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்தவும், ஆளுகையை வலுப்படுத்தவும், ஆபத்தில் உள்ள சமுதாயங்களில் மீண்டெழுதிறனை உருவாக்கவும் உதவும் சமமான காலநிலை இசைவாக்க நடவடிக்கைகளில் முதலீடு செய்ய முடியும். குறிப்பாக வரலாற்று ரீதியான குறைகள் தீர்க்கப்படாத பகுதிகளில், மோதலுக்கு உணர்திறனான முறையில் இந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறும் பட்சத்தில் அவை பிளவுகளை தற்செயலாக ஆழப்படுத்தலாம். எனினும், மூலோபாய ரீதியாக நிர்வகிக்கப்பட்டால், இந்த மீட்சி ஒரு உருமாற்றத்தை ஏற்படுத்தும் மாற்றத்தை கொண்டு வரக்கூடும்.

அனைவரையும் உள்ளடக்கிய ஆட்சிக்கு உறுதியளிக்கும் ஒரு முற்போக்கான அரசாங்கத்தின் வருகை இந்த உத்வேகத்திற்கு மேலும் வலுசேர்க்கின்றது. ஆரம்ப அறிகுறிகள், நலிவடைந்த சமுதாயங்களுக்கு முன்னுரிமை அளித்தல், பால்நிலை சமத்துவத்தை ஊக்குவித்தல் மற்றும் புத்தாக்கமான காலநிலை மீண்டெழுதிறன் உத்திகளை ஏற்றுக்கொள்வது ஆகியவற்றில் கவனம் செலுத்துவதைக் குறிக்கின்றன. காலநிலைக்கு இசைவாக்கும் முயற்சிகளை சமாதானத்தை கட்டியெழுப்பும் குறிக்கோள்களுடன் வெளிப்படையாக இணைப்பதன் மூலமாக, தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகளில் இருந்து வரலாற்று ரீதியாக விலக்கப்பட்ட சமுதாயங்களிடையே அரசாங்கம் நம்பிக்கையையும் நல்லிணக்கத்தையும் வளர்க்க முடியும். இந்த அரசியல் மற்றும் நிதி ரீதியான சீரமைப்பாகது தைரியமான, உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ற மற்றும் பால்நிலை பொறுப்புணர்வுள்ள முன்னெடுப்புக்களை செயற்படுத்த ஓர் முக்கியமான வாய்ப்பை வழங்குகிறது.

பாதிப்பின் அடிப்படைக் காரணிகளை நிவர்த்தி செய்வதன் மூலமும், காலநிலை அபாயங்களுக்கு மீண்டெழுதிறனை உருவாக்குவதன் மூலமும், இலங்கை ஒரு மிகவும் சமத்துவமான, நல்லிணக்கமான மற்றும் நிலையான எதிர்காலத்தை நோக்கி ஒரு பாதையை வகுக்க முடியும்.

## 8.1 பொதுவான பரிந்துரைகள்

### 1. சமாதானத்தை கட்டியெழுப்புவதற்கும் ஆளுகைக்கும் காலநிலை நடவடிக்கைகளைப் பயன்படுத்துதல்

- **மாகாண மட்டத்திலான காலநிலை செயற்பாட்டு திட்டங்களை உருவாக்குதல்:**
  மாகாண இசைவாக்கல் திட்டங்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ள மாகாண சபைகள் மற்றும் உலகளாவிய பசுமை வளர்ச்சி நிறுவனத்தின் தற்போதைய பணிகளின் அடிப்படையில், உள்ளூர் முன்னுரிமைகள் மற்றும் பாதிப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பு இலக்குகளை மாகாண செயற்பாட்டு திட்டங்களாகப் பிரித்து உருவாக்குதல். பால்நிலை பொறுப்புணர்வுள்ள காலநிலை பாதுகாப்பு அபாய மதிப்பீடு மற்றும் பல்பரிமாண பாதிப்பு குறிகாட்டிகள் (MVIs) ஆகியவற்றைப் பயன்படுத்தி முதலீடுகளை வழிநடாத்துவதுடன், மோதலில் இருந்து மீண்டு வரும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் போன்ற பிரதேசங்கள், மேலும் ஓரங்கட்டப்படுவதைத் தடுக்கும் வகையில், சமூக பாதிப்பு மற்றும் பௌதீக காலநிலை வெளிப்பாடு ஆகிய இரண்டின் அடிப்படையிலும் சமமான வளங்களைப் பெறுவதை உறுதிசெய்தல் வேண்டும்.

- **நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை மேம்படுத்துதல்:**
  ஏற்கனவே உள்ள திட்டங்களை பல திணைக்களங்களுக்கிடையில் செயற்படுத்துவதை வசதிப்படுத்துவதற்கும், பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும், முயற்சிகளின் பிரதியெடுப்பை குறைப்பதற்கும் ஒரு மையப்படுத்தப்பட்ட பணிக்குழு அல்லது தளத்தை நிறுவுதல். வழக்கமான துறைகளுக்கு இடையிலான சந்திப்புகள் மற்றும் கூட்டுத் திட்டமிடல் அமர்வுகளை ஏற்பாடு செய்து, உத்திகளைச் சீரமைத்து, வளங்களைப் பகிர்வதன் மூலம் காலநிலை பாதுகாப்பு சவால்களை வினைத்திறனாக எதிர்கொள்வதற்கு ஒரு ஒருங்கிணைந்த அணுகுமுறையை அமுல்படுத்த வேண்டும். தீர்மானமெடுத்தல் மற்றும் கொள்கை நடைமுறைப்படுத்தலில் அவற்றின் நிபுணத்துவம் மற்றும் கள அறிவு உள்ளடக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு, மாநகர சபைகள், பிரதேச சபைகள், பொது சுகாதார பரிசோதகர்கள் மற்றும் விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்கள் ஆகியவற்றை கட்டமைக்கப்பட்ட ஈடுபாட்டு கட்டமைப்புகள் மூலம் ஆலோசனை செயன்முறைகளில் இணைத்துக் கொள்ளுதல்.

- **உள்ளடங்கலான ஆளுகையை ஊக்குவித்தல்:**
காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சுகள், பாதுகாப்பு மற்றும் நீதி நிறுவனங்கள், மற்றும் பெண்கள் அமைச்சு ஆகியவற்றுக்கு இடையே முறைப்படுத்தப்பட்ட பொறிமுறைகளை நிறுவுவதன் மூலம் துறைசார் நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல். மாவட்ட மட்டத்தில் சிறுபான்மையினர் ஆணையாளர் ஒருவரை நியமிப்பது போன்ற வழிமுறைகள் மூலம், நிர்வாகப் பதவிகளில் சிறுபான்மையினர் மற்றும் பூர்வகுடி சமுதாயங்களின் பிரதிநிதித்துவத்தை மேம்படுத்துதல். குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய மற்றும் பலவீனமான மாவட்டங்களில் உள்ளூர் அரசாங்கங்கள் மற்றும் சமுதாயத் தலைவர்கள் காலநிலை நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவும் கண்காணிக்கவும் வலுவூட்டப்படுவதனை உறுதி செய்தல்.

- **சமத்துவ அளவீடுகளைக் கண்காணித்து பொறுப்புக்கூறலை உறுதி செய்தல்:**
பல்பரிமாண வறுமைக் குறிகாட்டி, வறுமை விகிதங்கள் மற்றும் காலநிலை பாதிப்புச் சுட்டெண்கள் போன்ற குறிகாட்டிகளைப் பயன்படுத்தி சமமான வளப் பங்கீடு மற்றும் சமூக நல்லிணக்கம், ஆளுகை மீதான நம்பிக்கை ஆகியவற்றில் காலநிலை நடவடிக்கையின் தாக்கத்தை கண்காணித்தல். வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலை உறுதிசெய்வதற்கு மாகாணம், பால்நிலை, இனம் மற்றும் வருமான மட்டத்தின் அடிப்படையில் தரம்பிரிக்கப்பட்ட வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை வெளியிடுதல்.

- **சமூகத்தினால் வழிநடாத்தப்படும் வள முகாமைத்துவத்தை வளர்த்தல்:**
நீர், வனவிலங்குகள் மற்றும் பிற பகிரப்பட்ட வளங்களை முகாமை செய்வதற்கு பல்வகை இன, பல மத சமூகக் குழுக்களை ஆண்கள் மற்றும் பெண்கள் என இரு தரப்பினருக்கும் நிறுவுதல். இந்தக் குழுக்களால் வரலாற்று ரீதியான சமத்துவமின்மையால் எழும் குறைகளை நிவர்த்தி செய்து, பல்வேறு குழுக்களிடையே நம்பிக்கையை வளர்க்க முடியும்.

## 2. பிராந்தியத்திற்கு ஏற்ப இசைவாக்க உத்திகளை வடிவமைத்தல்

- **உலர் வலயம் (வடமேல், வடமத்திய, கிழக்கு, வடக்கு):**
  - நீர்ப்பாசன வினைத்திறன், மழைநீர் சேகரிப்பு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளித்தல்.
  - பிராந்திய பருவகால மாற்றங்கள் மற்றும் காலநிலை உறுதியற்ற தன்மையை நிவர்த்தி செய்ய தேசிய பயிர் நாட்காட்டியை புதுப்பித்தல்.
  - நீரைத் தேக்கி வைக்கும் திறனை மேம்படுத்தவும் வறட்சி பாதிப்பைக் குறைக்கவும் பண்டைய குளங்களின் நீர்ப்பாசன முறைமைகளை மாகாணங்கள் முழுவதும் சமமாக மீளக்கட்டமைத்தல்.
  - பெண் விவசாயிகளுக்கு பெறுமதி சேர்த்தல் மற்றும் நீர் சேமிப்பு நுட்பங்கள் குறித்த பயிற்சியை வழங்குதல்.

- **ஈர வலயம் (மேற்கு, சப்ரகமுவ, தெற்கு):**
  - மேம்படுத்தப்பட்ட வடிகால் அமைப்புகள் மற்றும் வெள்ளத்தை தாங்கும் வீடமைப்புகளில் முதலீடு செய்தல்.
  - சமுதாய அடிப்படையிலான வெள்ளப் பாதிப்புக்குத் தயாராகும் திட்டங்களில் பெண்களையும் இளைஞர்களையும் இணைத்தல்.
  - கொழும்பு போன்ற நகரங்களில் பசுமை இடங்கள் மற்றும் மரங்களை நடுதல் மூலமாக நகர்ப்புற வெப்ப தீவுகளை (வெப்பக் குவிப்பை) நிவர்த்தி செய்தல்.

- **இடை வலயம் (மத்திய, ஊவா):**
  - நீர் மிகுதியையும், விவசாயம், குடிநீர் மற்றும் நீர் மின்சக்திக்கு அதன் கிடைப்பையும் சமநிலைப்படுத்த ஒருங்கிணைந்த நீர் வழங்கல் பகுதி முகாமைத்துவத்தை உருவாக்குதல்.
  - மோசமான வீடமைப்பு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட கல்வி போன்ற தோட்டப்புற சமுதாயங்களின் தனித்துவமான சவால்களை, காலநிலை மாற்றத்திற்கு தாங்கும் வீடமைப்பு மற்றும் சுத்தமான நீர் கிடைப்பதை முன்னுரிமைப்படுத்துவதன் மூலமாக நிவர்த்தி செய்தல்.

## 3. நிலையான தன்மையை விருத்தி செய்ய துறைசார் காலநிலை பாதுகாப்பு அபாயங்களை நிவர்த்தி செய்தல்

### வாழ்வாதாரம் தொடர்பான அபாயங்கள்

- **வாழ்வாதார பல்வகைப்படுத்தலுக்கு ஆதரவளித்தல்:**
ஊவா, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் சூழல்சார் சுற்றுலாவையும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நிலைபேண்தகு மீன்பிடித் தொழிலையும் ஊக்குவித்தல். பெண்கள் மற்றும் இளைஞர்கள் உட்பட ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு சூரியப்படல் பொருத்துதல், யோர்கட், கருவாடு மற்றும் காய்கறிகளை உலர வைத்தல், மிளகாய்த்தூள் தயாரித்தல் போன்ற பெறுமதி சேர்க்கும் வேலைகள் அல்லது தையல் வேலை, வாகன ஓட்டுதல் மற்றும் சிறு வணிக உரிமையாளர் போன்ற காலநிலை மாற்றத்திற்கு தாங்குதிறனுடைய வேலைகளுக்கு மாறுவதற்கு பயிற்சி மற்றும் நிதி உதவியை வழங்குதல். கிராமிய சமுதாயங்களுக்கு சந்தைகளுக்கும் மாற்றீட்டு வேலைகளுக்கும் செல்வதற்கு ஆதரவளிக்க போக்குவரத்தில் முதலீடு செய்தல்.

- **கூட்டுறவு மாதிரிகளை ஊக்குவித்தல்:**
உணவுப் பாதுகாப்பை மேம்படுத்தவும், இன மற்றும் மத எல்லைகளுக்கு அப்பால் ஒத்துழைப்பை வளர்க்கவும் பெண்கள் தலைமையிலான பல்லின விவசாய கூட்டுறவுகளை நிறுவுதல். இந்த முயற்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் தலைமைத்துவம் மற்றும் மோதல் தீர்வு ஆகியவற்றில் பால்நிலை உணர்திறனை உள்ளடக்கிய பயிற்சிகளை வழங்குதல்.

- **சமூகப் பாதுகாப்பு வலைகளை விரிவுபடுத்துதல்:**
வறட்சி மற்றும் வெள்ளம் ஏற்படக்கூடிய பகுதிகளில் விவசாயிகள் மற்றும் மீனவர்களை காலநிலை அதிர்ச்சிகளிலிருந்து பாதுகாப்பதற்காக, இலகுவில் அணுகக்கூடிய, வெளிப்படையான மற்றும் வருமானத்தின் அடிப்படையில் சோதித்தறியப்பட்ட நுண் காப்புறுதி திட்டங்களை மேம்படுத்துதல். இந்தத் திட்டங்களை பெண் தலைமைத்துவ குடும்பங்கள் மற்றும் சிறு விவசாயிகளுக்கு ஏற்றவாறு வடிவமைத்தல். பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாக்க நிதியியல் அறிவை மேம்படுத்துவதுடன் நுண்நிதியை ஒழுங்குபடுத்துதல்.

- **மீண்டெழுந்திறனுக்காக வெளிநாட்டுப் பணப்பரிமாற்றத்தைப் பயன்படுத்துதல்:**
வெளிநாட்டு பணப்பரிமாற்றங்கள் புதுப்பிக்கத்தக்க சக்தி, அனர்த்தங்களுக்குத் தயாராதல் மற்றும் நிலையான வாழ்வாதாரங்கள் ஆகியவற்றில் நீண்டகால முதலீடுகளுக்கு வழிப்படுத்தப்படுவதை ஊக்குவிக்க உதாரணமாக தொலைக்காட்சி அல்லது வானொலி நிகழ்ச்சிகள் மூலமாக விழிப்புணர்வுத் திட்டங்களை வழங்குதல். ஓரங்கட்டப்பட்ட குழுக்கள் பாதுகாப்பான மற்றும் கண்ணியமான புலம்பெயர்வு வாய்ப்புகளிலிருந்து பயனடைவதை உறுதிசெய்வதற்கு புலம்பெயர்வு கொள்கைகளில் உள்ள சமத்துவமின்மைகளை நிவர்த்தி செய்தல்.

### மனித–வனவிலங்கு மோதல்கள் மற்றும் மனித பாதுகாப்பு

- **சமுதாயத்தினால் வழிநடாத்தப்படும் தீர்வுகள்:**
மயில்கள், குரங்குகள், காட்டுப் பன்றிகள் மற்றும் யானைகள் ஆகியவற்றால் ஏற்படும் அதிகரித்த வனவிலங்கு குறுக்கீடுகளை நிவர்த்தி செய்வதற்கு உள்ளூர் தீர்வுகளுக்கு ஆதரவளித்தல். உதாரணமாக, பனை அல்லது சிட்ரஸ் மரங்களை நடுவதன் மூலம் யானைகளை விரட்டுவதுடன், பழ விற்பனை மூலம் மாற்று வருமான வழிகளையும் பெற முடியும்.

- **உயிர்பல்வகைமை பாதுகாப்புக்கான ஆளுகையை வலுப்படுத்துதல்:**
மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் உள்ள அரசாங்க அமைப்புகளுக்கு இடையே தெளிவான பொறுப்புகள், போதுமான நிதி மற்றும் வினைத்திறனான முகாமைத்துவம் ஆகியவற்றை உறுதி செய்தல். உலர்ந்த விறகுகளை சேகரிப்பதற்கு அபராதம் விதிப்பதற்கும், வணிக ரீதியான மரம் வெட்டுகைக்கு தண்டனையின்மைக்கும் இடையே உள்ள சமத்துவமின்மைகளைஇ வெளிப்படையான நிர்வாகத்தில் சமூகங்கள் மற்றும் உள்ளூர் அதிகாரிகளை ஈடுபடுத்துவதன் மூலமும் நிலையான நடைமுறைகளை ஊக்குவிப்பதன் மூலமும் நிவர்த்தி செய்தல். உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு இலக்குகளையும் அவசர மனித தேவைகளையும் சமநிலைப்படுத்துவதுடன், தீர்மானமெடுத்தலில் உயிர்ப்பல்வகைமை பாதுகாப்பு, காடுகள் மற்றும் மக்கள் ஆகியவற்றுக்கு இடையிலான சமநிலையை புரிந்துகொள்ளுதல்.

- **தணிப்பு உட்கட்டமைப்பில் முதலீடு செய்தல்:**
யானை மின்சார வேலி அனுமதி தொடர்பிலான தீர்மானங்கள், வனவிலங்கு வழித்தடங்களைப் பேணுவதுடன், மிகவும் ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாப்பதையும் கருத்தில் கொள்வதை உறுதி செய்தல். வனவிலங்குகளால் ஏற்படும் சேதத்திற்கான இழப்பீட்டுத் திட்டங்கள் பெண் விவசாயிகள் போன்ற ஓரங்கட்டப்பட்ட குழுக்களுக்கு அனைத்து மொழிகளிலும் இலகுவில் அணுகக்கூடியதாக இருப்பதை உறுதி செய்தல்.

- **உயிர்ப்பல்வகைமை பாதுகாப்புக்கு உகந்த காணிப் பயன்பாடு:**
காடு சார்ந்த விவசாயம் மற்றும் உள்ளூர் இனங்களுடன் கலப்புப் பயிர்ச்செய்கை ஆகியவற்றை ஊக்குவித்தல், அத்துடன் இயற்கைப்பாதுகாப்பு மற்றும் வாழ்வாதாரங்களுக்கு இடையே சமநிலையைப் பேணுவதற்காக பாதுகாக்கப்பட்ட பகுதிகளுக்கு அருகில் தாக்க குறைப்பு வலயங்களை உருவாக்குவதற்கு ஊக்குவிப்புகளை வழங்குதல்.

### அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பொறுப்பான அபிவிருத்தி

- **சமத்துவமான உட்கட்டமைப்பு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி:**
திட்டமிடப்பட்ட உட்கட்டமைப்புத் திட்டங்கள் காலநிலை பாதுகாப்பு அபாயங்களுக்கு தகவலறிந்ததாகவும், பிராந்தியங்கள் முழுவதும் சமமாகப் பங்கீடு செய்யப்படுவதாகவும் இருப்பதை உறுதி செய்தல். உதாரணமாக, பாசிக்குடா பாலம் போன்ற செயற்திட்டங்களுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் வர்த்தகம், சுற்றுலா மற்றும் வாழ்வாதாரங்களை மேம்படுத்துவதுடன், பசுமை இல்ல பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தையும் குறைக்கலாம்.

- **பசுமைத் தொழிற்துறை நடைமுறைகள்:**
கைத்தொழில் பூங்காக்கள் சூழலுக்கு உகந்த எண்ணக்கருக்களை ஏற்றுக்கொள்வதையும், உள்ளூர் சமுதாயங்களுக்கு பயனளிக்கும் வகையில் சமூகப் பாதுகாப்புகளை உள்ளடக்குவதையும் ஊக்குவித்தல். ஆடைகள் மற்றும் சாயத் தொழிற்சாலைகளிலிருந்து ஏற்படும் நீர் மாசுபாடு போன்ற சுற்றுச்சூழல் கரிசனங்களை நிவர்த்தி செய்ய பொறுப்புக்கூறல் பொறிமுறைகளை வலுப்படுத்துவதுடன், பாதிக்கப்பட்ட சமுதாயங்களுடன் நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

- **அனைவரையும் உள்ளடக்கிய சுற்றுலாத்துறையை ஊக்குவித்தல்:**
அனைத்து இன மற்றும் மதக் குழுக்களின் கலாச்சார பாரம்பரியத்தை முன்னிலைப்படுத்தும் சமுதாய அடிப்படையிலான சுற்றுலா முயற்சிகளை உருவாக்குதல். இது நல்லிணக்கத்தை வளர்ப்பதோடு, ஓரங்கட்டப்பட்ட சமுதாயங்களுக்கு, குறிப்பாக பெண்களுக்கு பொருளாதார வாய்ப்புகளையும் வழங்கும்.

### காலநிலை மற்றும் சுகாதார சேவைகளில் சமத்துவம்

- **பாலின உணர்திறன் கொண்ட சுகாதார முயற்சிகள்:**
  கலாசாரத்திற்கு உணர்திறனான, மொழிக்கு பொருத்தமான மற்றும் பால்நிலைக்கு பதிலளிக்கும் பராமரிப்பை குறிப்பாக பால்நிலை அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் இளம் பெண்பிள்ளைகளுக்கு, போதைப்பொருள் பாவனைக்குள்ளான இளைஞர்களுக்கு மற்றும் மனச்சோர்வு போன்ற உளவியல் நோய்களை எதிர்கொள்ளும் ஆண்களுக்கு வழங்குவதற்கு சுகாதாரப் பணியாளர்களுக்கு வளமளித்தல்.

- **அனைவரையும் உள்ளடக்கிய அனர்த்த தயார்படுத்தல்:**
  வயோதிபர்களுக்கும், இயலாமையுடையவர்களுக்கும் நடமாடும் உதவிகள் மற்றும் மருத்துவ உதவிகளுடன் கூடிய பாதுகாப்பு முகாம்களை வடிவமைத்தல். அனர்த்தங்களின் போது பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளின் மாதவிடாய்கால சுகாதாரம் மற்றும் பிரத்தியேகமான சுகாதார வசதிகள் போன்ற விசேட தேவைகளை பாதுகாப்பு முகாம்களில் நிவர்த்தி செய்தல். அனர்த்த நிவாரண முயற்சிகளில் இராணுவத்தின் வகிபங்கு தொடர்பாக வடக்கு மற்றும் கிழக்கில் வரலாற்று ரீதியாக துன்புறுத்தப்பட்ட குழுக்களிடையே உள்ள நம்பிக்கையின்மைகளை நிவர்த்தி செய்தல்.

- **சுகாதாரம் மற்றும் போசாக்கு:**
  வெப்ப அழுத்தம், நீரினால் பரவும் நோய்கள் மற்றும் சிறுநீரக நோய்கள் போன்ற காலநிலை தொடர்பான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு கிராமப்புறங்களில் நடமாடும் சுகாதார நிலையங்களை நிறுவுதல். தேயிலைத் தோட்ட சமுதாயங்கள் உட்பட வறட்சி அல்லது உணவு பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களுக்கான போசாக்கு ஆதரவிற்கு முன்னுரிமை அளித்தல்.

- **காலநிலை சார்ந்து உருவாகும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல்:**
  மண் pH அளவுகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பதுளை போன்ற பிரதேசங்களில் சிறுநீரகம் தொடர்பான சுகாதாரப் பிரச்சினைகளுக்கு பங்களிக்கும் பயிர்களால் பார உலோகங்கள் உறிஞ்சப்படுதல் போன்ற காரணங்களால் ஏற்படும் சுகாதார அபாயங்களைக் கையாளுதல். அமிலத்தன்மை வாய்ந்த மண்ணை நடுநிலையாக்கவும், மண்ணின் சேதன காபனை அதிகரிக்கவும், விவசாய உற்பத்தியை மேம்படுத்தவும் நிலைபேண்தகு தீர்வாக 'ஏவப்பட்ட காபன்' (Biochar) பயன்பாட்டை ஊக்குவித்தல். காபன் சந்தைகளை அணுகுவதற்கும், காபனீரொக்சைட் அகற்றல் (CDR) நிதியளிப்பைப் பெறுவதற்கும், பாதிக்கப்பட்ட சமுதாயங்களுக்கு சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார நன்மைகளை உருவாக்குவதற்கும் 'ஏவப்பட்ட காபன்' (Biochar) முன்முயற்சிகளை மேம்படுத்துதல்.

### கல்வியில் காலநிலை தொடர்பான பாதுகாப்பு சவால்கள்

- **பாடசாலை உட்கட்டமைப்பு தாங்குதிறனை மேம்படுத்துதல்:**
  வெள்ளம் மற்றும் வறட்சி அபாயம் உள்ள பகுதிகளில் உள்ள பாடசாலைகளை, தளம் உயர்த்தப்பட்ட வகுப்பறைகள், மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் சூரிய சக்தியில் இயங்கும் மின்சார வசதிகள் போன்ற காலநிலைக்கு மீண்டெழுதிறனுடைய உட்கட்டமைப்புடன் மேம்படுத்துதல். கற்றல் இடையூறுகளைக் குறைப்பதற்கும் சமூக ஒப்பந்தத்தை உருவாக்குவதற்குமென மட்டக்களப்பு மற்றும் முல்லைத்தீவு போன்ற குறைந்த முதலீடுகளைக் கொண்ட கிராமிய பாடசாலைகளுக்கு இந்த மேம்பாடுகள் முன்னுரிமை அளிப்பதை உறுதி செய்தல்.

- **கல்விக்கான நிதி உதவியை விரிவுபடுத்துதல்:**
  கல்வியில் உள்ள நிதியியல் தடைகளைக் குறைப்பதற்காக வறிய மற்றும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு இலக்கு வைக்கப்பட்ட புலமைப்பரிசில்கள், போக்குவரத்து மானியங்கள் மற்றும் இலவச பாடசாலை உணவுகளை வழங்குதல். இந்த ஆதரவானது பொருளாதார நெருக்கடிகள் அல்லது பராமரிப்புப் பொறுப்புகள் காரணமாக கல்வியை இடைநிறுத்தும் வாய்ப்புகள் அதிகம் உள்ள பெண்பிள்ளைகளை முன்னுரிமைப்படுத்த வேண்டும்.

- **நெகிழ்வான கற்றல் தெரிவுகளை அறிமுகப்படுத்துதல்:**
  பருவகால விவசாய வேலைகளில் ஈடுபடும் பிள்ளைகளுக்கு இடமளிக்கும் வகையில் நெகிழ்வான பாடசாலை அட்டவணைகள் மற்றும் நடமாடும் கற்றல் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல். இந்த முன்முயற்சிகளில் வேலைக்காக பாடசாலைகளில் இருந்து விலகிச் செல்லும் ஆண்பிள்ளைகளுக்கும், காலநிலை நெருக்கடியின் போது மேலதிக வீட்டுப் பொறுப்புகளை எதிர்கொள்ளும் பெண்பிள்ளைகளுக்கும் ஏற்றவாறான ஆதரவுகள் உள்வாங்கப்படுதல் வேண்டும்.

- **தொழில் மற்றும் திறன் பயிற்சியை வலுப்படுத்துதல்:**
  புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, நிலைபேண்தகு விவசாயம் மற்றும் அனர்த்த முகாமைத்துவம் போன்ற காலநிலைக்கு மீண்டெழுதிறனுடைய வாழ்வாதாரங்களில் தொழில் பயிற்சி திட்டங்களை விருத்தி செய்தல். இந்த முன்முயற்சிகள் பதுளை மற்றும் அம்பாந்தோட்டை போன்ற பிராந்தியங்களில் உள்ள இளைஞர்களை இலக்காகக் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இவை கல்வியானது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார வாய்ப்புகளை மட்டுமே வழங்குகிறது என்ற எண்ணத்தை நிவர்த்தி செய்வதற்கு சிறுவர் மற்றும் பெண்பிள்ளைகளை சென்றடையக்கூடிய அறிவூட்டும் பயிற்சிகளை உள்ளடக்க வேண்டும்.

**புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் பசுமை முயற்சிகள்**

- **சமுதாய அடிப்படையிலான பசுமை முயற்சிகள்:**
பல இன மற்றும் பல மத சமுதாயங்களின் பங்களிப்புடன் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் கழிவு முகாமைத்துவ திட்டங்களை ஊக்குவித்தல். உதாரணமாக, உள்ளூர் கூட்டுறவு சங்கங்களால் நிர்வகிக்கப்படும் கழிவில் இருந்து சக்தி உற்பத்தி செய்யும் நிலையங்களை நிறுவுதல் மூலமாக் பசுமை இல்ல வாயுக்களின் வெளியேற்றத்தைக் குறைத்தல் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளையும் வழங்குதல்.

- **நலிவடைந்த குழுக்களை இலக்கு வைத்தல்:**
குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள், குறிப்பாக பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மற்றும் இயலாமையுடையவர்களைக் கொண்ட குடும்பங்களுக்குப் பயனளிக்கும் வகையில், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களுக்கு மானியங்கள் அல்லது குறைந்த வட்டி கடன்களை வழங்குதல்.

- **புதுப்பிக்கத்தக்க சக்தி தொடர்பான அச்சம் மற்றும் அவநம்பிக்கையை நிவர்த்தி செய்தல்:**
புதுப்பிக்கத்தக்க சக்தி பற்றிய பொதுமக்களின் புரிதலையும் ஆதரவையும் சமூக விழிப்புணர்வு பிரச்சாரங்கள், உண்மையான சமுதாய ஆலோசனைகள் மூலம் உருவாக்குவதுடன் அதானி காற்றாலைகள் போன்ற பெரிய அளவிலான செயற்திட்டங்களால் சமுதாயங்கள் நேரடியாகப் பயனடைவதை உறுதி செய்தல்.

- **உள்ளூர் நிறுவனங்களை வலுப்படுத்துதல்:**
சூழலுக்குப் பொருத்தமான, சமத்துவமான மற்றும் சமாதானத்திற்கு சாதகமான காலநிலை நடவடிக்கைகளை வடிவமைக்கவும், அமுல்படுத்தவும் மாகாண மற்றும் உள்ளூர் அரச அதிகாரிகளின் இயலளவை கட்டியெழுப்புதல். பாதிக்கப்படக்கூடிய மாகாணங்களில் உள்ள சமுதாய தலைவர்கள் மற்றும் சமூகத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிவில் சமூக அமைப்புகள் அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு அரசாங்கத்திற்கும் உள்ளூர் மக்களுக்கும் இடையில் மத்தியஸ்தர்களாகச் செயற்பட பயிற்சி அளித்தல்.

## 8.2 மாவட்ட ரீதியான பரிந்துரைகள்: [2]

**மீண்டெழுதிறனை மேம்படுத்துவதற்கான வாய்ப்புகள் : பதுளை மாவட்டத்திற்கான மாவட்ட ரீதியான பரிந்துரைகள்**

**1. விவசாய பாதுகாப்பை வலுப்படுத்துதல்:**
- சீரற்ற மழை மற்றும் மண் சிதைவின் தாக்கங்களைக் குறைக்க, வறட்சியைத் தாங்கும் பயிர்கள் மற்றும் மூடுபயிர்வளர்ப்பு, காடு வளர்ப்பு போன்ற நிலைபேண்தகு விவசாய நடைமுறைகளை ஊக்குவித்தல்.
- குறிப்பாக சிறுபோக விவசாயிகளுக்காக, மழையை நம்பியிருக்கும் விவசாய முறைகளைக் குறைப்பதற்கு சமுதாயத்தால் செயற்படுத்தப்படும் நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு முறைமைகளை நிறுவுதல்.
- உள்ளடங்கலான பங்கேற்பை உறுதி செய்வதற்கு பெண்கள், இளைஞர்கள் மற்றும் பின்தங்கிய குழுக்களுக்கான காலநிலைக்குத் திறனான விவசாயப் பயிற்சிக்கான அணுகலை விரிவுபடுத்துதல்.

**2. கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துதல்:**
- தோட்டப்புறச் சமுதாயங்களில் கழிவு சேர்தலை குறைப்பதற்கு உரம் தயாரித்தல் மற்றும் மீள்சுழற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட சமூக அடிப்படையிலான திண்மக்கழிவு முகாமைத்துவ அமைப்புகளை உருவாக்குதல்.
- சுற்றுச்சூழல் மாசுபாட்டைக் குறைத்து, தூய சக்தியை உருவாக்கும் 'கழிவில் இருந்து சக்தி' உற்பத்தி செய்யும் முன்முயற்சிகளுக்கு மானியங்கள் அல்லது சலுகைகளை வழங்குதல்.

**3. வனவாழ்வு முரண்பாடுகளை நிவர்த்தி செய்தல்:**
- அனுமதிகள் மற்றும் வளங்களுக்கான சமத்துவமான அணுகலை உறுதி செய்வதற்கு வெளிப்படையான ஆளுகையுடன் யானை வேலிகள் போன்ற சமுதாயத்தால் நிர்வகிக்கப்படும் வனவிலங்கு தடுப்பு அமைப்புகளைச் செயற்படுத்துதல்.
- வனவிலங்குகளால் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டு திட்டங்கள் மற்றும் மாற்று வாழ்வாதார வாய்ப்புகளை வழங்குதல்.

2 இந்த மாவட்ட அளவிலான பரிந்துரைகள், அத்தியாயம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர்மயமாக்கப்பட்ட பரிந்துரைகளில் இருந்து பெறப்பட்டவை.

**4. இளைஞர்களின் ஈடுபாடும் வாழ்வாதாரமும்:**

- புலம்பெயர்வுகளைக் குறைத்து, உள்ளூர் பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதற்கு, விவசாயம் அல்லாத துறைகளில் (உதாரணமாக, சூழல் சுற்றுலா, புதுப்பிக்கத்தக்க சக்தி) பால்நிலை உணர்திறன் கொண்ட இளையவர்களுக்கான தொழில்முனைவோர் நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவித்தல்.
- சூரியப்படல் பொருத்துதல் அல்லது இயற்கை விவசாயம் போன்ற நிலைபேண்தகு தொழில்களில் இளைய ஆண்களுக்கும் பெண்களுக்கும் கலாசார உணர்திறன் கொண்ட தொழிற் பயிற்சியை அறிமுகப்படுத்துதல்.

**5. பெண்கள் மற்றும் நலிவடைந்த குழுக்களை வலுவூட்டுதல்:**

- பெண்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காக நிதிசார் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டங்கள், நியாயமான நுண்கடன் திட்டங்கள் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சிகளை வழங்குதல்.
- நிதியியல் ஸ்திரத்தன்மையை மேம்படுத்தவும் காலநிலை அபாயங்களைக் குறைக்கவும், பூக்கள் அல்லது காளான் போன்ற அதிக பெறுமதியுடைய பயிர்களை வளர்ப்பதற்கு ஆதரவளித்தல்.
- பெண்களின் தேவைகள் நிவர்த்தி செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு தீர்மானமெடுக்கும் இடங்களில் பெண்களின் பங்கேற்பை ஊக்குவித்தல்.

**6. பாரம்பரிய மற்றும் நவீன விவசாய நடைமுறைகளை ஒன்றிணைத்தல்.**

- செலவு குறைவான பசுமை இல்லங்கள், நீர்ப்பாசன அமைப்புகள் மற்றும் குளிரூட்டும் களஞ்சியங்களுக்கான அணுகலை மேம்படுத்துவதன் மூலம் மூடுபயிர், பொலித்தீன் கூடார விவசாயம் மற்றும் வறட்சியைத் தாங்கும் பயிர்கள் போன்ற நவீன விவசாய நடைமுறைகளை அதிகரித்தல்.
- விவசாய மீண்டெழுதிறனை மேம்படுத்த பாரம்பரிய அறிவை நவீன நுட்பங்களுடன் ஒருங்கிணைத்தல்.
- பால்நிலை அல்லது சமூக-பொருளாதார நிலை ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல், விவசாய வளங்களுக்கான சமமான அணுகலை உறுதி செய்தல்.

7. சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துதல்:

- பல்வேறு இன மற்றும் மத குழுக்களிடையே நம்பிக்கையை வளர்ப்பதற்கு, நீர் பகிர்வு முயற்சிகள் போன்ற சமுதாயங்களுக்கு இடையிலான உரையாடல்கள் மற்றும் கூட்டு செயற்திட்டங்களுக்கு வசதி செய்தல்.
- சமூக பிணைப்புகளை வலுப்படுத்தவும், பணம் செலுத்தி வேலைக்கு ஆட்களை அமர்த்துவதைக் குறைக்கவும், “அத்தம்” போன்ற பாரம்பரிய பரஸ்பர உழைப்பு பரிமாற்ற நடைமுறைகளை புதுப்பித்தல்.
- பெருந்தோட்டத் தொழிலாளர்களை பரந்த சமூகத்துடன் ஒருங்கிணைப்பதற்கும் அத்தியாவசிய சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும், பிறப்புச் சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களைப் பெறுவதல் மற்றும் களங்கங்களை நிவர்த்தி செய்தல் போன்றவற்றுக்கான அணுகலை மேம்படுத்துதல்.

**8. சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துதல்:**

- உள்ளூர் நிலைமைகளுக்கு ஏற்ப விவசாய ஆதரவை வழங்குவதன் மூலமும், வெளிப்படையான வள விநியோகத்தை உறுதி செய்வதன் மூலமும், அரசாங்க வள ஒதுக்கீட்டில் உள்ள சமத்துவமற்ற தன்மையை நிவர்த்தி செய்தல்.
- சுகாதார பாதுகாப்பு மற்றும் குழந்தை பராமரிப்பு போன்ற பெண்களின் குறிப்பிட்ட தேவைகளை நிவர்த்தி செய்யும் பால்நிலை உணர்திறன் கொண்ட பொது சேவைகளை வழங்குதல்.
- நடமாடும் மருத்துவ நிலையங்கள் மூலம் தேயிலைத் தோட்டங்களில் சுகாதாரப் பராமரிப்புக்கான அணுகலை மேம்படுத்துவதுடன், தமிழ் பேசும் மக்களுக்கான குறிப்பாக அதிகளவான சுகாதார அபாயங்களை எதிர்கொள்ளும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கான மொழித் தடைகளை நிவர்த்தி செய்தல்.

**9. உள ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வை ஊக்குவித்தல்:**

- பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் மத்தியில் உள-சமூக அழுத்தங்களை நிவர்த்தி செய்வதற்கு சமுதாய அடிப்படையிலான உளநல ஆதரவு அமைப்புகளை நிறுவுவதுடன் பால்நிலை உணர்திறன் கொண்ட உளநல ஆலோசனைகளை வழங்குதல்.
- உளநல சுமைகளைக் குறைக்கவும் சமூக நல்லிணக்கத்தை ஊக்குவிக்கவும் உரையாடலுக்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்குதல்.
- உளநலப் பிரச்சினைகள் பற்றிய களங்கத்தை நீக்குவதுடன் சமுதாய மீண்டெழுதிறனை மேம்படுத்துவதற்காக உளநல ஆதரவை சுகாதார சேவைகளில் ஒருங்கிணைத்தல்.
- லயன் குடியிருப்பில் பல குடும்பங்கள் வசிக்கும் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் தனிமைப்படுத்தலை நிவர்த்தி செய்து, பௌதீக மற்றும் சமூக புறக்கணிப்பு மூலம் மோசமடையும் உளநல சுமைகளைக் குறைப்பதற்கு சமூக ஆதரவு அமைப்புகளை மேம்படுத்துதல்.

## மீண்டெழுதிறனுக்கான வாய்ப்புகள்: மட்டக்களப்புக்கான மாவட்டரீதியான பரிந்துரைகள்

1. சமுதாயத்தால் வழிநடாத்தப்படும் வறட்சி இசைவாக்கம்:
   - நீர்ப்பாசன குளங்களை புனரமைத்தல் மற்றும் உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப வறட்சியைத் தாங்கும் பயிர் திட்டங்கள் உட்பட ஏற்கனவே உள்ள சமுதாய மட்டத்திலான நீர் முகாமைத்துவ திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றை செயற்படுத்த ஆதரவளித்தல்.
   - மாறிவரும் மழைவீழ்ச்சியின் போக்குகளுக்கு ஏற்ப, இசைவாக்கமுடைய பயிரிடல் நாட்காட்டிகள் குறித்து உள்ளூர் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தல்.

2. கழிவு முகாமைத்துவத்தை நிவர்த்தி செய்தல்:
   - குறிப்பாக கடற்கரையோரப் பகுதிகளில் திண்மக்கழிவுகளை வினைத்திறனாக நிர்வகிப்பதற்கு சமுதாயத்தால் முன்னெடுக்கப்படும் கழிவு சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி நிலையங்களை நிறுவுதல்.
   - சுற்றுச்சூழல் சீர்கெடுவதனைத் தடுக்க, கழிவுகளைப் தரம்பிரிப்பது குறித்து சமுதாயங்களுக்குக் அறிவூட்டுவதுடன் மக்கும் சேதன கழிவுகளுக்கான உட்கட்டமைப்பை வழங்குதல்.

3. இளைஞர்கள் மற்றும் வாழ்வாதாரங்கள்:
   - காலநிலைக்கு தாங்குதிறன் கொண்ட விவசாயம் மற்றும் மீன்வளர்ப்பில் ஈடுபடுவதை ஊக்குவிக்க, இளைஞர்களை மையமாகக் கொண்ட விவசாய (புத்தாக்க கண்டுபிடிப்பு) மையங்களை அறிமுகப்படுத்துதல்.
   - சூழல்சார் சுற்றுலா மற்றும் நிலையான கைவினைப் பொருட்கள் தொடர்பில் இளைய தொழில்முனைவோருக்கான சிறு மானியங்களை வழங்குதல்.

4. ஆளுகை மற்றும் சமத்துவம்:
   - காலநிலை இசைவாக்கல் திட்டமிடலில் தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்கள் உட்பட ஓரங்கட்டப்பட்ட குழுக்களினதும் குரல் இருப்பதை உறுதி செய்வதற்காக பங்கேற்பு ஆளுகை பொறிமுறைகளை மேம்படுத்துதல்.

5. வாழ்வாதாரங்கள் மூலம் பெண்களுக்கு வலுவூட்டுதல் மற்றும் போக்குவரத்து அணுகலை மேம்படுத்துதல்:
   - தேங்காய் சார்ந்த பொருட்கள் தயாரிப்பு போன்ற இலாபகரமான வணிகங்களை நிறுவுவதற்கு பெண்களுக்கு மானியங்கள் மற்றும் தொழில்நுட்பப் பயிற்சிகளை வழங்குதல்.
   - வெளிப்புறச் சந்தைகளில் தங்கியிருப்பதைக் குறைக்கவும், குடும்ப வருமானத்தை அதிகரிக்கவும், பயிர்கள் மற்றும் பால் பொருட்களில் பெறுமதி சேர்த்தலுக்கான உள்ளூர் மயமாக்கப்பட்ட பதப்படுத்தும் நிலையங்களை நிறுவுதல்.
   - பெண்கள் பொருளாதார நடவடிக்கைகளில் முழுமையாகப் பங்கேற்க உதவும் பாதுகாப்பான மற்றும் நம்பகரமான போக்குவரத்து தெரிவுகளில் முதலீடு செய்தல். உதாரணமாக பெண்கள் நீண்ட தூரம் பயணிப்பதில் பாதுகாப்பு அபாயங்களை எதிர்கொள்ளும் பகுதிகளில் ஆடைத் தொழிற்சாலைகள் அல்லது சந்தைகளுக்கு பயணிப்பதற்கு மானியத்துடன் கூடிய போக்குவரத்து சேவைகளை வழங்குதல்.

6. ஆளுகையை வலுப்படுத்துதல் மற்றும் விவசாயக் கொள்கைகளை வழவமைத்தல்:
   - பயிர்நாட்காட்டிகள் மற்றும் உர விநியோகம் குறித்த தீர்மானங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் விவசாயிகளின் கருத்துக்கள் உள்ளடக்கப்படுவதன் மூலமாக அவை உள்ளூர் காலநிலை நிலைமைகளுடன் இணங்கிய வகையில் இருப்பதை உறுதி செய்ய மட்டக்களப்பில் ஒரு நெல் சங்க அலுவலகத்தை நிறுவுதல்.
   - வெள்ளத் தணிப்பு மற்றும் கைவிடப்பட்ட குளம் புனரமைத்தல் ஆகியவற்றில் ஏற்கனவேயுள்ள செயற்படுத்தலில் பின்தங்கியுள்ள திட்டங்களின் அடிப்படையில், கிழக்கில் விவசாயிகளுக்கான நீர் வள முகாமைத்துவத்தை மேம்படுத்த, மழைநீர் குளங்கள் மற்றும் நீர்ப்பாசன உட்கட்டமைப்பை புனரமைப்பதில் முதலீடு செய்தல்.
   - மாகாணத்தின் குறிப்பான காலநிலை மற்றும் விவசாய நுட்பங்களுக்கு ஏற்ற, காலநிலைக்கு மீண்டெழுதிறன் கொண்ட விவசாயம் மற்றும் அனர்த்த அபாய குறைப்பு (DRR) ஆகியவற்றில் அவதானம் செலுத்தி, ஆண் மற்றும் பெண் விவசாயிகளுக்கான இயலளவை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
   - உள்ளூர் தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் இணங்கியவாறு கொள்கைகளை சீரமைப்பதன் மூலம் விவசாய அபிவிருத்தியிலுள்ள பிராந்திய ஏற்றத்தாழ்வுகளைச் நிவர்த்தி செய்தல்.
   - உள்ளூர் நிர்வாகத்தின் செயற்திறனுக்காக தொடர்புடைய தரப்பினரான மாநகர சபைகள், பிரதேச சபைகள், பொது சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் விவசாய மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களங்கள் போன்றவை ஆலோசனைகளில் முனைப்பாக ஈடுபடுவதை உறுதிசெய்வதுடன் நிறுவனங்களுக்கிடையேயான ஒருங்கிணைப்பை வலுப்படுத்துதல்.

7. சமூகப் பிரச்சினைகளை நிவர்த்தி செய்தல் மற்றும் கல்வி அணுகலை விரிவுபடுத்துதல்:
   - நிறுவனங்களால் ஆதரிக்கப்படுகிற சமுதாயத்தால் முன்னெடுக்கப்படும் அணுகுமுறைகள் மூலம் போதைப்பொருள் பாவனை மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறையைக எதிர்கொள்ளுதல்.
   - பெண்கள் மற்றும் பெண்பிள்ளைகளுக்கு பாதுகாப்பான இடங்களை நிறுவுவதுடன் நலிவுறும் தன்மையைக் குறைப்பதற்கும் சமூக நல்லிணக்கத்தை வளர்ப்பதற்கும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடாத்துதல்.

- பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்க, ஆடை உற்பத்தி அல்லது சுற்றுச்சூழல் சார் சுற்றுலா போன்ற உள்ளூர் தொழில்களுக்கு ஏற்றவாறு தொழிற்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- கல்வி விளைவுகளை மேம்படுத்தவும், பாடசாலை இடைவிலகல் விகிதங்களைக் குறைக்கவும், பெண்கள், சிறுவர்கள் மற்றும் பால்நிலை வேறுபாடுள்ள பிள்ளைகள் உட்பட கிராமப்புற இளைஞர்களுக்கு இலக்கு வைக்கப்பட்ட உதவித்தொகை மற்றும் போக்குவரத்துக்கான ஆதரவை வழங்குதல்.
- கல்வி மற்றும் திறன் விருத்தி முயற்சிகள் மூலம் வறுமை மற்றும் காலநிலை சவால்களுக்கு எதிராக நீண்டகால மீண்டெழுதன்மையை உருவாக்குதல்.



### மீண்டெழுதிறனுக்கான வாய்ப்புகள்: அம்பாந்தோட்டைக்கான மாவட்டரீதியான பரிந்துரைகள்

**1. கடலோர வாழ்வாதாரங்களைப் பாதுகாத்தல்:**

- அதிகப்படியான மீன்பிடியை மற்றும் பவளப்பாறைகளுக்கு ஏற்படும் சேதத்தைக் குறைப்பதற்கு செலவு குறைவான சுற்றுச்சூழலுக்கு உகந்த மீன்பிடி உபகரணங்கள் மற்றும் பருவகால நடைமுறைகளில் பயிற்சி அளிப்பதன் மூலம் நிலைபேண்தகு மீன்பிடி நடவடிக்கைகளை ஆதரித்தல்.
- மிளகு மற்றும் மஞ்சள் போன்ற வறட்சியைத் தாங்கும் பயிர்கள், நீர்வள வளர்ப்பு (நீர் உயிரின வளர்ப்பு), கடற்பாசி வளர்ப்பு அல்லது கடற்கரையோர சுற்றுலா போன்ற மாற்று வாழ்வாதாரங்களை இன-மத, பால்நிலை மற்றும் வயது குழுக்களிடையே சமமாக ஊக்குவித்து, மீன்பிடி சமுதாயங்களுக்கான வருமான ஆதாரங்களை பல்வகைப்படுத்துதல்.
- உள்நாட்டு விவசாயத்திற்கான மானியங்கள் மற்றும் சிறந்த நீர்ப்பாசன ஆதரவை வழங்குவதன் மூலம், குறைந்து வரும் மீன் இருப்புக்களில் தங்கியிருப்பதைக் குறைத்தல்.
- மீன் இனவிருத்தி தளங்களை புதுப்பிக்கவும், நீண்டகால கிடைக்கும் தன்மையை மேம்படுத்தவும் பவளப்பாறை மறுசீரமைப்பு செயற்திட்டங்களை ஆதரித்தல்.

**2. வறட்சியின் தாக்கங்களை தணித்தல்:**

- வறட்சி பாதிப்புக்குள்ளான பகுதிகளில் நீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு, கடல்நீரை குடிநீராக்கும் ஆலைகள் மற்றும் மழைநீர் சேகரிப்பு உட்பட, சமுதாய அடிப்படையிலான நீர் பாதுகாப்புத் திட்டங்களை விரிவுபடுத்துதல்.
- வறட்சி குறித்த ஆரம்ப எச்சரிக்கை அமைப்புகளை நிறுவுவதுடன் வறட்சியின் விளைவுகளை தணிப்பதற்கும் அவற்றுக்கு தயார்படுத்துவற்கும் சமுதாயங்களுக்குப் பயிற்சி அளித்தல்.

**3. கழிவு முகாமைத்துவம் மற்றும் கடலோரப் பாதுகாப்பு:**

- பிளாஸ்டிக் மற்றும் கடல் கழிவுகளை கையாளவும், மீன்பிடி மற்றும் சுற்றுலாவைப் பாதுகாக்கவும் கடற்கரையோரக் கழிவு முகாமைத்துவ அமைப்புகளை உருவாக்குதல்
- கடல் மட்ட உயர்வு மற்றும் புயல் அலைகளுக்கு எதிராக இயற்கை கடலோரப் பாதுகாப்புகளை மேம்படுத்த கண்டல் தாவர காடுகள் மறுசீரமைப்பு செயற்திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

**4. பால்நிலை உள்ளடங்கலான மீண்டெழுதிறனை கட்டியெழுப்புதல்:**

- பெண்களுக்கு அவர்களின் பொருளாதார மீண்டெழுதிறனை மேம்படுத்துவதற்காக மீன் உலர்த்துதல் போன்ற அறுவடைக்குப் பிந்தைய நடவடிக்கைகளில் பதப்படுத்துவதற்கான உபகரணங்களுக்கான அணுகல் போன்ற இலக்கு வைக்கப்பட்ட ஆதரவை வழங்குதல்.
- நுண்நிதி நிகழ்ச்சித் திட்டங்களை நிர்வகிக்கவும், அதிக வட்டிக்கு கடன் வழங்கும் நடைமுறைகளை சார்ந்திருப்பதைக் குறைக்கவும் மகளிர் கூட்டுறவு அமைப்புக்களை நிறுவுதல்.

**5. பெண்களை வலுவூட்டுதல் மற்றும் வாழ்வாதாரங்களை வலுப்படுத்துதல்:**

- இனிப்பு பொருள் தயாரித்தல் அல்லது சூரிய ஒளியில் உலர்த்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறி உற்பத்தி போன்ற சிறிய அளவிலான, காலநிலைக்கு தாங்குதிறனுடைய நிறுவனங்களில் பெண்களுக்கு ஆதரவளிக்கும் வகையில், நிதியியல் அறிவூட்டும் திட்டங்கள், குறைந்த வட்டியில் நுண்கடன் மற்றும் தொழில்முனைவோர் பயிற்சி ஆகியவற்றை விரிவுபடுத்துதல்.

6. மனித–விலங்கு முரண்பாட்டை நிவர்த்தி செய்தல்:
- மின்சார வேலிகளை அமைப்பதற்கான அனுமதியை தளர்த்துதல், யானைகள் மற்றும் பிற வனவிலங்குகளுடனான மோதல்களைக் குறைக்க காணி பயன்பாட்டுத் திட்டமிடலை மேம்படுத்துதல், மற்றும் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் நிதிசார் அழுத்தத்தைத் தணிக்க பயிர் சேதத்திற்கான இழப்பீட்டுத் திட்டங்களில் அணுகல் மற்றும் வெளிப்படைத்தன்மையை வலுப்படுத்துதல்.
- மனித மற்றும் விலங்கு இருப்புக்களுக்கான இடையூறுகளைக் குறைக்க, வனவிலங்கு வாழ்விடங்களுக்கு அருகிலுள்ள அபிவிருத்தி திட்டங்களில் சமுதாய கலந்தாலோசனைகள் மற்றும் மோதலுக்கு உணர்திறனான திட்டமிடலை உறுதி செய்தல்.
- பாதுகாப்பு இலக்குகளை சமுதாய தேவைகளுடன் சமநிலைப்படுத்தும் கூட்டு காணிப் பயன்பாட்டு உத்திகளைச் செயற்படுத்துவதுடன் வனவிலங்கு முகாமைத்துவ முயற்சிகளில் பயிர் இழப்புகளின் சுமையை அடிக்கடி சுமக்கும் பெண்களை முனைப்பாக ஈடுபடுத்துதல்.

7. ஆளுகை மற்றும் சேவைகளுக்கான அணுகலை வலுப்படுத்துதல்:
- ஈரமான மற்றும் வறண்ட காலங்களில் நீர் முகாமைத்துவத்தை மேம்படுத்த, பாரம்பரிய நீர்ப்பாசன அமைப்புகளை புதுப்பிப்பதுடன் வண்டல் மண் நிரம்பிய நீர்த்தேக்கங்களை புனரமைத்தல்.
- மாவட்ட மற்றும் மாகாண எல்லைகள் உட்பட, நீர் வெளியீடுகள் பற்றிய வெளிப்படையான தகவல்தொடர்புகளை உறுதிசெய்வதுடன் விவசாயிகள் வினைத்திறனாக திட்டமிட உதவும் பிராந்தியத்திற்கு குறிப்பான பயிர் பரிந்துரைகளை வழங்குதல்.
- தீர்மானமெடுப்பதில் உள்ளூர் அறிவு மற்றும் முன்னுரிமைகளைப் பிரதிபலிக்க, நீர் முகாமைத்துவ திட்டங்களில் சமுதாய ஆலோசனைகளை ஒருங்கிணைத்தல்.
- விவசாயம் மற்றும் வீட்டுத் தேவைகள் இரண்டிற்குமான நீர் வளங்களின் நீண்டகால நிலைபேண்தகு தன்மையை நிவர்த்தி செய்யும் சுற்றுச்சூழல் மதிப்பீடுகளை நடாத்துதல்.

8. இளைஞர்களை ஈடுபடுத்துதல் மற்றும் சமூக நல்லிணக்கத்தை புதுப்பித்தல்:
- நவீன நுட்பங்கள், தொழிற்பயிற்சி மற்றும் சூழல் சார் சுற்றுலா முயற்சிகள் மூலம் விவசாயத்தில் இளைஞர்களை ஈடுபடுத்தி இளைஞர் புலம்பெயர்வை நிவர்த்தி செய்தல்.
- "அத்தம்" (பரஸ்பர உழைப்பு பரிமாற்றம்) போன்ற பாரம்பரிய நடைமுறைகளை புதுப்பிப்பதுடன் சமூகப் பிணைப்புகளை மீண்டும் உருவாக்க "சிரமதானம்" (தன்னார்வத் தொண்டு) மூலம் கூட்டு நடவடிக்கைகளை விருத்தி செய்தல்.

9. உளநலம் மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துதல்:
- சமுதாய அடிப்படையிலான உளநல ஆதரவு அமைப்புகளை நிறுவுவதுடன் உள சமூக அழுத்தத்தை நிவர்த்தி செய்ய பால்நிலை உணர்திறனான ஆலோசனை வழங்குவதில் உள்ளூர் தலைவர்களுக்குப் பயிற்சி அளித்தல்.
- விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மூலம் உளநலப் பிரச்சினைகள் தொடர்பிலான களங்கத்தை நீக்குவதுடன் மீண்டெழுதிறனை மேம்படுத்த, ஏற்கனவே உள்ள சுகாதார சேவைகளில் உளநல ஆதரவை ஒருங்கிணைத்தல்.

10. உள்ளடங்கலான மற்றும் மோதலுக்கு உணர்திறனான சமுதாயங்களை உருவாக்குதல்:
- நம்பிக்கையை கட்டியெழுப்பவும் பதட்டங்களைக் குறைக்கவும், நீர் பகிர்வு முயற்சிகள் போன்ற சமுதாயங்களுக்கு இடையிலான கூட்டு செயற்திட்டங்களுக்கு உதவுதல்.
- சமத்துவமின்மை அல்லது பதட்டங்களை அதிகப்படுத்துவதைத் தவிர்க்க, அபிவிருத்தி திட்டங்களுக்கான சுற்றுச்சூழல் மற்றும் சமூக தாக்க மதிப்பீடுகளில் மோதல் உணர்திறனான அணுகுமுறைகள் உள்ளடங்குவதை உறுதிசெய்தல்.
- உள்ளடங்கல் மற்றும் நம்பிக்கையை வளர்க்க பல்வேறு சமுதாய குழுக்களுடன் கூட்டுத் திட்டமிடலை ஊக்குவித்தல்.

## மீண்டெழுதிறனுக்கான வாய்ப்புகள்: முல்லைத்தீவுக்கான மாவட்டரீதியான பரிந்துரைகள்

**1.வறட்சிக்கு எதிரான மீண்டெழுதிறனை வலுப்படுத்துதல்:**

- வறண்ட காலங்களில் நீர் கிடைப்பதை மேம்படுத்த, சிறிய நீர்த்தேக்கங்கள் போன்ற சமுதாயத்தால் நிர்வகிக்கப்படும் நீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்குதல்.
- விவசாய வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க, ஊடுபயிர் மற்றும் வன விவசாயம் (agroforestry) உட்பட, காலநிலைக்கு தாங்குதிறனுள்ள விவசாய நுட்பங்களை ஊக்குவித்தல்.

**2. கழிவு முகாமைத்துவத்தை நிவர்த்தி செய்தல்:**

- திறந்த வெளியில் குப்பைகளை கொட்டுவதையும் எரிப்பதையும் குறைக்க, கழிவுகளை உரமாக மாற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் உட்பட, கிராம மட்டத்தில் கழிவு முகாமைத்துவ அமைப்புகளை நடைமுறைப்படுத்துதல்.
- கிராமப்புறங்களில் பிளாஸ்டிக் மீள்சுழற்சி முயற்சிகளை அறிமுகப்படுத்த உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் (NGO) கூட்டு சேர்தல்.

**3. பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான ஆதரவு:**

- பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு, காணி, நுண்கடன் மற்றும் நிலையான வாழ்வாதாரங்களுக்கான பயிற்சிகள் போன்ற இலக்கு வைக்கப்பட்ட உதவிகளை வழங்குதல்.
- பெண்களின் ஊதியம் இல்லாத பராமரிப்பு சுமையைக் குறைக்கவும், பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடவும் சமுதாய அளவிலான குழந்தை பராமரிப்பு நிலையங்களை நிறுவுதல்.

**4. மோதலுக்கு உணர்திறனான இசைவாக்கம்:**

- யானை வேலி அமைப்பதற்கான அனுமதி மற்றும் விவசாய ஆதரவுக்கான அணுகல் போன்ற வளங்களை வெளிப்படையாக ஒதுக்குவதன் மூலம் ஏற்றத்தாழ்வு குறித்த எண்ணங்களைக் கையாளுதல்.
- ஓரங்கட்டப்பட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களை உள்ளடக்கிய பங்கேற்பு திட்டமிடல் செயன்முறைகள் மூலமாக ஆளுகை மீதான நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.

**5. சமுதாயங்களுக்கிடையே இடைவெளிகளை நிவர்த்தி செய்ய பெண்களின் வாழ்வாதாரங்களை வலுவூட்டல்:**

- தமிழ் மற்றும் முஸ்லிம் சமுதாயங்களுக்கிடையே சமூக நல்லிணக்கத்தை வளர்க்கும் ஒரு கருவியாக முல்லைத்தீவில் பெண்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆதரவளித்தல்.
- பெண்கள் தலைமையிலான விவசாயக் கூட்டுறவுகள் அல்லது சிறிய அளவிலான உணவு பதப்படுத்தும் அலகுகள் போன்ற கூட்டுறவு நிறுவனங்களை நிறுவி, பகிரப்பட்ட பொருளாதார வாய்ப்புகளை உருவாக்குவதுடன் இனங்களுக்கிடையே நம்பிக்கையை கட்டியெழுப்புதல்.
- காலநிலைக்கு இசைவாக்கமுடைய விவசாயம் அல்லது தொழில்முனைவு பற்றிய பயிற்சி அமர்வுகளை சமுதாயங்களுக்கிடையே ஏற்பாடு செய்து, கலந்துரையாடல் மற்றும் பரஸ்பர புரிதலுக்கான தளங்களை உருவாக்குதல்.
- பல்வேறு குழுக்களிடையே ஒன்றுக்கொன்று சார்ந்திருத்தலையும் ஒத்துழைப்பையும் வளர்ப்பதோடு, பெண்களுக்கு பொருளாதார ரீதியாக வலுவூட்டலை அளித்தல்.

**6. இளைஞர்களை பகிரப்பட்ட தொழிலசார் மற்றும் குழமைசார் நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடுத்துதல்:**

- தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர்களுக்கான கூட்டுத் தொழிற்பயிற்சி திட்டங்களை ஆரம்பித்து திறன்களை மேம்படுத்துவதோடு, ஒரே மாதிரியான தவறான உள எண்ணங்களை உடைத்து நட்புறவை வளர்த்தல்.
- இனங்களுக்கிடையேயான ஒத்துழைப்பு தேவைப்படும் குழு அடிப்படையிலான செயற்திட்டங்களுடன் இணைக்கப்பட்டதாக புதுப்பிக்கத்தக்க எரிசக்தி நிறுவல், சுற்றுச்சூழல் சுற்றுலா அல்லது வெள்ளத்தைத் தாங்கும் உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் பயிற்சி வழங்குவதில் கவனம் செலுத்துதல்.
- பகிரப்பட்ட இலக்குகளில் ஒத்துழைப்பை ஊக்குவிப்பதற்காக சமுதாய தூய்மைப்படுத்தும் இயக்கங்கள், மரம் நடும் பிரச்சாரங்கள் அல்லது அனர்த்த தடுப்பு செயற்திட்டங்கள் போன்ற இளைஞர்கள் தலைமையிலான குடிமை முயற்சிகளை நிறுவுதல்.
- இளைஞர்களின் இடைத்தொடர்பு மற்றும் நல்லிணக்கத்திற்கு நடுநிலையான இடங்களை வழங்கும் சமுதாயங்களுக்கு இடையேயான விளையாட்டு நிகழ்வுகள் அல்லது கலாச்சார பரிமாற்றங்களை நடாத்தக்கூடிய பொழுதுபோக்கு வசதிகளை உருவாக்குதல்.

**7. சமூக ஒப்பந்தத்தை வலுப்படுத்த ஆளுகையை வலுப்படுத்துதல்:**

- ஜனகபுர போன்ற அதிக பதட்டம் நிறைந்த பகுதிகளில் இன-மத ரீதியான காணிப் பிணக்குகளை தீர்ப்பதற்காக, அனைத்து இனக் குழுக்களின் பிரதிநிதித்துவத்துடன் உள்ளூர் பிணக்கு தீர்க்கும் குழுக்களை நிறுவுதல்.
- வீதிகள், நீர்ப்பாசன குளங்கள் மற்றும் சுகாதார பராமரிப்பு வசதிகள் போன்ற பகிரப்பட்ட உட்கட்டமைப்புகளில் முதலீடு செய்து அனைத்து சமுதாயங்களுக்கும் அது தெளிவாக நன்மை பயப்பதையும், அரசின் சமத்துவத்திற்கான அர்ப்பணிப்பையும் வெளிப்படுத்துதல்.
- தமிழ், சிங்கள, மற்றும் முஸ்லிம் சமுதாயங்களைச் சேர்ந்த மருத்துவ பணியாளர்களைக் கொண்ட நடமாடும் சுகாதார பிரிவுகளை உருவாக்குவதன் மூலம் உள்ளடங்கலை அடையாளப்படுத்துவதுடன், சமுதாயங்களுக்கிடையேயான நம்பிக்கையையும் வளர்க்கும் அதே நேரத்தில் சுகாதார சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்தல்.
- அரசாங்கத் செயற்திட்டங்களின் பொறுப்புக்கூறலை உறுதி செய்யவும், வளங்கள் நியாயமாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்யவும் குடிமக்கள் கண்காணிப்பு குழுக்களை அமைத்தல்.

**8. சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்த சமுதாயங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை ஊக்குவித்தல்**

- வெள்ளம் அல்லது வறட்சி போன்ற இயற்கை அனர்த்தங்களுக்கு கூட்டாக பதிலளிப்பதுடன் பரஸ்பர நம்பிக்கையை வளர்க்க உதவும் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள குழுக்களைச் சேர்ந்தவர்களுக்கு பயிற்சி அளிக்கும் சமுதாய அடிப்படையிலான அனர்த்த தயார்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல்.
- பொங்கல் போன்ற அறுவடைத் திருவிழாக்கள் அல்லது பிற கலாச்சார நிகழ்வுகளை கூட்டாக ஏற்பாடு செய்வதன் மூலமாக புரிந்துணர்வை மேம்படுத்துவதுடன், தப்பெண்ணங்களையும் குறைத்தல்.
- சமுதாயங்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நம்பிக்கையை மீளக் கட்டியெழுப்ப சமூக ஒப்பந்தத்தை வலுப்படுத்துவதுடன், மீண்டெழுதிறனை வளர்க்கவும் உதவும் பொருளாதாரம், சமூகம் மற்றும் ஆளுகை தொடர்பான பல்வேறு முயற்சிகளை ஒருங்கிணைத்தல்.

**9. உள்ளூர் பொருளாதாரங்கள் மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்த வர்த்தக வலையமைப்புகளை மேம்படுத்துதல்**

- பொருளாதார ரீதியாக ஒன்றிலொன்று தங்கியிருத்தலை ஏற்படுத்தி இனங்களுக்கிடையேயான பதட்டங்களைக் குறைப்பதற்காக தமிழ், சிங்கள, மற்றும் முஸ்லிம் உற்பத்தியாளர்கள், பதப்படுத்துனர்கள், மற்றும் வர்த்தகர்களை இணைக்கும் பிராந்திய வர்த்தக மையங்களை உருவாக்குதல்.
- விவசாயிகள் மற்றும் சிறிய அளவிலான உற்பத்தியாளர்கள் தமது பொருட்களை போட்டியிடக்கூடிய விலையில் விற்கவும், அறுவடைக்குப் பின்னரான இழப்புகளைக் குறைக்கவும் கிராமப்புற சந்தை உட்கட்டமைப்பில் சேமிப்பு வசதிகள், குளிரூட்டப்பட்ட விநியோக சங்கிலிகள் மற்றும் போக்குவரத்து இணைப்புகள் ஆகியவற்றில் முதலீடு செய்தல்.
- மசாலாப் பொருட்கள் அல்லது சேதனப் பசளை மூலமான காய்கறிகள் போன்ற உள்ளூர் பொருட்களுக்கு நியாயமான வர்த்தக சான்றிதழ் திட்டங்களை அறிமுகப்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் அதிக பெறுமதியான சந்தைக்கான அணுகலை உறுதிப்படுத்தலாம்.
- நெல் மற்றும் காய்கறி உற்பத்தி செய்யும் தமிழ் விவசாயிகளை நகர்ப்புற சந்தைகளுக்கு வழங்கல் செய்யும் முஸ்லிம் வர்த்தகர்களுடன் இணைப்பது போன்ற விவசாய வர்த்தக வலைப்பின்னல்கள் ஊடாக சமுதாயங்களுக்கிடையேயான ஒத்துழைப்பை ஊக்குவித்தல்.

# 9. உசாத்துணைகள்


Abeysooriya, Movinya; Indika Karunathilake, T. Wanigasekara, U. Palihakkara, M.M.P.L Amarasiri 2023: Brain Drain. The Exodus of Sri Lanka's Healthcare Workfoce. In: South-East Asian Journal of Medical Education 17:2, pp. 14-20.

ACLED 2022: Sri Lanka: Increasing Debt, Increasing Demonstrations.

ADB. Rising Above the Heat: Strengthening Women's Resilience to Heat Stress.

Alahacoon, Niranga; Geethya Thathsarani, Piriyanka Sivananthan, Giriraj Amarnath 2024: Evaluating Climate Hazard Hotspots and Hazard Impacts in Sri Lanka: An Analysis of Historically Reported Data Date. CGIAR.

Amnesty International 2022: End the use of and repeal the draconian PTA. London: Amnesty International.

Anandakugan, Nithyani 2020: The Sri Lankan Civil War and Its History, Revisited in 2020. Harvard International Review.

Apu, Z.A.; R. L. H. L. Rajapakse and H. G. L. N. Gunawardhana 2025: Effects of Drought on Hydropower Generation Under Climate Change: A Case Study on the Upstream of Kelani River Basin, Sri Lanka. In: Fernando, T. Nilanthi, Manjula Siriwardhana, Ranjith Dissanayake, Meththika Vithanage, Jayathu G. Samarawickrama and Pradeep Gajanayake (eds.): Selected Proceedings of the 2nd International Engineering Research Symposium. Colombo, Sri Lanka: IERS 2024, Proceedings in Technology Transfer.

Arachchi, Thamali Liyana 2024: The Impact of Climate Change on the Tourism Sector. SLYCAN Trust.

Arambepola, Chandima and Kulasabanathan Romeshun 2019: Debt at My Doorstep: Microfinance Practices and Effects on Women in Sri Lanka. Centre for Poverty Analysis.

Arudpragasam, Amita 2025: Women bear the brunt of extreme heat in Sri Lanka's wartorn North. In: Himal Southasian, 01.04.2025.

Arulingam, Indika; Sanjiv De Silva, Vidhisha Samarasekara and Darshini Ravindranath 2024: Climate change and a national economic crisis are overworking rural women in Sri Lanka. IWMI.

Attanayake, Dimuthu 2024: In Sri Lanka, Climate Change Traps Women Farmers in 'Exploitative' Cycle of Economic Violence. Pulitzer Center.

BBC 2024. Are women 14 times more likely to die in natural disasters? BBC SOUNDS.

Begum, Thaslima 2024: Death tolls mount as elephants and people compete for land in Sri Lanka. In The Guardian,19 March 2024.

Bhandari, Prem 2020: Productive vs. consumptive uses of remittances by households. South Asia Migration Report 2020, pp.58-84. Routledge India.

Bunse, Simone and Vongai Murugani 2023: The World Food Programme's Contribution to Improving the Prospects for Peace in Sri Lanka. Solna: SIPRI.

Caballero-Anthony, Mely; Julius Cesar Trajano, Alistair D. B. Cook, Nanthini D/O T, Sambanthan, Jose Ma. Luis Montesclaros, Keith Paolo Landicho and Danielle Lynn Goh 2023: Climate Change and its Impact on Peace and Security in Southeast Asia. Singapore: S Rajaratnam School of International Studies, Nanyang Technological University.

Central Bank of Sri Lanka 2024: Quarterly Bulletin of Workers' Remittances and Labour Migration. Quarter 3-2024. Economic Research Department. Central Bank of Sri Lanka.

Danasekara, Apsara Kumari 2020: Study the most influential factors of human-peacock conflict in rural areas in Sri Lanka; A case study in Wewere GND, in Kandy District. Conference: 6th National Research Conference on Applied Social Statistics At: University of Kelaniya, Sri Lanka.

De Alwis, Diana; Noy Ilan 2019: The Cost of Being Under the Weather. Droughts, Floods, and Health-Care Costs in Sri Lanka. In: Asian Development Review Volume 36:2, pp. i-249.

Department of Census and Statistics 2012: Population by ethnic group according to districts, 2012. Battaramulla: Department of Census and Statistics.

Department of Census and Statistics 2019: Women victims by type of grave crimes against persons 2015 – 2019. Battaramulla: Department of Census and Statistics.

Department of Census and Statistics 2024: Sri Lanka Labour Force Survey. Quarterly Report 4th Quarter 2024. Battaramulla: Department of Census and Statistics, Ministry of Finance, Planning and Economic Development.

Department of Census and Statistics 2025: Census of Population and Housing 2024 Enumeration Stage. Preliminary Report, 24.03.2025. Battaramulla: Department of Census and Statistics, Ministry of Finance, Planning and Economic Development.

Dharmakeerthi, Randombage Saman; W.D. Wicramasinghe 2015: Status and National Priorities of Soil Resources in Sri Lanka. Soil Science Society of Sri Lanka.

Esham, Mohamed; Brent Jacobs, Hewage Sunith Rohitha Rosairo and Balde Siddighi 2018: Climate change and food security: A Sri Lankan perspective. Environment Development and Sustainability.

Ethirajan, Anbarasan; Swaminathan Natarajan and Ishara Danasekara 2024: Landslide win for new Sri Lankan president's left-leaning coalition. BBC News.

Geldin, Sam 2025: Sri Lanka Climate Impact Profile. Berlin: adelphi.

Global Centre for Pluralism 2023: Global Pluralism Monitor: Sri Lanka. Ottowa, Ontario: Global Centre for Pluralism. Global Forest Watch 2025: Sri Lanka. Mullaitivu. Sri Lanka Deforestation Rates & Statistics Dashboard.

Gowthaman, Ushanthy 2023: Gender, Conflict and Climate change: Dissecting Gendered Vulnerabilities of small holder farmers due to climate change in the Eastern Province Sri Lanka. International Journal of Research and Innovation in Social Science, 7(5), 297-304.

Gunathilake, Nimal 2024. Massive crop damage caused by wild animals. In: The Island Online.

Gunatilaka, Ramani and Sunil Chandrasiri 2022: Gender disparities and labour market challenges: The demand for women workers in Sri Lanka. UN Women.

Gunawardena, Devaka and Ahilan Kadirgamar 2024: A political and policy tightrope awaits Sri Lanka's new president. In: East Asia Forum.

Gunawansa, T.D.; K. Perera, A. Apan et al. 2023: The human-elephant conflict in Sri Lanka: history and present status. Biodivers Conserv 32, 3025–3052.

Gunewardena, Dileni 2024: Gender Equality in Sri Lanka's Economy. In: Ruwanpura, Kanchana and Amjad Mohamed Saleem (eds.): Routledge Handbook of Contemporary Sri Lanka, pp. 176-193.

Hillman, Jonathan 2018: Game of Loans. How China Bought Hambantota. Policy paper/Study prepared on behalf of Centre for Strategic & International Studies. CSIS Briefs.

IEA 2021: Climate Impacts on South and Southeast Asian Hydropower. International Energy Agency.

IEA 2022: Sri Lanka. Paris: International Energy Agency.

International Crisis Group 2024: Sri Lanka's Bailout Blues: Elections in the Aftermath of Economic Collapse. Report 341.

Jayathilake, Dhanushka and Chanchala de Silva 2018: Analysis of Hazard Situation in Badulla District -Out-come of Building Survey under Landslide Risk Mapping Project. Investing in Disaster Risk Reduction for Resilience.

Jayathilaka, Upul; Ranjan Karunanayaka and Amal Sanjeewa 2021: The Study on Crop Damages by Wild Animals in Sri Lanka Giving Priority to Human Elephant Conflict (HEC) and Finding Viable/Sustainable Community Driven Practices.

Jayawardena, Mithun 2025: Sri Lanka's Failing System Killing It's Wild Elephants. In: Ceylon Today, March 1, 2025.

Keenan, Alan 2024: Sri Lanka's third way. In: Inside Story, 30.10.2024.

Kiringoda, Kimuthu 2022: Pro-Poor Tourism: Can it Reduce Poverty in Sri Lanka? Talking Economics.

Kolundzija, Alana et al. 2020: Gender and Social Inclusion Analysis. Prepared by Social Impact, Inc. for the United States Agency for International Development. USAID/Sri Lanka.

Köpke, Sören; Sisira S. Withanachchi, Chinthaka E. N. Perera, Chandana R. Withanachchi, Deepika U. Gam-age, Thushantha S. Nissanka, Chinthana C. Warapitiya, Banu M. Nissanka, Nirangani N. Ranasinghe, Chathurika D. Senarathna, Hansani Ruwanthika Dissanayake, Ruwan Pathiranag, Christian Schleyer, Andreas Thiel 2024: Factors driving human-elephant conflict. Statistical assessment of vulnerability and implications for wildlife conflict management in Sri Lanka. In: Biodiversity and Conservation. 33, pp. 3075-3101.

Koralage, Ama 2024: How Social Media is Fuelling Sri Lanka's Ethnoreligious Issues. Groundviews: journalism for citizens.

Kuhn, Randall 2009: Tsunami and Conflict in Sri Lanka. Joint World Bank - UN Project on the Economics of Disaster Risk Reduction.

Land Use Policy Planning Department 2018: Land Use & Land Cover of Sri Lanka - 2018. Colombo: Land Use Policy Planning Department

MacDonald, Rhona. How Women Were Affected by the Tsunami: A Perspective from Oxfam. In: PLoS Medicine. June 2005. Volume 2: Issue 6.

Mandavalli, Apoorva 2024: The Killer Stalking Sri Lanka's Men. Climate Change and contaminated water have combines to create an epidemic of kidney disease. In: New York Times, 08.07.2024.

Madhavi, WDS 2023: Doctor's Brain Drain. Health Security Concern in Sri Lanka. In: Colombo Telegraph, 03.11.2023.

Mashal, Mujib and Waravita, Pamodi 2025: Where a Strongman Failed, Women Are Now Fueling a Democratic Revival. In: New York Times, 04.02.2025.

Media Ownership Monitor 2018: Media. Sri Lanka 2018. Colombo: Verité Research.

Ministry of Environment 2021: Sri Lanka: Updated Nationally Determined Contributions. Government of Sri Lanka.

Ministry of Mahaweli Development and Environment 2016: National Adaptation Plan for Climate Change Impacts in Sri Lanka 2016 – 2025. Climate Change Secretariat Ministry of Mahaweli Development and Environment.

Mohotti, Anoma and Keerthi Mohotti 2020: Tea Industry of Sri Lanka: Are We Ready for the Climate Change Impacts? In: Adapting to Climate Change: A Sri Lankan perspective, pp.117-134.

Mowbray, Sean 2024: Climate change brews trouble for tea industry, but circular solutions await. In: Mongabay, 14.03.2024.

Ng, Kelly 2024: Sri Lanka's controversial internet safety law comes into force. In: BBC News, 01.02.2024.

Ober, Kayly 2019: The Links between Climate Change, Disasters, Migration and Social Resilience in Asia. A Literature Review. ADB Economics Working Paper Series. No. 586. Asian Development Bank.

OPHI and UNDP 2023: Understanding Multidimensional Vulnerabilities: Impact on People of Sri Lanka. Colombo: United Nations Development Programme.

Pal, Deep 2021: China's Influence in South Asia: Vulnerabilities and Resilience in Four Countries. Washington DC: Carnegie Endowment for International Peace.

Perera, Ayeshea 2023: Sri Lanka: Why is the country in an economic crisis? In: BBC News, 29.03.2023.

Perera, Ayeshea and Joel Guinto 2024: Left-leaning leader wins Sri Lanka election in political paradigm shift. In: BBC News, 22.09.2024.

Rajapakse, Senaka; Mitrakrishnan Chrishan Shivanthan and Mathu Selvarajah 2016: Chronic kidney disease of unknown etiology in Sri Lanka. In: International journal of occupational and environmental health 22:3, pp. 259-264.

Rathnayake, Zinara 2022: Sri Lanka's last indigenous people. In: BBC, 28.03.2022.

Rodrigo, Malaka 2024: As Sri Lanka floods swell with climate change, so does human-crocodile conflict. In: Mongabay, 05.01.2024.

Rodrigo, Malaka 2024: Sri Lanka completes first elephant census since 2011 amid uncertainty. In: Mongabay, 12.09.2024.

RSF 2024: Sri Lanka: RSF outlines four key priorities for the new government to strengthen press freedom. Reporters Without Borders.

Shaheid, Faizer 2025: 2025 Budget: A welfare boost amid economic challenges. In: the morning. 23.02.2025.

Sharma, Manasvi 2024: Ethnic fertility and exposure to armed conflict: The case of Sri Lanka. Review of Economics of the Household.

Sidhakaran, V S; M.A Wijeratne, H.W Shyamalie, G.S Pradeep, K.G Lakmali and R. Muralithasan 2022: Nation-al Tea Production Decline since 2013: Evidence Based Analysis. Advisory and Extension Division, Agronomy Division and Agricultural Economics Division. Tea Research Institute of Sri Lanka.

SLYCAN Trust 2022: Climate Change and Human Mobility in Sri Lanka. Climate Impacts on Labour Migration.

Sri Lanka Ministry of Environment 2021: Updated Nationally Determined Contributions. Submitted to the United Nations Framework Convention on Climate Change, 23.09.2021.

Sri Lanka Ministry of Environment 2022: National Environment Policy. Battaramulla: Policy Planning and Monitoring Division, Ministry of Environment.

Sri Lanka Ministry of Environment 2023: National Policy on Climate Change. Battaramulla: Climate Change Secretariat, Ministry of Environment.

Sri Lanka Police 2024: Grave Crime abstract for the year 2023 for Whole Island from 01.01.2023 to 31.12.2023.

Sri Lanka Tourism Development Authority 2024: Annual Statistical Report 2023. Colombo: Research and International Relations Division, Sri Lanka Tourism Development Authority.

United Nations Sri Lanka 2023: Sri Lanka Common Country Analysis. Update. Report compiled by United Nations Sri Lanka.

UNDP 2021: Climate Vulnerability and Risk Assessment of the Northern Province and Guidance for Capacity Development of Local Governments in Assessing Climate Risks. United Nations Development Programme.

United Nations Development Programme 2021: Survey of Gender Responsiveness of Local Authorities in CDLG Provinces report compiled by UNDP Sri Lanka.

United Nations Development Programme 2023: Understanding Multidimensional Vulnerabilities. Impact on People of Sri Lanka. United Nations Development Programme.

United Nations Development Programme 2023: Guidance for Capacity Development of Local Governments on Assessing Climate Change Vulnerability. United Nations Development Programme.

United Nations Development Programme 2024a: Addressing household debt induced vulnerability in Sri Lanka. Policy Note based on the Multidimensional Vulnerability Report compiled by UNDP Sri Lanka.

United Nations Development Programme 2024b: Specific country data: Sri Lanka. Human Development Reports. Data updates as of 13.03. 2024.

United Nations Entity for Gender Equality and the Empowerment of Women 2023a: UN Women Sri Lanka Brochure. A Global Champion for Gender Equality.

United Nations Entity for Gender Equality and the Empowerment of Women 2023b: Sri Lanka: Local government country profile.

United Nations Office for the Coordination of Humanitarian Affairs 2024: Asia and the Pacific: Weekly Regional Humanitarian Snapshot (4 - 10 June 2024).

Urban Development Authority 2023: Urban Regeneration Programme. Battaramulla: Urban Development Authority.

Veettil, B.K. 2022: Current status of mangrove vegetation in Batticaloa Lagoon, Sri Lanka, using high-resolution satellite imagery. J Coast Conserv 26, 74.

Vishwanath, Ambika; Priyanka Bhide, Namrata Kabra, Harsh Vasani, Benjamin Pohl and Mary Potts 2024: Building a Climate for Peace: Climate Security in South Asia. Berlin: adelphi.

Whitaker, Emma and Janani Vivekananda 2024: Navigating Climate Security and Geopolitical Dynamics in Asia-Pacific: Challenges, Knowledge Gaps, and Future Trajectories. adelphi and Toda Peace Institute.

Wijedasa, Namini 2025: Activist petitions SC over London-based Lyca Group's "devious ownership" of mass communication companies here. In: The Sunday Times, 05.01.2025.

Wijesinghe, Gamini H.M. 2018: Performance of the Department of Wildlife Conservation.

Wijesundara, Sahassri and K.V.D.H.R. Karawita 2024: HUMAN-CROCODILE CONFLICT IN SRI LANKA: THREATS AND HABITAT VULNERABILITY ANALYSIS. 13th Annual Science Research Session 2024, Faculty of Applied Science, South Eastern University of Sri Lanka.

World Bank 2017: Tackling Chronic Undernutrition in Sri Lanka's Plantations. Colombo

World Bank Group 2021a: The Rural Nonfarm Sector and Livelihood Strategies in Sri Lanka. Background report to Sri Lanka Poverty Assessment. Washington DC: The World Bank.

World Bank Group 2021b: Climate Risk Country Profile. Sri Lanka. Report compiled by World Bank Group and Asian Development Bank. Washington DC: The World Bank.

World Bank Group 2022a: Climate Change Knowledge Portal: Sri Lanka Energy Sector Assessment. Washington, DC: World Bank.

World Bank Group 2022b: Towards Improved Livelihoods and Higher Revenues From Sustainable Fisheries in Sri Lanka. Feature Story 02.03.2022.

World Bank Group 2025a: Sri Lanka Development Update 2025. Washington DC: The World Bank

World Bank Group 2025b: Personal remittances, received (current US$)- Sri Lanka. World Bank Open Data. Data retrieved 27.04.2024.

Yatawara, Kamal 2023: Sri Lanka Migration and Displacement. National Assessment Report. November 2023. Sri Lanka Red Cross Society. IFRC.

# இணைப்பு 1:

## கள ஆய்வுக்கான இடங்கள்

| மாவட்டம் | இடம் |
|---|---|
| பதுளை | ஊவா பரணகம<br>ஹிம்பிலியாகஹ மடித்திட்ட<br>உடுஹவர<br>பதுளை<br>சப்புகொல்ல<br>வெலிமடை<br>இடல்காஷின்ன தோட்டம்<br>கொண்டகன் ஆர |
| அம்பாந்தோட்டை | தங்காலை<br>எல்லகல<br>லுணுகம்வெஹெர<br>அம்பாந்தோட்டை<br>கோஹொலன்கல (துறைமுக கிராமம்)<br>ரன்மினிதென்ன<br>வீரவில |
| முல்லைத்தீவு | கொக்குத்தொடுவாய்<br>ஜனகபுரம்<br>செம்மலை<br>முல்லைத்தீவு நகரம்<br>கரைத்துறைப்பற்று<br>புதுக்குடியிருப்பு<br>வெலிஓயா |
| மட்டக்களப்பு | மயிலத்தமடு<br>மயிலம்பாவெளி<br>கதிரவெளி<br>மட்டக்களப்பு<br>நகரம் |

இந்த நான்கு மாவட்டங்களுக்கு மேலதிகமாக, காலி (காலி மாவட்டம்), கதிர்காமம் (மொனராகலை மாவட்டம்), கும்புகன் ஏரி (மொனராகலை மாவட்டம்), புத்தள (மொனராகலை மாவட்டம்) மற்றும் மாஞ்சோலை (திருகோணமலை மாவட்டம்) ஆகிய இடங்களிலும் மேலதிக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

# இணைப்பு 2:

## இனக்குழுவின் அடிப்படையில் மக்கள் குடித்தொகை மாவட்டங்களின் பிரகாரம், 2012

| மாவட்டம் | மொத்த நபர்களின் எண்ணிக்கை | சிங்களவர் | இலங்கை தமிழ் | இந்திய தமிழ் | இலங்கை முஸ்லிம் | பறங்கியர் | மலாய | இலங்கை செட்டியர் | Bhartha | பிற இனத்-தவர் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை (மொத்த எண்ணிக்கை மற்றும் சதவீதம்) | 20,263,723 | 15,173,820 | 2,270,924 | 842,323 | 1,869,820 | 37,061 | 40,189 | 6,075 | 1,688 | 21,823 |
| | 100 | 74.9 | 11.2 | 4.2 | 9.2 | 0.2 | 0.2 | 0.0 | 0-0 | 0.1 |
| கொழும்பு | 2,309,809 | 1,771,319 | 231,318 | 27,336 | 242,728 | 13,304 | 12,463 | 1,314 | 721 | 9,306 |
| | 100.0 | 76.7 | 10.0 | 1.2 | 10.5 | 0.6 | 0.5 | 0.1 | 0.0 | 0.4 |
| கம்பஹா | 2,294,641 | 2,079,115 | 80,071 | 10,879 | 95,501 | 9,898 | 11,658 | 4,093 | 552 | 2,874 |
| | 100.0 | 90.6 | 3.5 | 0.5 | 4.2 | 0.4 | 0.5 | 0.2 | 0.0 | 0.1 |
| களுத்துறை | 1,217,260 | 1,054,991 | 24,362 | 23,611 | 112,276 | 968 | 597 | 20 | 44 | 391 |
| | 100.0 | 86.7 | 2.0 | 1.9 | 9.2 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| கண்டி | 1,369,899 | 1,018,323 | 71,640 | 83,234 | 191,159 | 2,201 | 2,062 | 115 | 23 | 1,142 |
| | 100.0 | 74.3 | 5.2 | 6.1 | 14.0 | 0.2 | 0.2 | 0.0 | 0.0 | 0.1 |
| மாத்தளை | 482,229 | 389,092 | 24,756 | 23,400 | 44,113 | 376 | 335 | 29 | 7 | 121 |
| | 100.0 | 80.7 | 5.1 | 4.9 | 9.1 | 0.1 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 |
| நுவரெலியா | 706,588 | 279,784 | 31,867 | 375,795 | 17,422 | 770 | 492 | 49 | 10 | 399 |
| | 100.0 | 39.6 | 4.5 | 53.2 | 2.5 | 0.1 | 0.1 | 0.0 | 0.0 | 0.1 |
| காலி | 1,058,771 | 998,540 | 15,228 | 5,641 | 38,591 | 242 | 79 | 8 | 10 | 432 |
| | 100.0 | 94.3 | 1.4 | 0.5 | 3.6 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| மாத்தறை | 809,344 | 763,121 | 8,562 | 11,984 | 25,300 | 177 | 54 | 3 | 3 | 140 |
| | 100.0 | 94.3 | 1.1 | 1.5 | 3.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அம்பாந்தோட்டை | 596,617 | 579,032 | 2,111 | 136 | 6,556 | 138 | 8,210 | 7 | 2 | 425 |
| | 100.0 | 97.1 | 0.4 | 0.0 | 1.1 | 0.0 | 1.4 | 0.0 | 0.0 | 0.1 |
| யாழ்ப்பாணம் | 583,378 | 3,366 | 577,246 | 499 | 2,139 | 93 | 5 | 1 | 0 | 29 |
| | 100.0 | 0.6 | 98.9 | 0.1 | 0.4 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| மன்னார் | 99,051 | 1,961 | 80,568 | 394 | 16,087 | 19 | 10 | 0 | 0 | 12 |
| | 100.0 | 2.0 | 81.3 | 0.4 | 16.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| வவுனியா | 171,511 | 17,191 | 141,269 | 1,292 | 11,700 | 15 | 5 | 0 | 0 | 39 |
| | 100.0 | 10.0 | 82.4 | 0.8 | 6.8 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| முல்லைத்தீவு | 91,947 | 8,851 | 79,081 | 2,182 | 1,760 | 21 | 12 | 0 | 0 | 40 |
| | 100.0 | 9.6 | 86.0 | 2.4 | 1.9 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| கிளிநொச்சி | 112,875 | 962 | 109,528 | 1,682 | 678 | 1 | 0 | 0 | 0 | 24 |
| | 100.0 | 0.9 | 97.0 | 1.5 | 0.6 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| மட்டக்களப்பு | 525,142 | 6,127 | 381,285 | 1,015 | 133,844 | 2,794 | 16 | 3 | 0 | 58 |
| | 100.0 | 1.2 | 72.6 | 0.2 | 25.5 | 0.5 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| அம்பாறை | 648,057 | 251,018 | 112,750 | 165 | 282,484 | 849 | 176 | 4 | 1 | 610 |
| | 100.0 | 38.7 | 17.4 | 0.0 | 43.6 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 |
| திருகோணமலை | 378,182 | 101,991 | 115,549 | 6,531 | 152,854 | 815 | 364 | 14 | 0 | 64 |
| | 100.0 | 27.0 | 30.6 | 1.7 | 40.4 | 0.2 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 |
| குருநாகல் | 1,610,299 | 1,471,339 | 18,763 | 3,582 | 113,560 | 711 | 1,083 | 92 | 28 | 1,141 |
| | 100.0 | 91.4 | 1.2 | 0.2 | 7.1 | 0.0 | 0.1 | 0.0 | 0.0 | 0.1 |
| புத்தளம் | 759,776 | 559,031 | 47,523 | 2,503 | 146,820 | 1,481 | 592 | 187 | 206 | 1,433 |
| | 100.0 | 73.6 | 6.3 | 0.3 | 19.3 | 0.2 | 0.1 | 0.0 | 0.0 | 0.2 |
| அனுராதபுரம் | 856,232 | 778,131 | 5,065 | 957 | 70,248 | 187 | 158 | 17 | 44 | 1,425 |
| | 100.0 | 90.9 | 0.6 | 0.1 | 8.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.2 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொலன்னறுவை | 403,335 | 365,476 | 7,356 | 1,190 | 29,060 | 86 | 46 | 1 | 1 | 119 |
| | 100.0 | 90.6 | 1.8 | 0.3 | 7.2 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| பதுளை | 811,758 | 593,120 | 20,335 | 149,662 | 45,886 | 904 | 1,288 | 43 | 9 | 511 |
| | 100.0 | 73.1 | 2.5 | 18.4 | 5.7 | 0.1 | 0.2 | 0.0 | 0.0 | 0.1 |
| மொனராகலை | 448,142 | 423,972 | 9,783 | 4,590 | 9,552 | 109 | 46 | 10 | 1 | 79 |
| | 100.0 | 94.6 | 2.2 | 1.0 | 2.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| இரத்தினபுரி | 1,082,277 | 942,244 | 54,658 | 62,595 | 21,550 | 325 | 270 | 28 | 22 | 585 |
| | 100.0 | 87.1 | 5.1 | 5.8 | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 |
| கேகாலை | 836,603 | 715,723 | 20,250 | 41,468 | 57,952 | 577 | 168 | 37 | 4 | 424 |
| | 100.0 | 85.6 | 2.4 | 5.0 | 6.9 | 0.1 | 0.0 | 0.0 | 0.0 | 0.1 |

மூலம்: (குடித்தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் 2012)



UNDP

DPPA Preventing Conflict. Sustaining Peace

Joint UNDP-DPPA Programme on Building National Capacities for Conflict Prevention

Australian Aid

UN WOMEN